# ஸ்ரீ வேதாந்த தீபிகை

தொகுதி-28 எண். 3.4.5.6

மார்ச் முதல் ஜூன் வரை

1939

JL.
R65m211,N12
N39.28.3-6
158622

# Sri Vedanta Dipika

Vol. 28] MARCH 1939 [Part 3

ANNUAL SUBSCRIPTION Rs. 2—0—0

477

# ஸ்ரீ வேதாந்த தீபிகை

வருஷ சந்தா ரூ. 2—0—0

பிரதி இங்கிலீஷ்மீ 25வ வெளிவரும்

விளம்பரக் கட்டணைகள் :

மானேஜிங் எடிடருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்

பகுதான்யஸ :: பங்குனிமீ

பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியர் (*Managing Editor*)

கிருஷ்ணபுரம், கோடம்பாக்கம் Post, Madras.

○

உப-பத்ராதிபர்கள் :

வேதாந்த சிரோமணி T. வேணுகோபாலாசாரியர்

எ. ஸ்ரீநிவாஸராகவன், M.A., [மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.]

CONDUCTED BY

**SRI VAISHNAVA SIDDHANTA PRACHARA SABHA, Ltd.,**

**Vani Vilas 4—5, Badriah Garden St., Park Town, Madras.**

OFFICE OF THE ... MADRAS 10 MAY 1939

## விஷயங்கள்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஜநஸமூஹமும் சாரீரக சாஸ்திரமும் [வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்.] | 53 |
| 2. | சரீரவ்யாயாமம் [பத்திராதிபர்.] | 54 |
| 3. | ஸ்தோத்ர மரகத ஸ்வாரஸ்யம் [வெங்கடவரத தாதாசார்யர்] | 57 |
| 4. | திவ்யப்ரபந்த வேதபாராயணம் [தி. ஈ. வீரராகவாசார்யர்.] | 62 |
| 5. | தசாவதார ஸ்தோத்ரத்தை அநுஸரித்த ஸம்பாஷணை [ஸ்ரீமதி ராஜம்மாள்.] | 65 |
| 6. | விருத்தாந்தங்கள் ஸத் வித்யா பாடசாலை. | 74 |
| 7. | புஸ்தகவரவு, புகழ்மாலை | |
| 8. | யதிராஜஸப்ததி | 76 |
| 9. | வேதாந்த ஸாரம் | 1-8 |
| | | 129-136 |



TIME IS MONEY
SEND YOUR CONDEMND WATCHES
CONSULTATION FREE
TO
THE QUALIFIED DOCTOR OF WATCHES
EXPERTS IN CLOCK WINDING
**THE MADRAS CLOCK WINDING Co.,**
GOVERNMENT SUPPLIERS
1, Stringer's Street :: G. T. MADRAS.
SPECIALISTS IN ALL KINDS OF RUBBER STAMPS

பண்டிட் தோரி ராமசாஸ்த்ரிகளின்
**க்ஷீரவர்த்தினி** (ரெஜிஸ்டர்டு)
(தாய்ப்பாலை வ்ருத்திசெய்யும்)
தாய்களுக்கு ஓர் அருமையான டானிக். குழந்தைகளை சுரம், குலைக்கட்டிகளினின்றும் காப்பாற்ற அவைகளைத் தாய்ப்பாலால் போஷிப்பது நல்லது.

புட்டி 1க்கு ரூ. 2-0-0
ஆயுர்வேத ரத்ன பண்டிட் தோரி ராமசாஸ்த்ரி A.K.A.C.,
"ஆயுர்வேத நிலயம்"
பெஜவாடா M.S.M.Ry.,


1 ... 1939 ... DRAS

श्रीः
श्रियै नमः
त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवरांबरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥

# ஸ்ரீ வேதாந்த தீபிகை


ஸம். 28. | பகுதான்ய ௵ பங்குனி மீ 14உ 25-மார்ச்சு 1939 | ஸஞ். 3.


## வேதாந்த கல்பனைகள்

### ஜனசமூகமும் சாரீரக சாஸ்திரமும்

ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார், பத்திராதிபர்

நம்முடைய வேதாந்தத்திற்கு அஸாதாரணமாய் சாரீரகசாஸ்திரம் என்ற பெயர் ஏற்பட்டிருப்பது மிகவும் அழகான பெயர் என்று நம்மால் ஒப்புக்கொள்ளத்தக்கது. சரீரத்துக்கு ஆத்மா எவ்விதமோ, அவ்விதமே நம்முடைய ஆத்மாவுக்கு பரமாத்மாவென்று வேதாந்திகள் நிர்த்தாரணம் செய்திருக்கிறார்கள். லோகதத்வம் ஒன்றேயாதலால், ஒரு மனுஷ்யனுக்கும், அவனைச் சார்ந்த சமூகத்திற்கும், ஏன் இவ்வித சம்பந்தத்தையே நிர்த்தாரணம் செய்யக்கூடாது. ஜனசமூகத்தை சரீரமாகவும் தன்னை அந்த சமூகத்திற்கு ஆத்மாவாகவும் ஒருவன் கருதுவானாகில் அது தத்வத்துக்கு தத்வமாயும், அழகாயும் பலவத்தாயும் ஏற்படும். எவ்விதம் ஆத்மசக்தியினால் சரீரத்தை ஆண்டு அனுபவித்து, நல்ல ஸ்திதியில் வைத்து க்ருதார்த்தத்தை அடையலாமோ, அவ்விதமே ஒருவன் ஜன சமூகத்தை ஆண்டு அனுபவித்து மேலான ஸ்திதியில் கொண்டுவந்து க்ருதார்த்தத்தை அடையலாம். எப்படி சரீரம் இல்லாவிட்டால் ஆத்மாவால் இந்த ஜன்மத்தில் இந்த லோகத்தில் ஒன்றும் செய்ய முடியாதோ, அவ்விதமே மனுஷ்யனும் ஜனசமூகமில்லாவிட்டால் சரீரமில்லாத ஆத்மாவைப்போல் கார்ய நிர்வாகம் இல்லாதவனாகிறான். இவ்விதம் ஒரு மனுஷ்யனுக்கும், அவனைச் சுற்றியிருக்கும் ஜனசமூகத்திற்கும் உண்டாயிருக்கும் அவிநாபாவமானது யோசிக்க யோசிக்க ஆச்சர்யமாக ஏற்படும். ஒன்றுக்கொன்று ஆதாரமாயும் ஆதரவாயும் இருப்பதையும், ஒன்றினுடைய சுகதுக்கங்கள், மற்றொன்றுடையதே யாகவும், ஒன்று மூலமாயில்லாமல் மற்றொன்றுக்கு க்ஷேமாதிசயங்களும் அபிவிருத்திகளும், கிடைக்காதென்பதையும், நாம் தீர்க்கமாய் யோசிக்குமளவில் இந்த சாரீரக சாஸ்திரத்தினுடையவும் அங்க அங்கிபாவம் விசதமாய் தெரியக்கூடும்.

158682



# காலானுகுண ஆஹ்நிகம்

## சரீர வ்யாயாமம் அல்லது தேகப்பயிற்சி.

பத்ராதிபர்

இப் பூலோகத்தில் நாம் வாழுமளவும் இந்த சரீரத்துடனேயே வாழவேண்டியதாக இருக்கிறது. அவ்வாழ்நாளில் இந்த சரீரமும், சரீரி என்கிற ஆத்மாவும், ஒன்று இல்லாமல் மற்றொன்று, பிரயோஜனகரமாகா தாகையால் அவைகளுக்குள் இருக்கும் ஸம்பந்தத்தை அவிநாபாவம் என்று வேதாந்திகள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது ஆத்மா சரீரத்தை விட்டுப் போய்விட்டதும் இந்த சரீரமானது பிரேதமாய் கொளுத்தப்படுவதற்கோ, புதைக்கப்படுவதற்கோ மாத்திரம் ஆகிறது. சிறிது காலம் வைத்திருந் தால் துர்க்கந்தம் அதிகமாகிறது. அவ்விதமே சரீரம் ஒன்று இல்லாவிட் டால் இந்த ஆத்மாவால் ஒன்றும் செய்ய முடியாது. இந்த சரீரத்தில் உள்ள கரண களேபரங்களை பகவான் நமக்கு அளித்தது அதுகளைக் கொண்டு, கார்யங்கள் செய்து ஜீவிக்கவும் உஜ்ஜீவிக்கவுமாம். ஒரு நாள் பட்டினி இருந்தால் கால் ஓய்ந்து விடுகிறது. கண் பஞ்சடைகிறது. காது கேழ்கிறதில்லை. புத்தி வேலை செய்கிறதில்லை. இவ்விதமாயெல்லாம் ஒரு காரியமும் செய்து முடிக்க சாத்தியமில்லாமல் போகிறது. எப்படி மனுஷ்ய சரீரத்திற்கு ஜீவாத்மா ஆதாரமோ அவ்விதமே இந்த ஜீவதசையில் ஜீவாத்ம வுக்கு சரீரமும் ஆதாரம். இந்த வேதாந்த தத்வத்தை நம்மவர்கள் சரியா கவனிக்கிறதில்லை. நாம் உஜ்ஜீவிக்க வேண்டுமானால் ஜீவிக்க வேண்டும் ஜீவிப்பதற்கு சரீரபலமும் ஆரோக்கியமும், ஸுகமும் இன்றியமையாதவை ஆதலால் சரீரத்தை நல்ல ஸ்திதியில் வைத்துக் காப்பாற்றிக் கொள் தும் வேதாந்த சாஸ்திரத்தின் உட்பொருளில் ஒன்று. மிகவும் முக்கி மானது.

இவ்வாத்மாவுக்கு இந்த தேகம் கருவியாயிருப்பது. ஒரு தொ லாளி காலமே எழுந்ததும் தன் கருவிகளைத் தீட்டி சுத்தம் செய்து உடனே உபயோகப்படுத்தக்கூடிய ஸ்திதியில் வைக்கிறான். ஒரு மோட்டார்கா ஓட்டுகிறவன், காலையில் எழுந்திருந்ததும், அதை அலம்பிச் சுத்தம் செய்வ மாத்திரமே யல்லாமல், உள்ளே யிருக்கிற என்ஜினையும் துடைத்து ஓட்டி பார்த்து, எண்ணெய் முதலானது குத்தி ஸரியான ஸ்திதியில் வைக்கிற அவ்விதமே நாமும் தேகமாகிற கருவியை வ்யாயாமம் என்கின்ற பயிற்சி னால் ஸரியான ஸ்திதியில் வைக்க வேண்டியது அவச்யம்.



ஸாதாரண மனுஷ்யர்களுக்கு அதிகமான வ்யாயாமம் அவச்ய மில்லை. தேகத்தை மிகவும் புஷ்டியாகவும், பலிஷ்டமாகவும், திடமாகவும் செய்வதானால், சரீரி சரீர ஸம்பந்தத்தில் திராசு நிலையில், தேக சக்தி மேலிட்டு ஆத்ம சக்தி குறைந்துவிடும். ஆதலால் இவ்விரண்டையும் ஏறக் குறைய சரிசமானமாக வைத்திருப்பதே நலம். ஆதலால்தான் ஸ்ரீ கிருஷ்ண பகவானும் கீதையில் யுக்தமான ஆகாரமும் விஹாரமும் கர்மங்களில் யுக்த மான கார்ய கர்மங்களும், யுக்தமான தூக்கமும் விழிப்பும், இருப்ப வனுக்கே எல்லா துக்கங்களையும் போக்கக்கூடிய யோகமானது ஸித்திக்கும் என்று சொல்லியிருக்கிறார். இவ்விடத்தில் யுக்தம் என்கிற பதத்திற்கு குறைவுமில்லாமல் அதிகமுமில்லாமல் இருக்கும் ஸ்திதியே குறிக்கப்படுவது. அவ்விதமே சரீர சரீரிகளுக்கும்கூட ஏற்கனவே ஸ்ருஷ்டியில் அமைந்திருக் கிற அவிநாபாவமாகிற யோகம் இருக்க அவை இரண்டையும் திராசில் போல் ஸம எடையான ஸ்திதியில் வைத்திருப்பதே விவேகமாகும்.

வியாயாமத்திற்கும், மற்ற காரியங்களில் போல் ஒரு சரியான காலம், தேசம், ரீதி எல்லாம் உண்டு. தேகப் பயிற்சியினால் ஒவ்வொரு அவயவமும், ரத்தம், வேகமாய் ஓடவைப்பதால், அதிலிருக்கும் மலங்கள் எல்லாம் ஓடும் ரத்தம் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டு வியர்வை மூலமாகவும் சுத்தப்படுத்தப்படுகிறது. ரத்தக் குழாய்கள் அடைப்பு முதலானவை இல் லாமல் செம்மைப்படுத்தப்படுகின்றன. நரம்புகளுக்கும் தசைகளுக்கும் பலம் உண்டாக்கப்படுகிறது. ஆதலால் எவ்விதமான வ்யாயாமம் செய்ய வேண்டுமென்றால், எதனால், எவ்விதத்தால், சிரஸு முதல் பாதம் வரையில் உள்ள அவயவங்கள் யாவத்தும் சுத்தப்படுத்தப்பட்டு பலப்படுமோ அவ்வித வ்யாயாமத்தையே செய்யவேண்டும். நடப்பது, ஓடுவது, கஸரத்து செய்வது, பந்தாடுவது, குதிரை சவாரி செய்வது, இவை முதலான வ்யாயாமங்களில் அவரவர் தங்கள் தேக ஸ்திதியையும், உத்தியோக வியாபாரங்களையும் உத் தேசித்து தங்களுக்கு உசிதமான வ்யாயாமத்தைத் தேர்ந்தெடுத்துப் பழக வேண்டும். வ்யாயாமம் செய்யுங் காலத்தில் நாம் மூச்சு விடுவது, எண்ணிக் கையிலும் ஆழத்திலும்கூட அதிகரிப்பதைக் காண்கிறோமல்லவா. அப் பொழுது நாம் உட்கொள்ளும் காற்றானது சுத்தமாய் இருக்கவேண்டியது அவச்யம். ஆதலால் செய்யும் வ்யாயாமமானது, வெளியில், நாற்றம் தும்பு தூசி இல்லாமல் நல்ல காற்று இருக்கும் பிரதேசத்தில் செய்ய வேண்டியது அவச்யம். வ்யாயாமத்திற்கு ஸரியான காலமும் உண்டு. அது காலையிலேயே, பல் தேய்த்ததும், செய்வது உத்தமம். இராத்திரி

யெல்லாம் உபயோகப்படுத்தப்படாமல் இருந்த அவயவங்களை பயிற்சி ... சுத்தம் செய்து நல்ல ஸ்திதியில் வைப்பதே விசேஷம். நாள் எல்லை செய்த பிறகு ஸாயங்காலத்தில், வ்யாயாமம் அவ்வளவு உசிதமல்ல. ஆயினும், அநேகமாய் புத்தியினால் வேலை செய்கிறவர்களுக்கு ஸாயங்காலம் வ்யாயாமமும் ப்ரயோஜனகரமாகும். காலையில் உசிதமாய் வ்யாயாமம் செய்து தேகத்தை சுறுசுறுப்பாய் செய்து கொண்டால் நாள் முழுதும், வேலை செய்ய, சுறுசுறுப்பா யிருக்கும். ஆனால் மற்றொன்று முக்கியம் இவ்விஷயத்தில் கவனிக்கத்தக்கது உண்டு. அது யாதெனில் வ்யாயாமம் செய்வதால் தேகத்தில் உண்டாகும் வியர்வை உடனே, அதாவது, தேகத்தில் வ்யாயாமம் செய்வதால் உண்டான சூடு தணிந்தவுடன் ஸ்நானம் செய்து வியர்வையும், மலத்தையும், துர்க்கந்தத்தையும் சுத்தம் செய்வது உசிதம். காலையில் வ்யாயாமம் செய்தால் அப்படி ஸ்நானம் செய்வதற்கு அனுகூலங்கள் உண்டு. ஸாயங்கால வேளையில் வ்யாயாமம் செய்வதானால் உடனே ஸ்நானம் செய்து சுத்தம் செய்வதற்கு வசதியிருக்கவேண்டும். அப்படி வசதி இல்லாமல் போகுமானால் இந்த தேகத்திலேயே வியர்வையானது ஊறிக் கெடுதி செய்யக்கூடும். தற்காலத்தில் அநேகர் இதற்காகவே ஸாயங்காலம் பந்து முதலானது ஆடினதும், உடுப்பை மாற்றுகிறார்கள். அப்படி செய்வது ஆமோதிக்கக்கூடியதே யாயினும் ஸ்நானம் செய்யாமலிருப்பது அவ்வளவு கார்யகரமல்ல.

எவ்விதம் தேகத்தையே புஷ்டி செய்து வளர்த்து வந்து ஆத்மார்த்தமான காரியங்களை செய்யாமல் விடுவது எல்லா விதத்திலும் நிந்திக்கத் தகுந்ததோ அவ்விதமே பகவானால் நமக்கு நம்முடைய ஹிதத்திற்காகவும், உபயோகத்திற்காகவும் அளிக்கப்பட்டிருக்கிற தேகத்தை, நல்ல ஸ்திதியில் வைத்து காப்பாற்றுவதும் நம்முடைய கடமையாகும்.

ஒருவன், தோணியைக் கொண்டு ஆற்றைக் கடக்க விரும்புபவன், அந்தத் தோணியை ஸரியான ஸ்திதியில் வைக்காவிட்டால் எப்படி கடக்க முடியும். இதையெல்லாம் கவனித்தே எல்லோரும், தங்கள் வயதையும், ஏற்பட்டிருக்கிற வியவகாரத்தையும், தேக ஸ்திதியையும், சௌகர்யங்களையும் கால தேச வர்த்தமானங்களையும் கணிசித்து யுக்தமான வ்யாயாமத்தை நடத்தி வருவது விவேகிகளின் தர்மமாகும். அவரவர்கள், தங்கள் தங்களுக்கு உசிதமான வ்யாயாமங்களை கால தேச ரீதியில் நிர்ணயித்துக்கொண்டு செய்து வருவதே நலம். ஆனால், வ்யாயாமத்திலும் அதியில்லாமல் யுக்தமாய் செய்து வருவதும் அத்தியாவச்யகம்,



[பாகம் 2.]

ருயதுர்க்கம் வெங்கடவாத தாதாசார்யார், அட்வகேட், சென்னை.

'பூய : ச்யாமா புவநஜநநீ தேவதா' என்று சொல்ல, 'ச்யாமா'
...புதற்குண்டான பற்பல அர்த்தங்களில் யௌவனம் நிரம்பிய ஸ்த்ரீ
...பது ஒன்று ; குழந்தையே பிறக்காதவள் என்றும் ஓர் அர்த்தம். 'பூய:
...நஜநநீ' என்று, அடிக்கடி ஸகல லோகங்களையும் ஜீவராசிகளையும் புகாதி
...ல் தனது குக்ஷியிலிருந்து ஸ்ருஷ்டித்து வந்தாலும் கொஞ்சமேனும்
...கக் கட்டு தளராமல் செழித்த யௌவனம் நிரம்பியும் பிள்ளை பெறுத
...நமாகவே தோன்றும் ஓர் அழகுள்ள ஸ்த்ரீ என்றார். அதனால்தானோ,
...ந்தின ச்லோகத்தில் 'அஸ்ப்ருஷ்ட சிந்தாபத மாபிரூப்யம்' என்று
...னதிற்கும் எட்டாத மிக்க ஸௌந்தர்யமுள்ளவர்' என்றார்! 'நிரந்தரம்
...விசத :' என்றும் சேர்த்துச் சொல்ல, தானும் தன்னைப் போல் இதர
...ந்தர்களும் ஓயாமலனுபவித்தாலும் 'வாங்மனஸாதிபூமயே' என்றும்
...வாங்மனஸைகபூமயே' என்றும் ஸ்ரீ ஆளவந்தார் ஸாதித்தபடி அவ
...ழகை வர்ணிக்கவாவது மனஸால் எட்டிப் பிடிக்கவாவது முடியவில்லை
...ன்று சொல்லிவா, தானே ஒரு த்வன்யர்த்தம் தோன்றும் ; அதாவது,
...ப்படி ஓயாமலும் தினந்தோறும் ஒரு ஸ்த்ரீயை போகித்து வந்தாலும்
...வள் அழகும் மேனியும் சிறிதேனும் வாடாமலும் சோர்வையால் மாறு
...லும் அப்படியே முன்போல் அளவற்று நிற்பதைப் பார்த்து 'முஹுரந்தி
...பங்குரதிய:' என்றபடி தானும் வியப்படைந்தார் போலும். அல்லது
...வைகுண்டவாஸேபி ந மேபிலாஷ:' என்று கூடவே சொல்லிவா, மூன்று
...ந்த குணங்களில் முக்யமான புத்ரோத்பத்தியினாலுள்ள மோக்ஷமும் கொஞ்
...ம் பொறுக்கட்டும் ; இப்போது வேண்டாம் ; இந்த அழகான ஸ்த்ரீயின்
...ஸௌந்தர்யத்திலேயே எப்போதும் மூழ்கிக் கிடந்தால் போதும் ; அவளை
...விட்டு மனம் வேறொன்றிலும் செல்லவில்லை, என்று நூதனவதூவிசேஷக
...மானவன் உளறும்போல் தோன்றும். நமது ஆப்த நண்பரொருவர் சென்ற
...மார்கழி (டிசம்பர்) தீபிகைப் பகுதியில் ஷை வியாஸத்தின் முதல் பாகத்
...தில் இரண்டொரு ஸந்தேகம் மனதில் கிளம்புவதாகச் சொன்னார். அதா
...வது 'த்விரதசிகரி ஸீம்நா ஸத்மவான்' என்பது மேகத்தை எப்படி சுட்டிக்
...காட்டும் என்றார். அதற்கு ஸ்ரீதேசிகன் திருவாக்கிலிருந்தே பதில்
...காட்ட ஸாத்யம். அவரது யதிராஜ ஸப்ததியில் 62-வது ச்லோகமே
...யாகும். அதில் "காலே ந: கரிசைலக்ருஷ்ணஜலத: காங்க்ஷாதிகம்
...வர்ஷது" என்று "ஹஸ்திகிரியிலுள்ள இருண்ட மேகம் பரிபக்வமான

காலத்தில் நமது வேண்டுகோளுக்கும்மேல் அதிகமாக வரன்களை வர்ஷிக்கிறது” என்று ஸ்பஷ்டமாகவே ஸாதித்தார்.

மற்றொரு ஸந்தேகத்துக்கு பதிலானது மனுஸ்ம்ருதியில் 3-76 ச்லோகத்தில் விவரமாகவே யிருக்கிறது. அதாவது “அக்னௌ ப்ரஸ்தாஹுதி: ஸம்யக் ஆதித்யம் உபதிஷ்டதே। ஆதித்யாத் ஜாயதே வ்ருஷ்டி:, வ்ருஷ்டே ரந்நம், தத: ப்ரஜா:” “அக்னியில் சீராகச் சேர்க்கப்பட்ட ஹவிஸ்ஸானது சூரியனை (தேவதை சமூகத்தை)ச் சேரும். அந்த சூர்ய தேவதையினால் மழை யுண்டாகிறது. மழையால் பூமியின் ஸாரமான அன்னபானங்களுக்குரிய வஸ்துக்கள் கிடைக்கின்றன. அதிலிருந்து அன்னரஸமயமான புருஷர்களும் ஸகல ஜீவராசிகளும் ஜனிக்கின்றனர்” என்று மனுதர்ம சாஸ்திரத்தில் கண்டபடி, ஸ்ரீதேசிகனும் ஸூசித்தார்.

இன்னொரு இடத்தில் மனுஸ்ம்ருதியில் (9-96) “ப்ரஜனார்த்தம் ஸ்த்ரிய: ஸ்ருஷ்டா: ஸந்தானார்த்தம்ச மானவா:” என்று சொன்னபடி, ஸ்த்ரீ புருஷர்கள் ப்ரஜாபிவிர்த்திக்காகவே ஏற்பட்டதாலும், புருஷப் பிரஜை கிடைப்பதற்காகவே முன்னோர்களுக்கு சிராத்தம் முதலியது செய்து அவர்களிட பரிபூர்ணமான அனுக்ரஹத்தால் ஸம்பத்து ஸந்தானம் முதலிய க்ஷேமாதிசயங்களைப் பெற எல்லோரும் முயலுவதாலும், ஐஹிக ஆமுஷ்மிகம் என்னும் இரண்டுவித நன்மைக்கும் புத்ர உத்பத்தி காரணமானதாலும், ‘குசலம்’ என்பது இருவகை க்ஷேமத்தையும் எடுத்துரைக்கும்.

ஸ்ரீஸ்தோத்ர மரகதத்தில் ஸ்ரீதேசிகன் முதல் ச்லோகத்தில் சொன்ன ஆனுபூர்வியும் மனு (3-76) சொன்ன ரீதியை அனுசரித்தே யிருக்கிறது. அதாவது பிர்மா யாகத்தில் ஹோமம் செய்து “வபாபரிமளோல்லாஸ வாஸிதாதர பல்லவம்” என்பது போல், நெய்யில் பக்வமானவபையாகும் ஹவிஸ்ஸை தனது திருவாயில் அடக்கிக்கொண்டே வரதன் அவதரித்தார். அக்னியில் சேர்த்த ஆஹுதி இஷ்ட தேவதையைச் சேர்ந்துவிட்டது என்பதற்கு நிதர்சனமாகச் சொன்னார்.

அந்த நீலமேக ச்யாமளமான வரதன் அத்திகிரியை நிரந்தரமான வாஸஸ்தலமாக ஒப்புக்கொண்டார் என்று சொல்ல, எப்போதும் மலைமேல் நீர் கொண்ட இருண்ட மேகம் குடிகொண்டாப் போலிருந்தது என்றார். மழையால் பூஸாரம் விர்த்தியாய் வேண்டியவளவு அன்னபான போக்ய



மான வஸ்துக்களை, காமதேனுவும் கல்பவிருக்ஷமும் போல், விரும்பியவர்க்கு ஸகலத்தையும் அளிக்கின்றார் என்றும் சொன்னார்.

ஆகையால் ஸ்ரீதேசிகனுடைய ஸ்ரீஸூக்தியானது வெகு விமர்சையும் அழகும் நிரம்பியதுடன் அநேக சாஸ்திரங்களுக்கும் வேதங்களுக்கும் முன்னோர்களின் திவ்ய வாக்யங்களுக்கும் அணுவளவும் விரோதமின்றி, ப்ரத்யுத, அவைகளுக்கெல்லாம் வெகு அனுகூலமாயும் ஸர்வகுணகும்பிதமாயும் இருப்பதைக் காண்போம்.

ஸ்ரீ ஸ்தோத்ர மரகத கவி ஸார்வபௌமரான ஸ்ரீதேசிகன் காஞ்சிமா நகரிலேயே பிறந்து, வெகுகாலம் வஸித்து வந்ததாலும், காஞ்சீ மாகாத்ம்யம், ஹஸ்திகிரி மாகாத்ம்யம் முதலியவை அவருக்கு கரதலாமலகமானதாலும், இந்த ஐம்பது ச்லோகங்களிலும் உற்றுப் பார்ப்போருக்கு ஸ்தலமாகாத்ம்யம் அங்கங்கே த்வனிக்கும்படி ஸூசனையாய் சொல்லுகிறார். எனது மந்த புத்திக்கு சுமார் 20 ச்லோகம் மட்டில் அவ்வித ஸூசனை தென்படுகிறது. இந்த ரீதியில் பார்க்கக்கூடியவர்களுக்கு மற்றெல்லா ச்லோகங்களிலும் ஏற்படும் என்றே நினைக்கிறேன்.

இரண்டாவது ச்லோகத்தில் ‘முஹ்யந்தி அபங்குரதியோ முனி ஸார்வபௌமா:’ என்னும் சொல்ல ஸ்ரீ வரதன் ஸந்நிதியில் ஸ்ரீ நம்மாழ்வார் ஞானோபதேச முத்ரைக்குப் பதிலாக திருக்கை உட்பக்கமே இருதயத்தைத் தொடுவது போல் திரும்பி யிருப்பதைப் பார்த்தால் 49-வது ச்லோகத்தில் ஸாதித்தமாதிரி ஆழ்வாரும் ஸ்ரீ வரதனுடைய அழகை நினைக்க நினைக்க மனம் தியானத்தில் மேன்மேலும் முழுகிப்போய் மதிமயங்கி நின்றார் போலும் சொன்னார்.

மூன்றாவது ச்லோகத்தில் முன்னொரு காலத்தில் உத்ஸவாதிகளில் உயிருள்ள யானையின் மேல் ஸ்ரீ பகவான் வீதி புறப்பாடு செய்து வந்ததும், நாளது வரையில் இரண்டொரு யானையாவது தேவஸ்தானத்திலிருந்து வருவதும் ஞாபகம் வந்தமாதிரி தோன்றுகிறது.

6-வது ச்லோகத்தில் நாளது வரைக்கும் ஸ்ரீரங்கத்தில் போல ஸ்ரீ வரதன் சந்நிதியிலும் பஞ்சவர்ணக் கிளிகளை வளர்த்து வந்ததால் அந்த கிளி திருஷ்டாந்தத்திற்கு ஞாபகம் வந்தது.

9—10-வது ச்லோகங்களில் மோஹினி வேஷமும், வேணுகோபாலன் முதலான சாத்துப்படிகள் ஸமர்ப்பித்து வருவதை ஸூசிக்கும் மாதிரி பிர்மா, ருத்ரன், இந்திரன் முதலானவர்களும் அந்தந்த வியக்திகளின் சாத்துப்படி ஏற்றுக்கொண்டு நிற்கும் வரதனே யொழிய வேறில்லை என்றார்.

12-வது ச்லோகத்தால் சிலர் வரதனை பிர்மாவாகவும், சிலர் ருத்ரனாகவும், சிலர் இந்திரனாகவும், மற்றும் பிறர் ஸ்வராட் என்றும், ஆத்மாவென்றும், ஸர்வம் என்றும் பற்பலவாறாகச் சொல்வதும் தங்களிட சாமர்த்தியம் எட்டிய வரையில் தாங்கள் சொல்வதையே ஸாதிக்க முயலுவதும் மீறிப் போனால் முடிவில் வாயடியிலிருந்து கையடி வரைக்கும் போவதற்கு நீரே எல்லா காரணமும் என்று ஸ்ரீ தேசிகன் சொல்லும் போது நூறு வருஷமாக தென்கலை வடகலைச் சண்டை யதிகரித்து வந்ததை நினைக்கவேண்டி யிருக்கிறது.

17-வது ச்லோகத்தில் அதிசுந்தரமாயும் ஆனந்தகரமுமான டோலோத்ஸவ ஸேவையை அனுஸந்தித்தார் போலும்.

18-வது ச்லோகம் தீபப்ரகாசனை நினைத்து ஸ்ரீ வரதன் அவதாரத்துக்கு முன் ஏற்பட்ட அந்தகார இடையூறுகளை ஒழிக்க வந்த எம்பெருமானை தியானித்தார்.

22-வது ச்லோகத்தில் ஸ்ரீ வரதன் தேவாலயத்திற்குள் அகப்பட்டுள்ள அநந்தஸரஸ் கரையிலிருக்கும் பூவராஹனையும், 23-வது ச்லோகத்தில திருமலையின் கீழ் குகையில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ யோக நரஸிம்மனையும் நினைத்துப் பாடினார் போலும்.

24-வதில் உலகளந்தவரும் 25-ல் யதோக்தகாரியும் தியாநிக்கதாக ஏற்படும். ஸ்ரீ வேகவதி நதியின் கர்வ வேகத்தை அடக்கக் கருதி கண்ணம்பாடி மேட்டூர்களிலுள்ள அணைகள் போல கல்மயமான சுரூபத்தைக் கொண்டு குறுக்கே விழுந்து ஜலப்ரவாஹத்தை முன் ஒரு சமயம் தடுத்த ஸேது அணை போன்ற உம்மை (பகவானை) நாளைக்கும் ஜனங்கள் கண்ணால் ஸேவித்து காம, க்ரோத, மோஹ, லோப, மத, மாத்ஸர்யங்களான ஆறு வகை அல்லது சோக, மோஹ, ஜரா, ம்ருத்யு, க்ஷுத், பிபாஸங்களான ஆறு வகை அலைகள் நிரம்பிய ஸம்ஸார ஸாகரத்தை கடந்து செல்லுவிருர்கள் என்று ஸ்ரீ யதோக்தகாரி பெருமானை நினைத்தார்.



40-வது ச்லோகத்தில் நாளது வரையில் நடந்துவரும் கஜேந்திர மோக்ஷ உத்ஸவத்தை மனதில் வைத்துக்கொண்டு தனக்கும் மோக்ஷம் தந்து காப்பாற்ற வேண்டும் என்றார் தேசிகன்.

41-வது ச்லோகத்தில் திருக்கார்த்திகை உத்ஸவத்தில் அஸூரதகனம் என்றும் சொக்கப்பானை கொளுத்தும் ஸந்தர்ப்பம் தோன்றும்.

42-வது ச்லோகத்தில் பிர்மோத்ஸவம் முதலான வீதி புறப்பாட்டுத்ஸவங்களில் ஸதா ஸ்ரீ பகவானை பின்தொடரும் வேதபாராயண கோஷ்டியை நினைத்துச் சொன்னார். ‘அர்சிஸ்’ என்பதை ‘அர்சிந்’ என்று ஒரு அக்ஷரம் மாற ஷை கோஷ்டியை சொல்லும். ஷை கோஷ்டியில் பிரதி ஸ்வாமிகளும் தங்கள் தங்கள் இஷ்டாநிஷ்ட சுகதுக்க காரியங்களை விட்டு விட்டு அர்ச்சகர் (ஸேவார்த்திகள்) முதலான கோவிலதிகாரிகளால் வெகு தூரம் (5, 10, 15 மைல் தூரமும்) கடந்து கேவலம் பகவத் ப்ரீதிக்காகவே மனப்பூர்வமாய் ஏவலன்றி பிராம்மண ஜன்மத்திற்கேற்ற பெரிய கைங்கர்யத்தை செய்வேனாகவும் என்றார்.

43-வது ச்லோகத்தில் ஸ்ரீ வரதனுக்கு துளஸீ, புஷ்பம், சந்தனம், பரிமளம் முதலியது கொண்டு வந்து மாலைகளும் தீர்த்தங்களும் இதர போக்யமான வஸ்துக்களும் தயாரித்து பகவானுக்கு ஸமர்ப்பித்து கண் குளிர ஸேவித்து பாக்யம் பெற்றேனானால் இச் சம்சாரக் கடலே எனக்கு மோக்ஷ பதவியாகும் என்றார்.

44-வது ச்லோகத்தில் ஸ்ரீ வரதன் தேவாலயத்தில் நடக்கும் பவித்ரோத்ஸவமும் பூர்ணாஹூதியும் பிசாசு பிடித்தவர்களின் கூக்குரலும், வியாதிகள் தீருவதும் தவனிக்கும்.

45-வது ச்லோகம் ஏகாந்த ஸேவையும், 46-வது விச்வரூப ஸேவையும், 47-ல் ஸூப்ரபாத ஸமயமும், 48-ல் பிர்மோத்ஸவமும், 49-ல் அலங்காராஸனமும், 50ல் அவப்ருதஸ்நாநத்தில் துளஸீ மாலையுடன் கூடிய திருமஞ்சன ஸேவையும் இப்படி ஸ்ரீ பெருமான் கோவிலில் ஸ்ரீ தேவாதிராஜனுடைய திவ்ய ஸேவைகளும் மற்று மிதர 17, 18 திவ்ய தேசத்திலுள்ள எம்பெருமான்களிட திவ்ய தர்சனங்களும் இந்த ஸ்ரீ ஸ்தோத்ர மாகதத்தில் அடங்கியுள்ளது.

ஸ்ரீ:

# திவ்ய ப்ரபந்த வேதபாராயணம்.

[ ஸ்ரீ மதுராந்தகம் தி.ஈ. வீரராகவாசாரியர், திருவாதி.]

திவ்ய ப்ரபந்த பாராயணரீதி என்னும் வ்யாஸமும் அதைப்பற்றி ஸ்ரீவைஷ்ணவதாஸர் ஒருவர் எழுதியுள்ள வ்யாஸமும் முறையே மார்கழி தை மாஸ தீபிகைகளில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன.

அர்த்தஜ்ஞானமன்றியில் வேதத்தையும் திவ்ய ப்ரபந்தத்தையும் பாராயணம் செய்வது விருத்தமென்கிறார் முதல் வ்யாஸகர்த்தா. அர்த்தஜ்ஞானமில்லாமல் திவ்யப்ரபந்த பாராயணம் செய்வதுதான் விருத்தமானது வேதபாராயணம் செய்யலாம் என்கிறார் மற்றொருவர்.

பாராயணமென்பது சப்தத்தைச் சொல்லுவதேயன்றி அர்த்தஜ்ஞானம் அதில் சேராது. நையாயிகரும் மீமாம்ஸகரும் அத்வைதிகளில் வாசஸ்பதி மிச்ரரும் அத்யயனவிதியே அர்த்தஜ்ஞான பர்யந்தமானது என்கிறார்கள். ஸாயணாசார்யர் (வேத பாஷ்யகாரர்) முதலியோர் இப்படி இசைவதில்லை. வேறு வசனங்களால் அர்த்தஜ்ஞானம் நித்யமாகிறது என்றிவர்கள் பக்ஷம். இவ்விரண்டு பக்ஷங்களுக்கும் மாறுபட்டுள்ளது நமது ஸ்ரீபாஷ்யகாரர் ஸித்தாந்தம். அத்யயனவிதி அர்த்தஜ்ஞான பர்யந்தமன்று. அர்த்தஜ்ஞானத்தை நித்யமென்பதாக வேறு ப்ரமாணங்களும் விதிக்கவில்லை என்பதாக விப்பக்ஷம். அர்த்தஜ்ஞானமன்றியில் வேதபாராயணம் கூடாது என்பது ஒருவர் பக்ஷமுமன்று.

வேதாத்யயனத்தினால் ப்ராம்மண்யம் ஸித்திப்பதுபோல் திவ்யப்ரபந்தத்தை ஓதுவதாலேயே ஸ்ரீவைஷ்ணவத்வம் ஸித்திக்கிறது என்பது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர் ஒவ்வொருவரும் இசைந்த விஷயம்.

வேதாத்யயனத்திற்கு அக்ஷரங்களை அறிவதே பலம். அர்த்தஜ்ஞானமன்று. அப்படியே திவ்யப்ரபந்தாத்யயனத்திற்கும் அக்ஷரத்தை அறிவதே பலமன்றி அர்த்தஜ்ஞானம் வேண்டுவதில்லை.

ஸ்ரீரங்கமாஹாத்ம்யத்தில் இவ்வாறாகவே சொல்லியிருக்கிறது.

" अध्येतव्यं द्विजश्रेष्ठैर्वेदरूपमिदं सदा ।
स्त्रीशूद्रादिभिश्चैव तेषां मुक्तिः करे स्थिता ॥"

சிறந்த த்ரைவர்ணிகர்களும், ஸ்த்ரீ சூத்ரர் முதலியோர்களும் வேதரூபமான இந்த திவ்ய ப்ரபந்தத்தை நித்யமாக ஓதவேண்டும். அவர்களுக்கு



மோக்ஷமானது கையில் இருக்கின்றது என்று பொருள். இங்கு "அத்யேதவ்யம்" என்றதனால் வேதாத்யயனத்திற்குச்சொல்லிய ரீதியிலே அக்ஷரங்களை அறிவதே பலம் என்று ஸித்திக்கின்றது.

மார்க்கண்டேய புராணத்திலும் மத்ய பாகமான பகவத் தர்மத்தில் வரும் அத்யாயத்தில் ஸநத்குமாரரைப்பற்றி ஸௌனகர் சொல்லுவதாவது—

" कृपया तत्प्रणीतां तु ब्रह्मविद्यां महत्तराम् ।
अध्येष्यन्ति द्विजा भूपाः वैश्याश्शूद्राश्च सर्वशः ॥
एषा च वेदगाथावत् नित्या द्राविडसंहिता ।
संस्कृतश्रुतयो यद्वत् द्रामिडश्रुतयस्तथा ॥"

ஆழ்வார் கருணையினால், ப்ரவர்த்தனம் செய்த த்ரமிடோபநிஷத்தை ப்ராம்மணர், க்ஷத்திரியர், வைச்யர், சூத்ரர், இவர்கள் அத்யயனம் செய்யப்போகிறார்கள். ஸம்ஸ்க்ருத வேதங்களைப்போல் தமிழ் வேதங்களும் நித்யங்களானவை) என்பதே அது. மேலும் பாராசரஸம்ஹிதை முதலிய ஸ்ரீபாஞ்சராத்ர தந்த்ரங்களில் ப்ரதிஷ்டை முதலிய காலங்களில் திவ்ய ப்ரபந்தத்தை பாராயணம் செய்ய விதித்திருக்கின்றது. அர்த்தஜ்ஞானத்தோடு தான் பாராயணம் செய்யவேண்டும் என்று ஒரு ப்ரமாணங்களிலும் சொல்லவில்லை.

"கேட்போருக்கு ச்ராவ்யமாகவும் அர்த்தஜ்ஞானம் உண்டாகும்படியும் ஸேவிப்பதுதான் உசிதம் என்கிறார் இவர்." செவிக்கினிய செஞ்சொல்லை வேறுவிதமாக இனி ச்ராவ்யமாக்க வேண்டியதொன்றுமில்லை.

" பண்ணுலகிற்படியாத விசையிற்பாடும் பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே" என்று பரமபதஸோபானத்தில் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்துள்ளபடியாலே தேவகானத்திற்குத்தான் திவ்ய ப்ரபந்தம் அமைந்துள்ளது. அந்த கானமுறையில் எல்லோரும் ஸேவிப்பது அஸாத்யம். ஆகவேயன்றோ "தானம் வழங்கித் தமிழ்மறையின்னிசை தந்தவள்ளல்" என்பதாக ஸ்ரீமந்நாதமுனிகளை நம் தேசிகன் கொண்டாடியதும். இசையில்லாமல் ஸேவிப்பது கூடாதென்று யாதொரு ப்ரமாணமும் இல்லை. இசையோடு சேவிக்கும் முறை விச்சேதமடையாததற்காகவே எம்பெருமானார் ஸ்ரீரங்கம் முதலிய இரண்டொரு திவ்ய தேசங்களிலே அந்த ரீதியை தொடரச்செய்தது. ஆகவே இசையிற் சேராத திவ்ய ப்ரபந்த பாராயணம் விருத்தமாகாது.

கேட்போருக்கும் அர்த்தஜ்ஞானம் உண்டாகும்படியே இதை ஸேவிக்க வேண்டுமென்பது சக்யமா? பகவத் விஷயத்தை அதிகரிக்க சக்தியில்லாதவர்களுக்கு ஒன்றான ஆழ்வாரே விபவத்தில் எழுந்தருளி ஸேவித்தாலும் அர்த்தஜ்ஞானம் ஏற்படமாட்டாதே! "திருவிருத்தத்தோரடி கற்றீர் திருநாட்டகத்தே" என்கிறபடியே ஒரு பாதத்தை மாத்திரம் கற்றாலே பரம புருஷார்த்தமுண்டு.

"அர்த்தஜ்ஞானத்தை வற்புறுத்துகிற ஸ்ம்ருதிவாக்யங்கள் வேதாந்தி ஸம்மதமல்ல" என்று எழுதியதும் உசிதமன்று. இவைகளை ஸம்மதித்தே இவற்றின் தாத்பர்யத்தை இன்னது என்று ச்ருதப்ரகாசிகை முதலியவற்றில் நிரூபணம் செய்திருக்கிறது.

ரிஷி, சந்தஸ்ஸு, தேவதை இவைகளின் ஜ்ஞானம் அவச்யம் என்று வேதாந்தி ஸம்மதமில்லை என்பதும் பாராசரஸம்ஹிதை என்னும் ஸ்ரீபாஞ்சராத்ரத்தில் 12வது அத்யாயத்தில் சொல்லியிருப்பதற்கு விருத்தமானது, அதாவது—ப்ரபன்னனான பரமைகாந்தியும், மோக்ஷ பலத்தையும் மற்ற காம்ய பலத்தையும் விரும்புமவருமான மற்ற ப்ராம்மணர் முதலியவர் மோக்ஷ ஸித்திக்காகவும் மற்ற பலம் ஸித்திப்பதற்காகவும் ஆசார்யோபதேசம் பெற்று தேவதை முதலியவற்றை எல்லா கர்மாக்களிலும் ஸ்மரிக்கவேண்டும்.

தேவதை முதலியவற்றை அறியாமல் வேதம் முதலியவற்றையும் மந்த்ரம் முதலியவைகளையும் யாதொரு ப்ராம்மணன் அப்யாஸம் பண்ணுகிறானோ அவன் ராக்ஷஸனாகிறான். ஜாதி சண்டாளனாகிறான். அவன் நரகத்தை அடைகிறான்.

ஆகவே எல்லா கர்மாக்களிலும் மந்த்ரம் முதலியவற்றைச் சொல்லும்பொழுதும் வேதத்தை அத்யயனம் செய்யும்பொழுதும் எப்பொழுதும் அக்ஷரதேவதைகள் முதலியவற்றை ஸ்மரிக்கவேண்டும். இது ஸத்யம் இது ஸத்யம் மேலும் இதுவே ஸத்யம் பிரம்மாவே என்பது.

இவ்வர்த்தத்தை "प्रपन्नः परमैकान्ती என்றாரம்பித்து सत्यं सत्यं पुनस्सत्यं पतदेव चतुर्मुख" என்றளவாக உள்ள ச்லோகங்களால் சொல்லியிருக்கிறது. மேலும் சிக்ஷை முதலிய ஆறு அங்கங்களோடு கூடவே வேதாத்யயனம் செய்யவேண்டும். இது நித்யம் என்று எல்லா வேதாந்திகளும் ஸம்மதித்திருக்கிறார்கள். அங்காத்யயனமானது அர்த்தஜ்ஞான பர்யந்தமே என்று ச்ருதப்ரகாசிகையில் ஸமர்த்தனம் செய்தருளியிருக்கிறார். ரிஷி



முதலியவற்றைப்பற்றிய ஜ்ஞானம் ஆவச்யகமானது என்றுதானே இப்பொழுது ஸித்திக்கின்றது? "योहवा अविदितार्षेय" என்றாப்போலுள்ள ப்ரத்யக்ஷச்ருதி ஸ்ம்ருதிகளிலேயே இந்த ஜ்ஞானம் ஆவச்யகமென்று சொல்லியிருக்கின்றதே.

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் மூலமந்த்ராதிகாரத்தில் "அவிதித்வா ........பாபீயான் ஜாயதே து ஸ:" என்கிறபடியே ரிஷ்யாத்யபரிஜ்ஞானத்தாலே மந்த்ரம் விபரீதபலம் என்று ஸாரஸ்வாதினீ ஸ்ரீஸூக்தியையும் இவர் பராமர்சிக்கவேண்டும். உபநயநகாலம் முதற்கொண்டே ரிஷி சந்தஸ்ஸு தேவதைகளை உபதேசிக்கிறார்களே.

"அர்த்தஜ்ஞான மில்லாமல் வேதவாக்யங்களைக்கொண்டு பண்டிதர்களால் செய்யப்படும் வைதிககர்மாக்கள்" என்கிறார். பண்டிதர் என்பதற்கு அர்த்தஜ்ஞான முடையவர் என்று பொருள். அர்த்தஜ்ஞான மில்லாமல் அர்த்தஜ்ஞான முள்ளவர்கள் வைதிக கர்மாக்களை அநுஷ்டிக்கிறார்கள் என்பது எப்படி பொருந்தும்? இவர் இம்மாதிரியாக ஏதோ ஒன்றை எழுதுவது ஸரியன்று. ஆகவே இக்காலத்தில் மஹான்கள் சிலர் அர்த்தஜ்ஞான மன்றியில் செய்துவரும் வேதபாராயணமும், திவ்யபிரபந்த பாராயணமும் மிகவும் சாஸ்த்ரீயமானதே.

## ஸ்ரீ தேசிகன் செய்த
## தசாவதாரஸ்தோத்ரத்தை அநுஸரித்த ஓர் ஸம்பாஷணை

(முன் தொடர்ச்சி-ஜனவரி மீ பக்கம் 21)

[இச் சம்பாஷணை ரூபமான கட்டுரையானது காலம் சென்ற கும்பகோணத்திலிருந்த கவர்மெண்டு வக்கீலாயிருந்த ஸ்ரீனிவாஸ அய்யங்கார் பௌத்திரியும் மைசூரில் ரெவினியூ கமிஷனராகயிருந்த A. Rangaswamy Iyengar மருமகளும், A. மாதுவையங்கார் பாரியையுமான ஸ்ரீமதி ராஜம்மாளால் இயற்றப்பட்டது. பூர்வ ஸஞ்சிகையில் இக்கட்டுரையின் முதல் பாகம் அச்சிடப்பட்ட பொழுது அந்தம்மாள் பெயர் குறிப்பிட்டு எழுதப்படத் தவறிப்போய்விட்டது. இந்தம்மாளுடைய வைதுஷ்யமும் கவன சக்தியும் வேதாந்த சாஸ்திரங்களில் உள்ள ஞானமும் வைதீகச்ரத்தையும் அநுஷ்டானமும், சரிதையும் மிகவும் வியக்கத்தக்கது. சென்ற தடவை அந்த அம்மாளுடைய பெயரை தெரிவிக்காததற்காக நாம் க்ஷமாபணம் வேண்டுகிறோம்.—பத்திராதிபர்.]

கிருஷ்ண.—அடுத்ததாக என்ன செய்தார்? அதைக் கேட்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறது.

சடகோப.—ஸரி, கேள். அது கண்டும் கேட்டும் இராத அதிசயம். அஸுரராஜனான ஹிரண்யகசிபுவின் அரண்மனையைக் கண்டேன். அதில் ஒரு ஸபா மண்டபம்; வஜ்ரமும் வைடூர்யமும் இழைத்த கம்பங்கள். ஒரு பக்கத்தில் பரமபாகவதனான அழகிய குழந்தையான ப்ரஹ்லாதன் நின்று கொண்டிருக்கிறான். பிதாவான ஹிரண்யகசிபு மிகவும் ஆர்ப்பாட்டத்துடன் 'எவ்விடமிருக்கிறார் ஹரி? என்று கர்ஜிக்கிறான். 'தூணிலுமுளன் துரும்பிலுமுளன் எம்பெருமான்' என்று வினயத்துடன் கூறுகிறான் ப்ரஹ்லாதாழ்வான். பள்ளியில் ஓதிவந்த தன் சிறுவன் வாயில் ஓராயிர நாமம் ஒள்ளியவாகிப் போத, உடனே ஹிரண்யகசிபு அதனுக்கு ஒன்றுமோர் பொறுப்பிலனாகி, பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண்புடைப்ப, அப்பொழுதே தன் பக்தனான குழந்தை ப்ரஹ்லாதனின் வாக்கை உண்மையாக்க வெளிவந்தது தெள்ளிய நரசிங்கமாகிய தேவு. உடம்பெல்லாம் மனித ரூபமாகவும், முகம் பிறையெயிற்று அனல்விழி பேழ்வாயும் பிடரி மயிரும் உள்ள சிங்கமாகவும் பார்க்க மிகவும் பயங்கரமாக இருந்தது. சங்கு சக்கரம் முதலான புராதனமான பஞ்சாயுதங்களையும் விலக்கிவிட்டு அவற்றின் கார்யங்களை ஐந்து நகங்களே செய்தன. தடையற்ற மஹிமை கொண்ட அந்நரசிங்கம் அஸுரஸந்த்யாகாலத்தில் அஸுரனை ஸம்ஹரித்தது. இதுவரை ஆகாசத்திலிருந்து பயத்துடன் பார்த்துக்கொண்டிருந்த ப்ரஹ்மா முதலான ஸகல தேவதைகளும் கீழே இறங்கிவந்தார்கள். உடனே ப்ரஹ்மா ஓடோடியும் சென்று நரசிங்கத்தை ஈன்ற அந்தத் தூணை வலம் வந்து விழுந்து விழுந்து நமஸ்கரித்தார். 'பாட்டி! பாட்டி; நாராயணன் பிள்ளையான பேரன் ப்ரஹ்மா வந்திருக்கிறேன்' என்று கூறினார். இவ்வளவு யுகங்களாகத் தனக்குப் பாட்டி இல்லை என்று நினைத்திருந்ததற்கு, மஹாஸுரன் வீட்டுத் தூண் அக்குறை தீர தற்செயலாக பாட்டியாயிற்றாம். இதற்குள் குழந்தையான ப்ரஹ்லாதனால் துதிக்கப்பட்டு சாந்தமாய் லக்ஷ்மீ நரஸிம்மமாகக் காக்ஷி கொடுத்தார். அவர் மூன்று உலகங்களையும் ரக்ஷிக்கட்டும்.

प्रत्यादिष्टपुरातनप्रहरणग्रामः क्षणं पाणिजैः
अव्यात् त्रीणि जगन्त्यकुण्ठमहिमा वैकुण्ठकण्ठीरवः ।
यस्मादुर्भवनात् अवन्ध्यजठरा याहच्छिकात् वेधसां
या काचित् सहसा महासुरगृहस्थूणा पितामह्यभूत् ॥ ५ ॥



கிரு.—இதை நினைக்கும்போதே பயமாயிருக்கிறதே. அதற்கு அடுத்த வேஷம் என்ன, அப்பா? அதையும் சீக்கிரம் கூறு.

சட.—அடுத்தது மிகவும் வேடிக்கையானது. வந்தார் ஒரு வாமன ரூபத்துடன். 'கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பக்கூடாது' என்னும் பழமொழி இவரால்தான் உண்டாயிற்றுப் போலிருக்கிறது. எவ்வளவு குள்ளமான சரீரம்! ப்ரஹ்மசாரியாம்; முழங்காலுக்கு மேல் வேஷ்டி. மேலே ஒரு மான் தோல். ஒரு கையில் கிண்டி; ஒரு கையில் குடை. இப்படிப்பட்ட வேஷத்தோடு பலிச்சக்ரவர்த்தியின் யாகபூமியில் மெள்ள மெள்ள நடந்துவந்து தோன்றினார்.

கிரு.—ஏனப்பா, ஒவ்வொரு வேஷத்திலும் லக்ஷ்மியும் கூடவே இருந்தாள் என்று சொல்லி வந்தாயே. இது ப்ரஹ்மசாரி வேஷமாயிற்றே, அவள் இப்பொழுது வரவில்லையா?

சட.—அடடா! அந்த வேடிக்கையை ஏன் கேட்கிறீர். மார்பிலிருக்கும் மஹாலக்ஷ்மியை பட்டையான மான்தோலால் நன்றாக மறைத்து வைத்துக்கொண்டிருந்தார். கொஞ்ச நாழிகைக்கு ஒரு தரம் மான் தோலை நகர்த்தி நகர்த்தி இழுத்துவிட்டு மறைத்துக்கொண்டார். அதைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு உள்ளடங்காச் சிரிப்பு வந்தது. வேஷம் போட்டாலும் இப்படியல்லவா போடவேண்டும். அதற்கேற்ற நடிப்பு. பிறந்தவன்றே பிச்சைக்கு வந்தவன்; பிறரை யாசிக்கும் பழக்கமு மில்லாதவன். வார்த்தை சொல்லத் தெரியாமல் "கொள்வன் நான், மாவலி, மூவடி தா" என்று மழலை மொழியில் யாசித்தான் அந்த ப்ரஹ்மசாரி. மூன்று லோகத்திற்கும் ஏகசக்ராதிபதியாய் எதைக் கேட்டாலும் கொடுக்கும் உதாரஸ்வபாவனான தன்னைப் பார்த்து 'மூன்றடி மண் வேண்டும்' என்று குழறி யாசிப்பதைக் கேட்டு மஹாபலி ஸஹிக்க முடியாத வெட்கத்தினால் உடல் குன்றி தலை குனிந்து 'கொடுத்தேன்' என்றான். உடனே திரிவிக்ரமனாய் வளர்ந்து மூன்றடி அளக்க ஆரம்பித்தார். ஒரு அடி ஆகாசத்தில் வைத்ததும் எப்படி இருந்ததென்றால், ராஜஸைந்யத்தில் தீரனாய் கால்பலம் கொண்ட ஒரு ஸேவகன் முன்னதாக ஓடிச் சென்று 'ராஜா வருகிறார்' என்று எங்கும் எல்லோருக்கும் அறிவிப்பது போல, பலிச்சக்ரவர்த்தியின் கீர்த்தி வருகிறது என்று தெரிவிப்பது போலிருந்தது. அப்போது நான்முகன் குறைகொண்டு தன் குண்டிகையிலிருந்து நீர்வார்த்து மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி அத்திருவடியைக் கழுவ, அந்நீரை சிவன் தன் சிரஸ்ஸினால் தரித்

தார். அதனால் சிவனுடைய தலை பரிசுத்தமாயிற்று. இன்னும் எட்டுத் திக்கிலும் அது கங்கையின் ப்ரவாஹமாக ஓடிற்று. வெளுப்பான அந் நீர்ப்பெருக்கைப் பார்த்தால் பலிச்சக்ரவர்த்தியின் கீர்த்தியே எட்டுத் திக்குகளிலும் எப்போதும் கொடிகட்டிப் பறப்பதுபோலிருந்தது. அந்தத் திரிவிக்ரமனுடைய திருவடிகளை நாம் கண்ணால் காணக் கூடுமா? மனத்தி னால் தியானிக்க வேண்டியதுதான். அப்படிப்பட்ட திருவடி நம்மைக் காப்பாற்றட்டும்.

व्रीडाविद्धवदान्यदानवयशोनासीरधाटीभटः

त्रैयक्षं मकुटं पुनन्नवतु नः त्रैविक्रमो विक्रमः ।

यत्प्रस्तावसमुच्छ्रितध्वजपटीवृत्तान्तसिद्धान्तिभिः

स्रोतोभिः सुरसिन्धुः अष्टसु दिशासौधेषु दोधूयते ॥ ६ ॥

கிரு.—பேஷ், சடகோபா! நன்றாகப் பார்த்து மனதில் பதியவைத் திருக்கிறாய். இன்னும் என்னென்ன வேடிக்கை செய்தார் அந்த ரங்க நாதன்?

சட.—பிறகு பரசுராமாவதாரம். அவருடைய கோபத்தை நினைத் துக்கொண்டால் இப்போதும் பயமாக இருக்கிறது. நரஸிம்ம வேஷம்கூட அப்படியில்லை. கோபத்தினால் கொழுந்து விட்டெரியும் ஒரு அக்னிபோல் ஜ்வலித்தார். ஒரு க்ஷத்ரியன் தன் பிதாவான ஜமதக்னிக்குச் செய்த தீங்கினால் எழுந்த கோபத்தினால் தன் கோடாலியை எடுத்துக்கொண்டு இருபத்தொரு தடவை இவ்வுலகில் க்ஷத்ரியப் பூண்டே இல்லாமல் அழித்து விட்டார். அவருடைய கோபமாகிற அக்னிக்கு க்ஷத்ரியர்களாகிற நெய்யி னால் ஹோமம் செய்தார். பிறகு கோபம் சாந்தமானவராய், தான் ஜயித்த பூமியை யெல்லாம் காச்யபன் என்னும் ஒரு ப்ராமணருக்கு யாகத் தில் தக்ஷிணையாகக் கொடுத்துவிட்டு, ஸமுத்ரத்தை வசமாக்கி, அதில் ஒரு ப்ரதேசத்தை வாங்கிக்கொண்டு தவம் செய்யச் சென்றார். இப்பொழுது பார்த்தால் கோபமே உருவெடுத்தவராய் வந்த பழைய பரசுராமன் இவர் தானோ என்று தோன்றிற்று. என்ன சாந்தம், என்ன பொறுமை! அந்த முனிவர் ப்ரஹ்மா முதல் சிறிய புழுவரையிலுள்ள ஸகலருடைய அமங்க ளத்தையும் போக்கி, மங்களங்களை யுண்டு பண்ணுவாராக.

क्रोधाग्निं जमदग्निपीडनभवं सन्तर्पयिष्यन् क्रमात्

अक्षत्रामपि सन्ततक्ष य इमां त्रिस्सप्तकृत्वः क्षितिम् ।



दत्त्वा कर्मणि दक्षिणां क्वचन तां आस्कन्द्य सिन्धुं वसन्

अब्रह्मण्यमपाकरोतु भगवान् आब्रह्मकीटं मुनिः ॥ ७ ॥

கிரு.—அவ்வளவு கோபியா பரசுராமன். போகட்டும். சாந்தஸ்வ ரூபரான ராமனுடைய வேஷம் எப்படி யிருந்தது?

சட.—சக்ரவர்த்தித் திருமகனாய் வந்த ராமனிடத்தில் கோபம் சாந்தம் இரண்டுமே இருந்தது. முதலில் மிகவும் சாந்தமாய் சமுத்திரக் கரையில் தர்ப்பங்களைப் பரப்பி ஒரு நீலக்கடல் சாய்ந்தாற்போல படுத்துக் கொண்டு 'வழிவிடு' என்று ஸமுத்ரராஜனைச் சரணமடைந்தார். தன்னைப் பெரியவனாக நினைத்துக்கொண்ட ஸமுத்ரராஜன் கர்வத்தினால் எதிரில் தோன்றாமலிருந்தான். உடனே பொங்கிவந்தது எல்லையில்லாத கோபம் ஸ்ரீராமனுக்கு. வில்லை எடுத்து நாணேற்றி, லக்ஷ்மணா! கொண்டுவா பாணங்களை என்று ஆக்ஞாபித்தார். தனுர்வித்தையில் கரைகண்டவ ரல்லவா ராமன். ப்ரளய காலாக்னியைப் போல ஸமுத்திரத்தை ஜலமில் லாமல் உலர்த்திவிடும்போலிருந்தது அவருடைய பாணங்களின் தன்மை. பார்த்தான் ஸமுத்ரராஜன். இனி வேறு வழியில்லை யென்று ஓடிவந்து சரணமடைந்தான். கடலைத் தாண்ட உபாயத்தையும் சொன்னான். உடனே சாந்தமூர்த்தியாகிவிட்டார் ராமன். நளனைக் கொண்டு அணை யைக் கட்டுவித்து அக்கரை சேரவேண்டுமென்று யோஜித்துக்கொண்டிருக் கையில், தெற்கே யிருந்து நால்வர் பின்தொடர ஒரு வீரன் ஆகாய மார்க்க மாக வந்தான். 'நான் விபீஷணன், எல்லாவற்றையும் விட்டு சரண மடை கிறேன்' என்று கூவினான். ஸுக்ரீவன் முதலான வானரவீரர்கள் தடுத் தும் கேட்காமல், 'எந்த நிலைமையிலாவது ஒரு முறை என்னை சரணம் அடைந்தவர்களை ரக்ஷிப்பதே என்னுடைய விரதம்' என்று விஸ்தாரமாகக் கூறி ஸுக்ரீவாதிகளை ஸமாதானப்படுத்தி அந்த ராக்ஷஸர்களைச் சேர்த்துக் கொண்டார். அந்தக் காக்ஷியை வர்ணிப்பதற்கு ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனாலும் முடியாது. (சரணாகதரக்ஷணம் என்னும்) தர்மமே உரு வெடுத்து வந்த வில்லாளியான அந்த ராமன் அதர்மத்தில் நம் மனது போகாமல் தடுத்து ரக்ஷிக்கட்டும்.

पारावारपयोविशोषणकलापारीणकालानल-

ज्वालाजालविहारहारिविशिखव्यापारघोरक्रमः ।

सर्वावस्थसकृत्प्रपन्नजनतासंरक्षणैकव्रती
धर्मो विग्रहवान् अधर्मविरतिं धन्वी स तन्वीत नः ॥ ८ ॥

கிரு.—கேட்க மிகவும் இனிமையா யிருக்கிறதே. ராமன் மனத்துக்கினியானே இல்லையோ. அடுத்தது என்ன புத்தாவதாரமா?

சட.—என்ன அத்தான், இப்படிக் கேட்கிறீர்களே? நம் தேசிகன் அதை எடுக்கவேயில்லையே. அடுத்தது பலராமாவதாரம். தோளில் கலப்பையை ஏந்தித் தோன்றினார். ஆஹா என்ன அழகு! சுத்த வெண்மையான சரீரம்; நீலப்பட்டாடை அரையில் சாத்தியிருந்தார். அந்தத் தேஜஸ் கண்ணைப் பறித்துக்கொண்டே போய்விட்டது.

கிரு.—என்ன பலராமனா? கிருஷ்ணனோடு கூடவேதானே விளையாடினார். அது தவிர அவர் என்னென்ன லீலைகள் செய்தார்?

சட.—ஆமாம். அவருடன் கூடவேதான் விளையாடினார். பாலில் கலந்த சர்க்கரைபோல் பிரிக்க முடியாது தான் இரண்டுபேருடைய விளையாட்டுக்களும். குழந்தைப் பருவம் முதல் சேர்ந்தே விளையாடி லோகங்களுக்கு ஆநந்தத்தை யுண்டு பண்ணினார்கள். பலராமன் தனியாகச் செய்த லீலைகளும் சில உண்டு. பிரலம்பன் முதலான அஸுரர்களைக் கொன்றார். யமுனையைக் கூப்பிட்டு அது வராதபோது தன் கலப்பையினால் அதை இழுத்தார். ஹஸ்தினபுரியை அடியோடு பெயர்த்து கங்கையில் கவிழ்க்கப் பார்த்தார். இப்பொழுதும் அதனாலேயே அந்நகரம் கங்கையில் விழுவது போல சற்றுச் சாய்ந்தே இருக்கிறது. அப்படிப்பட்ட பலராமனுடைய விளையாட்டுக்கள் நமக்கு மங்களங்களை யுண்டு பண்ணட்டும்.

फक्कत्कौरवपट्टणप्रभृतयः प्रास्तप्रलम्बादयः
तालाङ्कस्य तथाविधा विहृतयः तन्वन्तु भद्राणि नः ।
क्षीरं शर्करयेव याभिरपृथग्भूताः प्रभूतैर्गुणैः
आकौमारकं अस्वदन्त जगते कृष्णस्य ताः केलयः ॥ ९ ॥

கிரு.—ஸரி, இப்போது என் அப்பன் கண்ணனுடைய லீலைகள் அல்லவா? அதில் எதைக் காண்பித்தார்? தாயால் உரலில் கட்டுண்டு ஏங்கி யிருந்ததா? அல்லது தனிவிசயன் தேர்த்தட்டில் செய்த கீதோபதேசமா? சீக்கிரம் சொல்லு.



[library stamp]

சட.—என்ன, அத்தான் அவஸரம்? பசியா[illegible] சொல்லுகிறேனே.

கிரு.—இல்லையப்பா இல்லை. பசியேது தாகமேது இதைக் கேட்கும் போது? அதிகமான ஆவலால்தான் அப்படிக் கேட்டேன்.

சட.—அப்படியா, ஸரி. நீங்கள் கேட்ட இரண்டும் காண்பிக்கவில்லை. அவர் செய்த அநேகவிதமான லீலைகளில், காளியமர்த்தனத்தை வெகு அழகாக நடித்துக் காண்பித்தார். அது என் மனதை விட்டு அகலவே இல்லை. ஒரு புறத்தில் பசுக்களும் கன்றுகளும் விஷவேகம் தாங்காமல் மூர்ச்சித்துக் கிடக்கின்றன. மற்றோரிடத்தில் கோபாலர்கள் மயங்கிக் கிடக்கிறார்கள். தன் பக்தர்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை நீக்க யமுனையில் குதித்தார். உடனே காளியன் அதிலிருந்து கோபத்தினால் 'புஸ் புஸ்' என்று சீறிக்கொண்டு கிளம்பினான். அவனுடைய விரிந்த படங்களைக் கண்டால் ஒரு விசாலமான வீதி போல் இருந்தது. அதை ஒரு நாடக மேடையாகக் கொண்டு கிருஷ்ணன் ஒரு தலையிலிருந்து மற்றொரு தலையில் குதித்து காலை வைத்து வெகு அழகாக நாட்டியம் ஆடினார். பாம்பைக் கண்டு கொஞ்சங்கூட பயப்படாமல் புன்சிரிப்புடன் கூடிய அவருடைய முகமும் ஆடின ஆட்டமும் என் கண் முன்னேயே நிற்கின்றன. லோக ரக்ஷணத்திற்காக எடுத்த அவதாரமல்லவா அது? கபடமாக கோபவேஷம் பூண்ட அந்தக் கண்ணன் பொருட்டே நம்முடைய நமஸ்காரங்கள் இருக்கட்டும்.

नाथायैव नमः पदं भवतु नः चित्रैः चरित्रक्रमैः
भूयोभिः भुवनान्यमूनि कुहनागोपाय गोपायते ।
कालिन्दीरसिकाय काल्यिफणिस्फारस्फटावाटिका-
रङ्गोत्सङ्गविशङ्कचंक्रमधुरापर्यायचर्यायते ॥ १० ॥

கிரு.—சடகோப! மிகவும் ரஸமாக இருக்கிறது. முடிந்துவிடுகிறதே என்று இருக்கிறது. இனி வரப்போகும் கல்கி அவதாரத்தையும் காண்பித்தார்களா?

சட.—ஆஹா, அந்த ஸ்ரீ ரங்கநாதனும், ஸ்ரீ ரங்கநாயகியும் அதையும் அத்யத்புதமாக நடித்துக் காட்டினார்கள். தசாவதாரமென்று எடுத்ததில் அதுவும் ஒன்றல்லவோ. விஷ்ணுயஶஸ் என்னும் பிராமணனுக்குப் பிள்ளை

யாய்ப் பிறந்தார். தேவதத்தம் என்ற பெயருடைய ஒரு சுத்த வெள்ளைக் குதிரையின் மேல் ஏறி வந்தார். கையில் பளபள வென்று ஜ்வலிக்கும் கத்தி. அவர் அதைச் சுழற்றும்போது பார்த்தால் மின்னலுடன் கூடிய கார்மேகம் போலும், அது மழையைப் பொழிவது போலும் இருந்தது. மேகமானது நல்ல மழையைப் பெய்து முட்களைப் போக்கி நல்ல பயிர்களை விளையச் செய்வது போல, அவர் கலிபோன்ற துஷ்டர்களை நாசம் செய்து மறுபடி கிருதயுக தர்மத்தை நிலைபெற்று வளரும்படி செய்தார். அந்தக் கல்கி அவதாரம் செய்த ஸர்வேச்வரன் மாறி மாறிப் பிறப்பும் இறப்புமாய் நாம் படும் துக்கத்தைப் போக்கட்டும்.

भाविन्या दशया भवन्निह भवध्वंसाय नः कल्पतां
कल्की विष्णुयशस्सुतः कलिकथाकालुष्यकूलंकषः ।
निश्शेषक्षतकण्टके क्षितितले धाराजलौघैर्ध्रुवं
धर्मं कार्तयुगं प्ररोहयतु यन्निस्त्रिंशधाराधरः ॥ ११ ॥

கிரு.—சடகோபா! நீயே பாக்யசாலி. ஸர்வேச்வரனுடைய லீலைகளை யெல்லாம் கண்ணாரக் கண்டு அனுபவித்தாய். பிறகு என்ன நடந்தது?

சட.—பிறகு ஸ்ரீ ரங்கநாதன் பாயும் நீர் அரங்கந்தன்னுள் பாம்பணைப் பள்ளிகொண்ட ரங்கநாதனையே ஸேவை ஸாதித்தார். ஸபையோர்களுடைய ஆனந்தத்திற்கு அளவே யில்லை. உடனே எல்லோரும் எழுந்து சிரமேற் கைகூப்பி எம்பெருமானுடைய குணங்களை யெல்லாம் வாயார வாழ்த்தினார்கள். 'உலகத்தைக் காக்கும்பொருட்டு உன் இஷ்டத்தினால் மீனானாயே' என்கிறார் ஒருவர்; 'என்ன விளையாட்டு உன்னுடையது! ஒரு மலையைச் சுமப்பதற்கு ஆமை உரு எடுத்தாயே' என்கிறார் ஒருவர்; 'பாசிதூர்த்துக் கிடந்த பார்மகளை எடுக்க எவ்வளவு பெரிய பன்றியாய் வந்தாய்!' என்கிறார் மற்றொருவர்; 'தன் பக்தனையும் அவன் வார்த்தையையும் ரக்ஷிக்கும் பொருட்டு உயிரில்லாக் கம்பத்தில் உடனே தோன்றினாயே ஓ லக்ஷ்மீ நரஸிம்ஹ! என்னே உன்னுடைய கருணை!' என்கிறார் வேறொருவர்; 'மஹாபலிச்சக்ரவர்த்தியைக் காப்பாற்றுவதற்காகப் பொல்லாக் குறளுருவாய் அழகிய சிறு கையில் நீரேற்று எல்லா வுலகும் அளந்து கொண்ட எம்பெருமானே' என்கிறார் பின்னுமொருவர்; 'எப்படி அப்பா அவ்வளவு கோபம் வந்தது உனக்கு? துஷ்ட அரசர்களை சிக்ஷித்த பரசுராம!' என்கிறார் ஒருவர்; 'அப்பனே! கருணைமூர்த்தி! கௌஸல்யை



தன் குலமதலாய்' என்று கூப்பிடுகிறார் ஒருவர்; 'கலப்பையும் கையும் இருந்த அழகு காணீர், செம்பொற்கழலடிச் செல்வ! பலதேவா!' என்று சொல்லுகிறார் மற்றொருவர்; 'என்ன விளையாட்டு விளையாடினாய் என் தாமரைக் கண்ணா! கண்ணா! இடையர்களோடு இடையனாக இருந்தாயே! உன் ஸௌசீல்யமே ஸௌசீல்யம். நீர்க்கரை நின்ற கடம்பை யேறிக் காளிய னுச்சியில் நட்டம் பாய்ந்து போர்க்களமாக நிருத்தம் செய்த யசோதை இளஞ்சிங்கமே!' என்று மூர்ச்சிப்பார் ஒருவர்; 'வெள்ளைக் குதிரை மேல் விரைந்து வந்து அறத்தைக் காத்தளிக்கும் அன்பனே! கல்கியே' என்பார் ஒருவர். இப்படி எப்போதுமே தனியாகவும் சேர்ந்தும் பேசியும் பிதற்றியும் பாடியும் எல்லா மஹாபாகவதர்களும் தங்கள் தங்கள் கோயில் சென்றார்கள். ஒவ்வொருவரிடமுமுள்ள புண்ணியக் குவியல்களைக் கணக்கிடவே முடியாது. கடை வைத்திருக்கிறார்கள். ஒரு தர்சனத்திற்கும் ஒரு அஞ்சலிக்குமே ஏராளமான புண்ணியங்களைக் கொடுத்து உலகத்தையே பரிசுத்தமாக்குகிறார்கள். நாம் போய்க் கேட்டு நாமும் வாங்கி வருவோம். வா, போகலாம்.

इच्छामीन ! विहारकच्छप ! महापोत्रिन् ! यदृच्छाहरे !
रक्षावामन ! रोषराम ! करुणाकाकुत्स्थ ! हेलाहलिन् ! ।
क्रीडावल्लव ! कल्कवाहनदशाकल्किन् ! इति प्रत्यहं
जल्पन्तः पुरुषाः पुनन्ति भुवनं पुण्यौघपण्यापणाः ॥ १२ ॥

கிரு.—அப்பா நல்ல அதிருஷ்டசாலிதான் நீ. காணக் கிடைக்காத பகவானுடைய அவதாரங்களின் காக்ஷிகளை யெல்லாம் கண்டாய். நீயே தன்யன். எனக்கு எங்கே அந்த பாக்யமெல்லாம் கிடைக்கப் போகிறதோ.

சட.—என்ன அத்தான், நீங்கள் மாத்திரம் அதிருஷ்டசாலி யில்லையா? இவ்வளவு பக்தியோடும் ஆசையோடும் அவருடைய லீலைகளைக் கேட்கவில்லையா? இதை ஆசையுடன் பார்ப்பவர்கள், மனமுருகிச் சொல்லுபவர்கள், அகம் கரைந்து கேட்பவர்கள் எல்லோருக்குமே மனதில் அந்த பகவானிடத்தில் ஸ்திரமான பக்தியும் கங்காப் பிரவாஹம் போன்ற வாக்சாதுர்யமும், சரீரத்தில் அளவிட முடியாத சுத்தியும் உண்டாகி, அவர்களுடைய சுபமான கீர்த்தி பத்துத் திக்குகளிலும் எல்லோரும் கொண்டாடும்படியாகப் பரவுகிறது என்று வித்யாஸமுத்திரமான நம் வேதாந்த தேசிகன் அருளிச் செய்திருக்கிறாரே. இந்த நாடக ரூபமான ஸ்தோத்ரமே உலகத்தின் ஸகல மங்களங்களுக்காகவும் ஸமுத்ரத்தில் தோன்றும் ரத்னம் போல பக்தியின் பலனாக அவரிடமிருந்து தோன்றியிருக்கிறது,

திரு.—சடகோபா! தன்யனானேன். இன்று காலை விழித்த வேளை நல்ல வேளை தான். அந்தப் பாகவதஸேவையும் பகவதனுக்ரஹமும் எனக்கும் கிடைக்குமா என்று பார்க்கிறேன். இப்போதல்லவா கலியன் செய்த இப் பாட்டின் அர்த்தம் விளங்குகிறது.

"மீனோடு ஆமை கேழல் அரிகுறளாய் முன்னும் இராமனாய்த்
தானாய் பின்னும் இராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியும்
ஆனான் தன்னை கண்ணபுரத்து அடியன் கலியன் ஒலி செய்த
தேனார்இன்சொல் தமிழ்மாலை செப்பப் பாவம் நில்லாவே."

विद्योदन्वति वेंकटेश्वरकवौ जातं जगन्मङ्गलं
देवेशस्य दशावतारविषयं स्तोत्रं विवक्षेत यः ।
वक्त्रे तस्य सरस्वती बहुमुखी भक्तिः परा मानसे
शुद्धिः काऽपि तनौ दिशासु दशसु ख्यातिः शुभा जृंभते ॥ १३ ॥

---

## ஸ்ரீஸத்வித்யாபாடசாலை, சைதாப்பேட்டை.

சென்னை கார்ப்பரேஷன் மேயர் ஸ்ரீமான் வெங்கடசாமி நாயுடு அவர்கட்கு ஒருபசாரம் அளிப்பதை உத்தேசித்து, ஷை பாடசாலை அங்கத்தினர்களால் 2—3—'39 (வியாழக்கிழமை) மாலை சைதாப்பேட்டை பிராமணத் தெருவிலுள்ள மேஹர் ஆசிரமத்தில், திருவல்லிக்கேணி ஸ்ரீமான் S. அழகிய சிங்கராசாரியர் (அட்வோகெட்) தலைமையின் கீழ் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அப்போது ஸ்ரீமான் C. V. ஸம்பத் ஐயங்கார், ஸ்ரீமான் சுந்தரமூர்த்தி ஓதுவார் முதலிய பிரமுகர்கள் ஸபையை அலங்கரித்தனர்.

முதன் முதல் பாடசாலை மாணவிகளால் கடவுள் வணக்கம் செய்யப்பட்ட பின்னர், அவைத்தலைவர் முறைப்படி முன்னுரைகள் சில மொழிந்தனர். பிறகு பாடசாலை துணைத்தலைவர் ஸ்ரீமான் K. ஸுதர்சநாசாரியாராலும், ஷை பாடசாலை மாணவன் K. பார்த்தசாரதியாலும் உபசாரப்பத்திரங்கள் படித்தளிக்கப்பட்டன.

பிறகு பாடசாலை மாணவன் V. ராமபத்ரன் என்பான், "பொருட்செறிவில்லாத பயனற்ற பெருமொழிகளை ப்ரயோகித்து ப்ரஸங்கித்தல் பயனின்று; எளிமையும் இனிமையும் வாய்ந்த நடையே சிறந்தது" எனும் கருத்தைச் சில ஆங்கில மொழிகள் மூலம் அவையோர்க்கு அறிவுறுத்தினான். பின்னர் பாடசாலை மாணவிகள் சிலரைக்கொண்டும், அம்மாணவரின் இசையாசிரியரான ஸ்ரீமான் P.K. அநந்தாசாரியரைக்கொண்டும் இனிமையான ஸங்கீதக் கச்சேரி ஒன்று நடத்தப்பட்டது. அங்கு விஜயம் செய்திருந்த ஸ்ரீ



ஓதுவார் அவர்கள் திவ்யப்ரபந்த தேவாரங்களினின்று சில பாசுரங்களைக் கேட்போர் பரவசமடையும்படி இன்னிசையுடன் பாடி ஸபையோரைக் களிப்பித்தார். அவருடன் வந்திருந்த ஸ்ரீமான் சங்கரையர் செய்த நகைச்சுவை நிரம்பிய விகடம் வெகு ஆனந்தத்தை அளித்தது. பாடசாலை பழைய மாணவர்களுள் ஒருவரான P.R. சேஷன் என்பவனைக்கொண்டும் சில விகடத்துணுக்குகள் நடத்தப்பட்டன.

பிறகு பாடசாலை மாணவிகளது கும்மி—கோலாட்டங்கள் சுமார் ஒருமணி காலம் நடைபெற்றன. அவற்றில் அன்னோர், திவ்யப்ரபந்தத்தில் ஸ்ரீ கோதையார், குலசேகரர் முதலியோர் அருளிச்செய்த பாசுரங்களை இன்னிசையுடன் பாடிக் கோலாட்டம் போட்ட காட்சி, அவையிலுள்ளார் கட்புலனையும் செவிப்புலனையும் ஒருங்கே ஆகர்ஷித்தன.

இவை யாவும் கண்டுகளித்த ஸ்ரீ ஓதுவார் அவர்கள், அடங்காமகிழ்ச்சி கொண்டு சில பேச்சுகள் பகன்றார். அவை வருமாறு:—"இங்கு விஜயம் செய்துள்ள ஸ்ரீமான் நாயுடு அவர்கள் தந்தை யென்றோதும் முந்தை மரபினில் தோன்றியவர் என்று கூறக்கேட்டேன். இவர் வசிக்கும் மாளிகையும் இவர்க்கு உரிமையாயுள்ள மருந்துக்கடையும் முறையே அப்பா தோட்டமும் அப்பா கம்பெனியுமாயிருப்பினும், 'தந்தை மகற்காற்று நன்றியவையத்து, முந்தி யிருப்பச்செயல்' என்னும் பொதுமறைக் கிணங்க இப்பாடசாலை மாணவர்கட்குத் தந்தைபோல்வராய், இன்னோரைக் கல்வியில் மேம்பாடடையச் செய்வதற்கே கங்கணம் கட்டிக்கொண்டு உரியவற்றைச்செய்கின்றாராதலால் இன்னாரைத் தந்தையெனல் ஏற்புடைத்து" என்று கூறித் தம் இன்னுரையை முடித்துக்கொண்டார்.

பின்னர் ஸ்ரீமான் நாயுடு அவர்கள் பேசியதன் ஸாராம்சம் பின்வருமாறு:—சென்னை ஸ்ரீபைசானி மாதவசெட்டி தர்மசாலா கட்டிடத்தில் வருடந்தோறும் நடக்கும் பண்ணிசைப்போட்டிப் பரீட்சைக்கு இப்பாடசாலை மாணவமாணவிகள் அழைத்துவரப்படுவதால் அப்போது சிறிதளவே இவர்களின் வன்மை தெரியவந்ததென்றும், இப்பொழுது இவர்களின் முழு ஆற்றலையும் கண்டுகளிக்க ஒரு அவகாசம் ஏற்பட்டதென்றும், இக்காலத்துக் கல்விமுறைகளில் இப்பாடசாலையார் கற்பிக்கும் முறையே இம்மை மறுமைப்பயன்களைத் தரவல்லதென்றும், கல்வியின் பயன் மேற்கூறியவைகளேயன்றி வேறொன்றல்லவென்றும், அதினும் பெண்பாலார் இளம்பிராயத்தில் இத்தகைய கல்விபயின்றால் பிற்காலத்தில் சுசிருசி ஆசாரங்களில் இவர்கள் தலைசிறந்து ஓங்குதலன்றி, இவர்கள் வயிற்றுதித்தோர்க்கும் இத்தகைய கல்விபுகட்ட அவர்கட்கு இடமுண்டாகுமென்றும் கூறித் தமது சொற்பொழிவை முடித்துக்கொண்டார்.

அதன் பின்னர் அக்ராஸநர் முடிவுரையாக, ஸ்ரீமான் நாயுடு அவர்கள் மதப்பற்றும் பக்தி சிரத்தையும் மிக்குடையவ்ரென்றும், இத்தகைய பெரியோரே கார்ப்பொரேஷன் முதலிய நகரஸபைகட்குத் தலைமைவகித்தல் பயன் தரத்தக்கதென்றும், நாயுடு அவர்களும் தாமும் நெடுநாட்பழக்க முடையரென்றும் கூறி முடித்தார். ஸ்ரீமான் நடராஜையர் (Patasala Vice-President) கடைசியாக, பாடசாலையின் விருத்தாந்தங்களையும், பெண்கல்வி முறையின் தன்மையையும் பரக்கக் கூறி, வந்திருந்த விருந்தினர்க்கும் பிறர்க்கும் வந்தனம் கூறி முடித்தார். பாடசாலைப் பெண்கள் மங்களம் பாட இரவு 9-மணிக்கு நிகழ்ச்சி முடிவடைந்தது.

---

## ஓர் புகழ்மாலை

ஸ்ரீ அஹோபில மடத்தில் 40-வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீரங்கநாத சடகோப மஹாதேசிகனுடைய புகழ்மாலை இரண்டாவது மலர் என்ற புத்தகம் வரப்பெற்றோம். இப்புத்தகம் மேற்சொன்ன அழகிய சிங்கருடைய 16-வது மஹாராதன தினமாகிய சென்ற தைமீ 5-ந் தேதி அன்று காருகுருச்சி வங்கீபுரம் ஸ்ரீசுந்தரராஜாசார்ய ஸ்வாமியால் வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தில் இந்த ஒரு ஸ்வாமியின் வைபவம் மாத்திரமேயன்றி ஆதிகாலந்தொட்டு வழங்கிவரும் ஸ்ரீ அஹோபிலமடத்தின் விருத்தாந்தங்களும் அடங்கி இருக்கின்றன. ஸ்ரீ அஹோபிலமடம் என்ற திவ்ய ஸிம்ஹாஸனம் எப்போது ஏற்படுத்தப்பட்டதென்பதும், அதற்கு ஆதிகர்த்தா யார் என்பதும், இந்த ஆஸ்தானத்திற்கு இப்படிப்பட்ட விசேஷ மகிமை எப்படி ஏற்பட்டதென்பதும், இன்னும் மற்ற அவச்யமாய் தெரிந்துகொள்ளவேண்டிய பல விஷயங்கள் இப்புத்தகத்தில் அடங்கி இருப்பதால் நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தரனைவரும் இதை ஆதரிக்கப் ப்ராப்தம். இந்த ப்ரக்ருத 40-வது பட்டத்து அழகியசிங்கர், ஞானம், அனுஷ்டானம், ஔதார்யம் இவற்றால் நமது பகவத்ராமாநுஜ தர்சனத்திற்குச் செய்த உபகாரங்கள் அளவிட முடியாதவை. இந்த ஸ்வாமி தனது ஞான சக்தியாலும், மந்த்ரசக்தியாலும் தமது சிஷ்யவர்க்கங்களுக்கும் பிறர்க்கும் செய்த உபகாரங்கள் அளவிடமுடியாதவை. இப்படிப்பட்ட மஹான்களுடைய பரிச்ரம விசேஷத்தாலேயே, நமது ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயம், இவ்வுலகில் குன்றாமல் நாளுக்குநாள் ஓங்கி வளர்ந்து வருகிறது என்று கொண்டாடுவது மிகையன்று. இப்புத்தகத்தை அபேக்ஷிப்பவர் தெரிவித்தால் விலையின்றி இனாமாகப் பெறலாம். தபால் செலவுக்கு மாத்திரம் இரண்டு அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

K. T. சந்தராசார்யர், B. A., L. T.
34, தம்புசெட்டி வீதி, சென்னை.

ஸ்ரீமான் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ।

## யதிராஜ ஸப்ததி

---

कमप्याद्यं गुरुं वन्दे कमलागृहमेधिनम् ।
प्रवक्ता छन्दसां वक्ता पञ्चरात्रस्य यः स्वयम् ॥ १ ॥

கமப்யாத்யம் குரும் வந்தே கமலாக்ருஹமேதினம் ।
ப்ரவக்தா சந்தஸாம் வக்தா பஞ்சராத்ரஸ்ய ய: ஸ்வயம்.

ய: - எவர்
சந்தஸாம் - வேதங்களுடைய
வக்தா - உச்சாரணத்தையும் (உபதேசத்தையும்) செய்தவராய்
ஸ்வயம் - தாமே நேரில்
பஞ்சராத்ரஸ்ய - பாஞ்சராத்ராகமத்தை
ப்ரவக்தா - ரசனை செய்து உபதேச ப்ரவசனம் செய்தாரோ
(அந்த)
கமலாக்ருஹமேதினம் - தாமரையாளோடு க்ருஹஸ்தரான

கமபி - சொல்லுக்கும் மனதுக்கும் எட்டாத மஹிமையுடைய ஸாகஸ்வரூபரும் (ஸாகவிசிஷ்டரும்) ஆன
ஆத்யம் - முதல்வரான; ச்ரேஷ்டரான
குரும் - அஞ்ஞான இருளைப் போக்கும் குருவை
வந்தே - அபிவாதனம் செய்கிறேன் (துதிக்கிறேன்).

அவதாரிகை:—ஸ்ரீபாஷ்யத்தை ஒழிவில் காலமெல்லாம் ப்ரவசனம் செய்துகொண்டும் ஸ்ரீபாஷ்ய ரக்ஷகங்களான பஹுக்ரந்தங்களை நிர்மாணம் செய்துகொண்டும், ஆஸேது ஹிமாசலமுள்ள அரும் பெரும் வித்வான்களோடு கோயிலில் ஸ்ரீபாஷ்ய விஷயங்களில் வாதங்கள் செய்து ஸித்தாந்த ஸ்தாபனம் செய்துகொண்டும்,

---

வேதங்களை ப்ரவசநம் செய்தவர், பாஞ்சராத்திரத்துக்குக் கர்த்தாவானவர் என்று ப்ராசீன வ்யாக்யாநங்களின் யோஜனை.

सत्कारकीर्तिधनलब्धिषु निर्व्यपेक्ष :
प्रश्नोचितेषु परया कृपया प्रसीदन् ।
सत्तर्कवर्मपरिकर्मितमाशरीरा-
च्छारीरकप्रवचनव्रतमाद्रियेथा : ॥

ஸத்காரகீர்த்திதனலப்திஷு நிர்வ்யபேக்ஷ:
ப்ரச்னோசிதேஷு பரயா க்ருபயா ப்ரஸீதன் ।
ஸத்தர்க்கவர்மபரிகர்மிதமாசரீராத்
சாரீரகப்ரவசனவ்ரதமாத்ரியேதா : ॥

[பூஜை, கீர்த்தி, பொருள், இவற்றின் லாபத்தில் அடியோடு அபேக்ஷை யற்று, ப்ரச்னம் செய்ய யோக்யரான சிஷ்யரிடம் அளவற்ற க்ருபையோடு ப்ரதானமாய் சிறந்த தர்க்கங்களான கவசத்தோடு விளங்கும் முறையாக சாரீரக (ஸ்ரீபாஷ்ய) ப்ரவசனத்தை சரீரம் விழும் வரையில் நீர் ஆதரவோடு செய்யவேணும்] என்று ஸூர்யோதயாரம்பத்தில் தமக்கு குருவான உடையவர் நியமித்ததாகக் கூறியபடிக்கும், 'ஸ்ரீ பாஷ்யத்தை ப்ரவர்த்தித்தல்' என்பது முதற்படியான கைங்கர்யம் என்றறுதியிட்டபடிக்கும், ஸ்ரீபாஷ்ய ப்ரவசனத்தை வ்ரதமாக ஆதரித்து, பிரதிதினமும் அனுஷ்டித்து வந்த ஸ்வாமி, ஸ்ரீ பாஷ்யகாரருடைய பெருமைகளையும் அவர் ஜகத்குருவாகப் புரிந்த உபகாரங்களையும் எல்லோரும் அநுஸந்தித்து உய்யுமாறு தம்முடைய முழுக் கவிதாசக்தியையும் விநியோகித்து இந்த ஸப்ததி ஸ்தோத்ரத்தை நிர்மாணம் செய்தது. இந்த ஸப்ததிகாவ்யம் கவிஸிம்ஹமான தமக்குத் தித்திக்கிறதென்று '**स्वदते ममाद्य सुभगा सरस्वती**' (ஸ்வததே மமாத்ய ஸுபகா ஸரஸ்வதீ,) என்று தம்முடைய இனிப்பையும் ஸாதிக்கிறார்.

பத்து திக்குகளிலும் ஸப்தஸ்வரங்களோடும் யதிராஜனுடைய கீர்த்தியை துந்துபி முழக்கத்தால் பரப்புவது போன்ற கம்பீரமான ச்லோகங்கள். 74 ஸிம்ஹாஸனாதிபதிகள் என்ற கணக்கை அநுசரித்து 74 ச்லோகங்கள். உஞ்சவர்த்தி செய்யும் ஸ்ரீவைஷ்ணவர்கள் இந்த ஸப்ததியை அக்ரஹார வீதிகளில் சொல்லிக்கொண்டு போகையில் ஸ்ரீ தீக்ஷிதர் கேட்டு ஸந்தோஷிப்பர் என்பர். ஸ்ரீபாஷ்யகாரர் நமக்குச் செய்தருளிய அஸாதாரண உபகாரங்களையும் அவர் தர்சனத்தின் அஸாதாரண ஆகாரங்களையும் முதலிலேயே ஸூசிக்கவேணும். முதல் ச்லோகத்திலும் முதல் பதத்திலேயும் ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்வைத தர்சனத்தின் அஸாதாரணாகாரங்



களைக் காட்டுமழகு ரஸிக்கத்தக்கது. குருபரம்பரையில் முதல்வரான பெருமாளுக்கு 'எவன் அவன்' என்று லக்ஷணம் கூறுகையில் ஆழ்வார் தொடக்கத்தில் சாதித்த 'உயர்வற உயர்நலமுடையவன் யவனவன்' என்பதையும் இந்த ச்லோகத்தில் சேர்க்கிறார். ஸ்ரீ பாஞ்சராத்ர தந்த்ரத்தை வேதத்துடன் ஒற்றுமை உள்ளதாக விளக்கி இரண்டையும் ஏகரஸமாக நிரூபித்தது எம்பெருமானுடைய மஹோபகாரம். வேதங்களை ப்ரஹ்மாவுக்கு எவர் உபதேசம் செய்தாரோ அவரே ஸ்ரீ பாஞ்சராத்ரத்தை ஸ்வயம் ரசனை செய்து ப்ரவசனம் செய்தவர். இரண்டிற்கும் பகவானே உபதேசகரான ஆசார்யர். ஸ்ரீ பாஞ்சராத்ரம் வேதத்தோடு ஏகரஸமே என்பதற்கு இது ஓர் காரணம். ஸ்ரீபாஷ்யத்தில் பாஞ்சராத்ராதிகரணத்தில், அபரிமிதமான சாகைகளோடு கூடிய வேதங்கள் அறியவரிதாயிருப்பதை (துரவகாஹமென்பதை) நிச்சயித்து அவற்றின் உண்மையான பொருள்களை விளக்குவதற்காக பாஞ்சராத்ர சாஸ்த்ரத்தை ஸ்வயம் நிர்மாணம் செய்தார். 'பாஞ்சராத்ரம் முழுவதற்கும் நாராயணனே ஸ்வயமாக வக்தா' என்று பாஞ்சராத்ரவக்தாவான நாராயணனே ஸ்வயம் இப்படிச் சொன்னார். ஆகையால் வேதாந்தவேத்யமான பரப்ரஹ்மமான நாராயணன் ஸ்வயமாகவே பாஞ்சராத்ரம் முழுவதற்கும் வக்தா. இதுவே பரப்ரஹ்மமான நாராயணனால் ஸ்வயமேவ பஞ்சராத்ரத்தில் தெளிவாக விளக்கப்பட்டது,' என்று திரும்பவும் திரும்பவும் 'ஸ்வயம்' என்று ப்ரயோகித்திருப்பதையும் '**पञ्चरात्रस्य कृत्स्नस्य वक्ता नारायण : स्वयम्**' (பஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்னஸ்ய வக்தா நாராயண: ஸ்வயம்)என்று பஞ்சமவேதமாகிய மஹாபாரத வசனத்திலுள்ள 'ஸ்வயம்' சப்தத்தையும் ஸூசிக்க இங்கே ஸ்வயம் என்று முடிவில் வைத்தது. 'பஞ்சராத்ரஸ்ய வக்தா ஸ்வயம்' என்று அதே வசன பதங்களையும் வைத்தது. மோக்ஷதர்மத்தின் முடிவில் மஹோபநிஷத் என்று நாராயணீயாத்யாயங்களில் வேதங்களின் அந்தமான வேதாந்தம் போல் மோக்ஷதர்மத்தின் முடிவான பாகங்களில் வேதாந்தஜ்ஞானத்தின் எல்லை நிலமென்று எந்த வ்யாஸர் அறுதியிட்டாரோ, அவரே ப்ரஹ்ம ஸூத்ரங்களாலே பாரதத்தில் தாம் மஹோபநிஷத்தெனப் புகழ்ந்ததை ஸ்வயம் சப்தத்தால் ஸ்தாபிப்பரோ வென்னும் யுக்தியும் ஸூசிக்கப்படும். ஸ்ரீபாஷ்ய தர்சனம் ஈட்டின் ப்ரவேசத்தில் சாதித்தபடி மிதுனயனம் என்பதைக் காட்ட 'கமலாக்ருஹமேதினம்' என்று பெருமாளை வர்ணித்தது. பஞ்சராத்ரவக்தாவான நாராயணன் என்பவர் ஸ்ரீமானான நாராயணன். 'உயர்வற வுயர்நலமுடையவன்,' '**यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह । आनन्दं ब्रह्मण :**' (யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ । ஆனந்தம்

ப்ரஹ்மண:।) என்றபடி எல்லையற்ற ஆனந்தத்தையுடைய ப்ரஹ்மம் என்று ஸாரபூதகுணமான ஸுக (ஆனந்த) குணத்தோடும் ஸ்ரிய:பதியான ஆனந்த ஸ்வரூபத்தை வழிபடுவது, ஆழ்வாரெம்பெருமானார் தர்சனமான ஸ்ரீவைஷ்ணவ தர்சனம்.

'கம்' என்பது ஸுகம், ஆனந்தம் என்ற பொருளுடையது. இப்பொருள் உபநிஷத்ப்ரஸித்தம். 'कं ब्रह्म खं ब्रह्म' (கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம) என்று சாந்தோக்ய உபநிஷத்தில் உபகோஸலவித்யையில் படித்துளது. ப்ரஹ்மம் ஸுகம், ப்ரஹ்மம் ஆகாசம் போல் எங்கும் நிறைந்தது என்றது. அந்த வித்யையைப்பற்றி அந்தராதிகரணத்தில் 'सुखविशिष्टाभिधानादेव च'. (ஸுகவிசிஷ்டாபிதாநாதேவ ச) என்று ஸூத்ரம். நிரதிசயஸுகவிசிஷ்டம் என்கிற குணத்தைச் சொல்லியிருப்பதாலும் அந்த குணம் ப்ரஹ்மத்துக்குத் தான் பொருந்துமாகையாலும் என்று ஸூத்ரப் பொருள். ஆகையால் ப்ரஹ்மம் ஆனந்தீ ஆனந்தத்தோடு கூடியது ஆனந்தஸ்வரூபமென்பது மட்டுமல்ல என்று ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் ஸாதிக்கப்பட்டது. நலமுடையவன் என்று முதலிலேயே நம் தர்சனத்தின் ஸாராம்சத்தை தமிழ்மறையில் கூடஸ்தர் காட்டியது போல் இங்கும் கமபி (ஸுகஸ்வரூபமுமான) என்று கூறுவதால் ஸுககுணவிசிஷ்டமானது என்று ஸூசிதமாகிறது. அல்லது कं ब्रह्म என்ற உபநிஷத்தில் ஸுகவிசிஷ்டமென்று ஸூத்ரம் அறுதியிட்ட பர்யவஸிதப் பொருளைக் காட்ட 'கம்' என்று ப்ரயோகித்தது. இந்த ஸ்தோத்ரம் முதல் பதத்தாலேயே ஸுகவிசிஷ்ட ப்ரஹ்மமென்பது வேதாந்தநிர்ணீதப் பொருளென்பதை ஸூசிக்கிற அழகு ரஸிக்கத்தக்கது.

கம் அபி—ஸுகஸ்வரூபமாயும் ஸுகவிசிஷ்டமாயும், அபி என்பதால் ஸுகஸ்வரூபம் மட்டுமல்லாமல் ஸுகமென்னும் தர்மத்தோடும் விசிஷ்டமென்றும் எளிதில் பொருளாகிறது.

"यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह। आनंदं ब्रह्मणो विद्वान्" (யதோ வாசோ நிவர்த்தந்தே-அப்ராப்ய மனஸா ஸஹ। ஆனந்தம் ப்ரஹ்மணோ வித்வான்) என்றபடி வர்ணனையிலடங்காத ஆனந்தத்தையுடைய ப்ரஹ்மத்தை கமபி என்பதற்கு வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாத என்ற பொருள் ஸுகமாய்க் கிடைப்பதால் 'உயர்வற உயர்நலத்தைக் காட்டும்' அந்த ச்ருதியே ஸூசிக்கப்பட்டு எல்லையற்ற ஆனந்தமுடையவன் என்று ஆனந்த விசிஷ்டத்வம் ஸித்திக்கிறது. நம் தர்சனத்திற்கு அஸாதாரணமான திருவாய்மொழியை வளர்த்த தாய் எம்பெருமானாராகையால் திருவாய்மொழி முதற் பாசுரத்தின் முதலடியோடு இத்துதியும் தொடங்குகிறது.



ஆத்யம்-முதல்வரை, ச்ரேஷ்டரை. 'विज्ञानमानन्दं ब्रह्म' (விஜ்ஞானம் ஆனந்தம் ப்ரஹ்ம) என்று விஜ்ஞானாநந்தஸ்வரூபமும் விஜ்ஞானாநந்தவிசிஷ்டமும் ப்ரஹ்மம். கமபி-என்றதால் ஆனந்தமும் விஜ்ஞானமுமான ப்ரஹ்மம் என்றதாகும். ஆனந்தமும் விஜ்ஞானத்தின் ஓர் விசேஷமே. பாஞ்சராத்ராதிகரணத்தில் 'विज्ञानादिभावे वा' (விஜ்ஞானாதிபாவே வா) என்று ஸித்தாந்த ஸூத்ரம் ஸங்கர்ஷணர் முதலியவர்களும் விஜ்ஞானமும் ஆதியும் (மூல காரணப்பொருளும்) ஆனதால் அவர்கள் ஜீவர் மனஸ் முதலியனவல்ல, என்று ஸூத்ரப் பொருள். இங்கே 'கமபி' என்றதால் ஆனந்தமும் விஜ்ஞானமுமான என்றும், 'ஆத்யம்' என்றதால் ஆதிப்பொருள் என்றும் பொருள்படுவதைச் சேர்த்து விஜ்ஞானாதிபாவமென்னும் பாஞ்சராத்ராதிகரண ஸித்தாந்த ஸூத்ரத்தையும் முதலிலேயே ஸூசிக்கும் அழகும் ரஸிக்கத்தக்கது. பெருமாள் ஆதிகுரு. அவர் ச்ரேஷ்டர். ஆனாலும் குருபரம்பரையில் எம்பெருமானார் என்றைக்கும் நடுநாயகமென்று கூறப்போகிறார். பெருமாளிலும் ஒருவாறு ச்ரேஷ்டமான குருவென்று துதிக்கப்போவதற்கு விரோதமில்லாமல் இங்கே க்ருஹஸ்தரான ச்ரேஷ்டகுருவென்று கூறப்படுகிறது. ஸந்யாஸியான யதிராஜகுரு எல்லாரிலும் ச்ரேஷ்டரே.

குரும்—'அஜ்ஞானத்தால் விளையும் இருட்டை நான் ஹ்ருதய குஹைக்குள்ளிருந்து ஜ்ஞானதீப ஜ்வாலையால் போக்குகிறேன்' என்று கீதையில் பாடிய குருகுஹையிலுள்ள இருட்டைப் போக்குவது குருசப்தத்தின் பொருள். ஆதிகுரு, பரமகுரு, பஞ்சராத்ரநிர்மாண ப்ரவசனகுரு, கீதாகுரு.

வந்தே—ஹ்ருதயத்தில் ஜ்ஞானதீபத்தை யேற்றிவைக்க உடனே அபிவாதனம் செய்கிறார்.

கமலாக்ருஹமேதினம்—அத்வைதமதத்தில் ஸந்யாஸியல்லாதார் குருவாக இருக்கமுடியாது. அத்யாத்ம வித்தையில் சிஷ்யராகவுமிருக்க முடியாது. வேதாந்த வித்யைகளில் க்ருஹமேதிகளாக ஆசார்யர்கள் ப்ரஹ்ம வித்யையை உபதேசித்தார்கள். புத்ரனுக்கு உபதேசிக்கப்பட்டது, ஸத்வித்யை ஆனந்தமய வித்யை யாஜ்ஞவல்க்யர் ஸன்யாஸத்திற்கு முன்பு பத்னிக்கு உபதேசித்துவிட்டு பிறகு ஸன்யஸித்தார். "कृत्स्नाभावात्तु गृहिणोपसंहारः" (க்ருத்ஸ்நபாவாத்து க்ருஹிணோபஸம்ஹார:) என்னும்ஸூத்ரத்திற்கு, எல்லா ஆச்ரமஸ்தருக்கும் ப்ரஹ்ம வித்யாதிகாரமுள்ளதால் சாந்தோக்யத்தின் முடிவில், 'குடும்பத்திலிருந்துகொண்டு யாவதாயுஷம் ப்ரஹ்ம

வித்யா ப்ரவசனம் செய்துவந்து ப்ரஹ்மத்தை யடைகிறார்கள்' என்று க்ருஹஸ்தரான ஆசார்யரோடு உபநிஷத் முடிவடைந்ததென்று பொருள். இது எம்பெருமானார் ஸித்தாந்தம். இதைக் காட்ட தாமரையாளோடு குடும்பியான குரு என்கிறார். 'க்ருஹீ' என்ற ஸூத்ர பதத்தையும், 'குடும்பத்தில் இருந்துகொண்டு' என்ற ச்ருதிபதத்தையும் ஸூசித்து க்ருஹஸ்தர்களுக்கு ஆசார்யாதிகாரத்தை ஒப்பும் ஸித்தாந்தமென்பதைக் காட்டுகிறார். கமலையால் (கமலையோடு) குடும்பீ. கமலையால் க்ருஹீ - ஆசார்யகம் செய்கையிலும் கமலையுடன் கூடியேகுரு. ஆசார்யக தர்மத்திலும் ஸஹசரீ. அகலுவதில்லை. அவளைத் திருமார்பில் வைத்துக்கொண்டே ஆசார்யகம் செய்வது, 'ஸஹதர்மசரீ' என்றடுத்த ச்லோகத்தொடக்கம். 'கமலயா க்ருஹை: ஸஹ கச்சத இதி' என்றும் கொள்ளலாம். 'கமலயா க்ருஹமேதீ' 'கமலயா க்ருஹீ', 'தாரேஷு ச க்ருஹா:' 'க்ருஹா: பும்ஸி' என்றும் அமரம். 'க்ருஹம் கிருஹமல்ல. க்ருஹிணீதான் க்ருஹம்' என்பர். 'ஸப்தலோகீக்ருஹஸ்தர்' பெருமாள். அத்வைதத்தில், "**नारायणं पद्मभुवं वसिष्ठं**" (நாராயணம் பத்மபுவம் வஸிஷ்டம்) என்று குருபரம்பரைத்தொடக்க ஶ்லோகம். நாராயணன் ஸ்ரீமானான நாராயணனே, ஜகத்குடும்பீ. ப்ரஹ்மா ஸரஸ்வதீபதி. வஸிஷ்டர் க்ருஹஸ்தர். இப்படி ஆதிக்ருஹஸ்த குருபரம்பரைக்கு விரோதமாகும் 'ஸந்யாஸிமாத்ராதிகாரம்' என்பது. அவர்களுக்கு ஸ்ரீமானான நாராயணனே ஆதிகுரு.

'வந்தே'—'ஸ்ரீய:பதிம்' என்று சேர்த்தியில் நமஸ்காரம். 'ஸ்ரீய:பதி' யென்று ஸ்ரீவைஷ்ணவ க்ரந்தங்களின் தொடக்கம் அநுஸந்திக்கப்படுகிறது.

'ப்ரவக்தா'—இதைப் பஞ்சராத்ரஸ்ய என்பதோடும் அன்வயிக்கலாம். சந்தஸ்ஸுக்கு வக்தாவான எவர் பஞ்சராத்ரத்துக்குத் தாமே (ஸ்வயம்) ப்ரவக்தாவோ, சந்தஸ்ஸுக்களின் விஷயத்தில் நிர்மாணமென்பதில்லை. உச்சாரணம், வ்யாக்யானம் முதலியது மட்டுமே. பாஞ்சராத்ர விஷயத்தில் நிர்மாணமும் ப்ரவசனமும் உண்டு. 'ப்ர' என்பது நிர்மாணரூபமான அதிக விசேஷத்தையும் காட்டும். 'வேதவக்தா என்பது மூச்சுக் காற்றுபோல் புத்தி பூர்வமாயில்லாமல் வெளிவருவது. பஞ்சராத்ரமோ புத்தி பூர்வமாய் பெருமாள் செய்தது. ஆகையால் பஞ்சராத்ரம் உயர்ந்தாகும். அது ப்ரமாணமே' என்று கல்பதருவெனும் அத்வைத வ்யாக்யானம் தீர்மானித்தது.

'சந்தஸாம் வக்தா'–வேதங்களின் வக்தாவால். கேவலம் வாக்கினால் உச்சரிப்பேயன்றி நிர்மாணமில்லை.



'பஞ்சராத்ரஸ்ய'— வேதம் முதலிய ஐந்தை ராத்ரி யென்று சொல்லலாம்படி அத்தனைத் தெளிவான ப்ராகாசத்தையுடைய பஞ்சராத்ரசாஸ்த்ரத்தை. 'பஞ்ச ராத்ரீக்ரியந்தே அமுனா' இதி. இதனால் இத்தனைத் தெளிய ப்ராகாசத்தைத் தருமிந்த சாஸ்த்ரம் நிர்மாண ப்ரவசனங்களால் இருளகற்றுவதெனும் 'குரு' குணத்தை நிரதிசயமாக உபபாதிக்கும்.

'ய:'—எவன், வேதமும் தமிழ் மறையும் ஓதும் லக்ஷணக்ரமம். யோகஸூத்ரத்தில் '**सपूर्वेषामपि गुरुः कालानवच्छेदात्**' (ஸ பூர்வேஷாமபி குரு: காலாநவச்சேதாத்) என்று ஆதிகுருவென்று ஈச்வர லக்ஷணம் கூறப்பட்டது. ஜகத்காரணத்வலக்ஷணத்தைக் கூறவில்லை. அதுபோல இங்கும் 'ஆதிகுரு' என்று லக்ஷணம்.

'ஸ்வயம்'—தாமே. வேறொரு ஜீவனை ஆவேசித்து குருவானதல்ல. 'ஸங்கர்ஷணர் பாடினார்' என்றும், 'நாராயணன் ஸ்வயம் வக்தா' என்று மிருப்பதால் ஸங்கர்ஷணரும் நாராயணனே. பூர்வபக்ஷத்தில் சங்கிக்கிறபடி ஜீவனல்லவென்று ஸித்திக்கிறது. கல்பதருவும், பாசுபதாதிகளுக்குப் போல கர்த்தா ஜீவனல்ல, ஆதலால் அது ப்ரமாணமே என்று நிஷ்கர்ஷித்தது.

**सहधर्मचरीं शौरेः संमन्त्रितजगद्धिताम् ।**
**अनुग्रहमयीं वन्दे नित्यमज्ञातनिग्रहाम् ॥ २ ॥**

ஸஹதர்மசரீம் சௌரே: ஸம்மந்த்ரிதஜகத்திதாம் ।
அநுக்ரஹமயீம் வந்தே நித்யமஜ்ஞாதநிக்ரஹாம் ॥

ஸம்மந்த்ரிதஜகத்திதாம் - சேர்ந்து ஒன்றாக ஏகாஸமாக (பர்த்தாவோடு கூடி) ஜகத்திதத்தை மந்த்ராலோசனை செய்பவளும்,

அநுக்ரஹமயீம் - அநுக்ரஹமே வடிவானவளும், அநுக்ரஹபூர்ணமானவளும்,

நித்யம் - ஸர்வகாலமும்,

அஜ்ஞாதநிக்ரஹாம் - சீற்றமென்பதையே யறியாதவளுமான

சௌரே: ஸஹதர்மசரீம் - பகவானுடைய தர்மபத்நியை

வந்தே - அபிவாதனம் செய்கிறேன்.

ஆதிகுருவான பெருமாள் தாமரையாளோடு க்ருஹஸ்தரென்றார். க்ருஹஸ்தரும் பத்நியும் சேர்ந்தே தீக்ஷித்துக்கொண்டு ஜகத்ரக்ஷணவ்ரத தர்மத்தை ஆசரிப்பர் '**सह त्वं सर्वकर्मसु**' (ஸஹ த்வம் ஸர்வகர்மஸு) எல்லா

கர்மங்களிலும் சேர்த்தியான ஸஹகாரமே. 'தாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு' என்ற தமிழ்மறைத் தீர்மானத்தைக் காட்டவும், 'கமலாக்ருஹமேதினம்' என்று முதல் ஶ்லோகத்தில் கூறப்பட்டது. உபதேசிப்பதென்பது ஒருவர் பேசிச் செய்வது உசிதம். இருவர் பேசினால் கேட்பவருக்கு நன்றாகத் தெரியாது. பெருமாள் உபதேசிக்கையில் கூடவேயிருந்தாள். அந்த ஆசார்யக தர்மத்தைத் தானும் செய்கிறாள். யாஜ்ஞவல்க்யருக்கு பத்னியான மைத்ரேயீ சிஷ்யையானதுபோல லக்ஷ்மியும் பெருமாளுக்கு சிஷ்யை. ஆனால் யாஜ்ஞவல்க்யரைப்போல பெருமாள் உபதேசித்துவிட்டு உடனே ஸந்யஸிப்பவரல்ல. இவள் நித்யம் ஸஹதர்மசரீ. நித்யம் என்பதை நான்கு விசேஷணங்களிலும் ஒட்டவேணும். **'सहधर्मचरी तव'** (ஸஹதர்மசரீ தவ) என்று யாஜ்ஞவல்க்யசிஷ்யரான ஜனகராஜன் வார்த்தை. தனிமையிலும் பத்து முகங்களால் கர்ணகடோரமாகப் பேசி வழக்குச் செய்யும் ராவணனுக்கும் உபதேசித்தவள். ஆசார்யனுடைய பத்னீ ஆசார்யானீயாகவாவது ஆசார்யாவாகவாவது இருக்கலாம். ஆசார்யானீ யென்பது கேவலம் குருபத்னியைச் சொல்லும். அவளும் குருவாக இருக்கவேண்டியதில்லை. தானும் உபதேசிப்பவள் 'ஆசார்யா'. இங்கிவள் 'ஆசார்யா'. **'आचार्यानीं च पार्वतीं'** (ஆசார்யானீம் ச பார்வதீம்) என்று மஹாவீர சரித்ர நாடகத்தில் பார்வதியைப் பரசுராமர் ஆசார்யானீ என்றார். அவள் அவருக்கு தனுர்வித்யை உபதேசம் செய்தவளில்லை. முன்ச்லோகத்தில் பஞ்சராத்ரத்தை யேற்படுத்தி உபதேசித்த உபகாரத்தைக் கூறினார். அந்த பஞ்சராத்ரத்தை அப்ரமாணமென்னும் வைதிகர் நிந்தைகளைத் தள்ளி பஞ்சராத்ர ப்ராமாண்யத்தை ஸ்ரீபாஷ்யத்தால் ஸ்தாபிக்கும் தீர்த்தகாரர் அவதரிக்க அது ஓர் முகவுரையாயிற்று. லக்ஷ்மீயும் லக்ஷ்மீதந்த்ரம் முதலிய ஆகமபாகத்தை நிர்மாணம் செய்து பஞ்சராத்ராகம ப்ரவசன விஷயத்தில் ஸஹகாரம் செய்பவள். அடுத்த ச்லோகத்திலும் விஷ்வக்ஸேனஸம்ஹிதையைச் செய்த ஸேனைமுதலியாரை நமஸ்கரிக்கிறார். ஸ்ரீப்ரச்ன ஸம்ஹிதையையும் நினைக்கவேணும்.

சௌரே: ஸம்மந்த்ரிதஜகத்திதாம்—உலகத்திற்கு ஹிதத்தை பதியோடு சேர்ந்து ஒன்றாக மந்த்ராலோசனை செய்பவள். ஹிதத்தைச் சேர்ந்து தீர்மானம் செய்பவர். மந்த்ராலோசனை செய்து என்ன செய்தார்கள்! ஸேனைத்தலைவரை ஆஜ்ஞாபித்து 'விஷ்வக்' (எங்கும்) நித்யஸூரி ஸைன்யத்தை உலகத்தைக் காக்கப் பரப்பினார்களென்று மந்த்ராலோசனையின் பலம். ஒரு ஹிதமும் இருவரும் ஏகமாகத் தீர்மானிக்காமல் நடக்கக்கூடிய



## सू—अन्यथानुमितौ च ज्ञशक्तिवियोगात् ॥ २.२.७ ॥

ज्ञस्य या शक्तिः तद्वियोगात्-ज्ञातृत्वशक्तिवियोगादित्यर्थः उक्तप्रकारव्यतिरिक्तप्रकारेण प्रधानानुमितौ च प्रधानस्य ज्ञातृत्वशक्ति-वियोगात् रचनानुपपत्त्यादयोदोषास्तदवस्थाः ॥

கீழ்ச்சொன்னபடியல்லாமல் வேறுபடியில் ப்ரதானத்தை அநுமித்தாலும், சேதனனுடைய சக்தியாகிய அறிவு இல்லாதது கொண்டு ஸ்ருஷ்டி உண்டாக வழி இல்லை. இது முதலான தோஷங்கள் முன் சொன்னபடியே நிற்கின்றன.

## सू—अभ्युपगमेप्यर्थाभावात् ॥ २. २. ८ ॥

प्रधानाभ्युपगमेपि प्रयोजनाभावान्न तदनुमेयम्, पुरुषस्य निर्वि-कारस्य प्रधानदर्शनरूपविकारासंभवात्। प्रकृतिधर्माध्यासनिमित्तभोगः तद्विवेकानुसन्धानकृतकैवल्यञ्च न संभवति ॥

புருஷனுக்கு போகம் மோக்ஷம் இரண்டுண்டு. ப்ரக்ருதியினுடைய தான தர்மத்தை தன்னிடத்தில் ஏறிட்டுக்கொள்வது போகம். ப்ரக்ருதி, வேறு, தான் வேறு என்று அநுஸந்தானத்தால் மோக்ஷம். ஒன்றிலும் பற்றில்லாமல் விகாரமற்ற புருஷனுக்கு ப்ரதானதர்சநம் என்னும் விகாரம் சொல்லுவது அஸங்கதம். ப்ரதானத்தைக்கொண்டு புருஷனுக்கு ப்ரயோஜநம் இல்லாதது காரணமாய் இப்படிப்பட்ட ப்ரதானத்தை அநுமிக்கவேண்டியதில்லை.

## सू—विप्रतिषेधाच्चासमञ्जसम् ॥ २. २. ९ ॥

पुरुषस्य द्रष्टृत्वभोक्तृत्वनिर्विकारत्वादिविरुद्धसहस्राभ्युपगमाच्च असमञ्जसं कापिलमतम् ॥

புருஷனுக்கு தர்சநம், அநுபவம், விகாரமின்மை முதலான ஒன்றுக்கொன்று ஒவ்வாத பலவற்றை ஒப்புக்கொண்டதால் கபிலர் கண்டு பிடித்த மதம் சிறந்ததன்று.

## सू—महद्दीर्घवद्वा ह्रस्वपरिमण्डलाभ्याम् ॥ २. २. १० ॥

असमञ्जसम् इति वर्तते । वाशब्दश्चार्थे । ह्रस्वपरिमण्डलाभ्यां महद्दीर्घवत् । द्व्यणुकत्र्यणुकोत्पत्तिवत् अन्यच्च तन्मतम् सर्वमसमञ्जसम् । अवयवाः स्वकीयैः षड्भिः पार्श्वैः संयुज्यमानाहि पृथुतरमवयविनमारभन्ते । परमाणूनां निरवयवत्वेन पार्श्वानभ्युपगमात् पार्श्वाननपेक्ष्य संयुज्यमानां न पृथुतरद्रव्यारम्भकत्वसंभवः ॥

அஸமஞ்ஜஸம் என்னும் பதத்தை இந்த ஸூத்ரத்திலும் சேர்த்துக் கொள்ளவும். வா என்னும் பதத்துக்கு அதுவும் என்று பொருளாகும். பரமாணுவிலிருந்து த்வ்யணுகம், த்வ்யணுகத்திலிருந்து த்ர்யணுகம் உண்டாகிறது என்பது கணாதமதம். அதுவும் அஸமஞ்ஜஸமே. அநேக அவயவங்கள் தங்களுடைய ஆறு பக்கங்களில் ஒன்றோடொன்று சேர்ந்து, அல்லவோ ஒரு பெரிய அவயவியை உண்டாக்கவேணும், பரமாணுக்களுக்கு அவயவமும் இல்லை. பார்ச்வமும் இல்லை. பார்ச்வமின்றி சேர்க்கப்படும் வஸ்துவாலே ஒரு பெரிய வஸ்து உண்டாக ப்ரஸக்தி இல்லை.

## सू—उभयथापि न कर्मातस्तदभावः ॥ २. २. ११ ॥

अणुगताद्यकर्मासंभवात् तत्कृताणुसंयोगाभावात् क्षेत्रज्ञादृष्टानां विपाकापेक्षत्वेपि न तत्कृतकादाचित्काणुगतकर्मसंभवः अनपेक्षत्वे प्रागप्युत्पादकं स्यात् । विपाकोनाम कश्चिददृष्टगतः धर्मोन ज्ञायते । कर्मविधिवेळायामेव कालविशेषनियतफलदायित्वं यस्य कर्मणश्चोदितम् तस्य तत्तत्कालागमएव विपाकः । अनियतकालविशेषाणां कर्मणां प्रबलकर्मान्तराप्रतिबन्धएव विपाकः । अदृष्टानि च तत्तत्कर्मानुगुणफलदानस्वभावानि । अतोऽनन्तैरात्मभिः विविधकालफलदायित्वेनानुष्ठितानामेकदैकरूपविपाको न संभवति, अनुमेयेश्वरासिद्धेः तदधिष्ठानाच्च न संभवति ॥



பூர்வ பக்ஷிகள் சொல்லுவதென்ன வென்றால் பரமாணுக்களிலிருந்து உலக ஸ்ருஷ்டியாகிறது, பரமாணுக்கள் சேர்ந்து த்வ்யணுகம், அது சேர்ந்து த்ர்யணுகம் இப்படி பெரிய உருவங்கள் ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன என்று. பரமாணுக்களில் ஒன்றோடொன்று கூடுதல் என்னும் செயல் உண்டாகுவது எப்படி என்று விசாரிப்போம். ஜீவர்களுடைய செய்வினைப் பயனின்றி பரமாணுக்களில் கூடுதல் உண்டாக ப்ரஸக்தி இல்லை. செய்வினைப் பயன் காரணமாக, ஒரே ஸமயத்தில் எல்லா பரமாணுக்களிலும் ஒன்று கூடல் தோன்றுவதற்கு என்ன யுக்தி சொல்லமுடியும்? ஜீவர்களுடைய செய்வினைப் பயனை எதிர்பாராமலே பரமாணுக்கள் ஒன்று கூடுகின்றன என்று சொல்லுவோமானால் குறிப்பிட்ட காலத்தில் ஸ்ருஷ்டியும் மற்ற காலத்தில் ஸ்ருஷ்டியில்லாமையும் எப்படி நிரூபிக்க முடியும்? கர்மவிபாக காலம் எப்போ என்பது நம்மால் அறியப்போகாது, கர்மம் செய்யும் போதே, இந்த கர்மத்துக்கு இந்த காலத்தில் இப்படிப் பட்ட பயன் விளையும் என்று ஒரு ஏற்பாடுண்டு. கால விசேஷக் குறிப்பு இல்லாத கர்மங்களுக்கு வேறு வலுவான கர்மங்கள் குறுக்கிடாத காலமே காலமாகும். ஆகையால் எண்ணிறந்த ஜீவன்கள் பற்பலகாலங்களில் பற்பல பயன்களை அளிக்கும் கர்மங்களைச் செய்திருக்க அவை எல்லாம் ஒரே ஸமயத்தில் ஒரேவிதமான ஸ்ருஷ்டி கார்யத்தை விளைக்கின்றன என்று சொல்லுவதும் சரியல்ல. அநுமானத்தாலே ஈச்வரனை சாதிப்பது அஸாத்யமாகையால் ஈச்வர சக்தியால் நடைபெறுகிறது என்பதும் பொருந்தாது.

## सू—समवायाभ्युपगमाच्च साम्यादनवस्थितेः ॥२. २. १२॥

समवायाभ्युपगमाच्च असमञ्जसम् । समवायस्यापि जातिगुणादेरिव अपृथक्सिद्धिहेत्वपेक्षा साम्यादनवस्थितेः । समवायस्य तत्स्वभावकल्पनायां जात्यादेरेव तन्न्याय्यम् ॥

தார்கிகர்கள் ஸமவாயம் என்று ஒரு ஸம்பந்தம் உண்டு என்று சொல்லி ஜாதி குணம் முதலியவை ஒன்றோடொன்று பிரியாமல் இருப்பதற்கு ஸமவாயம் காரணம் என்கிறார்கள். ஸமவாயத்திற்கு அப்படிப்பட்ட ஸ்வபாவத்தை கல்பிப்பதைக் காட்டிலும் ஜாதி குணிகளுக்கே அந்த ஸ்வபாவத்தைக் கல்பிக்கலாம். ஆகையால் அவர்கள் கொள்கை பொருத்தமுடையதல்ல.

போதே நாசமடைபவன் ஆகையால் அவித்யையால் உண்டான ராகத்வேஷாதிகளும் நிலைத்து நிற்கிறதில்லை யல்லவா.

### सू—उत्तरोत्पादे च पूर्वनिरोधात् ॥ २. २. १९ ॥

उत्तरघटक्षणोत्पत्तौ पूर्वघटक्षणस्यापि नष्टत्वेन अभावस्यैवोत्पादकत्वाविशेषेण सर्वदोत्पत्तिश्च स्यात् ॥

ஒவ்வொரு வஸ்துவும் க்ஷணகாலமே நிற்கும், அடுத்த க்ஷணத்தில் பூர்வ க்ஷணத்திலிருந்த வஸ்துவைப் போன்ற புதிது புதிதாகிய பொருள்கள் தோன்றுகின்றனவென்பது புத்த மதத்தின் கொள்கை. முன் க்ஷணத்திலிருந்த வஸ்து முன் க்ஷணத்திலேயே நஷ்டமாய் விடுகிறபடியால் முன்னிருந்த வஸ்துவின் அபாவமே மேல் க்ஷணத்து வஸ்துவை உண்டாக்குகிறது என்று சொல்லவேணும். அப்போது, அபாவம் எப்போதும் இருக்கிறபடியால் எப்போதுமே வஸ்துக்கள் உத்பந்நமாகலாமே.

### सू—असति प्रतिज्ञोपरोधोयौगपद्यमन्यथा ॥ २. २. २० ॥

असत उत्पत्तौ अधिपतिसहकार्यादीनाम् ज्ञानहेतुत्वप्रतिज्ञाविरोधश्च । तस्यापि स्थित्यभ्युपगमे युगपत् घटद्वयोपलब्धिप्रसक्तिः अस्थितौ च संप्रयोगज्ञानापत्तेः यौगपद्यम् ॥

முன் இல்லாத பொருளே பின் உண்டாகிறது என்றால் இந்த்ரியம் ஸஹகாரி ஆலம்பநம் இவை ஞானத்துக்கு ஹேதுவென்கிற ப்ரதிஜ்ஞா விரோதம் வரும். இந்த விரோதத்தை பரிஹரிக்கவேண்டி, முன் க்ஷணமே பின்னேயும் தொடர்கிறது என்றால் ஒரே ஸமயத்தில் இரண்டு வஸ்துக்களும் தோன்றவேண்டியதாகும். வஸ்து க்ஷணிகம் என்றாலும் இந்த்ரிய ஸம்ப்ரயோகமும் ஞானமும் இருந்தே தீரும்.

### सू—प्रतिसंख्याप्रतिसंख्यानिरोधाप्राप्तिरविच्छेदात् ॥ २. २. २१ ॥

निरोधः निरन्वयविनाशः सः स्थूलः सूक्ष्मश्च न संभवति ।



कपालादिभावरूपावस्थाप्राप्तेरेव विनाशशब्दाभिधेयत्वात् । सतोद्रव्यस्य अविच्छेदात् ।

ஒரு பொருள் ஸமூலமாய் அற்றுப்போவதற்கு நிரந்வய விநாசம் எனப் பெயராகும். அது ஸ்தூலம் ஸூக்ஷ்மம் என இருவகையாகும். இவ்விரண்டும் இல்லாமலாகும். கபாலம் முதலான வேறு பொருளாக மாறுவதே விநாசமாகையால்; ஸத் எனப்படும் த்ரவ்யமே எல்லா நிலைமையிலும் தொடர்கிறது.

### सू—उभयथा च दोषात् ॥ २. २. २२ ॥

उत्पन्नस्य तुच्छतापत्तौ तुच्छादुत्पत्तौचाभावादुत्पत्त्यसंभवात् अभावात्मककार्यापत्तिरूपदोषात् तुच्छत्वासिद्धिः ॥

ரூபம் முதலான விசேஷம் ஒன்றுமில்லாத பொருளுக்கு துச்சம் எனப் பெயர். தோன்றின வஸ்து துச்சமாக நேருமானாலும், துச்சத்திலிருந்து பொருள்கள் உண்டாகுமானாலும், அபாவத்திலிருந்து கார்யம் உண்டாகுமாகையால் உண்டான வஸ்து துச்சமாகாது.

### सू—आकाशेचाविशेषात् ॥ २. २. २३ ॥

आकाशेच न तुच्छत्वम् अबाधितप्रतीत्यविशेषात् प्रतीयते ह्याकाशः श्येनादिपतनहेतुत्वेन ।

ஆகாசமும் துச்சமல்ல. ப்ருதிவ்யாதிகள் போலே இதுவும் ஒரு வஸ்துவாகவே தோன்றுகிறது. பருந்து முதலான பக்ஷிகள் பறக்குமிடமாகவே ஆகாசம் தென்படுகிறது.

### सू—अनुस्मृतेश्च ॥ २. २. २४ ॥

प्रत्यभिज्ञानाच्च न क्षणिकत्वसिद्धिः तदेवेदम् इति हि सामानाधिकरण्येन अतीतवर्तमानदेशकालविशिष्टं वस्तु एकमिति प्रतीयते, अस्माच्च सामग्रीपूर्वानुभवजनितसंस्कारवतः पुरुषस्येन्द्रियसंप्रयोगः ॥

ஒவ்வொரு வஸ்துவும் க்ஷணிகம் என்ற கொள்கை சரியல்ல. முன் க்ஷணத்தில் இருந்த பொருள் பின் க்ஷணத்தில் அது தான் இது என்று,

முன் தேசத்தையும் காலத்தையும் நிகழ்காலத்தையும் தேசத்தையும் சேர்த்து ஒன்று என்று தோன்றுகிறபடியால். முன் கண்ட வஸ்துவை பின்னே நினைக்கும்போது ஒரே புருஷனுக்கு முன்னறிவால் உண்டான ஸம்ஸ்காரம் பின்னேயும் நினைப்பு மூட்டுகிறது.

**सू—नासतोऽदृष्टत्वात् ॥ २. २. २५ ॥**

ज्ञानाकारवैचित्र्येण ज्ञाने स्वाकारं समर्प्य विनष्टमप्यर्थमनुमिनोति "इति वादश्च न संभवति" असतो विनष्टस्य धर्मिणो धर्मसंक्रमणस्यादृष्टत्वात् "ज्ञाने नीलाद्याकार उपलभ्यते" स विनष्टः असतोऽर्थस्याकारो भवितुं नार्हति "कुतः, अदृष्टत्वात्" न खलु धर्मिणि विनष्टे तद्धर्मस्य अर्थान्तरे संक्रमणं दृष्टम् ॥

ஞானத்தில் ஒரு விசித்திரம் உண்டு. ஒரு வஸ்துவின் உருவம் அந்த ஞானத்தில் பற்றி பிற்காலத்தில் அந்த உருவத்தோடு கூடின பொருள் அனுமிக்கப்படுகிறது, என்று சொல்வதும் சரியல்ல. ஒரு பொருள் நாசமடைந்து அதிலுள்ள விசேஷங்கள் மற்ற வஸ்துவில் சேருகிறது என்பது ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. முந்தின ஞானத்தில் நீலம் முதலிய உருவம் தோன்றுகிறது. இந்த உருவம் தத்காலம் இல்லாத ஒரு வஸ்துவிற்கு உருவமாக எப்படி ஆகும்.

**सू—उदासीनानामपि चैवंसिद्धिः ॥ २. २. २६ ॥**

क्षणिकत्वाभ्युपगमे अनुष्ठातुरन्यत्वात् फलिनां निष्प्रयत्नानामपि सर्वार्थसिद्धिः स्यात् ॥

உலகமே க்ஷணிகம் என்று ஒப்புக்கொண்டால் செய்வினைக்காரன் வேறு ஆனது கொண்டு செய்கை இல்லாத அனைவர்க்கும் எல்லாப் பொருளும் கை கூடிவரவேண்டும்.

---


# अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम्।"
"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः।"




தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

## அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

Registered No. M 3778.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனாயிருப்பது
வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர் கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப்பிரசஸ்தமானது. அவ்வாறு உயர் குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களே அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.



SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.



Printed by M. Satyanarayana, at the Hindi Prachar Press, T. Nag
Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta P
Sabha, Ltd., Madras.


MAY 1939 MADRAS

# SRI VEDANTA DIPIKA


VOL. 28] APRIL 1939 [PART 4

ANNUAL SUBSCRIPTION Rs. 2—0—0


# ஸ்ரீ வேதாந்த தீபிகை


வருஷ சந்தா ரூ. 2—0—0

ப்ரதி இங்கிலீஷ் ௴ 25௳ வெளிவரும்

விளம்பரக் கட்டணங்கள் :
மானேஜிங் எடிடருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

ப்ரமாதி ௵ : : சித்திரை ௴



பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியர் (*Managing Editor*)
கிருஷ்ணபுரம், கோடம்பாக்கம் Post, Madras.

○

உப-பத்ராதிபர்கள் :

வேதாந்த சிரோமணி T. வேணுகோபாலாசாரியர்

T. ஸ்ரீநிவாஸராகவன், M.A., [மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.]



CONDUCTED BY

SRI VAISHNAVA SIDDHANTA PRACHARA SABHA, Ltd.,
Vani Vilas 4—5, Badriah Garden St., Park Town, Madras.

## L. G. பெருங்காயம்

**ஹிங்கு** அல்லது பெருங்காயம், உணவு பொருள்களுக்கு ருசியைத் தருவது மாத்திரம் அல்ல, பிரதிதினம் சாப்பிடக்கூடியதான ஔஷதமாயும் கருதப்படுகிறது அடியில் கூறப்படும் குணங்கள் இதன் ஔஷதத் தன்மையை நன்கு விளக்கும். ராஜ நிகண்டு என்னும் ப்ராசீன வைத்திய சாஸ்திரத்தில் அடியில் கண்டபடி பெருங்காயத்தின் குணங்கள் வர்ணிக்கப்படுகின்றன. ஹ்ருதயத்திற்கு பலத்தைத் தரும். காரமாய் இருப்பதால் உஷ்ண வீர்யமுள்ளது. வயிற்றில் உண்டாகும் கிருமிகளை போக்கும். வாயுவை கண்டிக்கும், கபத்தை தொலைக்கும், மலச்சிக்கலை நீக்கும், வயிற்று பொருமலை அகற்றும், சூலவியாதியை கொல்லும், நேத்திர ரோகத்தையும் போக்கும், குல்மம் என்னும் வியாதியை வேரோடு அறுக்கும்.

हृद्यं हिंगु कटूष्णं च कृमिवातकफापहम् ।
निबन्धाध्मानशूलघ्नं चक्षुष्यं गुल्मनाशनम् ॥

இக்குணங்களையெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறு எதுவுமன்று. இதை கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

### லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

**அபலா கல்பம்**

மாதவிடாய்க் காலத்தில் ஸ்திரீகளுக்குண்டாகும் "ப்ரதரம்" அல்லது "பெரும்பாடு" என்கிற ரத்தப்பெருக்கு, வெட்டைச் சூட்டினால் மர்ம ஸ்தானத்திலிருந்து வெண்மையான திரவப் பொருள் சிறுகச் சிறுக வெளிப்படுதல், கர்ப்பம் அடிக்கடி சிதறுண்டுபோதல் முதலிய கர்ப்பாசய சம்பந்தமான வியாதிகளை அறவே யொழிப்பதில் ஒப்புயர்வற்ற சக்தி வாய்ந்தது. 1 பாட்டில் விலை ரு. 2 8 0

**ஸித்த கல்ப மகரத்வஜா**

காம்புத்தளர்ச்சி, இளமைப்பருவத்திலுண்டான துர்பழக்கங்களினாலேற்படும் அநேக விதமான வியாதிகள், வீர்யக் குறைவு, ஹ்ருதயத் துடிப்பு, இரத்தக் குறைவு, இரத்த அசுத்தம் முதலானவைகளுக்கு "அபாரசக்தி வாய்ந்த டானிக்" "ஸர்வரோக நிவாரிணி" என்று ஆயிரக்கணக்கான வைத்திய நிபுணர்களால் சென்ற 25 வருடங்களாகப் போற்றப்படுகிறது.

60 மாத்திரை ரு. 10 30 மாத்திரை ரு 5

தபால் பெட்டி 151 | மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி. லிமிடெட் | மதரு வ

10 MAY 1939
MADRAS

## விஷயங்கள்.


| | | |
|---|---|---|
| 1. | தேரெழுந்தூர் ஸ்வாமி | 77 |
| 2. | ஸ்ரீ இராமாயணமும் காயத்ரீயும் [தி. சுந்தராசாரி, பி.ஏ., பி.எல்., செய்யாறு.] | 82 |
| 3. | வேதமும் அர்ச்சாவதாரமும் [ஸ்ரீ மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசாரியார், திருவாலி.] | 85 |
| 4. | இராமானுசச் சுடர் [மைலாப்பூர் தி. ராமஸ்வாமி அய்யங்கார்] | 88 |
| 5. | நல்வழி [திருமலை நல்லான் T. ராமகிருஷ்ணய்யங்கார் சிரோமணி, ஆழ்வார் திருநகரி.] | 91 |
| 6. | இந்திரஜித் வதமும் அதன் தத்வமும் [தி. க. ச. V. S. ரங்கநாதாசார்யர், ந்யாயசிரோமணி, ராமகிருஷ்ண மிஷன் ஸ்கூல், த்யாகராஜநகர், சென்னை.] | 93 |
| 7. | உபயகலை ஸமரஸம் [பண்டித தா. வ. வேதாந்தராமானுஜாசாரியார், புரசைவாக்கம், சென்னை.] | 94 |
| 8. | கடோபநிஷத் விசாரம் [தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்.] | 99 |
| 9. | புஸ்தக விமர்சம் [ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்.] | 101 |
| 10. | கடிதங்கள் | 104 |
| 11. | வர்த்தமானங்கள் | 105 |
| 12. | அறிவிப்பு | 106 |
| 13. | யதிராஜஸப்ததி | 9-16 |
| 14. | வேதாந்த ஸாரம் | 137-144 |


பண்டிட் தோரி ராமசாஸ்த்ரிகளின்

## க்ஷீரவர்த்தினி (ரெஜிஸ்டர்டு)

(தாய்ப்பாலை வ்ருத்தி செய்யும்)

தாய்களுக்கு ஓர் அருமையான டானிக். குழந்தைகளை ஈரல், குலைக்கட்டிகளினின்றும் காப்பாற்ற அவைகளைத் தாய்ப்பாலால் போஷிப்பது நல்லது.

புட்டி 1க்கு ரூ. 2-0-0

ஆயுர்வேத ரத்ன பண்டிட் தோரி ராமசாஸ்த்ரி A.K.A.C.

"ஆயுர்வேத நிலயம்"

பெஜவாடா. M.S.M.Ry.

| | | | | |
|---|---|---|---|---|
| ந்யாய ஸித்தாஞ்ஜனம் வ்யாக்யானத்துடன் | ரூ. | 5 | 0 | 0 |
| தத்வடீகை | ரூ. | 5 | 0 | 0 |
| வேதார்த்த ஸங்க்ரஹம் தமிழ் உரையுடன் | ரூ. | 3 | 0 | 0 |
| ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம், ஸ்ரீ ஸ்தவம் தமிழ் உரையுடன் | ரூ. | 1 | 0 | 0 |
| ஸம்ப்ரதாய பரிசுத்தி வ்யாக்யானத்துடன் | ரூ. | 1 | 0 | 0 |
| அபீதிஸ்தவம் தமிழ் உரையுடன் | ரூ. | 0 | 8 | 0 |
| ஸ்ரீபாஷ்யம்—பத்து வியாக்கியானங்களுடன் முதல் வால்யூம் பைண்டு செய்தது | ரூ. | 6 | 12 | 0 |
| ஷை 2வது வால்யூம் ,, | ரூ. | 6 | 12 | 0 |
| ஸ்ரீ தேசிகன் ஸ்தோத்திரங்கள் தேவநாகரத்தில் அச்சிட்டது | ரூ. | 1 | 0 | 0 |

இன்னும் பல ஸம்ப்ரதாய புஸ்தகங்களும் ஸம்ஸ்கிருத புஸ்தகங்களும் வேதாந்த தீபிகை பழய ஸம்புடங்களும் கிடைக்கும்.

Vedanta Dipika office

**KRISHNAPURAM, KODAMBAKKAM POST, MADRAS.**


श्रीः

श्रियै नमः

त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवरांबरं दधाने ।

वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥

# ஸ்ரீ வேதாந்த தீபிகை


ஸம். 28. | பிரமாதி ஞு சித்திரை மீ 12உ 25-ஏப்ரல் 1939 | ஸஞ். 4


ஸ்ரீ:

## தேரெழுந்தூர் ஆண்டவன் என்ற ஸ்ரீ வேதாந்தராமாநுஜ மஹா தேசிகனுடைய சரித்திரமும் வைபவமும்.

இந்த ஸ்வாமி மாயவரம் தாலுக்கா தேரெழுந்தூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீனிவாஸாசாரிய ஸ்வாமிக்கு புத்திரராக அவதரித்தார். அவதார தினம் ப்ரஜோத்பத்தி வருஷம் ஆவணி மாதம் பதினேழாம் தேதி, (31-8-1871) பூரட்டாதி நக்ஷத்திரம். இந்த ஸ்வாமி ஒரு மஹானுபாவன் என்றே அனைவராலும் கொண்டாடப்பட்டவர். ஜாயமான கடாக்ஷம் என்று சொல்லப்படுகிற ஒரு பாக்ய விசேஷத்தைப் பெற்றவர். சிறு வயதில் காவ்யம் வாசிக்கும்போது இந்த ஸ்வாமியினுடைய மிக்க கூர்மையுள்ள புத்தியை வியந்து பலரும் இவரை ஆங்கில வித்தை பயிற்சிக்கு அனுப்பத் தூண்டினர்கள். இந்த ஸ்வாமியின் திருத்தகப்பனர் பரம ஆஸ்திகசிகாமணியாய் இருந்ததால் எழுபத்திநாலு சிம்மாசனதிபதிகளில் ஒருவராகிய ஈயுண்ணி ஆண்டான் வம்சத்தில் அவதரித்ததனுல் ஆங்கில பாஷையின் பயிற்சி நமது குலாசாரத்திற்குத் தகாது என்று மறுத்துவிட்டார். சிறு வயதிலேயே இந்த ஸ்வாமிக்கு தத்காலம் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்த பெரிய ஆண்டவன் என்ற ஸ்ரீனிவாஸ மஹாதேசிகனிடம் பஞ்ச ஸம்ஸ்காரங்களும் மந்திர உபதேசங்களும் நடந்தன. அப்பொழுதே இவருடைய புத்தி கௌசலத்தையும் ஆசாரத்தையும் கடாக்ஷித்து இவருக்கு தாம் காலட்சேபம் சொல்லவேணுமென்று அவ் வாசாரியன் அருளிச்செய்தாச்சுதாம்.

திருத்துறைப்பூண்டி தாலுக்கா விளக்குடி என்னும் ஸ்ரீ கிராமத்தில் எழுந்தருளியிருந்த ஈயுண்ணி வித்வான் வேதாந்தாசாரிய ஸ்வாமியினிடம்

தர்க்க சாஸ்திரத்தை அதிகரித்தார். பால்யத்திலேயே இந்த ஸ்வாமி புதுக்கோட்டை ராஜ ஸபையில் தர்க்க சாஸ்திரத்தில் பரீக்ஷை கொடுத்து உத்தம ஸம்பாவனை பெற்றவர். வித்வத்ஸபையில் நடந்த சாஸ்திர விசாரங்களில் இவருடைய பாண்டித்யத்தைக் கண்டு வியந்து அப்போதிருந்த புதுக்கோட்டை மஹாராஜாவும், அப்போது திவானாகவிருந்த சேஷய்யா சாஸ்திரியாரும் கூடி ஆலோசித்து இவருடைய விவாகத்தின் பொருட்டு ரூபாய் 400 பரிசளித்தார்கள். அதன்மேல் திருக்குடந்தைக்கடுத்த வலயபேட்டையில் வசித்துக்கொண்டு குறிச்சி தர்க்க வாசஸ்பதி பாலதன்வி, ஸ்ரீரங்காசாரிய ஸ்வாமியிடம் தர்க்க சாஸ்திரத்தில் உயர்தர க்ரந்தங்களை அப்யஸித்தார். இந்த ஸ்வாமிக்கு 18-வது வயதில் விவாஹம் நடந்தது. அதற்குப் பிறகு திருவையாற்றுக்கடுத்த புது அக்ரஹாரத்தில் மஹாமஹோபாத்யாய சுப்பராயாசாரியரிடம் வ்யாகரண சாஸ்திரத்தை அதிகரித்தார். 21-வது வயதில் மைசூருக்கு எழுந்தருளி நவராத்ரி உத்ஸவத்தில் நடந்த வித்வத் ஸபையில் விசேஷமாய் ஸம்மானிக்கப்பட்டார். அதே வருஷத்தில் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் ஒரு வித்வான் தேவை என்றும், மாஸம் ரூ. 50 சம்பளம் கொடுக்கப்படும் என்றும், அந்த வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், திவானிடமிருந்து வந்த கடிதத்தைப்பார்த்து இது தன்னுடையநோக்கத்திற்கு ஒத்ததில்லை என்று மறுத்து விட்டது மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாகும். அதன்மேல் ஸ்ரீரங்கத்தில் சின்ன ஆண்டவன் என்று விசேஷ க்யாதியுடன் எழுந்தருளியிருந்த ஸ்ரீபாதுகாஸேவக ராமாநுஜ மஹாதேசிகனிடத்தில் ஸ்ரீ ரஹஸ்யத்ரயஸாரம், கீதாபாஷ்யம், ஸ்ரீபாஷ்யம், பகவத் விஷயம், இவற்றை முறைப்படி அதிகரித்து அந்த ஸ்வாமி திருவடிகளிலேயே ப்ரஸமர்ப்பணமும் செய்தருளினர். இந்த ஸ்வாமி குருகுலத்தில் வேதாந்த க்ரந்தங்களை அதிகரிக்கும்போதே, இந்த ஆசார்ய பீடத்திற்கு அர்ஹதை உண்டாம்படி தன்னை ஆக்கிக்கொள்ள வேண்டும் என்று ஊக்கமிருந்ததாக தெரியவருகிறது. அந்த ஆசார்யனிடத்திலேயே, ஸன்யாஸாச்ரமம் பெறவேண்டும் என்று தீவ்ரமான அபிநிவேசமிருந்தது. மாதாபிதாக்களுடைய ஸம்மதி இல்லாததினாலும், குடும்ப கார்யத்தை ஒருவிதமாக முடித்துக்கொண்டுதான் ஸன்யாஸாச்ரமத்தை ஸ்வீகரிப்பது தகும் என்று பல பெரியோர் சொன்னதாலும், காலத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டு எழுந்தருளி இருந்தார். அப்பால், பழமநேரி சுந்தர சாஸ்திரிகள் என்ற மகா வித்வானிடம் பூர்வமீமாம்ஸா சாஸ்திரத்தை க்ரஹித்தார். இந்த ஸ்வாமிக்கு ஆசார்ய பக்தி மிகவும் அதிகம் உண்டு.



ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ப்ருந்தாவனத்தில் திருவாராதனம் முதலிய கைங்கர்யங்களை வெகு பக்தி ச்ரத்தையுடன் நடத்தி வந்தார். இந்த ஸ்வாமி ப்ருந்தாவனத்தின் கைங்கரியத்தை ஏற்றுக்கொண்டதின் காரணமாக, மஹாஜனங்களுடைய பொருளுதவி விசேஷமாக ஏற்பட்டு, மேற்படி கைங்கரியம் நாளுக்குநாள் மிகச் சிறப்புடன் வ்ருத்தியடைந்தது. அந்த ஸமயத்தில் திருக்குடந்தையில் எழுந்தருளியிருந்த காடந்தேத்தி கவி குஞ்சரம் சதாவதானம் வரதவேதாந்தாசாரிய ஸ்வாமி ஸந்யாஸாச்ரம ஸ்வீகாரம் செய்துகொண்டு ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்தார். அந்த ஸ்வாமியின் அந்திமதசையில் இவரை ஆண்டவன் ஸம்ப்ரதாயத்தைப் பாதுகாக்க ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரிக்கவேணும் என்று அனேக சிஷ்யர்கள் ப்ரார்த்தித்தபடியால் மேற்சொன்ன காடந்தேத்தி ஸ்வாமியினிடம் ஸன்யாஸ ஸ்வீகாரமும் நடந்தது. அந்த ஸமயம் கண் கலங்கின பூர்வாச்ரமம் குமாரத்தியை தத்வத்ரயாதிகாரத்தை யனுஸந்திக்கும்படி நியமித்தாச்சுதாம். இவருக்கு பூர்வாச்ரமத்தில் வரதாசாரியர் என்று திருநாமம். ஸன்யாஸாச்ரமத்தில் வேதாந்த ராமாநுஜஸ்வாமி என்று திருநாமம் சாற்றப்பட்டது. இந்த ஸ்வாமிக்கு ஸன்யாஸாச்ரம ஸ்வீகாரம் ஆனது கீலக வருஷம் ஆவணி மாதம்,(ஆகஸ்ட்டு 1908). 37-வயதில் ஸன்யாஸாச்ரமத்தை பெற்றுக்கொண்டு அனேக சிஷ்யர்களுக்கு வேதாந்த க்ரந்தங்களை போதிக்க அடிக்கடி திவ்ய தேச யாத்ரைகளும், தீர்த்த யாத்ரைகளும் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார். இந்த ஸ்வாமியினிடமிருந்த ஆசார்ய பக்தியையும், விசேஷித்து தேசிக பக்தியையும் கண்டு, ஆச்சர்யப்படாதார் இல்லை. எது நிறைவேறவேணுமானாலும், ஆசார்யனையே ப்ரார்த்திப்பது வழக்கம். இந்த ஸ்வாமிக்கு பாதுகாஸஹஸ்ர க்ரந்தத்தில் விசேஷ அபிமானமும், பக்தியும் உண்டு. தன்னிடத்திலாச்ரயிக்க வந்த சிஷ்யர்களுக்கு, ப்ரதிதினம் பாதுகாஸஹஸ்ரத்தை பாராயணம் பண்ணும்படி உபதேசிப்பது வழக்கம். திருக்குடந்தை, திருவஹீந்திரபுரம், பெருமாள்கோவில் முதலிய திவ்ய தேசங்களில் எம்பெருமான்களுக்கும், ஆசார்யர்களுக்கும், விசேஷ கைங்கர்யங்களை சிஷ்யர்களைக்கொண்டு அனயாஸமாய் முடித்துவைத்தது உண்டு. இந்த ஸ்வாமியினுடைய நிஷ்கபடமான பக்தியைக் கண்டு, அனேக சிஷ்யர்கள் இந்த ஸ்வாமி திருவடிகளிலாச்ரயித்தால் நமக்கு ஐஹிகம், ஆமுஷ்மிகம் இவ்விரண்டிலும் நன்மை உண்டாகும் என்ற ச்ரத்தையுடன், திரள் திரளாய் ஆச்ரயித்தார்கள். பகவத் விஷயத்திலும், ஸ்ரீ ராமாயணம் முதலான ஆர்ஷப்

பிரபந்தங்களுக்கும் பூர்வாசாரியர் அருளிச் செய்த ஸ்தோத்ரங்களுக்கும் இந்த ஸ்வாமி, புதிது புதிதாய் வ்யாக்யானங்களில் இல்லாத சில அபூர்வார்த்தங்களை ஸாதிப்பதைக் கேட்டு, "இது என்ன சக்தி விசேஷம்" என்று எல்லோரும் ஆச்சர்யப்பட்டதுண்டு. இந்த ஸ்வாமிக்கு தனது திருமேனியில் கொஞ்சமேனும் அபிமானமில்லை. நோவு வந்தாலும் பகவத் ஸங்கல்பத்தை நாம் மறுக்கலாகாது என்று சிகித்ஸை செய்யாமல் ஸஹித்துக்கொண்டிருப்பதில் திருவுள்ளம். குடும்ப கார்யத்திலேயே ஈடுபட்டு பலவித க்லேசங்களால் வருந்தும் சிஷ்யர்களுக்கு, இந்த ஸ்வாமியினிடம் சென்றால் ஒரு பெரிய விநோதமாய் இருக்கும். பக்தியில்லாத கல்நெஞ்சனைக்கூட தனது உபந்யாஸ சக்தியால் அவன் மனதை உருக்கி பக்தி உண்டாக்குவதில் இந்த ஸ்வாமிக்கு திறமை அதிகம். சாஸ்திரப் பயிற்சியில்லாத ஸாமான்யர்கள்கூட நமது ஸம்பிரதாய க்ரந்தங்களின் அருமையான பொருள்களை அறிந்து உஜ்ஜீவிக்க வேண்டும் என்று ஸ்வாமிக்கு பேரவா உண்டு. அதற்காக அனேக க்ரந்தங்களை தாம் இயற்றியும் மற்றவர்களைக் கொண்டு இயற்றச் செய்தும், அதை பதிப்பித்தும், ப்ரசுரப்படுத்தியிருக்கிறார். மதாந்தரஸ்தர்களைக்கூட கலந்து பேசி, நமது ஸம்ப்ரதாயத்தில் அவர்களுக்கு கௌரவம் உண்டாகும்படி செய்ய திருவுள்ளம் கொண்டவர். பாமரர்க்கும் பரமஹிதத்தை உணரும்படி உபதேசிப்பவர். கரைகடந்த கருணைக்கடல். பாலர் விருத்தர், பண்டிதர் பாமரர், ஏழை தனிகர் என்றோர்போலுள்ள வாசி சிறிதுமின்றி அவர்களுக்குத் தத்வஹித புருஷார்த்தங்களை தெளிவிப்பவர், ஆதியில் பரதனால் ப்ரசித்தியடைந்து கலியில் மறைந்திருந்த பாதுகாப்ரபாவம், நமது மறைமுடி தேசிகனால் ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ர க்ரந்த மூலமாய் பரவியது. காலக்ரமத்தில் அந்த க்ரந்தம் கிடைப்பது அரிதாகி விட்டது. இந்த ஸ்வாமியால் தன்யர்களாகப்பெற்ற தனிகர்களைக் கொண்டு 4, 5 தடவை ஷை ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரஸ்தோத்திரம் ஆயிரக்கணக்காக அச்சிடப்பட்டு வடகலை தென்கலை ஸ்மார்த்தர் என்ற வாசியின்றி வாசிக்கு மனைவருக்கும் இனாமாகவே அளிக்கப்பட்டது.

இந்தக் கிரந்த ரத்னத்திற்கு எளிய தமிழில் பதவுரையும் பொருத்தமுள்ள அரிய உட்கருத்துகளும் பாலர்கள் பெண்கள் பாமரர்களும் படிக்கும்படி எண்ணூறு சுலோகம் வரை எழுதப்பட்டு அச்சிடப்பட்டது. அப்பொழுதே செலவாகிவிட்டது. ஷை தமிழுரை முடிவதற்குள் இம்மஹானுபாவரின் இவ்விபூதியில் வாஸம் நம்போன்றவர்களுடைய தௌர்பாக்யத்தினால் முடிந்துவிட்டது. மேலுள்ள இருநூறு சுலோகங்களுக்கும் இவ்வாசார்யரின் முக்ய சிஷ்யரான ஆக்கூர் ஆண்டவன் என்னும் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனால் இனிய தமிழுரை எழுதப்பட்டு அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. இப்படியே ஸ்ரீஸாக்ஷாத் ஸ்வாமி அருளிச் செய்த பகவத் விஷயம் இருபத்திநாலாயிரப்படி கிரந்தமும் அதிகரணஸாராவளி கிரந்தமும் தத்வமுக்தா கலாபம், பஞ்சஸ்தவம், ஸ்ரீயாதவாப்யுதயம் 13 ஸர்க்கம் முதல் 18 ஸர்க்கம் வரை தீக்ஷிதர் வ்யாக்கியானத்துடனும் அவ்வாசார்யன் ஆஞ்ஞையினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஸ்ரீ. உப. வ்ருத்தர் வி. கே. ராமானுஜாசாரியர் ஸ்வாமியைக் கொண்டு ஸ்ரீரஹஸ்யத்ரயஸார சுருக்கம் (அனுசாஸன பாகத்தின் அரும்பொருள்கள்) என்னும் கிரந்தம் ஆயிரம் பிரதிகள் அச்சிட்டு அதிவிரைவில் செலவழிந்து மற்றுமோராயிரமும் அப்படியே ஆய்விட்டது. இப்படியே ஸ்ரீ கீதாபாஷ்யமும் தாத்பர்ய சந்திரிகையின் முக்ய தாத்பர்யங்களுடன் தமிழில் அச்சிடப்பட்டு அபேக்ஷகர்கள் ஆனந்திக்கும்படியாய் இருக்கிறது. ஸ்ரீ ஸ்வாமிக்கு ஆசார்யரான சின்னாண்டவன் என்னும் ஸ்ரீமத் பாதுகாஸேவக ராமானுஜ மஹாதேசிகன் அருளிச் செய்த ஆன்னிகார்த்த பிரகாசிகை என்னும் அருமையான கிரந்தமும் அச்சிடப்பட்டது. இப்படிப் பல பல உண்டு. விரிவிற்கஞ்சி விரதாகிறோம். சாச்வதமாய் நடந்துவரும் பணிகளும் பல. அவைகளில் முக்கியமானது ஸ்ரீகாஞ்சியில் எம்பெருமானார் செய்தருளிய அத்திகிரியின் உச்சியில் விளங்கும் பாரிஜாதமான பெருமானுக்கு சாலைக் கிணற்றுநீர் வார்த்து வளர்க்கும் கைங்கர்யம். இது சுமார் முப்பது வருஷங்களாக நடந்து வருகிறது. பல திவ்ய தேசங்களில் ஸ்ரீதேசிகன் உத்ஸவத்தில் சாத்துமுறையோ புஷ்ப பல்லக்கோ ஸ்வாமி நியமனத்தினால் நடந்து வருகிறது. ஸ்வாமியின் யாத்ரையில் துர்பிக்ஷமுள்ள இடங்களில் எழுந்தருளின வுடனேயே மழை பெய்ந்து ஸுபிக்ஷமாய்விடும். இதனால் மழைப் பெருமாளென்று ஸ்வாமிக்கோர் திருநாமமுண்டு. இதனை ஸ்ரீ வில்லிபுத்தூர் வாசிகள் சொல்லக் கேட்டிருக்கிறோம். இறுதியில் ஸ்ரீ ஸ்வாமி ஸ்ரீகாஞ்சியில் ஸ்ரீரங்கராஜ வீதியில் அழகிய ஆச்ரமத்தில் நோவு சாத்திக்கொண்டு பிரஜோத்பத்தி ௵ ஆடி ௴ கிருஷ்ண பஞ்சமியில் தன்னுடைச்சோதிக் கெழுந்தருளினார். அவ்வாச்ரமத்திலேயே ஆயிரக் கணக்கான சிஷ்யர்களால் அளிக்கப்பட்ட அளவற்ற திரவியங்களைக் கொண்டு ஸ்ரீ ஸ்வாமியின் பூர்வாச்ரம குமாரர் ஸ்ரீ. உப. வே. ஸ்ரீநிவாஸரங்காச்சாரியரால் ஸ்ரீ ஸ்வாமி சரம கைங்கர்யம் விஸ்தாரமாக விசேஷ சிரத்தையுடன் நடத்தப்பட்டது. அவ்வாச்ரமத்திலேயே பிருந்தாவனத்தில் அர்ச்சா ரூபத்துடன் ஆச்ரிதர்களை ஆதரிக்க அவதரித்திருக்கிறார்.

# ஸ்ரீ இராமாயணமும் காயத்ரீயும்.

(தி. சுந்தராசாரி, பி.ஏ., பி.எல்., சீயாழி.)

ஸ்ரீ இராமாயணத்திற்கும் காயத்ரீக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டென்பது தொன்று தொட்டதோர் ஐதிஹ்யம். 'தத்ஸவிது:' இத்யாதியான த்ரிபதா காயத்ரீயின் ஒவ்வொரு அக்ஷரத்தையும் வைத்து, தான் அருளிய இருபத்து நான்காயிரம் ஸ்லோகங்களில், ஒவ்வொரு ஆயிரத்தையும் ஸ்ரீ வால்மீகி அலங்கரித்திருக்கிறார் என்பதை வ்யாக்யாதாக்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இத்துடன் மட்டில் இரண்டுக்குமுள்ள சம்பந்தம் முடிந்துவிடவில்லை. மற்றும் வியாபித்துள்ளது. அதை இங்கு வெகு சுருக்கமாய் எழுதுவோம்.

சாந்தோக்யோபநிஷத்தில் காயத்ரீ வித்யையை உபதேசிக்கும் பொழுது, 'காயத்ரீயே தான் இங்குள்ள எல்லா பூதங்களும்; ஏனென்றால், வாக்கல்லவோ காயத்ரீ; வாக்குத்தானே எல்லா பூதங்களையும் பாடவும் பாடுகிறது, காக்கவும் காக்கின்றது; (गायति च त्रायते च) என்று காயத்ரீ சப்தத்தால், முதலாக நாம் அறியவேண்டிய பொருள் யாதென்று, தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ வால்மீகிக்கு ஸ்ரீ இராமாயணத்தை உபதேசித்தருளிய ஸ்ரீ நாரதரை 'வாக்விதாம் வரம்' என்று விசேஷித்திருப்பதைப் பார்த்தால், பாடுவதும் காத்தருளுவதுமான இக்காயத்ரீயின் தர்மங்களை ஸ்வானுஷ்டானபரியந்தம் அடைந்தவர்களில் அக்நாரதர் சிறந்தவர் என்று ஏற்படுகிறது. இதனால் அவரால் உபதேசிக்கப்பட்ட ராம வ்ருத்தாந்தமும் அவர் பெற்ற காயத்ரீயின் ரூபாந்தரமே தவிர வேறாகாதென்பது பலிதார்த்தமாகும். காயத்ரீ சப்தார்த்தமான பாடுதல், காத்தல் என்னும் அதிசயங்கள், ஸ்ரீ இராமாயணத்தின் வாக்குக்கும் உள்ளனவென்பது, சொல்லாமலே விளங்கும். பாடுவதற்கும், காப்பதற்கும், என்ன சம்பந்தமென்று இங்கொருவர் கேட்கலாம். காயத்ரீயோ, ஸ்ரீ இராமாயணமோ, கானம் செய்யப் படும்பொழுது, அக்கானம், நம் நல்லறிவைத் தட்டி எழுப்பி, அவ்வறிவே காப்பை அளிக்கின்றது. இவ்வறிவு எழுதல் வேண்டும் என்கிற ப்ரார்த்தனை 'தத்ஸவிது:' இத்யாதியான காயத்ரீ மந்திரத்தில் வாச்சியமாகவும், ஸ்ரீ இராமாயணத்தில் வ்யங்க்யமாகவும் காணப்படுகிறது. இங்கு ஓர் மகாபாரத ச்லோகத்தையும் அநுசந்திப்பது மிக்கப் பொருத்தமாகும்.

न देवा दण्डमादाय रक्षन्ति पशुपालवत् ।
यं तु रक्षितुमिच्छन्ति बुद्ध्या संयोजयन्ति तम् ॥



தேவர்கள் நம்மை ரக்ஷிப்பதென்றால் கழியும் கையுமாக மாடு மேய்க்கிறவர்கள் பசுக்களைக் காப்பாற்றுவதுபோல் ரக்ஷிப்பதில்லை. எவனை ரக்ஷிக்க விரும்புகிறார்களோ அவனை நல்லறிவுடன் கூட்டிவைக்கிறார்கள் என்பது இதன் பொருள்.

சந்தஸ் சாஸ்திரத்தில் ஓர்வித சந்தஸ்ஸுக்குக் 'காயத்ரீ' என்று பெயர், ஸாமான்யமாக 'காயத்ரீயா வஸவ:' என்கிற பிங்கள ஸூத்திரப்படி, இச்சந்தஸ்ஸில் உள்ள பாதங்கள் மூன்றிற்கு மேற்படாதவையாகவும், ஒவ்வொரு பாதமும் எட்டெழுத்துக்களையுடையதாகவும், இருத்தல் வேண்டும். ஆனால் 'அனுஷ்டுப் காயத்ரை:' என்கிற ஸூத்திரப்படி நான்கு பாதமுடையதாய் ஆகும்பொழுது இந்த காயத்ரீக்கே 'அனுஷ்டுப்' என்று பெயர். இவ்வனுஷ்டுப் ரூபமாகவே ஸ்ரீ வால்மீகியின் வாக்கிலிருந்து ஸரஸ்வதி தேவி 'மாநிஷாத' என்று முதல் முதல் புறப்பாடடைந்திருக்கிறாள். 'அனுஷ்டுப்' சந்தஸ்ஸாலேயே மற்றுள்ள ஸ்ரீ இராமாயண ச்லோகங்களும் பெரும்பாலும் ஆக்கப்பட்டிருக்கின்றன. இதை யிட்டு, ஸ்ரீ இராமாயணத்திற்கும் காயத்ரீக்கும் சந்தோமயமான ஸம்பந்த விசேஷமொன்று த்வனிதமாகும்.[1] வேதங்களில் இவ்வனுஷ்டுப் ரூபமான காயத்ரீ 'ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:,' என்று துடங்கி, யாரை விஷயீகரிக்கிறதோ, அஷ்டாக்ஷரப் பொருளான அதே பரம புருஷனைத்தான், ஸ்ரீ இராமாயண ச்லோகங்களும் ராமாதி நாமங்களை வைத்து, கானம் செய்து உலகனைத்தையும் உய்விக்கின்றன, என்பதையும் நாமிங்கு நினைத்தல் வேண்டும்.

இப்படி அஷ்டாக்ஷரங்கள் அடங்கிய மூன்று பாதங்களுக்கு மேற்படாத சந்தஸ் 'காயத்ரீ' என்பதுவது தவிர, ஒரு பாதத்துக்கு ஆறு அக்ஷரங்களை மட்டும் உடைய, பாதங்கள் நான்கு பெற்றதாயும், இக்காயத்ரீ வருவதுண்டு. இந்த 'சதுஷ்பதா காயத்ரீ'யைத் தான், சாந்தோக்யத்திலுள்ள காயத்ரீ வித்யை விஷயமாகக் கொண்டிருக்கிறது. 'ஆத்யம் சதுஷ்பாத் ருதுபி:' என்கிற ஸூத்திரத்தினால் பிங்களாசாரியர் இதற்கு இலக்கணம் கூறியிருக்கிறார். இவ்விலக்கணப்படிக்குள்ள 'சதுஷ்பாத்வம்,' 'ஷாட்வித்யம்', இவ்விரண்டும் ப்ரமாணத்திற்கும் உடையதாகையால் சதுஷ்பதாகாயத்ரீக்கும் ப்ரும்மத்திற்கும் ஒருவித ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. அவ்வொற்றுமையே ஒன்றால் மற்றொன்றைக் குறிப்பிடுவதற்கு உதவிபுரிகின்றது. சாந்

---

१. मानिषाद् இத்யாதி ச்லோக விஷயமாக "आम्नायादन्यत्र नूतनश्छन्दसामवतारः" என்று ஸ்ரீ பவபூதி கூறியிருப்பது இந்த ஸம்பந்தத்தைக் காட்டுவதாகும்,

தோக்யத்தில் பூதம், ப்ருதிவீ, சரீரம், ஹ்ருதயம் என்பதை வைத்து சதுஷ்பதா காயத்ரீக்கும் ப்ரும்மத்துக்கும் உள்ள ஸாத்ருச்யத்தை ஸமர்த்தனம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த காயத்ரீயிலுள்ள 'சதுஷ்பாத்வம்,' ராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்னர்கள் என்று நான்காகப் பிரிவடைந்த ப்ரம்மஸ்வரூபத்தை குறிப்பிடுமென்றும், ஷாட்வித்யம், அந்தஸ்வரூப விசேஷம் ஒவ்வொன்றிற்கும் உரியதான **आनृशंस्यमनुक्रोशः श्रुतं शीलं दमः शमः । राघवं शोभयन्त्ये ते षड्गुणाः पुरुषोत्तमम् ॥** என்ற படிக்குள்ள ஷாட்குண்ய சம்பத்தியை த்வனிப்பிக்கு மென்றும் ஸ்ரீ இராமாயண கதானுசாரமாக ஸமர்த்தனம் செய்வதும் மிக்க ஸ்வரஸமானது. மேலும் இக்காயத்ரீக்கு உதாஹரணமாகக் கூறப்பட்டிருக்கும் **इन्द्रः शचीपतिः** (1) **बलेन पीडितः** (2) **दुश्च्यवनो वृषा** (3) **समित्सु सासहिः ॥** (4) என்றுள்ள ரிக்வேத மந்திரத்தை உற்றுணர்வோமானால்,ஸ்ரீ இராகவன் ஸீதாதேவிக்கு பர்த்தாவாய்விளங்கும் தன்மை முதல்பாதத்தாலும், பலசாலியான ராவணனிடமிருந்து அவர் துன்பத்தை அடைந்த வரலாறு இரண்டாவது பாதத்தாலும், அவ்விதம் துன்புற்றும் அவர் கொஞ்சமேனும் கலங்காமல் விபீஷணாதிகளுக்கும் அபயமளிக்கும் தர்மாத்மாவாய் இருக்கப் பெற்ற பெருமை மூன்றும் பாதத்தாலும், போர்க்களத்தில் அஸஹ்யராய் நின்று வெற்றி பெற்ற வ்ருத்தாந்தம் நான்காவது பாதத்தாலும் ஸூசிதமாகும்படி அம்மந்திரம் அமையப் பெற்றிருப்பது ஸ்ரீ இராமாயண கதானுஸாரமாகவுள்ள நிர்வாகத்தையே நிலைபெறச் செய்வதாகும். இவ்விதம் ஸ்ரீ இராமாயணத்துக்கும் காயத்ரீக்கும் உள்ள சம்பந்தம் காவ்யத்துடன் மட்டும் நில்லாமல் காவ்ய புருஷர்களையும் வியாபித்து இருப்பது இங்கு நாம் எண்ணத்தக்கது.

ஸ்ரீ இராமாயணத்தில் வஸிஷ்டர் முதலிய மற்ற மந்த்ரத்ரஷ்டாக்களுக்கில்லாத மகா பாக்யம் ஸ்ரீ விஸ்வாமித்திரருக்கே சொல்லப்பட்டிருக்கிறது. அவர் பின்னன்றோ ராம லக்ஷ்மணர்கள் தனுஷ்பாணிகளாய் நடந்து சென்று தங்கள் அவதாரப் பிரயோஜனத்திற்கு முதல் முதல் அங்குரார்ப்பணம் செய்து கொண்டனர். அவரன்றோ ராவணன் முடிவதற்கு இன்றியமையாதவைகளான அஸ்த்ரவித்யை, ஸீதா தேவி, என அவ்விரண்டு சாதனங்களையும் ஸ்ரீ இராகவனுடன் கூட்டிவைத்தவர். இதெல்லாம் ஸ்ரீ இராமாயண ஸரஸ்வதியின் சூக்ஷ்மரூபமான காயத்ரீ மகா மந்திரத்திற்கு அந்த விச்வாமித்ரரே ரிஷியாக இருக்கப் பெற்ற ப்ரபாவமே என்பதைச் சொல்லி இச் சிறு கட்டுரையையும் தலைக்கட்டினோம்.

---



# வேதமும் அர்ச்சாவதாரமும்

ஸ்ரீ மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசாரியார், திருவாதி.

பகவானுடைய அவதாரங்கள் பரம், வ்யூஹம் விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்பதாக ஐந்து விதங்களாகும். இவற்றில் பரரூபத்தை வேதமும், வ்யூஹரூபத்தை ஸ்ரீ பாஞ்சராத்ரமும், விபவ ரூபத்தை இதிஹாஸ புராணங்களும், அந்தர்யாமி ரூபத்தை யோக சாஸ்த்ரமும், அர்ச்சா ரூபத்தை ஆழ்வார்களின் அருளிச் செயல்களும், விசேஷமாக ப்ரதிபாதனம் செய்கின்றன. இப்படி ஒரொரு ரூபத்தில் ஒரொரு ப்ரமாணங்களுக்கு நோக்கு ஆகிலும் ப்ரமாணங்கள் ஒவ்வொன்றிலும் இவ்வைந்து ரூபங்களைப் பற்றி பொதுவாகவும் விசேஷித்தும் சொல்லியிருப்பதுண்டு.

அவற்றில் பரரூபமாவது—ஸ்ரீ வைகுண்டத்தில் நித்யமுக்தர்கள் அனுபவிக்கும் ரூபம். வாஸுதேவ ஸங்கர்ஷணாதி ரூபங்களை வ்யூஹம் என்கிறது. மத்ஸ்ய கூர்மாதி அவதாரங்கள் விபவங்களாகும். எல்லோருடையவும் ஹ்ருதயங்களில் ஸூக்ஷ்மமாயிருப்பதொரு ரூபம் அந்தர்யாமி. ஆச்ரிதர்கள் அபேக்ஷிக்கும்படியிலே ப்ரதிமைகளில் நிற்கிற நிலை அர்ச்சாவதாரமாகும்.

இப்படி ஸர்வேச்வரன் பக்தர்களை அனுக்ரஹம் செய்வதற்காகச் செய்யும் இவ்வைந்து அவதாரங்களையும் பொதுவாக வேதம் ப்ரதிபாதனம் செய்துள்ளது அதாவது—**अजायमानो बहुधा विजायते तस्य धीराः परिजानन्ति योनिं** என்பது. நம்மைப்போல் புண்ய பாபகர்மங்களால் பிறப்பு இல்லாதவன்—பகவான். தன்னுடைய ஸங்கல்ப மாத்திரத்தில் பல அவதாரங்களைச் செய்கிறான். உயர்வற உயர்நலமுடையவனை அவனுடைய பிறப்பை மயர்வறமதி நலம் பெற்றோர் க்ஷணந்தோறும் எத்திரம் என்பர் என்பதாக முன்னோர்கள் இந்த ச்ருதியை விவரணம் செய்தார்கள்.

இப்படி பொதுவாக அவதாரங்களைச் சொல்லியதன்றிக்கே விசேஷித்தும் சொல்லியது வேதம். எப்படி என்றில் "**तद्विष्णोः परमं पदं सदा पश्यन्ति सूरयः**" அப்ராக்ருதமாயுள்ள பரவாஸுதேவனுடைய ஸ்தானத்தை நித்ய ஸூரிகள் எக்காலமும் அனுபவிக்கிறார்கள் என்பதனால் பரரூபத்தை வேதம் காட்டியது.

"अम्भस्य पारे," यमन्तस्समुद्रे कवयो वयन्ति, "स एकधा भवति त्रिधा भवति" இத்யாதிகளிலே ஸமுத்ர சாயியான ரூபத்தையும் தெளிவித்தது. "ஸ ஏகதா" என்கிற ச்ருதியை வ்யூஹரூபத்தில் ப்ரமாணமாக ஸ்ரீசங்கராசாரியரும் கொண்டார்.

"अन्तरतः कूर्मं भूतँ सर्पन्तं," "उद्धृतासि वराहेण," "नारसिंहमनाद्यन्तं" இத்யாதிகளிலே விபவரூபத்தை விசேஷித்துச் சொல்லியது வேதம்.

"दहरं विपाप्मं परवेश्मभूतं यत् पुण्डरीकं पुरमध्यसंस्थं । तत्रापि दहरं गगनं विशोकस्तस्मिन् यदन्तस्तदुपासितव्यं" உபாஸகனுடைய சரீரமத்யத்தில் அல்பமாயுள்ளதொரு ஸ்தானமுண்டு ப்ரம்மத்திற்கு. அது ஹ்ருதய புண்டரீகம். அதிலே ஸமஸ்தகல்யாண குணாகரமான ப்ரம்மம் இருக்கின்றது. அந்த ப்ரம்மத்தையும், அந்த பிரம்மத்தின் குணத்தையும் உபாஸனம் செய்யவேண்டும் என்று இந்த ச்ருதியின் கருத்து. இப்படியே அர்ச்சாவதாரத்தை "கோபாலோத்தரதாபநீயம்" என்கிற உபநிஷத்தானது ஸ்பஷ்டமாகவே தெளிவிக்கின்றது. இது அதர்வண வேதத்தைச் சேர்ந்த உபநிஷத்தாகும். துர்வாஸ மஹரிஷியை கந்தர்வ ஸ்த்ரீயானவள் எட்டு கேள்விகள் கேட்க அவைகளுக்கு அந்த மஹரிஷி ஸமாதானம் சொல்லுவதாகத் தலைக்கட்டுகிறது இந்த உபநிஷத்து.

அந்த ப்ரச்னங்களாவன—(1) பகவான் கோபவம்சத்தில் அவதரிப்பதற்குக் காரணமென்ன? (2) அந்த பகவானை தேவரீர் எப்படி அறிந்தீர்? (3) அவரை ஆராதிக்க மந்த்ரம் யாது? (4) அவர் எழுந்தருளியிருக்கும் ஸ்தானம் எது? (5) தேவகி தன் வயிற்றில் எதற்காக அவதாரம் செய்தருளினர்? (6) இவருடைய மூத்தவரான பலராமன் எவர்? (7) எப்படி இவரை பூஜை செய்வது? (8) பூமியில் அவதாரம் செய்வானேன்? இப்படி எட்டு ப்ரச்னங்கள். அவைகளுக்கு மஹரிஷியானவர் ஸமாதானம் சொல்லுமிடத்தில்

"मधुरामण्डले यस्तु जम्बूद्वीपस्थितोपि वा ।
योऽर्चयेत् प्रतिमां प्रीत्या स मे प्रियतरो भुवि ॥
तस्यामधिष्ठितः कृष्णरूपी पूज्यस्त्वया सदा ।
चतुर्धा चास्याधिकारिभेदनेन यजन्ति माम् ॥



என்றிவ்வாறாக அர்ச்சாவதாரத்தையும் அதை ஆராதனம் செய்வதின் பெருமையையும் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கின்றது.

பகவானுடைய பூஜை எங்கும் விசேஷ பலம் அளிக்கக்கூடியதாகிலும் மதுரையில் செய்யும் பூஜைக்கு விசேஷமுண்டு என்கிறது இந்த ச்ருதிவாக்யம். ஜம்பூத்வீபவாஸியான எவனாகிலும் அதுதன்னிலும் மதுரையில் வாஸம் செய்துகொண்டு என்னுடைய ப்ரதிமையை பக்தியுடன் பூமியில் ஆராதிக்கின்றானோ அவன் எனக்கு மிகவும் ப்ரியனாகிறான். அந்த ப்ரதிமையில் அதிஷ்டானம் செய்யும் க்ருஷ்ண ரூபியான என்னை நீர் எப்பொழுதும் ஆராதித்து வாரும் பிரம்மாவே. நான்கு விதமாக இந்த க்ருஷ்ண ரூபத்தை ஆராதிக்கின்றார்கள் என்று இதன் பொருள்.

"कलिना ग्रसिता ये वै तेषां तस्यामवस्थितिः"

என்பதாகக் கலியின் கொடுமைக்கு உள்பட்டவர்கள் புருஷார்த்தம் பெறுவதற்காக மதுரையில் வாஸம் செய்துகொண்டு ப்ரதிமையில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று மேலேயும் சொல்லிற்று.

இப்படி ப்ரத்யக்ஷமான வேதத்திலேயே அர்ச்சாவதாரத்தைச் சொல்லியிருப்பதால் இக்காலத்தில் சிலர் வேதத்தில் அர்ச்சாவதாரத்தைப்பற்றி யாதொரு ஸ்தலத்திலும் பிரமாணமில்லை என்று எண்ணுவது யுக்தமன்று.

வேதோபப்ரும்மணங்களில் சிறந்ததான ஸ்ரீமத் ராமாயணத்திலும்

सह पत्न्या विशालाक्ष्या नारायणमुपागमत् ।
............श्रीमत्यायतने विष्णोः शिश्ये नरवरात्मजः ॥

என்று ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் பிராட்டியுடன் தமது திருவாராதனமாகிய ஸ்ரீரங்கநாதனை ஆராதித்துவிட்டு ஸ்ரீரங்கநாதன் ஸன்னிதியிலேயே சயனித்திருந்தார் என்பதாக அர்ச்சாவதாரத்தையும், கோயிலையும் ப்ரஸ்தாபம் செய்திருக்கிறது. ஸ்ரீசௌநக பகவானும் ஆழ்வார்களும் அர்ச்சாவ...த்திலே ஊன்றியிருப்பார்கள் என்பது அவர்கள் ஸ்ரீஸூக்திகளில் ...டமானது. ஆகவே அர்ச்சாவதாரமானது வேதத்திலும் உபப்ரும்ம...ளிலும் பெருமை பெற்றிருக்கின்றதாகும்.

# இராமானுசச் சுடர்

[மைலாப்பூர் தி. ராமஸ்வாமி அய்யங்கார்]

“ஶீதத்வாத் ஹவ்யவாஹாத் ப்ரகடிதவஸுதாஸ்ரீவிவாதோ
தோஷாவஸ்தேஷு நியதோதிதிரோஷதீஶ: ।
தாவாந் ப்ரவ்யுதஸம்ஹதத்வத: ப்ரஜாநாம்
ராமாநுஜோ ஜயதி ஸம்வலிதத்ரி தாமா ॥

பெரும்பூதூர் வந்த வள்ளல் மனமுகக்க வந்த நம் தேசிகர் பெருமான் அருளிச் செய்த யதிராஜ ஸப்ததியின் 27-வது ச்லோகம் இது. இதில் நம்பிராமாநுசன் ஒரு தேஜோராசியாய் வர்ணிக்கப்படுகிறார். இதன் பொருள் : “குளிர்ச்சி பொருந்தியதாயும் அழகாய் அனுபவிக்கக்கூடியதாயு முள்ள அக்னியும், குற்றங்களைப் போக்கடிப்பதில் என்றும் மாறாத மேன்மையுடைய சந்திரனும், மனிதர்களுக்குத் தாபத்தின் சேர்க்கையைப் போக்கவல்லதொரு ஸூர்யனும் ஆகிய இம்மூன்றும் ஒன்று சேர்ந்த தேஜஸ் போன்ற ராமாநுஜர் சோபிக்கிறார்” என்று.

அக்னி தஹிக்கும். இந்த அக்னியோ சீதளமான ஸ்வபாவத்தை யுடையது. “சீதளம் ஹவ்யவாஹம்” என்று உத்தரவேதியின் மத்தியிலுள்ள அக்னிபோல் இதுவும் வெப்பமில்லாதது. நம்பிராமாநுசர் ஸம்பந்தம் பெற்று (த்வதம் யேந ப்ரயாஸாயாம்ஸாந்தியிதா வீக்ஷா விஸாஸம் வய:) கரிசைலநாதன் சீதள ஸ்வபாவனாக விளங்குகிறானே! அல்லது அந்த அருளாளனை அனவரதம் ஆச்ரயித்த பெருமையால் இவர் சீத ஸ்வபாவ ராயினரோ! யாரே அறிபவர். மேலும் அடைந்தவர் வெப்பம் தவிர்க்கும் ஒரு விலக்ஷணமான அக்னியிது. சீதோபவ என்று பிராட்டியால் ஆணையிடப்பட்ட அக்னியோ என்று தோற்றுகிறது. செற்றார்க்கு வெப்பம் கொடுத்து அதே வேளையில் அடியார்க்கு அபயம் கொடுக்க வல்லது. இத்துடன் மனோக்ஞமான அனுபவத்தையும் அளிக்க வல்லது. “ஸுபகாநிபவ:” “உபவீதிநம் ஊர்த்வபுண்ட்ரவந்தம்” இத்தியாதியின்படியே ரூபமும், நாமமும், சீலமும் ஒன்றுகூடி இனிப்பவை. “சிகாவாந்” கொழுந்து விட்டு ஓங்கியெழும் அக்னி சிகைகள் (ஜ்வாலைகள்) போன்ற பெருங் கீர்த்தியைச் சொன்னபடி. “ஸஹஸ்ரஸ்ருதாம் யதீந்த்ராணாம் ஶ்ருவிகோஸநிஷம் வ்ருஷேஶ நியதா கீர்த்தி: ப்ரஜாமதிந:” ஸ்வாமி தேசிகன் நாடெங்கும்



அடைந்த கீர்த்தி ஸ்ரீபாஷ்யகாரரின் குணானுஸந்தானம் செய்து பெற்ற கீர்த்தி யென்றால் அந்த திக்குள்ள கீர்த்தியை எவ்வளவு விஸ்தரித்துப் பேசினும் அடங்குமோ? அக்னி எல்லாவற்றையும் பரிசுத்த மாக்கித் தான் சிறிதும் அசுத்தம் கலவாது நிற்பதுபோல் நம் ஸ்ரீபாஷ்யகாரரும் மிகப் பரிசுத்தராய் அடைந்தவரை யெல்லாம் பரிசுத்தமாக்க வல்லவர். உலகில் தெய்வத்தன்மை யெங்களதே யென்று சொல்வோரும் சிற்றின்பத்தை விடமுடியாது நிற்கிறார்கள். சதுர்முகன் நாலு முகங்களாலும், தனது மஹிஷியை வஹிக்கிறான். சிவனுக்கு ஒரு பாகம் முழுதும் பெண்ணுரு. உயர்ந்த பரதத்வமே ஆய்ச்சியர் முன்தாம்பில் முடியப்பட்டு நிற்கிறது. இந்நிலை யதிராஜனடியாருக்கே நேரிடாது. நிவிஷ்டதோஷாஸ்ரவம் வைராக்யம் எது வென்று பார்த்துக்கொள்ளலாம். “ஸ்வதேஶாத்ஸஹஸ்ரமாஸம்வ்ருதீ யதிராஜகீர்த்திகதக்ஷேவிஷ்பராயிதா” அவரையடைந்த வாக்கு சுத்தமாகிறது. “யதீந்த்ராஸவிஷேணமைதில்யிஷா” இவர் பாததூளி பட்டு இவ்வுலகம் பாவனமாவது.

அக்னியைப்போல் பரிசுத்தமாக்குபவர் சந்திரனைப்போல் ஆஹ்லாதத்தை விளைவிக்கின்றார் என்று மேலடி. தோஷாவஸ்தேஷும் தோஷத்தைப் போக்குவது இந்த ஸாமான்ய சந்திரனுக்கில்லாத குணம். அதில் நியதமான மேன்மை நம்முடையவருக்கு. சந்திரன் தோஷத்தை (களங்கத்தை) யுடையவன். தோஷாகரன். (இரவில் ப்ரகாசிப்பவன்) இந்த சந்திரனை வ்யாவர்த்தித்து யதிராஜ சந்திரனைப் பேசுகிறது தோஷாவஸ்தேஷு நியதோதிதி: என்கிற வாக்கியம் விஸ்தார ஸங்கோசங்களுக்கு விஷயமான சந்திரனுடைய பெருமையைப் போலல்லாது உடையவருடைய பெருமை மாறாத மேன்மையுடைத்து. தேயும் கலையின்றி தேயாத பல கலைகளால் (வித்யைகளால்) என்றும் விளங்குபவர். “கலயா கயாபி கலயாவதீந்த்ரஜிதம்.” எப்பொழுதும் பூர்ண சந்திரன். ‘நிமஜ்ஜத்யிவேஸ்வாவுணா ப்ருந்த:’ இந்த பூர்ணசந்திரனுடைய குளிர்ந்த கதிர்களால் பொங்கி அலை வீசுமவை உபநிஷதக் கடல்கள். இந்த சந்திரனுடைய நிலவு இவரது ஸ்ரீஸூக்திகள். இந்த சந்திரிகையில் மலர்ந்து மணம் வீசுவது ஸுகந்தாம் விஶ்ராந்திஸ்தாநம் வனம் அதாவது ஶ்ரிய: பதியின் இணையடிக்கன் பாகிய ஆம்பற்காடு. சந்திரோதயத்தால் ஆம்பல் மலரும். இந்த யதிராஜ சந்திரோதயத்தால் எம்பெருமான் திருவடியில் ஆர்வமுடையோர் அன்பு மலர்ந்து பக்தி மணம் கமழும். “ஓஷதீச:” சலசித்த வ்ருத்தி விநிவர்த்தன ஔஷதத்தைச் சொன்னபடி, ஸாமான்ய சந்திரனால் வ்ருத்தி

யாரும் ஔஷதிகள் சரீர வ்யாதிகளை நிவ்ருத்திக்கும். ஆனால், யதிராஜ சந்திரன் பயக்கும் ஔஷதம் பவௌஷதம். ஸம்ஸாரமாகிய பெரு வியாதியைப் போக்கடித்து அதற்கு மூலகாரணமான மனோவியாபாரத்தைப் ஓய்விப்பதில் ஸாமர்த்தியம் வஹிப்பவை இ ராமாநுசனடிப்போதுகள்.

இங்கிருந்த நாட்களும் ஸுகமாய்த் தாப ஸம்பந்தமும் சிறிதுமின்றிக் கழிக்கலாமிவர் அருள் பெற்றால் என்று சொல்லுகிறது. அடுத்த வாக்கியம் "தாபாநுபந்தசமன:" இந்த தாபசமனத்தை ஒரு தபனகிருத்தியமாக வைத்தது அழகு. "தாபாநுபந்த சமனஸ்தபன:" ஆனால் இவரை "தபந:" (ஸூர்யன்) என்று சொல்லலாமோ வென்றால், [illegible] ஸூர்யனை வென்ற காந்தியுடையவ ராகையால் தகும். மேலும், [illegible] ஸூர்யனன்றோ இவர். குதர்க்கங்களாகிய இருட்டை ஒழிக்கும் ஸூர்யோதயமல்லவா இவரது அவதாரம். நெஞ்சில் அந்தகாரம் நிறைந்தோரெல்லாம் இவரை யணுகி வெளிச்சம் (ஞானம்) பெற வேண்டியவர்களாகிறார்கள். ஆனால் இவருடைய வரவு துர்வாதிகளுக்குத் துன்பம் விளைவிக்கிறது. «[illegible]» என்று இவருடைய வாக்குக்கள் வர்ணிக்கப்படுகின்றன. ஸூர்யோதயத்தில் அனைவரும் ஸந்தோஷிக்கும்போது கோட்டான்கள் அதனால் கஷ்டமடையுமாபோலே அபஸித்தாந்திகளெல்லாம் கண்கூசிப் போகிறார்கள் இந்த பால ஸூர்யனொளியில். ஒரே காலத்தில் ஹிரண்யனுக்கு நெருப்பு வீசி ப்ரஹ்லாதனுக்கு அம்ருதத்தை வர்ஷித்த ஸ்ரீந்ருஸிம்ஹன் திருக்கண்கள் போலே நம்முடையவரும் தம்முடையவருக்குத் தாபத்தை அறவே போக்கி அதே வேளையில் வேதத்தை அபார்த்தம் செய்த அந்நியரைத் தபிக்கச் செய்வர் என்று அழகாய் காட்டப்பட்டது. "உதிப்பன உத்தமர் சிந்தையுள் ஒன்னவர் நெஞ்சமஞ்சிக் கொதித்திட மாறி நடப்பன்" என்று திருவரங்கத்தமுதனாரும் இவ்வண்ணமே அனுபவித்தமை காண்க. ராமதிவாகரனுக்கும் வகுளபூஷண பாஸ்கரனுக்கும் அகலாத இருள் இவ்விராமாநுச பால ஸூர்யனுக்கே அகன்றது. ஏனெனில் நம்மிராமாநுசன் ஈந்தனன் அவர்கள் ஈயாத இன்னருள். «[illegible]» என்கிற நம் தேசிகோத்தமன் வாக்கின்படி யதிபதி தோன்றிய பிறகன்றோ லக்ஷ்மீபதியும் யதிபதியும் தயையுடையவராய்க் காண்கிறார்கள்.



ஆகவே [illegible] எம்பெருமான் [illegible] வென்றால் எம்பெருமானார் [illegible] வெவ்வேறான மூன்று [illegible] (இடங்களை) யுடையவர் பெருமாள் ஒன்று சேர்ந்த மூன்று [illegible] (தேஜஸ்ஸுகளை) யுடையவரே உடையவர். அந்த த்ரிதாமாவை (எம்பெருமானை) வளைத்து வைத்தேன் இனி போகவொட்டேன் என்றுசூழ்ந்து நிற்பதாலும் இவர் (ஸ்ரீபாஷ்யகாரர்) ஸம்வலிதத்ரிதாமாவாகிறார்.

திருவடி பிராட்டிக்குப் பெருமாளை வர்ணிக்கும்போது «ஆதித்ய இவ தேஜஸ்வீ லோககாந்த: ஶஶீ யதா» என்று ஸூர்யனுக்கும் சந்திரனுக்கும் ஏககாலத்தில் ஒப்பிடுகிறார். ஸுமித்ரா தேவி புத்திரன் பிரிவால் வாடும் கௌஸல்யா தேவியை ஆச்வாஸப்படுத்துமிடத்தில் «[illegible]» என்றும் «[illegible]» என்றும் பேசி ராமச்சந்திரனை ஒரு த்ரிதாமாவாகத் தானனுபவித்தபடியைத் தெரிவிக்கிறாள். நம் நிகமாந்த மஹாதேசிகனும் ராமானுஜ சந்திரனை இந்த ச்லோகத்தில் ஒரு த்ரிதாமாவாக அழகுபடக் காட்டியிருக்கிறார். ஞானமும் ரஸிக்யமுமுடைய பெரியோர்கள் அநேக ரஸங்களை இதில் அனுபவிக்கலாம். அல்ப மதியாகிய அடியேனுக்கு எட்டின சில விஷயங்களை விக்ஞாபித்துக்கொண்டேன். அதுவும் இன்புற்ற சீலத்திராமானுச னின்னருளே.

---

## நல்வழி.

(திருமலை நல்லான் T. ராமகிருஷ்ணய்யங்கார் சிரோமணி,

ஆழ்வார் திருநகரி.)

ஸ்ரீய:பதியான ஸர்வேசுவரனை அடைதற்குப் பல வழிகள் உண்டு ஆனால் அவைகளில் இது சுலபமானது, இது கடினமானதென்று நமது பெரியோர்கள் கண்டறிந்தனர். அவ்வழியே அவர்கள் உயர்பதம் எய்தினர். அநுபவபூர்வமாய் அவர்கள் கூறும் நெறியே நமக்கு ராஜமார்க்கமாகும். ஆகவே அவர்கள் சென்ற வழி யாது? என்று நாம் ஆராயவேண்டும். அம்முயற்சியைச் சிறிது யாம் கைக்கொள்வோம்.

நமக்குப் பெரியவர்கள் யார்? ஆழ்வார்கள் பன்னிருவர்தான். அவர்கள் காட்டும் வழியைத்தான் பாஷ்யகாரர் பின்பற்றினர். இது திருவரங்கத்தமுதனார் அருளிய இராமாநுச நூற்றந்தாதியில் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இவர்கள் வெவ்வேறு காலத்தவர்கள் ஆயினும், உண்மையை உள்ளபடியே கண்டறிந்தமையால் ஒரு அபிப்பிராயத்தையே வெளியிடுகின்றனர். எனவே, ஆப்ததமரான ஆழ்வார்கள் வழியே நல்வழி. மற்றவை முள்வழியேயாம். இது தன்னை ஸ்வாமி நம்மாழ்வார் திருவிருத்தம் 23-வது பாசுரத்திலே அந்யாபதேசத்தாலே அருளிச் செய்கிறார்.

புனமோபுனத்தயலே வழிபோகு மருவினையேன்
மனமோ மகளிர்! நுங்காவல் சொல்லீர்-புண்டரீகத்தங்கேழ்
வனமோரனைய கண்ணான் கண்ணன் வானாடமரும் தெய்வத்
தினமோரனையீர்களாய் இவையோநும் மியல்வுகளே.

என்று அந்யாபதேசத்தில் இதன் கருத்தைக் கூறி ஸ்வாபதேசார்த்தத்தை விளக்குவாம். திருவிருத்தம் தமிழ் மொழிக்குச் சிறப்பான அகத்துறையில் அமையப்பெற்றது. இங்கு ஒரு ஸ்ரீவைஷ்ணவன் தலைமகன். பராங்குச வல்லிநாயிகை. தலைமகளும் தோழிகளும் புனங் காக்கின்றனர். புனத்து வழியே செல்லும் தலைமகன் நித்யஸூரிகட்கொப்பான நீங்கள் புனங் காக்கிறீர்களோ? புனத்துக்கு வெளி வழியே போகும் என் மனத்தைக் காக்கிறீர்களோ? சொல்லுங்கள். புனக்காவல் என்று வ்யாஜமிட்டு மனக்காவல் புரிதல்தான் உங்கள் இயல்போ? என்று இவர்களை நோக்கி வினவுகிறான். இப்பாசுரத்தில் ஸ்வாபதேசார்த்தம் மிகவும் கவனிக்கற்பாலது. இங்கு மகளிர்! என்ற விளி உண்மைப் பெண்தன்மை (ஆத்மாவுக்கு) வாய்ந்தவர்களான ஆழ்வார்களைக் கூறும். இச்சொல்லுக்கு வ்யாக்யாநமிடும் ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை "ஒருவனை பாதிக்கைக்கு உங்களுக்கு கிடக்கிற ஐககண்ட்யம்! என்று பேசிற்றே பேசும் ஏககண்டரான ஆழ்வார்களைக் குறிப்பிடுகிறார். ஆழ்வார்கள் வழியே ஈசுவரனை அடையச் செல்லும் ஸ்ரீவைஷ்ணவன், ஆழ்வார்கள் குணங்களிலே தோற்று, இங்கு நின்றும் மீளமாட்டாதே துவக்குண்ணும்படியை இப்பாசுரம் உள்ளுறையாகக் காட்டுகிறது. வைஷ்ணவனாயிருப்பானுக்கு இதுவே வழி யாகையாலே புனத்தயலே வழிபோகும் அருவினையேன் என்று வேறு வழியின்மையாலே இவ்வழியே போகும் பாபத்தைப் பண்ணினேன் என்கிறான். பிள்ளை திருநறையூர் அரையர் "உகந்தருளின தேசமெல்லாங் கிடக்கத் திருநகரி (ஆழ்வார் திருநகரி) அருகே போகவேண்டும் பாபமுண்டாவதே"



என்றருளிச் செய்வராம். இத்தால் திருவயோத்தி முதலான திவ்ய தேசங்களிருந்தாலும், ஆழ்வார் காக்கும் புனமாகிய திருநகரியிலே மண்டின மதுரகவியாழ்வார் நினைவூட்டப்படுகிறார். புனத்தயலேவழி யென்கையாலே, பாகவத ஸம்ஸ்லேஷத்தை விட்டு வேறு வழியின்மை தோற்றுகையாலே இதுவே நல்வழி என்னுமிடம் ஸ்பஷ்டம். "இவர்களை ஒழிந்தவிடம் காடும் முள்ளுமாயிருக்கிறபடி" என்று பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீ ஸூக்தி. ஒழிந்தவிடம்என்பது பகவத்ஸம்பந்த மார்க்கத்தை. ஆக மதுரகவி போன்றார் நிலை கூறப்பட்டு, அதுவே நல்வழி என்றமை இப் பாசுரத்தில் தோற்றுகிறது. இத்தையடியொற்றித் தான் வேதாந்த தேசிகனும் "மதுரகவி தோன்றக்காட்டும் தொல்வழியே நல்வழி" என்று அருளிச் செய்தார். பகவத் ஸம்ச்லேஷம் அல்வழி, நல்வழி என்பதால் வியாவர்த்திக்கப்படுகிறது.

---

# இந்திரஜித் வதமும் அதன் தத்வமும்

தி. ந. ச. V. S. ரங்கநாதாசார்யர், ந்யாயசிரோமணி
ராமகிருஷ்ண மிஷன் ஸ்கூல் த்யாகராஜநகர், சென்னை.

மஹாகவிகளாலியற்றப்பட்ட காவ்யங்களுக்கு ஐந்து விதமான பலன்களைக் காவ்யத்தின் இலக்கணக்காரர்கள் கூறினார்கள். ஐந்தாவதான ப்ரயோஜனம் ஒப்புயர்வற்ற ஆனந்தமென்று சொன்னார்கள். அந்த ஆனந்தத்தைச் சொல்லக்கூடிய பதம் (सद्यः परनिर्वृतये,) என்பது. இதைக் கவனிக்குங்கால் ஒப்புயர்வற்ற பொருளினாலுண்டாகும் ஒப்புயர்வற்ற ஆனந்தமென்று சொல்லலாமென்று தோன்றுகிறது. உலகில் ஒப்புயர்வற்ற பொருள் தெய்வத்தைத் தவிர வேறில்லை. பெரிய ஆசாரியர்களிடத்தில் உபநிஷத்தின் பொருளைக் கேட்டு நன்கு சிந்தித்து உபநிஷத்தில் சொல்லியபடி தெய்வத்தை தியானிக்குங்கால் எந்த ஆனந்தம் உண்டாகிறதோ அந்த ஆனந்தம் காவ்யத்தைப் படிக்குங்கால் உண்டாகிறது. இப்பொருள் (सद्यः) என்கிற பதத்தினால் தோன்றுகிறது. இதைக் கருதி நம் பெரியார்கள் காவ்யத்தின் வாயிலாகத் தத்வங்களை வெளியிட முயன்றார்கள். இந்தக் காவ்யங்களில் முதன்மை பெற்றது வால்மீகி ராமாயணம். இராமாயணத்தில் விபீஷணர் சரணாகதியினால் சரணாகதி சாஸ்திரம் வெளியாகிறதென்றும் இதைப்போலுள்ள அநேக கட்டங்களிலிருந்து அநேக தர்மங்கள் வெளியாகிறதென்றும் நம் பூர்வாசாரியர்கள் உரைத்தார்கள். அப்படியுள்ள ராமாயணத்தில்

நம் பெரியோர்களின் அடியொற்றி இந்திரஜித்தின் போர் விஷயமாக யான் கண்ட விஷயங்களைத் தெரிவிக்கிறேன். முதலில் இந்திரஜித்து தன்னுடைய தவத்தினால் ஸம்பாதிக்கப்பட்ட மாயையில் மறைந்து இராமனுடன் போர் புரிய முயன்றானென்பதால் ஒரு சேதனன் தன்னுடைய பாபகருமத்தினால் தெய்வத்தின் மாயையில் அகப்பட்டு தெய்வம் இல்லை என்று ஸாதிக்கக் கூடிய யுக்திகளைத் தேடுகிறானென்கிற பொருள் வெளியாகிறது. இந்திரஜித்து இராமலக்ஷ்மணர்களை அடித்தானென்பதால் நாஸ்திகன் தெய்வம் இல்லை என்று ஸாதிக்கக்கூடிய யுக்திகளை ப்ரசாரம் பண்ணினானென்கிற பொருள் வெளியாகிறது. இந்திரஜித்தினாலடிபட்ட இராமலக்ஷ்மணர்கள் மூர்ச்சித்தார்களென்பதால் பொய்யற்குப் பொய்யனாகும் என்பதை யனுசரித்து தெய்வம் என்று சொல்லப்படும் பொருள் பொய்யென்று எண்ணிக் கொண்ட நாஸ்திகனுக்குத் தெய்வம் பொய்யனாகவே இருக்கிறானென்கிற பொருள் வெளியாகிறது. "दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया" என்று கீதையில் சொல்லியபடி தன்னைச் சரணம் புகாத நாஸ்திகனுக்குத் தெய்வம் தன்னைத் தெரியப்படுத்தி நற்கதி கொடுக்காது என்கிற பொருளும் வெளியாகிறது.

---

# உபயகலை ஸமரஸம்

பண்டித தா. வ. வேதாந்தராமானுஜாசாரியார்,
புரசைவாக்கம், சென்னை.

இவ்விஷயமாக அம்ருதலஹரியிலும் வைஜயந்தியிலும் வேதாந்த தீபிகையிலும் வெளிவந்த வியாஸங்களை அப்போதைக்கப்போது கவனித் திருக்கிறேன். வேதாந்த தீபிகையில் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி எழுதியிருந்ததின்பேரில் மற்ற இரண்டு பத்ரிகைகளிலும் எழுதியிருந்த விஷ யங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து யாராவது சில பெரியவர்கள் எழுதுவார்க ளென்று எதிர்பார்த்திருந்தேன். இதுவரை, யாரும் எழுதாததனால் அடி யேன் எழுதத் துணிந்தேன். இதில் தப்பிதம் இருந்தால் பெரியவர்கள் பொறுப்பதுடன் உசிதங்களை வெளியிட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

400, 500 வருஷங்களுக்குமுன் ஒருவகையான திருமண்தான் இருக்க வேணுமென்றும், தேசிகர் காலம் வரையில் திருமண் பேதம் இருந்திருக்க மாட்டாதென்றும் பிற்காலத்தில தான் திருமண் பேதம் ஏற்பட்டிருக்க



வேண்டுமென்றும் வி. வி. ஸ்ரீ. ஐயங்கார் எழுதியிருந்ததைப் பிடித்துக் கொண்டு தென்கலைத் திருமண்தான் முற்காலத்திலிருந்ததாகவும் வடகலைத் திருமண் பிற்காலத்தில் தோன்றியதாகவும் இதுதான் வி. வி. ஸ்ரீ. ஐயங்காருடைய அந்தரங்கமான அபிப்ராயமென்றும் எழுதியிருப்பது யுக்தி யுக்தமாக எனக்கு தோன்றவில்லை.

மாத்வர் முதலான இதர பிராமணர்களின் ஸம்பிரதாயத்தில் மூக்கு நுனியிலிருந்து இடுகிற வகுப்பும், மூக்கு ஸம்பந்தமில்லாமல் இடுகிற வகுப்பும் நாளைக்கும் இருந்து வருகிறதென்பதை யாவரும் கண்டு வருகிறோம்.

இப்படியே ஸ்ரீ வைஷ்ணவர்களில் இரண்டு வகையான திருமண் பேதம் வெகுகாலமாகவே இருந்து வந்ததென்று கொள்ளுவதில் தப்பு ஒன்றுமில்லை. திவ்ய தேசங்களில் எந்த திருமண் அநாதியாக இருந்து வருகிறதென்பதைப்பற்றின விசாரத்தில் நான் இப்போது பிரவேசிக்கவில்லை. தென்கலையார்களே திவ்ய தேசங்களைக் காப்பாற்றி வந்தவர்களென்றும், வடகலையார்களால் புதிதாகவே சில 7, 8 திவ்ய தேசங்கள் ஆக்ரமிக்கப்பட்டன வென்றும் சொல்லப்படுகிற வாதம் உண்மையாகவே இருந்தாலும் இருக்கட்டும் அதைப்பற்றின விஷயங்களை இப்போது நான் விமர்சிக்க வரவில்லை.

பெரியவர்கள் முகமாக என் காதில் விழுந்திருக்கிற எல்லா சங்கதிகளையும் நிஷ்பக்ஷபாதமாய் நான் வெளியிட விரும்பியிருக்கிறேன். வடகலைத் திருமண் ஆயிரக்கணக்கான வருஷ காலமாகவே இருந்து வருவதாய் தெரிகிறது. அய்யர்கள் என்று சொல்லப்படுகிற பிராமண வகுப்பில் பல பேர்கள் பரம்பரையாகவே வடகலைத் திருமண் இட்டுக்கொண்டிருப்பதை நாம் பார்த்து வருகிறோம். ஈஜிப்டு தேசத்தில் 4000 வருஷங்களுக்கு முன் இருந்த பிம்பங்களைப் படம் பிடித்து அச்சு போட்டு வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். அது இங்கிலீஷ் புஸ்தகம் 25 ரூபாய் விலையுள்ளதாம். மத்யஸ்தர்களான இங்கிலீஷ்காரர்களால் அது வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் இடையில் ஸ்ரீசூர்ணரேகை இல்லை. வடகலைத் திருமண் ஆகாரமாகவே ஸந்தேகமில்லாமல் இருக்கிறது. இடையில் ஸ்ரீசூர்ணமிடுவதென்பது 1000 வருஷங்களுக்கு முன்னே யில்லை யென்றும் சாஸ்திரங்களிலும் அதற்கு விதி துர்லபம் என்றும் பெரியோர்களால் கேழ்வை. கீறு நாமமென்று சொல்லப்படுகிற அந்த வடகலைத் திருமண் ச்வேத மிருத்திகை ஏற்பட்ட கால முதலாகவே பிராமண ஸமூகத்தில் கொண்டாடப்பட்டு வந்திருக்கிற

தென்பதை நிச்சயிக்க முடியும். விதவைகள் முண்டனம் செய்து கொள்வது, அநேகம் தடவை பிரணாமம் செய்வது, பிரபந்தங்களில் நோக்கில்லாமல் வேதத்தையே ஆதரித்து வருவது ஆகிய இவை முதலான அனுஷ்டானங்களோடு கூடவே வடகலைத் திருமணும் அநாதியாகவே வந்திருக்கிறதென்றும் திண்ணமாய் நிரூபிக்க முடியும்.

ராமானுஜ ஸம்பிரதாயத்தை விசிஷ்டாத்வைதமென்று முதல் முதலாக எக்காலத்தில் யார் வழங்க ஆரம்பித்தார்களென்பதை எப்படிக் கண்டுபிடிக்க முடியாமலிருக்கிறதோ, அப்படியே தென்கலையார் வடகலையார் என்கிற வியவஹாரம் ஏற்பட்ட காலத்தையும் கண்டுபிடிக்க முடியாமலிருக்கிறது. முற்காலத்திய புஸ்தகங்களில் தென்கலையார் வடகலையார் என்கிற வியவஹாரம் காணாற் போனாலும் அது அநாதியாகவே உண்டு என்று கொள்ளப்படுவதில் பாதகம் ஒன்றுமில்லை.

ஸுமார் 150 வருஷங்களுக்கு முன் கோவில்களிலும் கிருஹங்களிலும் எப்படி ஆசாரம் நடந்து வந்ததென்றால், தென்கலையார்தான் பிரபந்த பாராயணம் செய்வது. வடகலையார்கள்தான் வேதபாராயணம் செய்வது. வடகலையாருக்கு பிரபந்தம் தெரியாமலும் தென்கலையாருக்கு வேதம் தெரியாமலும் இருந்து வந்தது. ஒரு கால விசேஷத்தில் கோவில் சண்டை முற்றினதின் பலனாக வடகலையார்கள் பிரபந்தம் அதிகரிக்கவும், தென்கலையார்கள் வேதம் ஓதவும் அவகாசம் ஏற்பட்டது. வடகலையாருடைய கிருஹங்களிலும் கலியாண காலத்தில் வாரணமாயிரமும், ஸ்ரீசூர்ண பரிபாலன திருவத்யயநாதி காலங்களில் பிரபந்த ஸேவா காலமும் செய்யவேண்டிய அவசியம் இருந்தபடியால் அதற்காக தென்கலையார்களை அழைப்பித்தே அதுகளை பூர்த்தி செய்து வந்தார்கள். தென்கலையார்களும் தங்களுடைய கிருஹங்களில் ஹவ்யகவ்ய காலங்களில் வடகலையார்களையே உபாத்யாயர்களாக வரித்து வைதிககாரியங்களை நடத்தி வந்தார்கள். கிருதயுகம் போலே இருந்து வந்த அக்காலத்தில் ஒரு சண்டையும் இல்லாமலிருந்தது.

எந்த காலத்தில் எதற்காக யாரால் முதல் முதலாக சண்டை உண்டு பண்ணப்பட்டதென்பதை தகுந்த காரணங்களால் நிர்ணயம் செய்ய முடியவில்லை. காஞ்சீபுரத்தில் இப்போது வேத கோஷ்டி வடகலையாருக்கே அறுதியாக இருந்து வருவதுபோல் ஒவ்வொரு க்ஷேத்ரத்திலும் வேதகோஷ்டி வடகலையாருக்கு ஆதீனமாக இருந்து வந்தது. ஸ்ரீரங்கத்திலும் அப்படியே தான் இருந்து வந்தது. அவ்வூரில் தர்மத்திற்காக வேத பாடசாலைகள்



ஏற்பட்டு சாப்பாடு போட்டு வேதம் சொல்லிக் கொடுக்கிறதென்று ஏற்பட்ட காலத்தில் சாப்பாட்டுக்காக சில தென்கலையார்களும் அந்த வேத பாடசாலைகளில் சேர்ந்து அத்யயனம் பண்ணி முடித்தபின், பின்பு ஸ்ரீரங்கநாதனுடைய வேத பாராயண கோஷ்டியில் சேர்ந்து காலக்ரமத்தில் கலஹத்தை யுண்டுபண்ணினார்களென்றும் அது முதலாகவே அங்கங்கே தென்கலை வடகலை சண்டைகள் தோன்றியதாகவும் பெரியவாள் சொல்லுகிறார்கள். வடகலையார்கள் காஞ்சீபுரத்தில் அத்யாபக கோஷ்டியில் சேர ஆரம்பித்து சண்டையை யுண்டுபண்ணினார்களென்றும் ஒரு வாதம் இருக்கிறது. இரண்டும் ஸம்பாவிதந்தான். சண்டை யாரால் ஏற்பட்டாலென்ன? எதற்காக ஏற்பட்டாலென்ன? தென்கலையார் வேத பாராயணம் செய்யவேணுமென்று விரும்புவதும் வடகலையார் ப்ரபந்த பாராயணம் செய்ய விரும்புவதும் தப்பான காரியமல்ல. இழந்திருந்த காலத்திற்கு அனுதாபப்பட்டு இரு கலையாரும் இரு கலைகளிலும் பிரவேசம் விரும்பினால் இதில் என்ன தப்பு?

வெகுகாலமாக பிரபந்தங்களை தூஷித்துக்கொண்டிருந்தவர்கள் இப்போது பிரபந்த கோஷ்டியில் எப்படி வந்து சேரலாமென்றும், அவர்களுக்கு பிரபந்தத்தில் உண்மையான அன்பு இருக்கமாட்டாதென்றும் சிலர் சொல்லுவது கொஞ்சமும் யுக்தமாக நமக்குத் தோன்றவில்லை. மஹாபாரதத்தில் கௌசிகனுடைய கதை எல்லோருக்கும் தெரிந்திருக்கும். பிராமணனை அவன் தனக்கு வாய்த்ததான மாதாபித்ரு சிச்ரூஷையை விட்டுவிட்டு தவம் புரியச் சென்றதாகவும், கடைசியாக தர்மவியாதனுடைய உபதேச மொழிகளைக் கேட்டு மாதாபித்ரு சிச்ரூஷைக்கே ஆசைப்பட்டு வந்து சேர்ந்ததாகவும் சொல்லப்படுகிறது. அதுபோல் ஒரு காலத்தில் தெளிவு பெற்று நல்லதுகளிலே சிலர் விருப்பம் கொண்டால் இதில் என்ன தப்பு? பிராம்மண்யத்திற்காக, வேதமும் ஸ்ரீ வைஷ்ணவத்திற்காகப் பிரபந்தமும் ஒவ்வொருவர்க்கும் அவசியந்தானே! த்வேஷம் வைத்திருந்தது தப்பு என்று ஒரு காலத்திலே தெளிந்த பின்பு த்வேஷம் மாறிவிட்டால் அவர்களை அன்போடு ஏற்றுக்கொள்ள என்ன தடை? உண்மையில் த்வேஷம் மாறவில்லையென்றும் சண்டைக்காகவே இவர்கள் கோஷ்டிக்கு வருகிறார்களென்றும் சொல்லுவது சரியன்று. பல வருஷ காலங்கள் எவ்வளவோ சிரமப்பட்டு ஒரு வித்யையை அதிகரித்தவர்களுக்கு அதில் த்வேஷம் மாறாமலிருந்து கொண்டே யிருக்குமென்று சொல்வது நியாயமில்லை. எந்த கோவில்களில் எந்த பாத்ரம் நடந்து வருகிறதோ அந்த பாத்ரம்தான் நடந்து வரட்டுமே,

ஆசார்ய ஸ்தோத்ரத்தை மாநஸமாகச் சிந்திப்பதும் விசேஷமாதலால் அதை யாரும் தடுக்க முடியாதே.

ஸமரஸம் ஏற்படவேணு மென்கிற கருத்துடையவர்கள் யாரோ சிலர் இருந்து பயனில்லை. இந்த எண்ணம் ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவருக்கும் உண்டாகவேணும். அப்போதுதான் பலன் ஏற்படும். யாரோ சிலர் கிருஹத்தினுள்ளே உட்கார்ந்துகொண்டு ஸமரஸம் ஏற்படவேணு மென்று பத்ரிகைகளுக்கு எழுதிவிடுவதனால் என்ன ஆய்விடும்? மற்றொரு விஷயமும் இங்கே முக்யமாகச் சொல்ல விரும்புகிறேன். திவ்ய தேசங்கள் எல்லாம் பெரும்பாலும் தென்கலைத் திருமண் பொருந்தியவைகளாகவே இருப்பதாலும் ஆழ்வார் ஆசாரியர்கள் இவர்களுடைய அவதார ஸ்தலங்கள் எல்லாம் தென்கலையாகவே காணப்படுவதாலும் திருக்குடந்தை, திருவள்ளூர், திருவிண்ணகர் முதலான க்ஷேத்ரங்கள் சமீபகாலத்தில் வடகலையார்களால் ஆக்ரமிக்கப்பட்டவைகளாதலாலும் தென்கலைத் திருமணே புராதனம் என்று சிலர் நிரூபிக்கிறார்கள். இந்த விஷயத்தில் இரு கலையாரும் நிஷ்பக்ஷபாதமாய் விமர்சித்தால் உண்மை புலப்படும். இப்போது காணப்படுகிற மாதிரியான தென்கலைத் திருமண் முற்காலத்தில் கிடையாது. நாஸிகா ஸம்பந்தம் உண்டு என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியமே. ஆனாலும், மூக்கிலே தனிக் கோடாக இக் காலத்தில் இழுக்கிறார்களே, இவ்விதமாக முன்பு இருந்ததே கிடையாது. ஸ்ரீபெரும்பூதூர் ஸன்னிதி வாசலில் புராதனமான ஒரு பெரிய சிலை நாட்டியிருப்பதை யாவரும் பார்க்கலாம். அதிலுள்ள திருமணும் ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருநெற்றியில் காணப்படுகிற திருமண் ரேகையும் கவனிக்கப்பட வேண்டும். திருமலை ஸ்ரீநிவாஸனுடைய திருமண் காப்பும் நோக்கலாம்.

திருப்பதியில் புரசை ஸ்ரீரங்காசார் ஸ்வாமி யென்று எழுந்தருளியிருந்தாரல்லவா? அந்த ஸ்வாமி திருமுக மண்டலத்திலும் திருமேனியிலும் சாத்திக்கொண்டிருந்த திருமண் காப்பு மாதிரியானது இக்காலத்து வடகலை தென்கலை திருமண்களில் சேராமல் ப்ராசீன முறையாகவே இருந்து வந்தது. இப்போது வடகலையார் மூக்குக்கு மேலேயே வளைப்பதும் தென்கலையார் மூக்குக்குக் கீழே தனிக் கோடாக இழுப்பதும் முற்காலத்தில் இருந்திருக்கவே மாட்டாது. அந்த முற்கால ரீதியாய் இப்போது திருமண் எல்லாரும் இடவேணுமென்றால் இது நடவாத காரியம். பாத்ர விஷயமாக ஏற்பாடுகள் செய்வதும் நடவாத காரியம். முன்பு நாம் தெரிவித்திருக்கிறபடி தான் செய்வது நல்லது என்று தோன்றுகிறது.

---



# கடோபநிஷத் விசாரம்.

(தொடர்ச்சி)

தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்.

'இங்கு மோக்ஷஸ்வரூபத்தைக் கேட்கும் ப்ரஸ்தாவத்தால் ப்ராப்யனை பரமாத்மஸ்வரூபமும் ப்ராப்தாவான முக்தாத்மஸ்வரூபமும் உபாயமான உபாஸநஸ்வரூபமும் அர்த்தாத் கேட்கப்பட்டதாக வைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் இதற்கு ஸமாதானமாக ஏற்பட்ட 'தம் துர்தர்சம் கூடமநுப்ரவிஷ்டம்' என்கிற வாக்யத்தில் இம்மூன்று விஷயங்கள் உபந்யஸிக்கப்படுகின்றன. ஸமாதான வாக்யத்திற்கேற்றவாறு ப்ரச்நவாக்கியத்திலும் மூன்றும் விவக்ஷிதமாகக்கொள்வது உசிதம். தவிர மோக்ஷஸ்வரூபத்தை ப்ரச்நம் பண்ணதிலிருந்தே நிர்குண ப்ரஹ்மபாவம் மோக்ஷமாயிருந்தால் நிர்குண ப்ரஹ்மம் உபேயமாயும் வாக்யார்த்தஜ்ஞாநம் உபாயமாகவுமாகும். உபாஸிங்ககனை பரமாத்மா ப்ராப்யனுனல் அவனை உபயலிங்கனை உபாஸநம் செய்தல் உபாயமாகும். ஆகையால் மோக்ஷஸ்வரூபஜ்ஞானம் அதை அனுபந்தித்த விஷயஜ்ஞானத்திற்கு அதீனமாயிருப்பதால் மேல் சொன்ன மூன்று விஷயங்கள் இந்த ப்ரச்நத்தில் விவக்ஷிதங்கள் என்றது மிகவும் உபபந்நம். இப்படி ஸமாதானனுகுணமாக ப்ரச்நார்த்தத்தை நிர்ணயிக்கவேண்டுமென்பதை ப்ரஹ்மஸூத்ரகாரர் 1 'த்ரயாணாமேவ சைவம் உபந்யாஸ: ப்ரச்நச்ச' என்கிற ஸூத்ரத்தில் ஸூசிப்பித்திருக்கிறார். (ப்ர. ஸூ. 1. 4. 6.)

இதன் ஸமாதானமான 'தம் துர்தர்சம்' என்கிற வாக்யம் 'தேவம் மத்வா' என்று உபாஸ்யனை பரமாத்மா ப்ராப்யனென்னும் 'அத்யாத்மயோகாதிகமேந' என்று அறியவேண்டிய வஸ்துவாக நிர்தேசிக்கப்பட்ட ப்ராப்தாவான ஜீவனையும் மத்வா தீரோ என்று உபாயமான உபாஸநத்தையும் வெளியிடுகின்றது. இவைகளின் ஸ்வரூபத்தை நன்கு சோதித்து அறிவதற்காக மறுபடி நசிகேதஸ் 'அந்யத்ர தர்மாதந்யத்ராதர்மாத்' 2. 14. என்பதால் ப்ரச்நம் செய்ய அதற்கு 'ந ஜாயதே ம்ரியதே வா' 2. 18. என்றாரம்பித்து ஸமாதானம் சொல்லப் போகிறவராய் முதலில் சிஷ்யனுக்கு ஆதரம் ஸித்திப்பதற்காக ப்ராப்ய வைபவத்தை ப்ரகாசப்படுத்திக்கொண்டு முதலில் ப்ரணவத்தை ப்ரஸ்தாவித்து அதன் பொருளாக ப்ராப்யமான பகவத் ஸ்வரூபத்தையும் அதில் அந்தர்கதனை ப்ராப்தாவான ஜீவஸ்வ

---

1 இந்த ப்ரகரணத்தில் ப்ராப்யனை ப்ரஹ்மம், ப்ராப்தாவான முக்தன், உபாயமான உபாஸநம்—இம் மூன்று விஷயங்களே, அறியவேண்டிய விஷயங்களாக உபந்யஸிக்கப்படுவதால் ப்ரச்னமும் அவைகளைப்பற்றி யாகும். 'ப்ரக்ருதிக்கோ உபந்யாஸமுமில்லை, ப்ரச்னமுமில்லை.' என்று இதன் பொருள்.

ரூபத்தையும் உபாய ஸ்வரூபத்தையும் எடுத்துக்காட்டி ப்ரணவத்தை யுப
தேசித்தார். மேல் ‘ந ஜாயதே ம்ரியதே வா விபஶ்சித்’ என்றாரம்பித்து
இரண்டு மந்த்ரங்களால் (2, 18, 19.) ப்ராப்தாவான ஜீவ ஸ்வரூபத்தை
சோதித்தார். அதற்கு மேல் ‘அணோரணீயாந்’ (2. 20) என்றாரம்பித்து
‘யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் ச’ (2-25-) என்ற பர்யந்தத்தால் ப்ராப்ய ஸ்வரூப
சோதனம் செய்து அது ஜகத்காரணமென்று தீர்மானிக்கப்பட்டது.
மத்யே ‘நாயமாத்மா ப்ரவசநேந’ (2. 23.) என்பதால் உபாயமாகச்
சொன்ன உபாஸநம் ப்ரீதி ரூபமானது (பக்தி ரூபம்) என்பதைத் தெரி
வித்தார். இத்துடன் இரண்டாவது வல்லி முடிந்தது.

மேல் மூன்றும் வல்லியில் இரண்டாவது வல்லியின் கடைசி மந்த்
ரத்தில் ‘க இத்தா வேத யத்ர ஸ:’ அந்த ப்ரஹ்மம் இப்படிப்பட்டதென்று
யார் அறிவார்’ என்றிருப்பதால் நாம் அந்த பரஹ்மத்தை எப்படி உபாஸிப்
பது என்று கலங்கும் நசிகேதஸ்ஸின் புத்தியை ‘உபாஸ்யனும் உபாஸக
னும் ஒரே ஹ்ருதயகுஹையிலிருப்பதால் ஸுலபமாக உபாஸிக்கலாமென்று
‘ருதம் பிபந்தௌ ஸுக்ருதஸ்ய லோகே’ என்றும் ‘யஸ்ஸேதுரீஜாநாநாம்’
என்றும் (3-1,2.) இரண்டுமந்த்ரங்களால் தெளிவு பிறப்பித்து அந்த ஹ்ருதய
குஹையிலிருக்கும் உபாயவஸ்துவே நாசிகேதாக்னி வித்யாப்ராப்யம்
என்று ‘நாசிகேதம் ஶகேமஹி’ என்பதால் தெரிவித்து மேல் இந்த உபா
ஸகன் மோக்ஷத்தை யடைவதில் தனக்கு அபிமதமான தேசத்திற்குச்
செல்ல நினைத்த ஒரு அரசன் த்ருடமான கடிவாளம் கட்டிய நல்ல குதிரை
களுடனும் நல்ல ஸாரதியுடனும் கூடிய தேரில் ஏறிச் செல்வதுபோல் இந்
திரியங்களே குதிரைகளாகவும் மனதே கடிவாளமாயும் புத்தியே ஸாரதி
யாகவும் அமைந்துள்ள தன் சரீரமாகிற தேரில் ஏறிச் சென்றால் இவனும்
விரைவில் அபேக்ஷித தேசம்போய் சேரத்தடையில்லையென்றும் ஸாரதியும்
கடிவாளமும் நன்றாயிருந்தால் தான் குதிரைகள் வசமாவதுபோல் இங்கு
புத்தியாகிற ஸாரதியும் மனமாகிற கடிவாளமும் ஸமீசீனமாயிருந்தால்தான்
இந்திரியங்கள் இவனுக்கு வசமாகும் என்றும் அப்படியில்லாதவன் ஸம்ஸா
ரத்தைதான் அடைவன் என்றும் ஸமீசீன புத்தி மனங்களுடன் கூடியவன்
ஸம்ஸார மார்க்கத்திற்கு அக்கரையான விஷ்ணுவின் ஸ்தானத்தை யடை
கிறான் என்றும் சொல்லி ரதம் முதலியவைகளாக நிரூபிக்கப்பட்ட சரீராதி
களில் வசீகரணம் செய்யவேண்டிய வகையில் எதைவிட எது ப்ரதானமான
தென்பதையும் நிரூபித்து முடிக்கும் ஸமயத்தில் இந்த மூன்று வல்லியும்
நாசிகேதோபாக்யாநம் என்று ப்ரஹ்மலோக ப்ராப்தியாகிற வித்யாபலத்
துடன் உபஸம்ஹாரம் செய்யப்பட்டிருக்கிறது. (தொடரும்)



## புஸ்தக விமர்ச

### ஸ்ரீமத் பகவத்கீதை புதுப்பதிப்பு

ஸ்ரீமான். வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார்.

அநேக நூற்றாண்டுகளாக நம்முடைய தேசத்தில் ஹிமவத்ஸேது
பர்யந்தம், பிரசாரத்திலிருக்கிற பகவத்கீதையானது 700 சுலோகங்கள்
உள்ள கிரந்தமாகவே கணிசிக்கப்பட்டு வந்திருக்கிறது எல்லா ஸித்தாந்தங்
களைச் சார்ந்த ஆசார்யர்களும் இந்த 700 சுலோகங்களாலாகிய பகவத்
கீதையையே வைத்துக்கொண்டு கீதாபாஷ்ய வியாக்யானமென்று பெய
ரிட்டு செய்துள்ளார். ஒருவராவது அதில் உள்ள பாடபேதங்களையாவது,
சேர்க்கப்பட்டிருக்கிற சுலோகங்கள் உண்டோவென்றாவது, விடப்பட்
டிருக்கிற சுலோகங்கள் உண்டோவென்றாவது தீவிரமான விமர்சை
செய்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் பீஷ்ம பர்வத்தில் 43-வது அத்தி
யாயத்தில் 7-வது சுலோகம் அடியில் வருமாறு :—

षट्शतानि सविंशानि श्लोकानां प्राह केशवः ।
अर्जुनः सप्तपंचाशत् सप्तषष्टिं च संजयः ।
धृतराष्ट्रः श्लोकमेकं गीताया मानमुच्यते ॥

இந்த சுலோகமானது பரம்பரையாய் எல்லா ஸித்தாந்திகளாலும்
ஒப்புக்கொள்ளப்பட்டு வழங்கிவருகின்றது. அந்த சுலோகம் நாளது வரை
யில் புதியதாகச் சேர்க்கப்பட்டதென்றாவது சரியான சுலோகம் அல்ல
வென்றாவது ஒருவராலும் ஆக்ஷேபிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எவ்
விதத்தில் யோசித்தாலும் அதில் செப்பியிருக்கும் கணக்குகள் ஸரியான
தாகவே ஏற்பட்டிருக்கிறது. அந்த ரீதியாய் பார்க்கும் பக்ஷத்தில் மொத்தம்
பகவத்கீதையில் இருக்கவேண்டிய சுலோகங்கள் 745 என்று ஏற்படுகிறது.
அது எவ்விதமெனில் 620 சுலோகங்கள் ஸ்ரீகிருஷ்ண வாக்கியமாகவும் 57
சுலோகங்கள் அர்ஜுன வாக்கியமாகவும் 67 சுலோகங்கள் ஸஞ்சய வாக்கிய
மாகவும், 1 சுலோகம் திருதராஷ்டிர வாக்கியமாகவும், ஆக மொத்தம் 745
ஆக ஏற்படுகிறது. ஆனால் தற்காலத்தில் பட்டணத்தில் இருக்கும் பகவத்
கீதையானது 575 சுலோகங்கள் ஸ்ரீகிருஷ்ண வாக்கியமாகவும், 84 சுலோ
கங்கள் அர்ஜுன வாக்கியமாகவும், 40 சுலோகங்கள் ஸஞ்ஜய வாக்கியமாக
வும், 1 சுலோகம் திருதராஷ்டிர வாக்கியமாகவும் ஏற்பட்டுள்ளது. மேல்
கண்ட பாரத சுலோகரீதியாய் ஸ்ரீகிருஷ்ண பகவத் வாக்கியங்கள் 620 சுலோ
கங்கள் இருக்கவேண்டிய ஸ்தானத்தில் தற்காலம் 575 சுலோகங்களே

கிடைத்திருக்கின்றன. ஆகலால் மஹாபாரதத்தைச் செய்த வேதவியாச பகவான் [illegible]ருக்கிற கணக்கு பிரகாரம், ஸ்ரீகிருஷ்ணபகவத் வாக்கியத்தில் 45 சுலோகங்கள் குறைந்திருக்கின்றன. இதுவிஷயத்தைப்பற்றி நம்மவர்கள் அவசியம் விசாரித்து விமரிசை செய்து ஒரு நிர்த்தாரணத்துக்கு வர வேண்டியது அத்தியாவசியமாகத் தோன்றுகிறது. அர்ஜுன, ஸஞ்ஜய வாக்கியங்களில் ஏற்றக்குறைவு நேரிட்டாலும் அதை அவ்வளவு முக்கியமாகக் கருதாமல் விடப்படலாம். ஆனால் அதிலும்கூட பூலோகத்தில் எல்லா மதஸ்தர்களாலும் கொண்டாடப்படும் இந்த கிரந்தத்தில், இந்துக்களில் எல்லா ஸித்தாந்திகளாலும், உபநிஷத்துகளுக்கும்கூட மேலானதாகக் கருதப்படுகிற கீதா சாஸ்திர விஷயத்தில் இம்மாதிரியான வித்தியாசங்கள், விசாரிக்கப்படாமல் விட்டிருப்பது இந்து மதத்தைச் சார்ந்த எல்லோருக்குமே ஒரு பெரிய குறைவாகும். இது விஷயத்தில் நம்மவர்களில் அதிகாரிகளா யிருக்கிறவர்கள் யாவரும் உற்சாகத்துடன் பிரயத்தினம் செய்து உண்மையைக் கண்டறிந்து வெளிப்படுத்துவது பெரியதோர் கடமை.

இதுவிஷயத்தில், சில நாளைக்கு முன், வட இந்தியாவில், காந்திவாரி லிருக்கும் ராஜவைத்திய ஜீவராம் காளிதாஸ் சாஸ்திரிகள் அநேக அபூர்வ பிரதிகளை பரிசோதித்து ஒத்துப் பார்த்ததில் 7 அல்லது 7½ சுலோகங்கள் தான் கிடைக்காமலிருக்கிற 45 சுலோகங்களில் கிடைத்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். அதுவும் தவிர அநேக சுலோகங்களில் நம்முடைய தேசத்தில் பரம்பரையாக வந்திருக்கிற பாடங்கள் சரியல்லவென்றும், தனக்குக் கிடைத்திருக்கும் பிராசீன கையெழுத்து பிரதிகளில் இருக்கும் பாடங்கள் சரியாக இருப்பதாகத் தனக்குத் தோன்றுகிறதென்றும் தெரிவித்திருக்கிறார். அவைகளை எல்லாம்பற்றி இங்கு எழுதப்புகின் மிகவும் விரியும். ஆனால், இவ்விதமாயெல்லாம் அநேகமாக பராமரிசித்து சரியான ரீதியாய் ஸ்ரீமத் பகவத்கீதையின் பாடங்களை நிர்ணயிக்க வேண்டுமென்று நம் நாட்டு பண்டிதர்கள் யாவரையும் அடியேன் ஸவிநயம் பிரார்த்திக்கிறேன்.

## ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த ஸங்கல்ப ஸூர்யோதயம்.

தத்காலத்தில் ஜனங்களின் மனப்போக்கை அனுஸரித்து இந்த நாடகம் தமிழில் எளிய நடையில் ஸங்க்ரஹித்து எழுதி அச்சிடப்பட்டிருக்கிறது சிறுவர் சிறுமிகள் உள்பட அனைவரும் இதை வாசித்தால் எப்படிப்பட்ட மனத்துயரமும் நீங்கி மனம் களிக்கும். அனேக ரஸங்கள் அடங்கிய சிறிய நாடகங்களைப் படிப்பது நன்று என்பதை நாம் அதிகமாய் உரைக்கவேண்டியதில்லை. இது சென்னை ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணி ஸபையாரால்



ப்ரசுரிக்கப்பட்டது. இதன் விலை அணா எட்டு (0—8—0) மேல்படி ஸபை ஆபீஸில் கிடைக்கும்.

## நித்யாநுஸந்தானம்

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு தினப்படி திருவாராதனம் ஆசார்யர்கள் திருநக்ஷத்திரங்கள் இவை முதலிய ஸந்தர்ப்பங்களில் பாராயணம் செய்ய வேண்டிய திவ்ய ப்ரபந்தங்களின் முக்கிய பாகம் எடுக்கப்பட்டு அச்சிடப்பட்டிருக்கிறது. நம்முடைய ஸம்ப்ரதாயங்களில் ஊக்கமுள்ள அனைவரும் இப் புத்தகத்தை வாங்கி படிக்கவேண்டியது அவசியம். தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணீ ஸபையால் ப்ரசுரம் செய்யப்பட்டது. இதுவும் மேற்படி ஸபை ஆபீஸிலேயே கிடைக்கும்.

## அம்ருத வர்ஷிணீ

இப்பெயர் பூண்ட ஸஞ்சிகை வெகுநாளாய் மாதந்தோறும் வெளி வந்துகொண்டிருக்கிறது. திருக்குடந்தை ஸ்ரீ பராங்குச பக்த ஸபையாரால் இது பிரசுரிக்கப்படுகிறது

இதில் முதல் பாகத்தில் பொதுத்தனியன்கள் 74 பக்கங்களிலும் மேல் கொண்டு திருப்பல்லாண்டு 160 பக்கங்களிலும் அதன் மேல் தொடர்ச்சியாக பெரியாழ்வார் திருமொழி "தன்முகத்துச் சுட்டி" என்கிற (5) ஆம் திருமொழி வரையிலும், இரண்டாவது பாகத்தில், இயற்பா முதல் திருவந்தாதி, இரண்டாந் திருவந்தாதி பூர்த்தியாகியும் இருக்கிறது. இப்பொழுது ஸஞ்சிகை 24 நடைபெற்றிருக்கிறது. ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களான அனைவரும் இதனை அபிமானித்து இடையறாது மேல் நடத்தி வைக்க வேண்டியதவச்யம்.

இதற்கு வருஷம் 2 ஆயிருப்பதால், வருஷம் 1-க்கு ரூ. 3—0—0 வீதம் இப்பொழுது சேர்க்கவேண்டியது ரூ. 6—0—0 ஆகிறது. ஷை பாகம் இரண்டு புஸ்தகங்களாக பயிண்டும் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி விரும்புவோர் ரூ. 6—8—0 சேர்ப்பித்துப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கிடைக்குமிடம் :

ஸ்ரீ தேசிக தர்சன துரந்தர
ஸ்ரீ. உ. வே. இளையவில்லி, தி. ஸ்ரீநிவாஸாசாரியர்,
நெ. 18, கருணைகொல்லை அக்கிரஹாரம், கும்பகோணம்.

## "குடந்தையின் கோவலனிடத்து ஆழ்வார்கள் ஈடுபாடும்" ஆண்டாளின் அடங்காக் காதலும்

இத் திருநாமம் புனைந்த புஸ்தகம் முழுவதும் பரிசீலனம் செய்யப்பட்டது.

பகவத் குணநுபவ ரஸிகர்கட்கு ஓர் இன்றியமையாத உபகாரத்தை இது செய்வதாகும்.

பல மஹான்கள் இதனை மிகவும் ஆதரித்துப் பேசியிருக்கிறார்கள்.

பண்டித பாமர ஸாதாரணமாக இப்படியமைந்த ஓர் கிரந்தத்தை வாங்கி வாசித்து அனுபவித்து பிறருக்கும் வெளிப்படுத்தல், ஓர் பெரிய கைங்கர்யமாகும். இதன் விலை 0—8—0. இக்கிரந்தத்தை இயற்றியவர், ஸ்ரீ தேசிக தர்சன துரந்தர, ஸ்ரீ. உ. வே. இளையவில்லி, தி. ஸ்ரீநிவாஸாசாரியர்; நெ. 18, கருணைகொல்லை அக்கிரஹாரம், கும்பகோணம். என்கிற விலாஸத்துக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

## கடிதங்கள்

தின்னனூரில் எழுந்தருளி இருக்கும், பாலவேடு, பரவஸ்து ஸ்ரீநிவாஸ ராமாநுஜாசார்யர் பின்வருமாறு எழுதுகிறார் :—

சென்ற மாசி மாதத்திய வேதாந்த தீபிகையில் 37-வது பக்கத்தில் திருமாலிருஞ்சோலை தாதாசார்ய ஸ்வாமி திருவடி ஸம்பந்திகளான பால வேடு ஸ்வாமிகள் பரம்பரை என்று குறிப்பிட்டிருக்கிறது யுக்தமன்று. இப் போது பாலவேடு ஸ்வாமிகளுடைய ஸமாச்ரயண மந்த்ரோபதேசாதி பரம் பரையில் மேற் சொன்ன திருமாலிருஞ்சோலை தாதாசார்ய ஸ்வாமியின் ஸம்பந்தம் இல்லை. அவச்யமானால் எங்களுடைய ஆசார்ய பரம்பராக் ரமத்தை ஸப்ரமாணமாக நிரூபிக்கிறோம்.

### ஓர் ஸ்ரீவைஷ்ணவ தாஸன் விண்ணப்பம்

சென்ற வெகுதான்ய வருஷம் பங்குனி மாதம் ப்ரசுரமான ஸ்ரீவேதாந் தீபிகையில் முத்ரிதமான "திவ்ய ப்ரபந்த வேதபாராயணம்" என்கிற விஷ ஸத்தில், அடியேனால் எழுதப்பட்டு தை மாத தீபிகையில் ப்ரசுரமான விஷ யத்தில் ஏதோ கண்டனம் மாதிரி எழுதியிருக்கிறது.

(1) "வேதாத்யயனத்தால் ப்ராம்மண்யம் ஸித்திப்பதுபோல் திவ் ப்ரபந்தத்தை ஓதுவதாலேயே ஸ்ரீவைஷ்ணவத்வம் ஸித்திக்கிறது" எ திருக்கிறது. ப்ராம்மண்யஜாதி கர்மஸித்தையானால் ப்ராம்மணேதரா வேதாத்யயனம் செய்தால் ப்ராம்மணர்கள் ஆகலாமா? வேதாத்யயன செய்வதற்குமுன் ப்ராம்மண்யமில்லாததால் ப்ராம்மணனுக்கு வர்ஜனீயம சொல்லப்பட்ட மத்யபானாதிகளை அவன் செய்யலாமா? திவ்ய ப்ர தத்தை ஓதுவதாலேயே ஸ்ரீ வைஷ்ணவத்வம் என்றால் பஞ்ச ஸம்ஸ்கா ஆக்ஞானுக்ஞா கர்மாக்களை உள்ளபடி யனுஷ்டித்தல் முதலிய வைஷ்



லக்ஷணமுள்ள பரமைகாந்திகள் திவ்ய ப்ரபந்த படனம் இல்லாதிருந்தால் ஸ்ரீவைஷ்ணவர்களாக மாட்டார்களோ !

(2) கேட்போருக்கு அர்த்த க்ஞானம் உண்டாகும் ரீதியில் திவ்ய ப்ரபந்த பாராயணம் பண்ணவேண்டுமென்று எழுதியதற்கு ஏதோ வைதி ருக்கிறது. வ்யுத்பன்னர்களான ச்ரோதாக்களுக்கு அர்த்தக்ஞானம் உண் டாகும்படி அக்ஷராதிலோப மில்லாமல் பாராயணம் செய்யவேண்டுமென்ற அபிப்ராயத்துடனேயே இது எழுதினது. அவ்யுத்பன்னனுக்கு அர்த்த க்ஞானத்தை உண்டாக்க வேணுமென்றெழுதவில்லை.

(3) அர்த்த க்ஞானத்தை வற்புறுத்துகிற ஸ்மிருதி வாக்யங்கள் வேதாந்தி சம்மதமல்ல என்கிற வாக்யத்தில் 'சிகீத்வஸ்த:' இத்யாதி வாக் யங்களில்போல் விரோதம் சொல்வதற்கில்லை.

(4) "அர்த்த க்ஞானமில்லாமல் வேத வாக்யங்களைக்கொண்டு பண் டித பாமரர்களால் செய்யப்படும் வைதீக கர்மாக்களும் பிரயோஜனம் அற் றதாய்விடும்" என்கிற வாக்யத்தில் பண்டித பதத்திற்கு வேதார்த்தம் நீங்க லாக பாக்கி விஷயத்தில் பாண்டித்யமுடையவர்கள் என்றே அர்த்தம். ஆகவே ஏற்கனவே எழுதிய விஷயத்தில் ஒருவித விரோதம் இல்லை என் பதை ஸவினயம் விக்ஞாபனம் செய்துகொண்டேன்.

## வர்த்தமானங்கள்

### ஆழ்வார் திருநகரி

#### ஸ்ரீ நம்மாழ்வார் வைசாக மஹோத்ஸவம்

உலகெங்குமுள்ள ஸ்ரீவைஷ்ணவ ஆலயங்களெங்குமே சுவாமி நம்மாழ்வார் விசாக மஹோத்ஸவம் சிறப்பாக நடைபெறுகிறதா யினும் ஆழ்வார் அவதார ஸ்தலமான திருக்குருகூர் (திருநகரி)யில் இவ்வுத்ஸவம் அதி விசேஷமாகும். இவ்வாண்டில் வைகாசி திங்க ளன்று 22—5—'39ல் உத்ஸவ துவஜாரோகணமாய் 10 தினம் அதி விமர்சையாய் நடைபெறும். 26—5—'39ல் ஐந்தாம் உத்ஸவத்தன்று ஸ்ரீவைகுண்டம், திருப்புளியங்குடி, ரெட்டைத் திருப்பதி, தென்திருப்பேரை, திருக்கோளூர் முதலிய தாம்பிரவர்ணியின் இரு பக்கத்திலும் 15 மைல் சுற்றளவிலுள்ள நவதிருப்பதி க்ஷேத்ர எம்பெருமான்களும் எழுந்தருளி நடைபெறும். ஒன்பது கெருட சேவை வைபவத்துடன் சுவாமி ஆழ்வார் ஹம்சவாஹன சேவை மிக முக்யமாகும். 7-ம் திருநாள் நம்மாழ்வார்,

உடையவர் சேர்த்தி (ஒரே ஆசனத்தில்) திருமஞ்சனம் மிகவும் குறிப்பிடத்தக்கதாம். 31—5—'39 திருவிசாகத்தன்று தாம்ப்ரவர்ணியில் ஆழ்வார் தீர்த்தவாரியுடன் உத்ஸவம் சம்பூர்ணமாகும். இம்மஹோத்ஸவத்தையொட்டி ப்ரபல வித்வான்களின் பல அரிய உபந்யாஸங்களும் ரஸமான மேளக் கச்சேரியும் நடைபெறும். ஜில்லாபோர்டார்களால் சுகாதார ஏற்பாடுகள் கவனிக்கப்படுகிறதுடன் தேசாந்தரிகளுக்கு ததீயாராதனம் பலவிடங்களிலும் நடைபெறுகின்றன. இவ்வுத்ஸவத்திற்கு ஸ்ரீவைஷ்ணவ மடாதிபதி ஜீயர் ஸ்வாமிகளும் எழுந்தருளி சிறப்பிப்பதும் குறிப்பிடத்தக்கதாம்.

திருக்குருகூர் அ. தே. ராமாநுஜ ஐயங்கார்

## காஞ்சி தேவாதிராஜன், சித்திராபர்வ உத்ஸவம்

இம்மஹோத்ஸவம் மாமூல் ப்ரகாரம் ப்ரமாதி ஸ்ரீ சித்திரை மீ 20உ புதன்கிழமை வந்தாலும் அன்றையதினம் சந்த்ர க்ரஹணமாதலால் மறுதினமாகிய 4—5—1939 வியாழக்கிழமை நடைபெறுவதாய் தேவஸ்தான அதிகாரிகள் தீர்மானித்திருப்பதாய் தெரியவருகிறது.

## வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஞ்ஞாபனம்

இவ் வேதாந்த தீபிகை சந்தாதாரர் அனைவருக்கும் சொந்தமானது என்பதை மறக்கக்கூடாது. இதில் ப்ரசுரம் செய்வதற்கு வ்யாஸம் எழுதுபவர் பண்டிதர்களே என்ற நிர்பந்தம் இல்லை. பண்டிதரல்லாத இதரர்களும் தங்களுக்கு ப்ரசுரப்படுத்தவேண்டும் என்று தோன்றிய விஷயங்களை எளிய நடையில் சிறிய துண்டு ப்ரசுரங்களாய் எழுதி அனுப்பலாம். வ்யாஸத்திற்கு எடுத்துக்கொள்ளும் விஷயம் லோகோபகாரமாயும் புதிய உண்மைகள் அடங்கியதாயும் ஜனங்களுடைய ஆசாரத்தை நல்ல வழியில் அமைத்துக் கொள்ளுவதற்கு உபயோகப்படுவனவாயுமிருக்கவேண்டும். அவரவர் குடும்பத்தில் நேர்ந்த ஸம்பவங்களால் அவரவர் மனதில் தோன்றக்கூடியதான தர்ம நீதிகளையும் மற்றுமுள்ள உலகச் செய்திகளையும் எழுதி அனுப்பி இந்த தீபிகையை உலக நடவடிக்கைக்கு உபயோகமுள்ள பத்திரிகையாகச் செய்து அபிமானிக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

## ஸ்ரீ வேதாந்த தீபிகை சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு

நமது சந்தாதாரர்கள் விலாஸம் மாறுதலை அப்போதைக்கப்போது தெரியப்படுத்தாததால் மிகவும் அஸௌகர்யங்கள் ஏற்படுகின்றன. ஆகையால் அனைவரும் கிருபை செய்து விலாஸம் மாறுதலை தாமதமின்றி தெரிவிக்கவேணும்.

V. ANANTACHARYA,
Managing Editor.

---



தல்ல. தந்தையும் தாயுமிருவருங்கூடி ப்ரஜாஹிதசிந்தனம். 'ஸஹ' என்று இருவரின் சேர்த்தியைச் சொன்னார். 'ஸம்' என்று இருவரின் தீர்மானமும் ஒன்றேயானதைக் காட்டுகிறார். 'ऐकस्यात्' (ஐகாஸ்யாத்) என்று ஸ்ரீஸ்தவத்தில் ஆழ்வான் ஸாதித்தது. ஹிதத்தை யாலோசிப்பாரேயொழிய ப்ரியத்தையே யாலோசிப்பாரில்லை. ப்ரியம் வேறு; ஹிதம் வேறு. அப்ரியமாயினும் பத்யத்தையே ஆலோசிப்பர்.

அனுக்ரஹமயீம்—தர்மத்தை பதியோடுகூட ஆசரிக்கிறாள் என்றார். இங்கே இவள் கருணையைப் பார்த்து கருணை யென்னும் தர்மமே மூர்த்தீகரித்தவள், தர்மத்திற்கு ஆச்ரயமல்லவென்னலாம்படி இருக்கிறதென்கிறார். 'மய' என்பதற்கு 'ப்ரசுரம்' என்றும் 'ஸ்வரூபம்' என்றும் பொருள்.

வந்தே—கருணைமூர்த்தியை ஸேவித்ததும் மூர்த்தியின் திருவடிகளில் விழுகிறார்.

நித்யம் அஜ்ஞாதநிக்ரஹாம்—'அநுக்ரஹமயீம்' என்பதை உபபாதிக்கிறார். அநுக்ரஹமயீ என்று அன்வயமான வர்ணனம். நிக்ரஹம் என்பதையே நிஷேதம் ஆர்த்திகம். அதில் த்ருப்தியில்லை. நிக்ரஹிக்குமெண்ணமே இவள் மனதில் உதிப்பதில்லை. அதற்கடி இவள் வடிவே அனுக்ரஹமாயிருப்பது, ஒருக்காலு மறியாதவளென்கிறார். நிக்ரஹிக்குமெண்ணமே இவள் மன தண்டிப்பதென்பது ஆண்பிள்ளைகளின் கார்யம். 'पुंस्त्वसुलभान्' (பும்ஸ்த்வ ஸுலபான்). ப்ரஜையைப் பெற்றவள் அதன்பால் கோபத்தைப் பெறுவளோ!

वन्दे वैकुण्ठसेनान्यं देवं सूत्रवतीसखम् ।
यद्वेत्रशिखरस्पन्दे विश्वमेतद्व्यवस्थितम् ॥ २ ॥

வந்தே வைகுண்டஸேநாந்யம் தேவம் ஸூத்ரவதீஸகம் ।
யத்வேத்ரசிகரஸ்பந்தே விச்வமேதத்வ்யவஸ்திதம் ॥

யத்வேத்ரசிகரஸ்பந்தே - எவருடைய ப்ரம்பின் நுனியின் அசைதலில்,
ஏதத் - இந்த
விச்வம் - ப்ரபஞ்சம்
வ்யவஸ்திதம் - இட்டது சட்டமாக கட்டுப்பட்டு நிற்கிறதோ,
(அந்த)
ஸூத்ரவதீஸகம் - ஸூத்ரவதீ யென்னும் பத்னியின் ஸகாவான
வைகுண்ட ஸேனான்யம் - பெருமாளுடைய ஸேனைத் தலைவரை
வந்தே - நமஸ்கரிக்கிறேன்.

ஈச்வரனும் ஈச்வரியும் சேர்ந்து மந்த்ராலோசனை செய்தார்கள். பக்திக்கு விக்னங்களைப் போக்கி எங்கும் ரக்ஷகமான ஸூரிஸேனைகளைப் பரப்பினார் விஷ்வக்ஸேனர். த்விரதவக்த்ரர் முதலிய கஜபுருஷ ஸேனைகள். ஸேனைத்தலைவர் கையில் பிரம்பு. குண்டாந்தடியல்ல, கொடிப்பிரம்பு, வேத்ரலதை.

'**विष्वक्सेनविहारवेत्रलतिकाकम्प :**' (விஷ்வக்ஸேனவிஹாரவேத்ரலதிகம்ப:) என்று ஸ்ரீபாதுகாஸஹஸ்ரத்தில் சாதித்தார். விளையாட்டுப் பிரம்பு, கொடியினும் லதிகை. சிறிய, மெல்லிய, கொடிப்பிரம்பு. அதை ஓங்குவதுமில்லை, வீசுவதுமில்லை. அசைவிப்பது மாத்திரமே உள்ளது.

'**दीर्घबन्धुं दयालुं स्खालित्ये शासितारम्**' (தீர்க்கபந்தும் தயாளும் ஸ்காலித்யே சாஸிதாரம்) என்று ஆசார்ய லக்ஷணம். தயாளுதான்; ஆனாலும் தவறுகளேற்படும்பொழுது சிக்ஷிக்கவேணும்.

பிராட்டி இவருக்கு உபதேசித்தாள். இவரும் 'விஷ்வக்ஸேனஸம்ஹிதை' யெனும் ஆகமம் செய்தவர். இம்மூவரும் சாச்வதமான க்ரந்தமாகச் செய்து உபகரித்த ஆசிரியர்கள். அப்படியே 4, 5-வது ச்லோகங்களில் அனுஸந்திக்கும் ஸ்ரீமன்நாதமுனிகளும். பெருமாளும் பிராட்டியும் ஒன்றுகூடி மந்த்ராலோசனை செய்து பிராட்டியைக் கொண்டு ஸேனை முதலியாரை உபதேசித்துளர்.

வந்தே—ஸேனைத்தலைவரை தூரத்திலிருந்தே வணங்கி மர்யாதை செய்வர். இங்கே தலைவணக்கத்தோடு ச்லோகம் தொடங்குகிறது.

வைகுண்டஸேனான்யம்—இவர் விஷ்ணுவின் ஸேனைத் தலைவர். ஸேநாநீ என்பது ஸூப்ரஹ்மண்யரைச் சொல்லும். அவரும் ஸனத்குமாரரனும் ஆசார்யராவார். வைகுண்ட பதத்தால் அவரை விலக்குகிறது.

தேவம்—இவர் நித்யஸூரி. "**यत्र पूर्वे साध्याः सन्ति देवाः**" (யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா:) குருபரம்பரையில் இவர் ஓர் தேவரான ஆசிரியர். மர்த்யமயமான தனுவுடையவரல்ல.

ஸூத்ரவதீஸகம்—ஸூத்ரவதீயெனும் தேவிக்கு இவர் ஸகாவான பதி. நியதசேஷத்வத்தால் பத்னி யென்பது, பெண்பாலல்ல, ஸகாக்கள்.

**यस्य सारस्वतस्रोतो वकुलामोदवासितम् ।**
**श्रुतीनां विश्रमायालं शठारिं तमुपास्महे ॥ ४ ॥**



யஸ்ய ஸாரஸ்வதஸ்ரோதோ
வகுளாமோதவாஸிதம் ।
ஶ்ருதீநாம் விச்ரமாயாலம்
சடாரிம் தமுபாஸ்மஹே ॥

| | |
|---|---|
| யஸ்ய - எவருடைய | விச்ரமாய - இளைப்பாறுதலின் பொருட்டு |
| வகுளாமோதவாஸிதம் - மகிழம் பூ வாஸனை யேறிய | அலம் - ஸாமர்த்யமுடைய தாகுமோ |
| ஸாரஸ்வதஸ்ரோத: - ஸரஸ்வதீ ப்ரவாஹம் | தம் - அந்த |
| ஶ்ருதீநாம் - வேதங்களின் | சடாரிம் - சடகோபனை |
| | உபாஸ்மஹே - நிரந்தர பஜனை செய்வோம். |

(தா - ம்) ஸேனாபதி யாழ்வாரை வர்ணித்தார்.

"**सेनापतेः पथि च कारिगृहेऽवतीर्ण**" (ஸேநாபதே: பதி ச காரிக்ருஹே அவதீர்ணம்) என்றபடி விஷ்வக்ஸேனருடைய அம்சமாவார் ஆழ்வார். ஸேனாபதியின் அம்சமானபடியால் இவருக்கு சடருடைய சடத்வத்தில் சீற்றமுண்டு. சடரின் சடத்தன்மையைச் சீறழிப்பவர். இதுவரையிலும் பேசிய வேதமும் பாஞ்சராத்ரங்களும் ஸம்ஸ்க்ருத க்ரந்தங்கள். இவர் ப்ரபந்தம் தமிழ். தமிழ்ப்ரபந்தங்களை யருளினது கருணையின் காஷ்டை. இவர் நம் தர்சனத்திற்கு கூடஸ்தர். தீர்த்தகரர். இவருடைய ஸரஸ்வதி தீர்த்தத்தை வர்ணிக்கிறார். ஸூத்ரவதியெனும் பத்னியை முன்னிட்டும் கைப் பிரம்பின் அசைவைக் கொண்டும் ஸேனாபதியாழ்வாரை வர்ணித்தார். இவர் வாயசைப்பால் வஞ்சனைசிலத்தை அடக்குகிறார். கையில் பிரம்பில்லை. வாயில் தேன்மொழியே துஷ்டர் குறும்பை யடக்கும் வலிமையுடையது. இவர் கழுத்திலும் மாலையுண்டு. அது ஒரு தேவியின் மணமாலையல்ல. அழகிய மணவாளனை ஜயிக்கும் வாடாத மகிழ்மாலை. பழகப் பழகக் கந்தம் கமழும். அவர் ஹ்ருதயத்தை யலங்கரிக்கும் மகிழ்மாலை வாஸனை அவர் ஹ்ருதயத்திலிருந்து தோன்றிய ப்ரபந்தங்களிலும் பொருந்திற்று. இவ்வுபகாரத்துக்கு எல்லையில்லை. இவர் கிரந்தத்தின் பெருமை பெருமாளுடைய உத்தம ப்ரவசனமான வேதங்களுக்கும் இளைப்பாறுதலையும் பயமில்லாமையெனும் ஸூகத்தையு மளிப்பதால் இதுவரையிலும் மூன்று ச்லோகங்களில் '**वन्दे**' (வந்தே) 'அபிவாதனம் செய்கிறேன்' என்று ஒருமை. ஆழ்வாரை நெருங்கி

யதும் தம்மிடமே பஹுமான மேற்பட்டு பஹுவசன ப்ரயோகம் செய்வது ரஸிக்கத் தக்கது. ஸ்ரீபட்டரும் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் ஆழ்வாரை துதிக்கையில் '**ऋषिं जुषामहे**' (ருஷிம் ஜுஷாமஹே) என்று முதலில் பன்மையை ப்ரயோகித்தார். அந்த ரஸத்தை அனுஸரிக்கிறார். '**अनुकरोति कूरनाथसुतम्**' (அனுகரோதி கூரநாதஸுதம்).

யஸ்ய — திருவாய் மொழியும் ஸ்ரீவைஷ்ணவ லோகமும் அவரதே.

ஸாரஸ்வதஸ்ரோத:—ஸரஸ்வதீப்ரவாஹம். ஸரஸ்வதீ நதீ அந்தர்வாஹினி. சில விடங்களில் மறைவாக விருக்கும், இது ப்ரத்யக் ப்ரவாஹம். அந்தப் ப்ரவாஹம் '**सारः सारस्वतानां**' (ஸாரஸ் ஸாரஸ்வதாநாம்) ஈரச் சொல்.

வகுளாமோதவாஸிதம்—மகிழம் பூமணத்தால் வாஸிக்கப்பட்டு. ஆமோதம் என்பது தூரத்திலிருந்து வீசும் கந்தம், '**यथा संपुष्पितस्य वृक्षस्य दूराद्गन्धो वाति**' (யதா ஸம்புஷ்பிதஸ்ய வ்ருக்ஷஸ்ய தூராத் கந்தோ வாதி' என்பர். 'ச்ருதீநாம் விச்ரமாய'—(1) ச்ருதிகளுக்கு இளைப்பாற இடம் கொடுக்க. திருவாய்மொழி யவதரித்தபிறகு ச்ருதிகளுக்கு ச்ரமமேயில்லை. ச்ருதிகள் தம் பாரத்தைத் திருவாய்மொழியிடம் ஒப்பித்துவிட்டு மார்பிலே கைவைத்து நிர்ப்பயமாய் நிர்ப்பரமாய்த் தூங்கலாம். (2) ச்ருதிகளுக்கும் ஓர் பயமுண்டு. அல்ப ச்ருதருரைக்கும் தப்புப் பொருள்களைக் கண்டு பயம். தெளியாத மறை நிலங்களைத் தெளியச்செய்யும் திருவாய்மொழி அப் பயத்தைப் போக்கி வேதங்களை ஸுகமாயிருக்கச் செய்கிறது. வேதாந்தாசாரியரே தாம் தெளியாத மறை நிலங்களைத் தெளிந்ததாகச் சொல்லுகையில் அல்ப ச்ருதர்கள் மறைநிலங்களைத் தெளியமுடியுமோ? (3) ச்ருதிகளே தமிழ் மறையில் அப்படி பொருந்தி விச்ரமித்துக் கொண்டிருக்கின்றன.

அலம் - ஸாமர்த்யமுடையதோ.

தம் சடாரிம் - அந்த சடகோபனை.

உபாஸ்மஹே - அனவரதமும் பஜிக்கிறோம். இங்கு மற்றோர் ரஸமுமுண்டு. நாதமுனிகள் இவரை தீர்க்க காலம் உபாஸித்து யோகத்தால் இவரையும் இவர் ப்ரபந்தத்தையும் ஸாக்ஷாத்கரித்தார்.

**नाथेन मुनिना तेन भवेयं नाथवानहम् ।**
**यस्य नैगमिकं तत्त्वं हस्तामलकतां गतम् ॥ ५ ॥**



நாதேன முனினா தேன பவேயம் நாதவானஹம் ।
யஸ்ய நைகமிகம் தத்வம் ஹஸ்தாமலகதாம் கதம் ॥

| | |
|---|---|
| யஸ்ய - எவருக்கு | தேன - அந்த |
| நைகமிகம் - வேதங்களின் உட்பொருளான | முனினா - முனிவர்களுக்கு இறைவனை |
| தத்வம் - தத்வம் (ஸத்யப் பொருள்) | நாதேன - ஸ்ரீமன் நாதமுனியால் |
| ஹஸ்தாமலகதாம் - உள்ளங்கை நெல்லிக்கனி போல் காணலாம்படியான தெளிவை, | அஹம் - நான் |
| கதம் - அடைந்ததோ | நாதவான் - நாதனை யுடையவனாக (ஸநாதனாக) |
| | பவேயம் - ஆவேனாக. |

(தா-ம்) அத்புதமான ஆயிரம் ஸாமங்கள் மறைந்திருந்ததைக் கண்டெடுத்து ப்ரகாசப் படுத்தப்பட்டன. ராமாயண மியற்றிய ருஷி தாம் வளர்த்து உபநயனம் செய்வித்து மருமக்களான குசலவர்களைக் கொண்டு பாடுவித்தார். அவர்கள் பாடுகையில் ராமாயணம் திருச்யகாவ்யம் போலாகி சிரநிர்வ்ருத்தமான கதையும் ப்ரத்யக்ஷம் போல் காட்டப்பட்டது. "**चिरनिवृत्तमप्येतत्प्रत्यक्षमिव दर्शितम्**" (சிரநிர்வ்ருத்தமப்யேதத் ப்ரத்யக்ஷமிவ தர்சிதம்) கேட்கும் காவ்யம் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கச் செய்யும் த்ருச்யகாவ்யமாயிற்று.

**" रघुवरचरितं मुनिप्रणीतं**
**दशशिरसश्च वधं निशामयध्वम् । "**

ரகுவர சரிதம் முனிப்ரணீதம்
தசசிரஸச்ச வதம் நிசாமயத்வம் ।

"ராகவ சரிதத்தைப் பாருங்கள்" என்றழைத்தார் ருஷி. திருவாய்மொழி ப்ரதிபாதிப்பது உட்பொருள், ப்ரத்யக். வெளியே செல்லும் ஸ்வபாவத்தையுடைய கண்களால் காணக்கூடியதல்ல. ஆழ்வாரோ "காண வாராய்" என்றழைக்கிறார். அவர்கள் முன்னே வருகிறது. நமக்கும் ப்ரத்யக்கான உட்பொருளை ப்ரத்யக்ஷம் போலே காணச் செய்யும் மஹிமையுடையது திருவாய்மொழி. **प्रत्यक् प्रत्यक्षयेन्नः प्रतिनियतरमासंनिधानं निधानं**" (ப்ரத்யக் ப்ரத்யக்ஷயேந் ந: ப்ரதிநியதரமாஸந்நிதானம் நிதானம்). அப்படிக் காணச் செய்யும் சக்திக்கு உபகாரணம் அந்த மொழியில் 'திரு' லக்ஷ்மி. ப்ரதிநியதமாகப் பொருளோடு வாய்த்து பொருந்தியிருப்பது. ராமாயணத்

தைக் குசலவர்களைக் கொண்டு பாடுவித்தது போல திவ்ய ப்ரபந்தங்களை நாதமுனிகள் 'காளம் வலம்புரியன்ன நற்காதலடியவர்'என மருமக்கட்கு அபிநயத்துடன் நாட்ய ரூபமாக ப்ரகாசப்படுத்த நினைத்து த்ருச்ய ப்ரபந்தமாக்கினர்.

**நாதேன**—நாதனால். 'ரங்கநாதன்' என்று திருநாமம். ஏகதேசத்தைச் சொன்னாலும் திருநாமத்தை க்ரஹிக்கலாம். 'நாமைகதேசே நாமக்ரஹணம்' **"नाथाय नाथमुनये"** (நாதாய நாதமுனயே) என்று ஸ்தோத்ர ரத்னம். இங்கு 'அவராலே நான் நாதனானேன்' என்று ஆமோதிக்கிறார்.

**முனிநாதேன**—நாதேன என்றது திருநாமத்தை. அதில் பொருளில் விவக்ஷையில்லை. இங்கே யோகப் பொருளோடு நாத சப்தத்தை உபயோகிக்கிறார். முனிகளுக்கு நாதனானவர். அவர் திருநாமம் அன்வர்த்தமாகும். வெறும் பெயர் அல்ல; '**अथ मुनिः**' (அத முனி:) என்று ஆலம்பனத்தை ஸம்சீலனம் செய்யும் மேலான குணத்தை யுடையவரை, உபநிஷத்து முனி என்றது. வ்யாஸர் முதலியோரை முனிகள் என்பர். இவர் முனிகளின் நாதர்.

**நாதவான்**—நாதனுடையவனாக. "**त्रैलोक्यमपि नाथेन येन स्यान्नाथवत्तरम्**" (த்ரைலோக்யமபி நாதேன யேன ஸ்யாந்நாதவத்தரம்) என்று தாரன் விஷயத்தில் கூறியதை யனுஸரிக்கிறார். நாதனுடைய காக்கும் சக்திக்கு காக்கப்படவேண்டிய மூவுலகமும் அற்பமே யாகும். காக்கும் வலிமையின் பரம்பு மிக வதிகமாயும், காக்கப்படவேண்டியது மிக்க வற்பமாயுமிருந்தது. 'நாதவத்தரம்' என்பதை, நாதவான் என்று மதுப்பாலே காட்டுகிறார். மேலும் 'நாதவான்' ஆகி நான் உளனானேன் (பவேயம்) என்று கூறுவதால் ஸத்தையே இதனால் ஏற்படுகிறது. லோகநாதனாயிருந்த ராமன் 'ஸுக்ரீவனால் நாதவானாக ஆசைப்படுகிறார்' என்றார் லக்ஷ்மணர். "முனிநாதனால் நான் நாதனுடையவன்" என்றதால் அவருக்குத் தொண்டராகத் தாமும் முனியானதாக ஸூசிக்கிறார். முனிவர்க்கு நாதன் எனக்கு நாதனானால் நானும் முனியாகலாம், வேறுவிதமாக முனியாக வழியில்லாவிடினும் இவ்விதத்தில் முனியாவேன் என்கிறார்.

**நாதவான்**—உயர்ந்த சிறந்த நாதனுடையவனாக. "**पितामहं नाथमुनिं विलोक्य प्रसीद मद्वृत्तमचिन्तयित्वा ॥**" (பிதாமஹம் நாதமுனிம் விலோக்ய ப்ரஸீத மத்வ்ருத்தமசிந்தயித்வா) அங்கே குடல் துவக்கு. இங்கே தாஸ்ய ஸம்பந்தம்,



யஸ்ய—எவர்க்கு.

நைகமிகம் **தத்வம்**—வேதத்தின் ஸூக்ஷ்மமான உட்பொருள். 'முனிநாதன்' என்பதையும், 'தன்னை நாதனாக அடைந்தவரை முனியாக்குவது' என்பதையும் இந்த ச்லோகத்தின் பின் பாதியால் நிரூபிக்கிறார். அவருக்கு ஸூக்ஷ்மதத்வம் எதிரே நிற்பதுபோல் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காண்கிறது. "**कश्चिद्धीरः प्रत्यगात्मानमैक्षत्**" பராக் பொருளைப்போலே ப்ரத்யக் பொருளை யாரோ ஓர் தீரன் பார்க்கிறான்' என்றது உபநிஷத். ஸூக்ஷ்ம புத்தியுடையவன் தீரன். இவருக்கு இப்படி உள்ளங்கை நெல்லிக்கனி போல் உட்பொருளைப் பார்க்கும் சக்தியிருந்தது. "இந்த யதிராஜ ஸப்ததியில் ஆதரமுடையாரும் ஸர்வ தத்வங்கள் கரதலாமலகம்போல் காணலாகும்" என்று இந்தத் துதி முடிவில் காட்டுவதை கவனிக்கவேணும்.

ந்யாய**தத்வம்**—என்னும் க்ரந்தம் யோகியான நாதமுனிகள் செய்தருளியது. அதிலிருந்து பல ஸூக்திகள் ஸ்வாமியால் ஸ்ரீமந் ந்யாயஸித்தாஞ்சனத்தில் ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கின்றன.

**नमस्याम्यरविन्दाक्षं नाथभावे व्यवस्थितम् ।**
**शुद्धसत्त्वमयं शौरेरवतारमिवापरम् ॥ ६ ॥**

நமஸ்யாம்யரவிந்தாக்ஷம் நாதபாவே வ்யவஸ்திதம் ।
சுத்தஸத்வமயம் சௌரேரவதாரமிவாபரம் ॥

நாதபாவே - (1) நாதத் தன்மையில் நாதனான (2) நாதமுனியின் திருவுள்ளமான நினைவிலேயே

வ்யவஸ்திதம் - நிலை நின்றவரும்

சுத்தஸத்வமயம் - (1) அப்ராக்ருத திவ்ய மங்களவிக்ரஹ முடையவரும் (2) ரஜஸ்தமோ குணங்களின் கலப்பற்ற சுத்த ஸத்வ குணம் நிரம்பியவரும்

சௌரேரவதாரம் இவ - பகவானுடைய மற்றொரு அவதாரம் போலிருப்பவரும்

அரவிந்தாக்ஷம் - (1) தாமரைக் கண்ணனை கண்ணனை (2) புண்டரீகாக்ஷ ஸூரியை

நமஸ்யாமி - நமஸ்கரிக்கிறேன்.

(தா-ம்) இதற்குமுன் கூறிய ஐந்து ஆசிரியர்களும் க்ரந்தங்கள் செய்தருளி ஸித்தாந்தத்தை சாச்வதமாக ரக்ஷித்தவர்கள். சில ஆசிரியர்கள் க்ரந்தங்களைச் செய்யாவிடினும் தத்காலத்தில் சிஷ்யர்களுக்கு உபதேசித்துவந்து ஸம்ப்ரதாய விச்சேதமன்றியில் ரக்ஷித்தவர்கள்.

இந்த ச்லோகத்தால் நமஸ்கரிக்கப்படும் ஸ்ரீ புண்டரீகாக்ஷர் உபதேச முகத்தால் ரக்ஷித்தவர். ஸ்ரீமத் தத்வடீகையில் "உபதேச ரூபமான ரக்ஷை அந்தந்தக் காலங்களிலும் அந்தந்த தேசங்களிலும் மட்டுமே; க்ரந்த ரூபமான ரக்ஷை ஸர்வ தேசங்களிலும் ஸர்வ காலங்களிலும் அவிச்சின்னமாகப் பரவியுளதால் அது 'ஸுரக்ஷை'யாகும்" என்று, '**पूर्वाचार्यसुरक्षितां**' (பூர்வாசார்யஸுரக்ஷிதாம்) என்பதற்கு வ்யாக்யான மருளப்பட்டது. க்ரந்தங்கள் செய்யாவிடினும் நம்மாசிரியர் ஸாதித்தபடி ஸம்ப்ரதாயார்த்தங்களை ரேகாமாத்ரமும் தவறுமல் உள்ளபடியே தரித்து அதிலேயே நிலை நின்று அதையெல்லாமப்படியே அடுத்த ஆசிரியரான தம் சிஷ்யருக் குபதேசித்து தம் ஆசிரியர் ஜ்ஞானமெல்லாம் அவரிடம் புகும்படி செய்து ஸம்ப்ரதாயத்தை ஈஷத்தேனும் மாறுதலின்றி அவிச்சின்னமாக அனுவர்த்திக்கும்படி ரக்ஷித்தார். வேதங்கள் அத்யயன பரம்பரையில் ஸ்வரம் முதலியதொன்றும் மாறுமால் ஏகரூபமாக அநாதி ஸம்ப்ரதாயமாக ரக்ஷிக்கப்பட்டு வருவதுபோல.

கண்ணனே என்று நினைக்கும்படி இவரும் பகவதவதாரம் போன்றவரென்பதை ச்லேஷத்தால் நிரூபிக்கிறார்.

நமஸ்யாமி—நமஸ்கரிக்கிறேன். அக்ரூரர் அரவிந்தாக்ஷனை ஸேவிக்க மனோரதித்துக்கொண்டு ரதாரூடராய்ச் சென்றபொழுது, "**यन्नमस्ये भगवतो योगिध्येयांघ्रिपङ्कजं**" (யந்நமஸ்யே பகவதோ யோகித்யேயாங்க்ரிபங்கஜம்) என்று பகவானை நமஸ்கரிப்பதைப் பாரித்தார். அந்த அரவிந்தாக்ஷரையும் ஸ்வாமி அப்படியே ஆசையோடு நமஸ்கரிக்கிறார்.

அரவிந்தாக்ஷம்—தாமரைக் கண்ணனென்று திருநாமம் அந்வர்த்தம். 'ராமார்யர்' முதலிய சிஷ்யர்களை இவர் குளிரக் கடாக்ஷித்து தாம் நாதனிடம் க்ரஹித்த ஜ்ஞானத்தை அவர்களிடம் ஸங்க்ரமிக்கும்படி செய்தார். குளிர்ந்த கடாக்ஷமே போதும். குளிரக் கடாக்ஷித்து உபதேசித்து சிஷ்யர்க்கு ஸாம்ப்ரதாயிக ஜ்ஞானத்தை அப்படியே ஸங்க்ரமிக்கச் செய்து ஸம்ப்ரதாயத்தை ரக்ஷித்தார் என்பதைக் காட்ட 'புண்டரீகாக்ஷர்' என்ற திருநாமத்தைக் கொஞ்சம் மாற்றி 'அரவிந்தாக்ஷர்' என்கிறார்.

நாதபாவே வ்யவஸ்திதம்—நாதனுடைய திருவுள்ளங்களான ஸம்ப்ரதாயப் பொருள்களில் அணுவளவும் தவறுமல் நிலை நின்றவர். ஸம்ப்ரதாயத்தை ரக்ஷித்தபடியைக் காட்டுகிறார்.

சுத்தஸத்வமயம்—நாதன் யோகி ரஜஸ்தமஸ்ஸுக்களை யமநியமாதிகளாலகற்றி சுத்தமான ஸத்வத்தில் நிலை நிற்பவர். நாதனிடமிவரும் யோகஸம்ப்ரதாயத்தை க்ரஹித்து அந் நிஷ்டையில் நிற்பவர்.



ஸ்ரீ:

உபலப்த்யதிகரணம்

## सू—नाभाव उपलब्धेः ॥ २. २. २७ ॥

ज्ञानव्यतिरिक्तार्थाभाववादश्च न संभवति । "घटमहं जानामि" इति कर्तृज्ञानकर्मतया, अर्थस्य उपलब्धेः, न तदभावश्शक्यते वक्तुम् । पुरुषस्य अर्थविशेषव्यवहारानुगुण्यापादकत्वमेव ज्ञानव्यापारः ॥

ஞானம் ஒழிந்த பொருள் இல்லை, என்று சொல்வதும் கூடாது. நான் குடத்தை அறிகிறேன் என்று ஒருவனுடைய ஞானத்திற்கு கர்மமாக குடம் என்ற பொருள் தோன்றும். ஆகையால் அது இல்லை என்று சொல்லப்போகாது. அறிவு என்ன செய்கிறது என்றால் ஒரு புருஷனுக்கு ஒரு பொருளைப்பற்றி வ்யவஹரிப்பதற்கு வேண்டிய ஒத்தாசை செய்யும்.

## सू—वैधर्म्याच्च न स्वप्नादिवत् ॥ २. २. २८ ॥

करणदोषजबाधकप्रत्ययराहित्यरूपवैषम्याच्च न स्वप्नादिवत् जागरितज्ञानस्य मिथ्यात्वम् ॥

இந்திரிய தோஷத்தால் உண்டானது, முன் அறிவுக்கு விரோதமான மற்றொரு தோற்றமில்லாமை, என்ற வைஷம்ய மிருப்பதால் ஸ்வப்னாதி ஞானத்தைப் போல் ஜாகரித ஞானத்தை பொய் என்னக்கூடாது.

## सू—न भावोनुपलब्धेः ॥ २. २. २९ ॥

अर्थशून्यस्य ज्ञानस्य सद्भावो न संभवति । अनुपलब्धेः । स्वप्नज्ञानस्यापि अर्थवत्त्वोपपादयिष्यते ॥

ஒரு பொருளைக் குறிக்காமல் அறிவில்லை. அப்படி ஒரு விடத்திலும் காண்பதில்லை. ஸ்வப்னத்தின் தோற்றத்திற்கும் பொருட்களுண்டு என்பது மேலே நிரூபிக்கப் படப்போகிறது.

ஸர்வதானுபபத்யதிகரணம்.

## सू—सर्वथानुपपत्तेश्च ॥ २. २. ३० ॥

सर्वशून्यवादश्च न संभवति । सदिति प्रतिज्ञायां असदिति प्रतिज्ञायां च तुच्छता न संभवति । अनुपपत्तेः । सदसत्बुद्धितुच्छत्वादीनां वस्तुगतान्योन्यविरुद्धभावरूपावस्थाविशेषविषयत्वात् ॥

உலகம் எல்லாம் சூன்யம் என்ற கொள்கையும் சரி அல்ல. "ஸத்" என்ற ப்ரதிஜ்ஞையிலும், "அஸத்" என்ற ப்ரதிஜ்ஞையிலும் துச்சத்வம் சொல்லுவதற்கில்லை. ஸத் என்ற தோற்றமும், அஸத் என்ற தோற்றமும் துச்சத்வம் முதலியவையும் ஒரு வஸ்துவில் ஒன்றுக்கொன்று விருத்தமான ஓர் அவஸ்தா விசேஷத்தையே குறிக்கும்.

---

ஏகஸ்மின்னஸம்பவாதிகரணம்

## सू—नैकस्मिन्नसंभवात् ॥ २. २. ३१ ॥

अर्हतो मतं न युक्तिमत् । एकस्मिन् वस्तुनि युगपत् सत्वासत्वनित्यत्वानित्यत्व भेदाभेदानामसम्भवात् ॥ पर्यायरूपाश्च द्रव्यस्यास्तित्वादिशब्दबुद्धिविषयाः परस्परविरुद्धपिण्डत्वघटत्वकपालत्वाद्यवस्थाः युगपन्न संभवन्ति । तथा—घटत्वशरावत्वावस्थाश्च पृथिव्यादेः प्रदेशभेदेन । तथा च द्रव्यस्यानित्यत्वम् उत्पत्तिविनाशयोगित्वं तद्विपरीतं नित्यत्वं नैकस्मिन् समवैति ॥

ஜைன மதம் யுக்திக்குப் பொருந்தினதல்ல. ஒரே வஸ்துவில் ஒரே ஸமயத்தில் இருப்பு இல்லாமை, நித்யத்வம் அநித்யத்வம், பேதம் அபேதம், இவை ஸம்பவிக்கக்கூடியவை அல்ல. பர்யாய ரூபங்களான ஒன்றுக்கொன்று விருத்தமான மண் உருண்டை, குடம், கபாலம், முதலான உருவங்கள் ஒரே ஸமயத்தில் தோன்ரு. அப்படியே, குடம், மடக்கு முதலிய தோற்றங்களும் ப்ரதேச பேதத்தால் உண்டானவை. ஆகையால் ஒரு திரவ்யத்தினுடைய அநித்யத்வமும் அதுக்கு விபரீதமான நித்யத்வமும் ஒரே பொருளில் சேருவதில்லை.



## सू—एवं चात्मा कात्स्न्र्यम् ॥ २. २. ३२ ॥

आत्मनः शरीरपरिमाणत्वे बृहतश्शरीरात् अल्पीयसि प्रविशतः अकात्स्न्र्यं विकलत्वं प्रसज्येत ॥

சரீரத்தின் அளவே ஆத்மாவிற்கும் உளது என்ருல் பெரிய சரீரத்திலின்றும் சிறிய தொன்றில் ப்ரவேசிக்கும் போது, ஆத்மாவிற்கு பூர்த்தி இல்லாமை வரும்.

## सू—न च पर्यायादप्यविरोधो विकारादिभ्यः ॥ २. २. ३३ ॥

तथा संकोचविकासावस्थायोगादपि नाविरोधः । घटादिवत् विकारादियोगप्रसक्तेः ॥

ஒரு பொருளுக்கே ஸங்கோசம் விகாசம் என்ற அவஸ்தைகளை ஒப்புக்கொண்டு விரோதத்தை பரிஹரிக்க ஸாத்யமில்லை. குடம் முதலிய வஸ்துக்களுக்குப் போலே விகாரங்கள் உண்டாக ப்ரஸங்கிக்கும்.

## सू—अन्त्यावस्थितेश्चोभयनित्यत्वादविशेषः ॥ २. २. ३४ ॥

अन्त्यस्य मोक्षावस्थापरिमाणस्य एकरूपावस्थितेः तस्य स्वाभाविकत्वेन आत्मतत्परिमाणयोः उभयोः नित्यत्वेन पूर्वत्राप्यविशेषः । विविधदेहपरिमाणत्वे वैकल्यं स्यादेव ॥

ஜீவனுக்கு மோக்ஷம் வந்த பிறகு மாறுதலின்றி ஏக ரூபமே உளது. அதுவே ஸ்வாபாவிகம். ஆத்மாவும் அதன் பரிமாணமும் நித்யமாக நிற்கும். முன்னேயும், அதே பரிமாணம் சொல்லவேண்டியதாகும். அனேக விதமான சரீரங்களின் அளவு சொன்னல் பூர்த்தி இல்லாமை சொல்ல நேரும்.

---

பசுபத்யதிகரணம்.

सू—पत्युरसामञ्जस्यात् ॥ २. २. ३५ ॥

नेति वर्तते । पशुपतेः मतमनादरणीयम् । वेदविरुद्धनिमित्तोपादानभेद तद्विरुद्धाचारपरत्वेन असामञ्जस्यात् ॥

பசுபதியின் மதம் ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. வேதத்திற்கு விருத்தமான நிமித்த காரணம் உபாதான காரணம் இவற்றிற்கு பேதமும் வேதத்திற்குவிருத்தமான ஆசாரங்களும், சொல்லப்படுவது கொண்டு, அஸமஞ்ஜஸ மாகும்.

सू—अधिष्ठानानुपपत्तेश्च ॥ २. २. ३६ ॥

अनुमेयेश्वराभ्युपगमेन हि केवलाधिष्ठातृत्वमुच्यते । तथा सति अशरीरस्य प्रधानाधिष्ठानानुपपत्तेः । सशरीरत्वे तु शरीरोत्पत्त्यनिरूपणात् । सावयवस्य तस्य नित्यत्वे महीमहीधरादीनामपि नित्यत्वाविरोधाच्च ॥

அனுமானத்தாலே ஈச்வரன் உண்டென்று நிரூபித்து, அவனை நிமித்த காரணமாக ஒப்புக் கொண்டது. அப்படியானால் அவனுக்கு சரீரமில்லையேல் ப்ரகிருதியை நடத்துவது பொருந்தாது. சரீரம் உண்டென்றால் அந்த சரீரம் நித்யமா அநித்யமா? அவயவங்களோடு கூடின அந்த சரீரம் நித்யம் என்றால் பூமி, மலை, முதலான வஸ்துக்கள் நித்யம் என்பதில் தோஷமில்லை.

सू—करणवच्चेन्न भोगादिभ्यः ॥ २. २. ३७ ॥

करण कलेबराद्यधिष्ठानवत् अशरीरस्यैवाधिष्ठानम् इति चेन्न—पुण्यपापनिमित्तत्वात् तस्य तत्फलभोगादिप्रसक्तेः ॥

ஜீவன் தன்னுடைய கரணகளேபரங்களை நடத்துவதுபோல், ஈச்வரனும் ப்ரகிருதியை நடத்துகிறான் என்றால் ஜீவன் நடத்துவது, செய்வினைப் பயன். ஆகையால் ஈச்வரனுக்கும் ஸுகதுக்காதிகள் உண்டாகும்.



सू—अन्तवत्त्वमसर्वज्ञता वा ॥ २. २. ३८ ॥

तथा सति क्षेत्रज्ञवत् अन्तवत्त्वम् असर्वज्ञता च ॥

அப்படி புண்ய பாப கர்மங்கள் ஈச்வரனுக்கும் உண்டென்றால் அழிவுற்றிருப்பதும் குறுகிய அறிவும் சொல்லவேண்டி வரும். ஆகையால் பசுபதி மதம் அஸமஞ்ஜஸம்.

---

உத்பத்யஸம்பவாதிகரணம்.

सू—उत्पत्त्यसम्भवात् ॥ २. २. ३९ ॥

सांख्यादिवत् पञ्चरात्रमपि जीवोत्पत्त्यभिधानात्, श्रुतिविरुद्धत्वेन तदसंभवात्, अप्रमाणम् ॥

ஸாங்க்ய மதம் முதலிய இதர மதங்கள் அஸமஞ்ஜஸம் என்று தள்ளப் பட்டன. அதுபோலவே பாஞ்சராத்ரமும் வேதத்திற்கு விருத்தமான ஜீவனுக்கு உத்பத்தியைச் சொல்லுவது கொண்டு, ப்ரமாணமல்ல. என்று இந்த ஸூத்திரத்தால் ஆக்ஷேபம் செய்யப்படுகிறது.

सू—न च कर्तुः करणम् ॥ २. २. ४० ॥

कर्तुः जीवात् करणं मनश्च श्रुतौ उत्पद्यते इति नोच्यते । " एतस्माज्जायते प्राणो मनस्सर्वेन्द्रियाणि च" इत्यादि श्रुतेः ॥

ஜீவனிடமிருந்து மனது உண்டானதாக வேதத்திலும் சொல்லப்படுவதில்லை. பரமாத்மாவினிடமிருந்தே ப்ராணன் மனது இந்திரியங்கள் இவை உண்டாகின்றன என்றே ச்ருதி கூறுகிறது. ஆகையால் ச்ருதிக்கு விருத்தமான மனதிற்கு உத்பத்தி சொல்லுவதால் பாஞ்சராத்ர சாஸ்திரம் அப்ரமாணம்.

सू—विज्ञानादिभावे वा तदप्रतिषेधः ॥ २. २. ४१ ॥

वासुदेवात् सङ्कर्षणो नाम जीवः इत्यादौ सङ्कर्षणादीनां विज्ञानादिरूपवासुदेवत्वे . सति तदभिधायिनः प्रामाण्यानिषेधः । परब्रह्म-

वासुदेवस्य श्रुतावपि अजायमानो बहुधा विजायते इति च अवतारः श्रूयते । जीवादिशब्दाः तत्तच्छरीरकसङ्कर्षणादीनां वाचकाः ॥

வாஸுதேவனிடமிருந்து ஸங்கர்ஷணன் என்ற ஜீவன் பிறக்கிறான் என்று சொல்லுமிடத்தில் ஸங்கர்ஷண முதலான சொற்கள் வாஸுதேவனையே சொல்லும். ச்ருதியில் பிறக்காதவன் பல படியாய் பிறக்கிறான். என்று கூறப்படுகிறது. ஜீவாதி சப்தங்கள் ஜீவாதிகளை சரீரமாகப் பெற்ற ஸங்கர்ஷணனை குறிக்கின்றன.

## सू—विप्रतिषेधाच्च ॥ २. २. ४२ ॥

तस्मिन्नपि तन्त्रे—“ व्याप्तिरूपेण संबन्धः तस्याश्च पुरुषस्य च । स ह्यनादिरनन्तश्च परमार्थेन निश्चितः ” इति जीवोत्पत्तिप्रतिषेधाच्चाविरोधः श्रुतः ॥

அதே பாஞ்சராத்ர சாஸ்திரத்தில் ஜீவனுக்கு உத்பத்தி இல்லை என்று நிரூபணம் செய்திருப்பதால் வேதத்தோடு விரோதமில்லை.

இரண்டாம் அத்யாயம் இரண்டாம் பாதம் முடிந்தது.

---

### வியததிகரணம்.

## सू—न वियदश्रुतेः ॥ २. ३. १ ॥

वियत् नोत्पद्यते । अश्रुतेः । श्रुतिः—श्रवणम् । निरवयवस्य आत्मन इव उत्पत्तिश्रवणासंभवात् ॥

ஆகாசத்திற்கு உத்பத்தி இல்லை. அவயவமில்லாத ஆத்மாத்மாவிற்குப் போலே உத்பத்தி சொல்லப்படவில்லை.

## सू—अस्ति तु ॥ २. ३. २ ॥

श्रवणं संभवत्येव । “ आकाशः संभूतः ” इत्येव हि श्रुतिः अतीन्द्रियार्थविषया वियदुत्पत्तिं प्रतिपादयति । आत्मनोऽपि न जायते इति प्रतिषेधात् अनुत्पत्तिः ॥



மேற் சொன்ன ஆக்ஷேபத்திற்கு ஸமாதானம் சொல்லுகிறது இந்த ஸூத்திரம். ஆகாசம் உண்டானது என்று ச்ருதி ஆகாசத்திற்கு உத்பத்தியை கூறுகிறது. ஜீவனுக்குத்பத்தி இல்லை என்கிறது.

## सू—गौण्यसंभवाच्छब्दाच्च ॥ २. ३. ३ ॥

तत्तेजोसृजत इति प्राथम्यवचनात् “ आकाशस्संभूतः ” इति श्रुतिः गौणी । “ वायुश्चान्तरिक्षञ्चैतदमृतम् ” इति शब्दाच्च ॥

மற்றொரு விடத்தில் அது தேஜஸ்ஸை ச்ருஷ்டித்தது. என்று முதலாகச் சொல்லி இருப்பதால் இங்கு ஆகாசம் உண்டானது என்ற ச்ருதி வாக்யத்திற்கு கௌணமாகவே அர்த்தம் கொள்ளவேணும். இந்த ஆகாசத்தை நித்யமாகவும் சொல்லி இருக்கிறது.

## सू—स्याच्चैकस्य ब्रह्मशब्दवत् ॥ २. ३. ४ ॥

एकस्य संभूतशब्दस्य आकाशे गौणत्वं, अन्यत्र मुख्यत्वं, अनुषङ्गे संभवत्येव; श्रवणावृत्तिवत् । यथैकस्य ब्रह्मशब्दस्य तस्मादेतत, ब्रह्मनामरूपमन्नं च जायते इति प्रकृतौ गौणत्वम् । तपसा चीयते ब्रह्म इति मुख्यत्वमावृत्तौ ॥

ஸம்பூத என்ற சப்தம் ஒன்றே ஆகாசத்தோடு சேரும்போது கௌணமாயும், மற்றதோடு சேரும்போது முக்யமாயும், இருக்கக் கூடும். ஒரே ப்ரஹ்ம சப்தம் கௌணமாக ப்ரகிருதியையும், முக்யமாக பரமாத்மாவையும் சொல்லுவது போல்.

## सू—प्रतिज्ञाहानिरव्यतिरेकात् ॥ २. ३. ५ ॥

परिहरति । “ येनाश्रुतं श्रुतं ” इत्यादिना एकविज्ञानेन सर्वविज्ञानप्रतिज्ञाया अहानिः । वियदादेः ब्रह्मकार्यत्वेन तदव्यतिरेकादेव ॥

கீழ்சொன்ன ஆக்ஷேபத்திற்கு பரிஹாரம் கூறுகிறது இந்த ஸூத்திரம். சாந்தோக்யோபநிஷத்தில் ஒரு பொருளின் அறிவாலே, மற்ற எல்லாப் பொருளும் அறிந்ததாகும் என்று சொல்லப்பட்ட ப்ரதிஜ்ஞையை விட

மூடியாதாகையால் ஆகாசம் முதலிய வஸ்துக்கள் ப்ரஹ்மத்தால் ஸ்ருஷ்டிக்கப் பட்டவையாகும்.

### सू—शब्देभ्यः ॥ २. ३. ६ ॥

आकाशस्संभूतः इत्यादिशब्देभ्यः अवगतां वियदुत्पत्तिं तत्तेजोसृजत इत्यत्र आकाशशब्दावचनात्रगतं तेजःप्राथम्यं न निवारयितुं क्षमम् ॥

ஆகாசம் பிறந்தது என்று தெளிவாகச் சொல்லப் பட்ட விஷயத்தை மற்ற விடத்தில் ஆகாசத்தைச் சொல்லாதது காரணமாக தேஜஸ்ஸை முதலாகச் சொன்னது விரோதிக்கக் கூடியதல்ல.

### सू—यावद्विकारं तु विभागो लोकवत् ॥ २. ३. ७ ॥

ऐतदात्म्यमिदं सर्वमित्यादिना आकाशादेरपि विकारत्वावगमात्, तेजःप्रभृति विभागवचनं सर्वस्य प्रदर्शनार्थमिति निश्चीयते। यथा च लोके दशेमे देवदत्तपुत्राः इत्युक्त्वा तेषु केषाञ्चित् उत्पत्तिवचनम् ॥

ஆகாசம் முதலான வஸ்துக்களை விகாரரூபமாகச் சொல்லி பின்னே தேஜஸ் முதலிய வஸ்துக்களை பிரித்துச் சொல்லுவது மற்றெல்லாவற்றுக்கும் இந்த ந்யாயமுண்டு என்று காட்டுவதற்காக. உலகத்தில் இப்பதிவரும் தேவதத்தன் புத்திரர்கள் என்று சொல்லி அவர்களுள் சிலருக்கு தேவதத்தனிடமிருந்து பிறப்பை சொல்லுவது போல்.

### सू—एतेन मातरिश्वा व्याख्यातः ॥ २. ३. ८. ॥

तत्तेजः इत्यादिवक्तुं वायोः पृथगुपादानम् ॥

இதே ந்யாயத்தைக் கொண்டு வாயுவை தனியாகச் சொன்னதாகும்.


# अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम्।"
"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः।"




தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

## அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

**Registered No. M. 3778.**

## சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம். ஆபரணங்களுக்கெல்லாம் அரசனாயிருப்பது

## வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசநங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥



"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர் கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப்பிரசஸ்தமானது. அவ்வாறு உயர் குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களே அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸுராஜ்மல் கம்பெனியாரே.

**SURAJMAL'S**

**The Jewellers**

**313 ESPLANADE, MADRAS.**

Printed by M. Satyanarayana, at the Hindi Prachar Press T. Nagar, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

# SRI VEDANTA DIPIKA

Vol. 28] MAY 1939 [Part 5

ANNUAL SUBSCRIPTION Rs. 2—0—0

# ஸ்ரீ வேதாந்த தீபிகை

வருஷ சந்தா ரூ. 2—0—0

பிரதி இங்கிலீஷ்மீ 25உ வெளிவரு

விளம்பரக் கட்டணைகள் :

மானேஜிங் எடிடருக்கு எழுதித் தெரிந்துகொள்ள

பிரமாதி௵ :: வைகாசிமீ

1 10 JU'' 193

பத்ராதிபர்கள் :

ஸி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

வி. அனந்தாசாரியர் (*Managing Editor*)

கிருஷ்ணபுரம், கோடம்பாக்கம் **Post, Madras.**

○

உப-பத்ராதிபர்கள் :

வேதாந்த சிரோமணி T. வேணுகோபாலாசாரியர்

எ. ஸ்ரீநிவாஸராகவன், M.A., [மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.]

CONDUCTED BY

**SRI VAISHNAVA SIDDHANTA PRACHARA SABHA, Ltd.,**

**Vani Vilas 4—5, Badriah Garden St., Park Town, Madras.**

## ட..ப. பெருங்காயம்

**ஹிங்கு** அல்லது பெருங்காயம், உணவு பொருள்களுக்கு ருசியைத் தருவது மாத்திரம் அல்ல, பிரதிதினம் சாப்பிடக்கூடியதான ஔஷதமாயும் கருதப்படுகிறது. அடியில் கூறப்படும் குணங்கள் இதன் ஔஷதத் தன்மையை நன்கு விளக்கும். ராஜ நிகண்டு என்னும் ப்ராசீன வைத்திய சாஸ்திரத்தில் அடியில் கண்டபடி பெருங்காயத்தின் குணங்கள் வர்ணிக்கப்படுகின்றன. ஹ்ருதயத்திற்கு பலத்தைத் தரும். காரமாய் இருப்பதால் உஷ்ண வீர்யமுள்ளது. வயிற்றில் உண்டாகும் கிருமிகளை போக்கும். வாயுவை கண்டிக்கும், கபத்தை தொலைக்கும், மலச்சிக்கலை நீக்கும், வயிற்று பொருமலை அகற்றும், சூலவியாதியை கொல்லும், நேத்திர ரோகத்தையும் போக்கும், குல்மம் என்னும் வியாதியை வேரோடு அறுக்கும்.

हृद्यं हिंगु कटूष्णं च क्रिमिवातकफापहम् ।
निबन्धाध्मानशूलघ्नं चक्षुष्यं गुल्मनाशनम् ॥

இக்குணங்களையெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிற உண்மையில் வேறு எதுவுமன்று. இதை கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

### லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

**அபலா கல்பம்**

மாதவிடாய்க் காலத்தில் ஸ்திரீகளுக்குண்டாகும் "ப்ரதரம்" அல்லது "பெரும்பாடு" என்கிற ரத்தப்பெருக்கு, வெட்டைச் சூட்டினால் மர்ம ஸ்தானத்திலிருந்து வெண்மையான திரவப் பொருள் சிறுகச் சிறுக வெளிப்படுதல், கர்ப்பம் அடிக்கடி சிதறுண்டுபோதல் முதலிய கர்ப்பாசய சம்பந்தமான வியாதிகளை அறவே யொழிப்பதில் ஒப்புயர்வற்ற சக்தி வாய்ந்தது. 1 பாட்டில் விலை ரூ. 2 8 0

**ஸித்த கல்ப மகரத்வஜா**

நரம்புத்தளர்ச்சி, இளமைப்பருவத்திலுண்டான துர்பழக்கங்களினலேற்படும் அநேக விதமான வியாதிகள், வீர்யக் குறைவு, ஹிருதயத் துடிப்பு, இரத்தக் குறைவு, இரத்த அசுத்தம் முதலானவைகளுக்கு "அபாரசக்தி வாய்ந்த டானிக்" "ஸர்வரோக நிவாரிணி" என்று ஆயிரக்கணக்கான வைத்திய நிபுணர்களால் சென்ற 25 வருடங்களாகப் போற்றப்படுகிறது.

60 மாத்திரை ரூ. 10 30 மாத்திரை ரூ. 5

மதராஸ்

தபால் பெட்டி 151 ஆயுர்வேதிக் பார்மஸி, லிமிடெட் மதராஸ்


## விஷய அட்டவணை

OFFICE OF ... OF BOOKS 10 JUN 1939 MADRAS


| விஷயங்கள் | பக்கம் |
|---|---|
| 1. நவீனம் சிரோமணி வேங்கடாசார்யர் | 107 |
| 2. ஸ்ரீமத் இராமாயணம் [வெளியநல்லூர் திருமலை சங்கபுரம் ஸ்ரீனிவாஸ தாதம்.] | 110 |
| 3. கடோபநிஷத் விசாரம் [முன்தொடர்ச்சி.] | 114 |
| 4. சென்னையும் பசுவன்னையும் [பாவஸ்து ஸ்ரீனிவாஸதாஸ்.] | 119 |
| 5. 24 தருக்கள் [முன்தொடர்ச்சி.] | 124 |
| 6 கடிதங்கள் | 127 |
| 7. ஓர் ஸந்தேஹம் [ஸ்ரீ காஞ்சீ ஸ்ரீ. அண்ணங்கராசாரியர்.] | 128 |
| 8. புஸ்தக விமர்சம் | 129 |
| 9. விருத்தாந்தங்கள் | 130 |
| 10. யதிராஜஸப்ததி | 9-17 |
| 11. வேதாந்த ஸாரம் | 145 |



பண்டிட் நோரி ராமசாஸ்த்ரிகளின்

## க்ஷீரவர்த்தினி (ரெஜிஸ்டர்டு)

(தாய்ப்பாலை வ்ருத்தி செய்யும்)

தாய்களுக்கு ஓர் அருமையான டானிக். குழந்தைகளை ஈரல், குலைக்கட்டிகளினின்றும் காப்பாற்ற அவைகளைத் தாய்ப்பாலால் போஷிப்பது நல்லது.

புட்டி 1க்கு ரூ. 2-0-0

ஆயுர்வேத ரத்ன பண்டிட் நோரி ராமசாஸ்த்ரி A.K.A.C.

"ஆயுர்வேத நிலயம்"

பெஜவாடா. M.S.M.Ry.

| | |
|---|---|
| ந்யாய ஸித்தாஞ்ஜனம் வ்யாக்யானத்துடன் | ரூ. 5 0 0 |
| தத்வடீகை | ரூ. 5 0 0 |
| வேதார்த்த ஸங்க்ரஹம் தமிழ் உரையுடன் | ரூ. 3 0 0 |
| ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம், ஸ்ரீ ஸ்தவம் தமிழ் உரையுடன் | |
| ஸம்ப்ரதாய பரிசுத்தி வ்யாக்யானத்துடன் | ரூ. 1 0 0 |
| அபீதிஸ்தவம் தமிழ் உரையுடன் | ரூ. 1 0 0 |
| ஸ்ரீபாஷ்யம்—பத்து வியாக்கியானங்களுடன் | ரூ. 0 8 0 |
| முதல் வால்யூம் பைண்டு செய்தது | ரூ. 6 12 0 |
| ஷை 2வது வால்யூம் ” | ரூ. 6 12 0 |
| ஸ்ரீ தேசிகன் ஸ்தோத்திரங்கள் தேவநாகரத்தில் அச்சிட்டது | ரூ. 1 0 0 |

இன்னும் பல ஸம்ப்ரதாய புஸ்தகங்களும் ஸம்ஸ்கிருத புஸ்தகங்களும் வேதாந்த தீபிகை பழைய ஸம்புடங்களும் கிடைக்கும்.

Vedanta Dipika office

KRISHNAPURAM, KODAMBAKKAM POST, MADRAS.


श्रीः

श्रियै नमः

त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवरांबरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥

# ஸ்ரீ வேதாந்த தீபிகை


ஸம். 28. | பிரமாதி ஹு வைகாசி மீ 12உ 25-மே 1939 | ஸஞ். 5


## நவீநம் சிரோமணி வேங்கடாசார்யர்.

இந்த ஸ்வாமி மஹா வித்வான். ஸ்ரீமுஷ்ணத்தில் திருமலை நல்லான் சக்கிரவர்த்தி வம்சத்தில் உதித்தவர். தர்க்க சாஸ்திரத்தில் நவீநதர்க்கம் என்னும் ப்ராசீநதர்க்கம் என்னும் பிரிவு உண்டு. இவற்றில் நவீநம் மிகச் சிறந்தது. அதில் இவர் மஹா நிபுணர். ஆதலால் இவரை நவீநம் வெங்கடாசார்யர் என்று சொல்லுவது வழக்கம். தவிரவும், பற்பல ராஜ ஸபைகளில் சென்று சாஸ்திர விஷயமாய் சர்ச்சைகள் செய்து ஜயம் பெற்றவர். அத்தருணத்தில் இவருடைய பாண்டித்யத்தை மெச்சி இவருக்கு சிரோமணி என்ற பிருதத்தை பல பண்டிதர்கள் சேர்ந்து கொடுத்தனர். இந்த ஸ்வாமி ஏறக்குறைய 160 வருஷங்களுக்கு முன் எழுந்தருளி இருந்திருக்கக்கூடும். அதாவது இங்கிலீஷ் 18-வது நூற்றூண்டு இவருடைய காலமாயிருக்கலாம். இவரைப்பற்றின விருத்தாந்தங்கள் விரிவாய் காணப்படாவிட்டாலும் சில துண்டு விருத்தாந்தங்கள் வித்வான்களிடையில் வர்ணிக்கப்படுவதுண்டு. இவர் இளமையில் கல்வி கற்க திருக்குடந்தை சென்றூர். அங்கு பாட்டாசாரியர் வம்சத்தில் அவதரித்த ஸ்ரீவேதாந்தாசாரியர் என்ற ஒரு வித்வான் இருந்தார். அவர் சடமர்ஷண கோத்திரத்தில் சதுர்வேதி சதக்ரது என்று கொண்டாடப்பெற்ற விசிஷ்டபரமைகாந்தி வித்வத் வம்சத்தில் அவதரித்தவர். மஹா வித்வான். செல்வத்தால் மிகச் செழித்த குடும்பி. அவர் அநேக வித்யார்த்திகளுக்கு அந்நவஸ்த்ராதி ஸௌகர்யங்களைத் தந்து வித்யாப்ரவசநம் செய்துகொண்டிருப்பவர். இந்த வெங்கடாசாரியர் அவரிடத்தில் வித்யார்த்தியாக அமர்ந்தார். சில ஸ்ரீவைஷ்ணவ பரமைகாந்திகள் அகங்களில் அந்நபிக்ஷை வாங்கி ஆஹாரத்தைக் கழித்துக்கொண்டு குருகுலத்திலேயே ஆசார்யனுக்கு சுச்ரூஷை செய்துகொண்டு வித்யாக்ரஹணத்தில் மிக்க ஊக்கங் கொண்டவராயிருந்தார். 'விளையும் பயிர் முளையிலேயே

தெரியும்' என்ற பழமொழிக்கொப்ப, இவர் ஆலஸ்யமின்றி ஆசார்ய[illegible] வைபவத்தாலும் நிஷ்கபடமான குரு பக்தியாலும் நிரஹங்காரமாய் செய்யப்பட்ட குரு சுச்ரூஷா மஹிமையாலும் அதி சீக்கிர காலத்திலேயே ஆசார்யரிடமிருந்து ஸகல வித்யைகளையும் கற்றறிந்தார். நாளடைவில் இவருக்கு விவாஹ வயது ப்ராப்தமாயிற்று. அப்போதே ஆசார்யனாகிய வேதாந்தாசாரியருக்கும் விவாஹ வயதில் ஒரு கந்யாரத்னமிருந்தது. அவர் இந்த வெங்கடாசார்யரை தனக்கு மருமகனாக ஆக்க நிச்சயித்தார். கல்விச் செல்வத்தையே பெரிதாகக் கருதுவது அக்காலத்திய நாகரீகம். பணச் செல்வம் நீண்ட காலம் இருப்பது நிச்சயமில்லை. இக்காலத்தில் விவாஹ காலத்தில் மருமகனிடமிருக்கும் பணச் செல்வத்தைக் கண்டு ஸம்பந்தம் செய்த பெண்ணின் பெற்றோர் பிற்காலத்தில் பரிதவிப்பது ஸஹஜமாயிருக்கிறது. ஆழ்ந்த ஆலோசனைக்காரராகிய வேதாந்தாசாரியர் தனது மனதில் இந்த வரனை நிச்சயித்து விவாஹத்திற்கு முகூர்த்தம் வைத்தார். அவருடைய மனைவி மஹா ஸாத்வீ. பர்த்தாவுக்கு எதிரில் நின்று தைரியமாய் பேச அச்சப்படுவாள். விவாஹ கார்யங்கள் நடந்துகொண்டிருக்கும்போது தனது பர்த்தாவை தண்டனிட்டு வணக்கத்துடன் மணப்பிள்ளை யார்? எவ்விடத்தான்? என்று கேட்டாள். அதற்கு இவர் நற்குணங்கள் அனைத்தும் ஒன்றுகூடி ப்ரகாசிக்கும் ஒரு சிறுவனையே நிச்சயித்திருக்கிறேன். பின்னால் தெரியவரும் போ. கல்யாண கார்யங்கள் நடக்கட்டும் என்றார். அப்பெண்மணியும் மறுமொழி பேசாமல் கணவன் கட்டளைப்படி விவாஹ கார்யங்களைச் செய்துகொண்டிருந்தாள்.

முகூர்த்தம் ஸமீபித்தபோது, வெங்கடாசாரியருடைய பெற்றோர்களுக்கு விவாஹ வ்ருத்தாந்தம் அறிவிக்கப்பட்டது. அவரும் ஸந்தோஷத்துடன் ஸம்பந்தத்தை ஒப்புக்கொண்டு முகூர்த்தத்தின்போது வருவதாக பதில் அளித்தனர். வெங்கடாசாரியருக்கும் இச்செய்தி தெரியாது. அவர் வழக்கம் போலேயே குருசுச்ரூஷையையும் விசேஷித்து விவாஹத்துக்குத் தன்னால் செய்யக்கூடிய கார்யங்களையும் செய்து வந்தார். முகூர்த்தத்துக்கு முதல் தினம் வெங்கடாசார்யரை கூப்பிட்டு இன்றையதினம் முதல் நீ பிக்ஷைக்குப் போகவேண்டாம் நமது அகத்திலேயே சாப்பிடு என்று கட்டளையிட்டார். அன்று இரவு ஸம்பந்திகள் குடும்பத்துடன் வந்தனர். அப்போது பெண்ணின் தாய் பர்த்தாவிடம் சென்று இப்போதாவது மருமகன் இன்னான் என்று சொல்லலாகாதா? என்று வினவினாள். அதற்கு அவர் நமது சிஷ்யனான வெங்கடாசார்யன் என்று சொல்ல, அவள் முகத்தை



திருப்பிக்கொண்டு நன்றாயிருக்கிறது. வெகு அழகான ஸம்பந்தம் என்று
குறைகூறிக்கொண்டு சென்றனள். பொழுது விடிந்த பிறகுதான் வெங்க
டாசாரியருக்கு தனக்கு விவாஹம் எனத் தெரியவந்தது. முகூர்த்தம் தவ
றாமல் எல்லா வைதிக கிரியைகளும் ஒழுங்காய் ஸாங்கோபாங்கமாய் நடந்
தேறியன. ஆறு மாதங்களுக்குப் பின் தஞ்சாவூர் ராஜாவின் ஆதரவில்
ப்ரதி வருஷம் கூடுவதுபோல் ஒரு வித்வத் ஸபை கூடியது. அதற்கு வட
தேசத்திலிருந்து ராமருத்திரப்பட்டன் என்று பெயர்பூண்ட ஒரு மஹா
நையாயிகன் வந்தான். அவன் நவீநதர்க்கத்தில் மஹா நிபுணன். தக்ஷிண
தேசத்தில் இருக்கும் வித்வான்களுக்கு தர்க்கமே தெரியாது என்று
சொல்லுபவன். அப்போதிருந்த தஞ்சாவூர் மஹாராஜா ஸ்வதேசாபிமானம்
வாய்ந்தவன். நமது தேசத்து வித்வான்களைக் கொண்டு இந்த ராமருத்திர
பட்டனுடைய கர்வத்தை அடக்கவேணும் என்று எண்ணங்கொண்டான்.
இச்செய்தியை நாடெங்கும் ப்ரசுரப்படுத்தினான். விவாஹமானவுடன்
வேதாந்தாசார்யர் தனது மருமகனுக்கு ஸ்ரீஹயக்ரீவ மஹாமந்திரத்தை
உபதேசித்து இதை ப்ரதிதினம் ஆவ்ருத்தி செய்யும்படி கட்டளையிட்டார்.
அப்படியே ஆவ்ருத்தி செய்து வருகையில் வெங்கடாசார்யருடைய புத்தி
அதி தீக்ஷ்ணமாகி, शिक्षाधिक ग्राहिण: என்றபடி புதிது புதிதாய் நுட்பமான
விஷயங்கள் தோன்றத் தொடங்கின. அப்போது ஆசார்யன் வெங்கடா
சார்யரை அநுக்ரஹித்து வித்வத் ஸபைக்கு அனுப்பினார். ஏழு நாள் ராம
ருத்திரபட்டனோடு வாதம் நடந்தது. முடிவில் அவன் தோற்று வெங்க
டாசார்யரை மிகவும் கொண்டாடினான். அப்போது கூடியிருந்த வித்வான்
கள் அனைவரும் இவருக்கு சிரோமணி என்ற பிருதத்தை அளித்தனர்.
ராஜா அதிக ப்ரீதியும் பஹுமானமும் கொண்டவனாய் இவரை பல்லக்கில்
ஏற்றி அநேக வித்வான்கள் பரிவாரங்களுடன் செல்ல வீதி வலம் வரச்
செய்து, விசேஷ ஸம்மானம் அளித்து யானையின் மீது ஏற்றி ஸகல மரி
யாதைகளுடன் வீட்டுக்கு அனுப்பினான். கும்பகோணம் பாட்டராசார்
தெரு, தெருக் கோடியில் ஊர்வலம் வந்து கொண்டிருக்கும் மருமகனைக்
கண்ணுற்று மனமகிழ்ந்து வேதாந்தாசார்யர் தனது மனைவியை அழைத்து,
"முகத்தை திருப்பிக்கொண்டு போனாயே" இப்போது மருமகனைப் பார்
என்றார். அவளும் தனது பர்த்தாவினுடைய தூரதர்சித்துவத்துக்கு
மெச்சி மனமகிழ்ந்திருந்தாள். பின்பும் இந்த வெங்கடாசார்யர் திருக்
குடந்தையிலேயே ஸ்திரவாஸம் செய்து கொண்டிருந்தார். தனது ஆசார்
யனும் மாமனாருமான வேதாந்தாசார்யரிடத்தில் மிகுந்த ப்ரதிபத்தியுடன்
இருந்து ஆசார்யனைப் போலவே தானும் அநேக சிஷ்யர்களுக்கு வித்யா

ப்ரவசநம் செய்து கொண்டிருந்தார். இவரிடத்தில் வித்யாக்ரஹணம் செய்தவர்களுக்குள் நாவல்பாக்கம் பெரிய ஸ்வாமி என்ற ஸ்ரீ அண்ணயார்ய மஹா தேசிகனும் ஒருவர். அண்ணயார்ய மஹா தேசிகனுக்கு ஹயக்ரீவ மந்த்ரோபதேசம் இவரிடத்திலேயேயாயிற்று. இப்படி நவீநம் வெங்கடாசார்யர் அநேக வித்வான்களுக்கு உபகரித்துக் கொண்டு சிலகாலம் வசித்து அபர வயதில் திருக்குடந்தையிலிருந்தே திருநாட்டை அலங்கரித்ததாக கேட்டிருக்கிறோம்.

---

# ஸ்ரீமத் ராமாயணம்

வேளியநல்லூர் திருமலை சங்கபுரம் ஸ்ரீநிவாஸதாதம்

**वेदवेद्ये परे पुंसि जाते दशरथात्मजे ।**
**वेदः प्राचेतसादासीत् साक्षात् रामायणात्मना ॥**

ஸர்வோத்க்ருஷ்டங்களான கர்த்தா கதாநாயகன் இவைகளாலும் சிறந்த சப்தார்த்தங்களாலும் மேன்மை பெற்ற பிரபந்தம் யாவராலும் கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வித பிரபந்தங்களுள் மேன்மைபெற்றது ஸ்ரீமத் ராமாயணமாகும். இதற்குக் கர்த்தாவான ஸ்ரீவால்மீகி பகவான் மகா தபஸ்வீ. ஸ்ரீநாரத பகவானிடம் ஸ்ரீராமகதோபதேசம் பெற்றவர் ஸரஸ்வதீ வல்லபனான பிரம்மாவின் அனுக்கிரகத்தால் ஸ்ரீராமசரித ரகஸ்ய மறிந்தவர். மது மய பணிதிகளுக்கு மார்கதர்சீ என்று கொண்டாடப் பட்டவர். இதற்கு பிரதிபாத்யர்களான நாயகனும் நாயிகையுமோ நாராயணாவதாரமான ஸ்ரீராமபிரானும் லக்ஷ்மியின் அவதாரமான ஸீதாதேவியும். இந்த பிரபந்தமோ வாசிப்பவர்கட்கும் கேட்பவர்கட்கும் ஐஹிக ஆமுஷ்மிக ஸகல புருஷார்த்தங்களை யளிப்பதும் கவிலோகத்திற்கு எல்லாவிதத்திலும் உபஜீவ்யமாயும், ஸர்வதர்மோபதேசகமாயும் சரணாகதி வேதமென்று ஸர்வ ஆசார்யர்களால் கொண்டாடப்படுவதுமான த்வநிப்ரதானமான மகா காவ்யம். இதிலிருக்கும் வ்யங்க்யார்த்தங்களை வ்யாக்யானங்களிலும் அபயப்ரதானஸாரம் தனிச்லோகி முதலியவைகளிலும் நிரூபித்திருந்தும் ப்ரதிபாசாலிகளுக்கு புதிய புதிய வ்யங்க்யார்த்தம் இன்றைக்கும் தோன்றுகிறது. **'मतिक्षयान्निवर्तन्ते न गोविन्द गुणक्षयात्'** என்பதுபோல் இவ்விடத்திலும் புத்திக் குறைவு இருக்கக்கூடுமே யொழிய வ்யங்க்யார்த்தங்களுக்கு குறைவில்லை. வாசிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் அந்தந்த ப்ரகரணத்திற்கு தக்கபடி சித்தவிருத்தியை உண்டுபண்ணுவதில் நிகரற்றது. இப்படி அவாங்



மனஸ கோசரமான வைபவமுள்ள ஸ்ரீமத் ராமாயணத்தின் கதை புராணங்களிலும் மற்றும் பல காவ்யங்களிலும் பிரதிபாதிக்கப்பட்டு வருகிறது. ஆனால் அவைகளில் சிற்சில விடங்களில் கதாசரீரம் ஸ்ரீமத் ராமாயணத்திற்கு மாறுபட்டிருக்கிறது. தசரத சக்ரவர்த்தி ப்ராஜாபத்ய புருஷன் கொடுத்த பாயஸத்தை தன் பார்யைகளான கௌசல்யை சுமித்திரை கைகேயி இவர்களுக்கு முறையே பிரித்துக்கொடுத்து மறுபடியும் கொஞ்சம் சுமித்திரைக்கு கொடுத்ததாக ஸ்ரீராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது. பாத்ம புராணத்தில் தசரதன் கௌசல்யை கைகேயி இருவர்கட்கே நேரில் கொடுத்ததாயும் அவர்கள் தங்களுக்கு கிடைத்த அம்சத்தில் பாதியில் பாதியை சுமித்திரைக்கு கொடுத்ததாகவும் சொல்லியிருக்கிறது. இந்த விபாகமே ரகுவம்சம் போஜசம்பு இவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீராமயண வ்யாக்யாதாவான நாகேசர் புராணாந்தரத்திற்கனுகுணமாக ஸ்ரீராமாயண ச்லோகங்களுக்கு வ்யாக்யாநம் செய்து இருக்கிறார். கம்ப ராமாயணத்தில் கௌஸல்யை, கைகேயி, சுமித்திரை என்கிற க்ரமத்தில் மூவருக்கும் மீதியை சுமித்திரைக்கும் தசரதரே கொடுத்ததாக காணப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட பாயஸாம்சத்தில் தாரதம்யம் ஒவ்வொரு க்ரந்தத்திலும் வித்யாசப்படுகிறது. ஸ்ரீராமாயணம் பால காண்டத்தில் கௌதம முனிவர் இந்திரனும் தனது மனைவியான அகல்யையும் செய்த குற்றத்திற்காக இந்திரனை வ்ருஷணமில்லாதவனாகக் கடவாய் என்றும் அஹல்யையை காற்றை சாப்பிட்டும் அன்னபானாதிகள் இல்லாமலும் செய்த காரியத்திலனுதாபத்தினால் பீடிக்கப்பட்டும், சாம்பலில் படுத்தும், பிராணிகள் எல்லாவற்றிற்கும் பார்க்கக்கூடாமலும் இந்த ஆச்ரமத்தில் அநேக ஆயிர வருஷங்கள் வஸிக்கப் போகிறாய் என்றும் சபித்ததாக காணப்படுகிறது. பாத்ம புராணத்தில் **अहल्याख्या शिलाजज्ञे शतलिङ्गः कृतस्वराट्** என்கிற ச்லோகத்தில் அகல்யையை சிலையாகவும் இந்திரனை ஸஹஸ்ரலிங்கனாகவும் சபித்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது. அத்யாத்ம ராமாயணத்தில் இந்திர சாபம் பாத்ம புராணத்தில் போலவே யிருக்கிறது. ஸ்ரீதேசிகன், காளிதாஸன், கம்பர் முதலியோர் பாத்ம புராணப்ரக்கிரியையே அம்சமாகவும் பூர்ணமாகவும் தங்கள் க்ரந்தங்களில் அவலம்பித்தார்கள். ஸ்ரீராமாயண வ்யாக்யாதாவான நாகேசர் பாத்மபுராணத்திற்கனுகுணமாக அஹல்யா சாப வாக்யத்திற்கு வ்யாக்யானம் செய்துள்ளார். ஸ்ரீராமாயணத்தில் தாடகா வதம் யுக்தமென்பதற்குத் தகுந்த ப்ரமாணங்கள் கூறியிருப்பதாலும் கம்ப ராமாயணத்தில் வால்மீகி ராமாயணத்தை அனுசரித்தே தாடகாவதம் யுக்தமென்பதற்கு ப்ரமாணங்கள் காட்டியிருப்பதாலும் பிற்காலத்தியவர் சிலர்

தை இழிவாகக் கூறுவதற்கு ஆதாரமே கிடையாது. ஆரண்ய காண்டத்
ல் ஸ்ரீராமனுக்கும் கரனுக்கும் யுத்தம் நடக்கும்போது கரன் ஸ்ரீராமனு
டைய வில், பாணமிவைகளை தன் பாணங்களால் துண்டமாகச் செய்ததாக
ம் கவசத்தை யடித்துக் கீழே தள்ளியதாகவும் ஸ்ரீராமன் அகஸ்த்தியரால்
கொடுக்கப்பட்ட விஷ்ணு தநுஸ்ஸை எடுத்துக்கொண்டு யுத்தம் செய்த
ாகவும், கரன் தன் சரீரத்தில் பெருகும் ரத்தப் பிரவாகத்துடன், ஸ்ரீராமன்
ல்லைத்து பாணப் பிரயோகம் செய்ய இடமில்லாதபடி மிகவும் சமீபத்தில்
ர ஸ்ரீராமன் கொஞ்சம் பிந்தி போய் கரனை வதம் செய்ததாக எழுதப்பட்
ருக்கிறது. இவ்விடத்தில் அதிஸங்கட காலத்தில் வீரர்கள் கொஞ்சம்
ன் வாங்குவதுண்டு என்று வ்யாக்யதா எழுதியிருக்கிறார். 'अथवा प्रतिपक्षस्य
र्णयित्वा गुणानपि । तज्जया न्नायको त्कर्षवर्णनञ्च धिनोतिनः' என்று தண்டியாசி
யர் சொல்லியபடி ஸ்ரீராமனுடைய வில்லை யறுப்பது, அவரைப் பின் வாங்
ும்படி செய்வது இவைகளால் ஏற்பட்ட கரனுடைய உத்கர்ஷம் அவனை
ஜித்த ஸ்ரீராமனுடைய உத்கர்ஷத்திலேயே பர்யவஸிக்கிறது. ஸங்கல்ப
ஸூர்யோதயத்தில் சில அக்ஞர்கள் கரனோடு யுத்தத்தில் ஸ்ரீராமன் பின்வாங்
னதை தோஷமாகப் பெரியோர்களிடம் சொல்லுகிறார்களென்றும் உத்தர
ாமசரிதத்தில் இதை லவன் தோஷமாக சந்திரகேதுவினிடம் கூறியதாக
ம் எழுதப்பட்டிருக்கிறது. கம்பராமாயணத்தில் ஸ்ரீராமன்கரனோடு யுத்தம்
செய்யுங்காலத்தில் தன் வில்லை யிழுக்கும் பொழுது வில் இற்றுவிட்டதாக
வும் பின் பக்கம் திருக்கையை நீட்டும்பொழுது பரசுராம விஜயத்தில்
தனக்கு கிடைத்தும் வருணன் கையில் கொடுத்து வைக்கப்பட்டு மிருந்த
தான விஷ்ணு தனுஸ்ஸை வருணன் கொடுத்தாகவும் அதனால் கரனுடைய
ரதம், வலக்கை, உலக்கை இவைகளை நாசம் செய்து கரனை வதம் செய்த
தாகவும் கூறப்பட்டிருக்கின்றது. ஸ்ரீராமன் பின் எழுந்தருளின ப்ரஸ்தா
பம் இதில் கிடையாது. ஆரண்ய காண்டத்திலும் ஸுந்தரகாண்டத்திலும்
ராவணன் சீதாதேவியை எடுத்துப் போகும்போது அவன் காத்ரஸ்பர்சம்
ஏற்பட்டதாக கூறப்பட்டிருக்கிறது. இங்கு வ்யாக்யாதாவான மகேஸர்
நளகூபரன் வேதவதீ முதலியவர்கள் சாபமிருப்பதால் பலாத்காரமாக ராவ
ணனுக்கு பரதாரஸ்பர்சம் எப்படி கூடுமென்று ஆட்சேபித்துக்கொண்டு
ஸ்காந்தபுராண வசனத்தைப் பிரமாணமாகக் காண்பித்து ராவணன் சீதா
தேவியின் முழந்தாள் மயிர் இவைகளின் சாயையையே க்ரஹித்து சீதையை
எடுத்துக்கொண்டு போனதாக எழுதி இதற்கு அனுகுணமாக மூலத்திற்கு
அர்த்தம் எழுதியிருக்கிறார். கம்பராமாயணத்தில் சீதையிருந்த பூமியைப்
பெயர்த்து பூமியோடு சீதையைக் கொண்டு போனதாகச் சொல்லப்பட்



டிருக்கிறது. ஸ்ரீராமாயணத்தில் வாலி தன்னை வதம் செய்ததற்கு காரணம்
கேட்கும்போது ஸ்ரீராமன் வாலியைப் பார்த்து பரதசக்ரவர்த்தி ராஜ்யபரி
பாலனம் பண்ணிக்கொண்டிருப்பதாகவும், அவனுடைய உத்திரவுபடி
அதர்மம் செய்பவர்களைத் தான் சிக்ஷிப்பதாகவும் நீ சுக்ரீவன் பிழைத்திருக்
கிறான் என்று அறிந்திருந்தும் நாட்டுப் பெண்ணுக்கு சமமான தம்பி
பார்யையை பரிக்ரகித்தபடியாலும் சுக்ரீவன் சரணாகதிபண்ண அவனை
கிஷ்கிந்தைக்கு ராஜாவாகச் செய்வதாகப் பிரதிக்ஞை செய்தபடியாலும்,
நீ சாகாமிருகமானபடியாலும் நேரிலிருந்தே மிருகவேட்டையாடவேண்டு
மென்ற நிர்பந்தமில்லாதபடியாலும், மறைந்து அடித்ததாக பதிலளித்தார்.
உதாத்தராகவம் என்னும் நாடகத்தில் ஸ்ரீராமன் மறைந்திருந்து வாலி
வதம் செய்ததாகச் சொல்லப்படவில்லை. மகாவீர சரிதத்தில் வாலி ஸ்ரீராம
வதத்திற்கு வந்ததாகவும் ஸ்ரீராமனால் அவன் கொல்லப்பட்டதாகவும் கதை
மாற்றப்பட்டிருக்கிறது. உத்தரராமசரிதத்தில் லவன் சந்திரகேதுவைப்
பார்த்து வாலி வதத்தை இழிவாகப் பேசினதாகக் கூறப்பட்டிருக்கிறது.
ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் சில அக்ஞர்கள் வாலி வதத்தை ராமனுக்கு
ஓர் தூஷணமாக, பெரியோர்கள் முன்னிலையில் கூறுகின்றதாக அருளிச் செய்
யப்பட்டிருக்கிறது. ஸ்ரீகோவிந்தராஜர் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில்
காண்பிக்கப்பட்ட அபவாதத்திற்கு காரணமான மறைந்து அடித்தலை சக்த
ரான ஸ்ரீராமன் எதற்காகச் செய்தார் என்று ஆக்ஷேபித்துக்கொண்டு
ஸ்ரீராமன் வாலி முன்னிலையில் நின்றால் ஸ்ரீராமனுடைய ப்ரபாவம் வாலிக்
குத்தெரியுமானதால் வாலி வணங்கிவிடுவான். அப்பொழுது அவனுடைய
வதம் யுக்தமாகாது. சுக்ரீவனுக்கு பட்டாபிஷேகம் செய்விப்பதாகச்
செய்த பிரதிக்ஞைக்குக் குறைவு ஏற்படும். வாலியின் வழியாக வாலியின்
தோழனான ராவணனும் சரணாகதி பண்ணுவான். தேவதாசரணாகதிக்குப்
பலமான ராக்ஷஸவத ரூபகாரியத்திற்குக் குறைவு ஏற்படும். ஆகையால்
மறைந்து வாலியைக் கொன்றார் என்று சமாதான மெழுதியிருக்கிறார்.
இப்படி ராமாயணார்த்தமெல்லாம் ஸமஞ்ஜஸமாயிருக்க ரஸ பாதந்த்ரர்க
ளான அர்வாசீன கவிகள் ராமாயண கதையில் மேல்வாரியாகத் தோன்றும்
அனுபபத்தியைப் பரிகரிப்பதற்காக கல்பாந்தரீணபரமான புராணாந்தரத்தை
அனுசரித்தோ, ஸ்வதந்திரமாகவோ ஸ்ரீராமகதையை சில விடங்களில்
மாற்றியிருப்பதாகத் தெரிகிறது. த்வனிகாரர் முதலியோர், அர்வாசீன
கவிகள் இதிகாசார்த்தத்தை தன் காவியத்தில் பிரதிபாதிக்கும்போது ரஸா
னுகுணமான பாகத்தை விலக்கியோ, மாற்றியோ, எழுதவேணுமென்று
எழுதியிருக்கிறார்கள். அக்காரணத்தாலேயே மகாபாரதத்தில் துர்வாஸஸ்

சகுந்தலையை சபித்ததாகக் கதையில்லாமலிருந்தும் காளிதாஸன் கதாநாயகனான துஷ்யந்தன் புத்தி பூர்வகமாக சகுந்தலையை நிராகரித்ததாக எழுதினால் துஷ்யந்தனுடைய தீரோதாத்தபாவத்திற்கு விரோதம் வருமென்று நினைத்து துர்வாஸஸ்சாபத்தை கல்பித்தான் என்று சாகுந்தல வ்யாக்யாதாக்கள் எழுதியுள்ளார்கள். ஸ்ரீமத்ராமாயணமும் உண்மையான ஸ்ரீராமபிரானின் சரித்தை பிரதிபாதிக்கவே ஏற்பட்டது. அதிலிருக்கும் கதை கட்டுக்கதையில்லை. ஸ்ரீமத் ராமாயண கதையை பிற்பட்ட கவிகள் எவ்விதமெழுதினாலும் ராமாயண வ்யாக்யானங்கள் அபயப்பிரதானஸாரம். தனிச்லோகி முதலியவையை வாசிப்பவர்கட்கு அக் கதையில் எவ்வித அனுபபத்தியும் தோன்றாது. ஆகவே மகாமஹிமையுள்ள அக்கிரந்தத்தை குருமுகமாக உபதேசம் பெற்று பாராயணம் செய்து ஐஹிகாமுஷ்மிக சகல புருஷார்த்தங்களையும் அடைவோமாக!

---

# கடோபநிஷத் விசாரம்.

(முன் தொடர்ச்சி)

தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்.

இங்கு ஆரம்பத்திலேயே 'தம் துர்தர்சம் கூடமனுப்ரவிஷ்டம் குஹாஹிதம் (1—2—12) என்பதால் ஜீவனுடைய ஹ்ருதய குஹையிலிருப்பவனாக பரமாத்மாவை ப்ரஸ்தாபித்து 'அத்யாத்மயோகாதிகமேந தேவம் மத்வா' என்று 'ஜீவாத்ம விஜ்ஞாநத்தால் பரமாத்மத்யாநம் செய்து ஹர்ஷ சோகங்களைப் போக்கிக்கொள்கிறான்' என்று சொல்வதால் இந்த உபாஸ்யனான தேவதை உபாஸகனான ஜீவனைவிட வேறானவன் என்றும், மேல் 'ஆத்மாஸ்ய ஜந்தோர்நிஹிதோ குஹாயாம் (1—2--20) என்று ஜீவாத்மாவுக்கு அந்த உபாஸ்யன் அந்தர்யாமி யென்பதால் ஜீவாத்ம பரமாத்ம பேதம் தாத்விகமானது (உண்மையானது) என்றும் 'தாது: ப்ரஸாதாந்மஹிமாநமாத்மந:'='தனக்கு ஸர்வஜ்ஞத்வம் முதலிய மஹிமையைத் தரக்கூடிய பரமாத்மாவை அவருடைய அநுக்ரஹத்தால் காண்கிறான்' என்பதால் பகவதநுக்ரஹ மில்லாதவன் பரமாத்ம தத்வத்தை யறியமாட்டானென்றும், "யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: (1—2—33) இந்த பரமாத்மா எந்த உபாஸகனை வரிக்கிறானோ அவனால்தான் பகவான் அடையத்தக்கவன் என்றும் மறுபடி ஜீவ பரமாத்ம பேதமும், "ஸோऽத்வந: பாரமாப்நோதி தத்விஷ்ணோ: பரமம் பதம், (1—3—9) அந்த பரமாத்மா விஷ்ணுவென்றும் ஸம்ஸாரமார்க்கத்திற்கு அக்கரை யென்றும் சொல்வதால் அலனை இந்த ப்ரக்ருதி மண்டலம் தாண்டி தனியொரு தேச விசேஷம் சென்று அநுபவிப்பது தான் மோக்ஷமென்றும் சொல்லப்பட்டதாகிறது

இவ்வளவால் ஜீவப்ரஹ்மபேதந்தான் தாத்விக மானதென்றும் பேதம் கால்பநிகமென்றும் வாக்யார்த்தஜ்ஞானம் உபாயமென்றும் சுத்த ப்ரஹ்மமாகுகையே மோக்ஷமென்றும் அதற்கு தேசவிசேஷாபேக்ஷையும் கமநாபேக்ஷையு மில்லையென்றும் சொல்லும் வாதங்களெல்லாம் நிரஸ்தங்களாகின்றன வென்றும் அர்சிராதி மார்க்கத்தால் பரமபதம் சென்று இடைவிடாத பரிபூர்ண பகவதநுபவமே மோக்ஷமென்றும் இந்த கடோபநிஷத்தாலும் நிச்சயிக்கப்பட்டதாகிறது. ஸ்பஷ்டமாகவும் இவ்வுபநிஷத்தின் 6வது வல்லியின் "சதம் சைகா ச ஹ்ருதயஸ்ய நாட்யஸ்தாஸாம் மூர்தாநமபிநி:ஸ்ருதைகா தயோர்த்வமாயந்நம்ருதத்வமேதி விஷ்வங்ஙந்யா உத்க்ரமணே பவந்தி] 2—6—16) என்கிற மந்திரத்தால் 'ஹ்ருதயத்தின் ப்ரதான நாடிகள் 101 என்றும் அவைகளில் ஒன்றான ஸுஷும்னை என்ற நாடி தலையை பிளந்துகொண்டு மேலே செல்லுகிறது. அந்த நாடியின் வழியால் சென்றவன் மேல்லோகமாகிய பரமபதத்தை அடைந்து அமிருதனாகிறான். மற்ற நாடிகள் எல்லாம் இதைத்தவிற மற்ற விடங்களுக்குச் செல்ல வழியாயிருக்கின்றன' என்று மோக்ஷம் பெறுகிறவன் ஸுஷும்நா நாடியின் வழியாகக்கிளம்பி செல்லுகிறான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இதற்குமேல் மற்ற மூன்று வல்லிகளும் (4, 5, 6) இவ்வளவால் சொன்ன விஷயங்களையே திடப்படுத்துவதற்கும் சிற்சில விசேஷங்களையெடுத்துச்சொல்லி போஷிப்பதற்குமே ஏற்பட்டவையாகும்.

அவற்றில் நான்காவது வல்லியில் முதலிரண்டு மந்த்ரங்களால் 'இந்த்ரியங்கள் வெளி வஸ்துக்களைக் காட்டும் படிக்கே ஸ்ருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. அந்தராத்ம விஷயத்தில் செல்லுபவையல்ல. இருந்தும் ஒரு தீரன் விஷயங்களிலிருந்து இந்திரியங்களைத் திருப்பி அந்தராத்ம விஷயத்தில் முயற்சிக்கிறான் என்று சொல்லி மேல் (3,4-ல்) எந்த பரமாத்மாவின் அனுக்ரஹத்தால் தான் சக்ஷுராதி இந்திரியங்களெல்லாம் அவ்வோ விஷயங்களை க்ரஹிக்கின்றனவோ அதுவே கீழ் உபாஸ்யமாகச் சொன்ன விஷ்ணு ஸ்வரூப மென்றும், (5-ல்) ஜீவனையும் பரமாத்மாவையும் ஒரே ஹ்ருதய குஹையிலிருப்பவர்களாக உபாஸிப்பவன் பாபச்செயல் புரிந்தாலும் அவனை நிந்திக்கலாகாதென்று ப்ரஹ்மவித்தின் ப்ரபாவத்தைக் கூறிய,

(6-ல்) 'ப்ரஹ்மாவுக்கு அடியிலே வேதோபதேசம் செய்து அதன் மூலம் ஜகத்துக்கு முதல் ஆசார்யனானவர் அவரே என்றும், (7-ல்) அவரே ஜீவாத்மாக்களுக்கு அந்தர்யாமி என்றும். (8, 9-ல்) அக்னி ஸூர்யாதி ஸர்வ தேவர்களுக்கும் அந்தர்யாமி யென்றும், (10-ல்) அவரே 'அஹம்' என்கிற அநுஸந்தாநத்திற்கு முக்ய விஷயமென்றும், (11-ல்) அந்த பரமாத்மா பரிசுத்த மனதால் க்ருஹிக்கத்தக்கவரென்றும் (12-ல்) உபாஸக சரீரத்தின் நடுவில் அங்குஷ்ட பரிமாணத்துடன் கூடிய திவ்ய மங்கள விக்ரஹத்துடன் வஸிப்பதால் அவர் பரமகாருணிகனென்றும் (13-ல்) முக்காலத்திய வஸ்துக்களும் அந்த ப்ரஹ்மாத்மகமென்றும் சொல்லி அவருடைய ஸர்வாத்மத்வத்தை ஸ்திரப்படுத்தியிருக்கிறது.

ஐந்தாவது வல்லியில்—1-வது மந்த்ரத்தில் தேகாத்ம விவேகம் பிறந்து பகவதுபாஸநம் செய்கிறவன் தேகாநுபந்தியான துக்கங்களிலிருந்தும் ராகத்வேஷாதிகளிலிருந்தும் விடுபட்டு இங்கிருந்த நாள் ப்ராரப்த கர்மங்களை யநுபவித்துக் கழித்து அதன் அவஸாநத்தில் ஆத்யந்திக ப்ரக்ருதி ஸம்பந்தம் நீங்கி 1 முக்தனாகிறான். இந்த முக்தனும் ப்ரஹ்மாத்மகன் தான்' என்று சொல்லி (2-ல்) பகவானுடைய ஸர்வாத்மத்வத்தையே மற்றொரு விதத்தால் நிரூபித்தும், 3-ல்) அவரே ப்ராணாபாநங்களுக்கு நியந்தாவாயிருந்துகொண்டு ஹ்ருதய குஹையில் ஒரு சிறு பரிமாணமுள்ள விக்ரஹத்துடன் ஸாதுக்களுக்கு உபாஸ்யனாயிருக்கிறாரென்றும், (4-ல்) இப்படி பகவானை உபாஸிப்பவனுக்கு மோக்ஷம் பெற இந்த சரீரம் விடுமளவும் தான் விளம்பமென்றும்,(5-ல்) அவர் ஸர்வப்ராணிப்ராணநஹேதுவென்றும், (8-ல்) ஸ்வப்நத்தில் அவர்களுடைய கர்மாநுகுணமாக தத்தத்காலாநுபாவ்யமான பலவித வஸ்துக்களையும் ஸ்ருஷ்டிக்கிறவர் அவரே என்றும் ஸர்வ லோகமும் அவரையே ஆச்ரயித்திருக்கிறதென்றும் அவரே நிருபாதிக அம்ருதமென்றும், (8—10-ல்) பின் பகவான் எல்லா வஸ்துக்களிலும் அந்தர்யாமியா யிருக்கிறாரென்னு மம்சத்தை த்ருஷ்டாந்தங்களைக்கொண்டு உபபாத

1 இங்கு 'விமுக்தஶ்ச விமுச்யதே'(5-1) என்று 'இங்கு முக்தனாகவிருந்தே மறுபடி முக்தனாகிறான்' என்று இருவித முக்தியைச் சொல்லுகிறது ச்ருதி. உத்தர பூர்வாகங்களின் விச்லேஷத்தை சொல்லுகிறது முதல் முக்திபதம். தேஹாவஸாநத்தில் ஆத்யந்திகப்ரக்ருதிஸம்பந்த நிவ்ருத்தியைச் சொல்லுகிறது இரண்டாவது முக்தி பதம்' இதை ப்ரஹ்ம ஸூத்ரகாரர் 'உத்தரபூர்வாகயோரஶ்லேஷவிநாஶௌ தத்வ்யபதேஶாத்' என்ற ஸூத்ரத்தால்........... உபபாதநம் செய்திருக்கிறார்.



கம் செய்தும், (11-ல்) அவர் எல்லா வஸ்துக்களிலு மந்தர்யாமியா யிருந்தாலும் அவர்களுடைய தோஷங்கள் பரமாத்மாவிடம் ஸம்பந்தியாது என்பதை ஸூர்ய திருஷ்டாந்தத்தால் நிரூபித்துக் காட்டியும், (12-ல்) ஒருவராகவே ஜகத் முழுவதையும் தன் வசத்தில் வைத்துக்கொண்டு அவற்றிற்கு அந்தராத்மாவாயும் உபாதாந காரணமாயுமிருக்கும் பரமாத்மாவை தனக்கு அந்தராத்மாவென்று உபாஸிப்பவர்களுக்கே மோக்ஷ முண்டாகுமென்று காட்டியும், (13-ல்) நித்தியனான ஒரு சேதநன் நித்யமான அநேக சேதநர்களுக்கு அபேக்ஷிதங்களைக் கொடுக்கிறான் என்று அவரை அந்தர்யாமியாக உபாஸிக்கும் தீரர்களுக்கே சாச்வதமான ஸம்ஸார சாந்தியாகிற மோக்ஷமுண்டாகுமென்றும் சொல்லி, (15-ல்) கடைசி மந்த்ரத்தில் அவருக்கு ஆதித்ய வர்ண திவ்ய மங்கள விக்ரஹ யோகத்தைச் சொல்லி அந்த தேஜஸ் மற்ற எல்லா தேஜஸ்ஸையும் மறைக்கக் கூடியதென்றும் மற்ற தேஜஸ்ஸுகளுக்கு காரணபூதமென்றும் அவைகளுக்கு அநுக்ராஹக மாயிருக்கிறதென்றும் சொல்லிற்று.

ஆறும் வல்லியில் 1-வது மந்த்ரத்தால் பரமாத்மா ஹேயதர ஸமஸ்த வஸ்து விலக்ஷணமென்றும், (2, 3-ல்) இந்த்ர வாயு அக்னி ஸூர்யன் முதலிய ஸமஸ்த ப்ராணியும் இவரிட முண்டான பயத்தால் தான் தங்கள் தங்கள் கார்யத்தைச் செய்துவருவதாயும், (4-ல்) ப்ரஹ்மஜ்ஞாந மில்லாதவன் ஸம்ஸாரத்திற்கே ஆளாகிறானென்றும், (5-ல்) அந்த ப்ரஹ்மம் துர்போதமானதென்றும் சொல்லி (6-ல்) ப்ராணிகளிடம் காணப்படும் உத்பத்தி விநாசங்கள் சரீரத்திற்கு ஸம்பந்தப்பட்டவைகளே தவிர ஜ்ஞாநாகாரனான ஆத்மாவிடம் ஸம்பந்தப்பட்டவையல்ல வென்றறிந்து உபாஸநம் செய்தவன் ஸம்ஸாரத்தை யடையமாட்டானென்றும், (7- 8-ல்) முன்வசீகரணம் செய்ய வேண்டியவற்றில் பரம ப்ரதானமாகச் சொன்ன பரமாத்மாவையே மறுபடி அதே க்ரமத்தில் ப்ரஸ்தாவித்து அப்படியே அவனை வசீகரணம் செய்ய வேண்டும் (அதாவது அவனை சரணமடையவேண்டும்) என்றும் சொல்லி அந்த சரணாகதியின் பலமாக பரமாத்ம தத்வத்தை நன்கு உணர்ந்து உபாஸிப்பவன் அம்ருதனாகிறான் என்னும் சொல்லி, (9-ல்) அவருடைய ஸ்வரூபமோ விக்ரஹமோ நம்முடைய சக்ஷுராதிகளுக்கு எட்டாதென்றும் ஆகையால் அவரை கேவல பக்தியால் மட்டுமே அறியலாமென்றும், (10, 11-ல்) பாஹ்ய ஆந்தர இந்திரியங்களின் தாரணை (விஷயங்களில் செல்லாமல் நிறுத்துகை)யில் ஜாக்ரதையுடனிருக்கவேண்டுமென்றும் சொல்லி, (12-ல்) அவன் வாக்காலும் மனதாலும் கண்களாலும் அறிய முடியாதவன்

கேவலம் உபநிஷத்துகளில் அறியப்பட வேண்டியவன் என்றும் (13-ல்) உபநிஷத்துகள் மூலமறிந்து அதன்படி மநந நிதித்யாஸநங்கள் செய்தால் அந்த:கரணம் சுத்தமாகிறதென்றும், (14-ல்)மனதிலிருக்கும் லௌகிக விஷயப்பற்றுகள் எப்பொழுது விடுமோ அப்பொழுது இவன் அம்ருதனாகிறான். அதாவது உத்தர பூர்வாகங்களுடன் ஸம்பந்த மில்லாமல் இங்கேயே இந்த சரீரத்திலிருந்து கொண்டே ப்ரஹ்மாநுபவம் செய்யலாகிறான் என்றும், (15-ல்) மறுபடி இந்த அர்த்தத்தையே ஆதராதிசயத்தால் இரண்டாந்தரம் சொல்லி ஏதாவதநுசாஸநம் இவ்வளவுதான் சாஸ்த்ரம் விதிக்கக்கூடும்; இதற்குமேல் நடக்கவேண்டிய கார்யம் பகவததீனம் என்றும் சொல்லி (16-ல்) மூர்தந்ய நாடியின் வழியாக இந்த உபாஸகன் உத்க்ரமணம் செய்து (அர்சிராதி மார்க்கத்தால்) பரமபதத்தை யடைகிறான் என்றும் சொல்லி (17-ல்) அப்படிப்பட்ட பரமாத்மா ஸமஸ்த சேதநர்களுடைய வும் ஹ்ருதய குஹையிலிருப்பவன் என்பதை மறுபடி யநுவதித்து அவனை இதரசேதநவிலக்ஷணனாக அறியவேண்டுமென்றும், (18-ல்) இப்படி ம்ருத்யு தேவதையால் உபதேசிக்கப்பட்ட வித்யாஸ்வரூபத்தையும் யோகவிதியை யும் பெற்று அதன் மூலம் நசிகேதஸ் ப்ரஹ்மத்தை யடைந்து குணாஷ்டகம் ஆவிர்பவிக்கப் பெற்றவனானான் என்று சொல்லி மற்றவரும் இப்படி செய் தால் பரப்ரஹ்மத்தை யடைவார்கள் என்று பலச்ருதியுடன் சாஸ்த்ரத்தை முடித்திருக்கிறது.

இவ்வளவால் ஸ்வர்க்கம் முதலிய நச்வர புருஷார்த்தங்களில் விரக்தனான நசிகேதஸ்ஸுக்கு தத்வோபதேசம் செய்ய ஆரம்பித்த இந்த கடோபநிஷத்தில் முதலில் உபாஸகனுடைய ஹ்ருதய குஹையில் அங்குஷ்ட பரிமித விக்ரஹத்துடன் ஒரு வஸ்துவை நிர்தேசித்தும், அதையே விஷ்ணுவென்று குறிப்பிட்டும், அவர் காலத்ரயவர்தி பதார்த்தங்களுக்கும் நிருபாதிகமான ஈசானனென்றும், 1 ஸந்த்யாதி கரணத்தில் சொன்னபடி ஸ்வப்ந பதார்த்தங்களை ஸ்ருஷ்டிக்கிறவரும் அவரே என்றும், அவரை நிருபாதிக அம்ருத சப்தத்தால் நிர்தேசித்து அவரை அந்தர்யாமியாக உபாஸிப்பவர்கள் தான் மோக்ஷம் பெறுவார்களென்று அநேகம் தரம் ஆவ்ருத்தி செய்தும் நித்யனான ஒரு சேதனன் நித்யர்களான அநேக சேதநர்களின் காமத்தை பூர்த்தி செய்கிறான் என்றும், அவருடைய திவ்யமங்கள விக்ரஹம் ஸர்வலௌகிக தேஜஸ்ஸையும் அதிசயித்த தேஜஸ் வாய்ந்ததென்றும், அவர் பரிசுத்த மனதால் க்ராஹ்யரென்றும், லௌகிக விஷயமான காமங்கள் மனதிலிருந்து நிவ்ருத்த

1 ப்ரஹ்மஸூத்ரம் 3-2-1.



மானதுமே இவன் அம்ருதந்தான் (அம்ருத ப்ராயன்) என்றும், பின் மூர்தந்ய நாடியின் வழியால் பரமபதமடைந்து முக்தனாகிறான் என்றும் சொல்லி கடைசியில் அங்குஷ்ட பரிமிதனான பரமாத்மாவை ஸமஸ்த சேதநவிலக்ஷணமாக த்யானிக்க வேண்டுமென்றும் சொல்லி சாஸ்திரத்தை முடித்திருப்பதால் ஜீவேச்வரபேதம் ப்ராமாணிகம் (தாத்விகம்) என்றும், விஷ்ணுவே பரப்ரஹ்ம மென்றும், அவருடைய உபாஸநமே மோக்ஷோபாயமென்றும், அர்சிராதி மார்க்கத்தால் பரமபதம் சென்று அவரை யநுபவித்தலே மோக்ஷமென்றும் நிர்தாரித மாகிறபடியால் ஜீவப்ரஹ்மாபேதம் உண்மையானதென்றும், பேதம் கல்பிதமென்றும், வாக்யார்த்த ஜ்ஞாநமே உபாயமென்றும், நிர்குண ப்ரஹ்மமாகுகைதான் ஸரியான மோக்ஷமென்றும், அதற்கு கமனாபேக்ஷயில்லை யென்றும், மூர்தந்ய நாடியின் வழியால் பரமபதமடைதல் ஆத்யந்திக மோக்ஷ மல்லவென்றும் சொல்லும் வாதங்களெல்லாம் இந்த கடோபநிஷத்தால் நன்கு நிரஸ்தங்களாகின்றன.

“ஸாராஸார விவேகஜ்ஞா கரீயாம்ஸோ விமத்ஸரா: ।
ப்ரமாணதந்த்ரா: ஸந்தீதி” ப்ரயத்நோ(அ)யம் க்ருத: ॥
ருக்ஷ்நர ஸிம்ஹம் ஜிஹ்வாக்ர ராஜாம்ஸ்ரீ வேணுநா ।
வேதாந்தாசார்ய வர்யேண கம்பவஸ்ரீ விஹாரிணா ॥

---

# சென்னையும் பசுவன்னையும்

பரவஸ்து ஸ்ரீநிவாஸதாஸ:-

சென்னைமாநகரில் செல்வம் நிறைந்த ப்ரமுகர்கள் பலருளர். இவர்களில் சிலர் சிறந்த தார்மீகர்களாயும் இருக்கின்றனர். இவர்கள் கவனத்திற்கு ஓர் சிறிய பெரிய விஷயத்தை விண்ணப்பம் செய்து கொடுக்கிறோம்.

நம் பாரத வர்ஷத்தில் (இந்தியாவில்) பாராட்டுவதற்குரிய பல வஸ்துக்களில் பெருமை பெற்றது பசுவாகும். நம் முன்னோர்கள் இதை தெய்வங்கள் நிறைந்த ஓர் கோவில் என்பர். ஏனெனில் இதன் அங்கங்களில் பதினான்கு உலகங்களும் இருப்பதாயும், இதை தானம் செய்தால் எல்லாப் பாவங்கள் தீர்ந்து விடுவதாயும், விஷ்ணு, ருத்ரன், பிரமன் முதலான தேவர்கள் இதன் சரீரத்தில் ஓரோரிடத்தில் வசிப்பதாயும் ஸாக்ஷாத் லக்ஷ்மீதேவி இதன் பின்பக்கத்தில் ஸாந்நித்யம் செய்வதாயும் முதுநூல்கள் மொழிகின்றன. ஆலயங்களில் தினந்தோறும் காலையில் ஸ்வாமி

ஸேவைக்கு ஸேவார்த்திகள் காத்திருக்க, இப்பசுவை ஸ்வாமிக்கு முன் திருப்பிநிறுத்தி கோவில் கதவைத் திறந்து, தெய்வத்திற்கே தர்சனம் செய்து வைக்கிறார்கள். சுபவஸ்துக்களில் இதுவே முக்யமென்பது இதனால் புலப்படுகின்றது. பசுவென்னும் பதத்தை திருப்பினால் சுபமான தால் இதன் பொருளான பசுவையும் திருப்பி வைக்கிறார்கள் போலும். இதன் பெருமையைப் பற்றி ஓர் சிறு கதையுண்டு. பிரமதேவன் ஓர் அழகிய அகல்யை என்றும் பெண்ணைப் பெற்று உலகம் முழுதும் வலம் வந்தவருக்கு கொடுப்பதாய் சொல்ல, இந்திரன் ஐராவதத்தில் ஏறிக் கொண்டு உலகம் வலம் செய்யச் செல்ல, ஸ்ரீ நாரத பகவான் கௌதமர் என்னும் பிரமசாரியை பிரசவிக்கும் பசுவை பிரதக்ஷணம் செய்வித்து வலவைரிவலம் செய்து வருவதற்கு முன்னமே அகல்யையை மணம் செய்வித்தார். இதனால் பசுவை பிரதக்ஷணம் செய்தால் பூப்பிரதக்ஷணத்தின் பயனை அளிக்குமென்பது தெளிவாகின்றது. பசுவை வலம் செய்யாது சென்ற திலீபமகாராஜன் பிள்ளைப் பேறின்றி வருந்தி வஸிஷ்டரின் உபதேசத்தினால் பசுவை பூஜித்து ரகுமஹாராஜனைப் பெற்றானென்று ப்ரஸித்தம். இப்படிப் பல பழங்கதைகளுண்டு. முன் காலத்தில் அரசர்கள் அந்தணர்களுக்கு நூற்றுக் கணக்கான பசுக்களைக் கொடுத்துப் புண்ணிய சாலிகளாகப் பரலோகத்தில் விளங்குகிறார்களென்பதை புராணங்களில் காணலாம். தம் வாழ் நாட்களில் ஒரு கோதானத்தையாவது செய்யாதவனைக் கண்டால் கண்களை மூடிக்கொள்ளவேணு மென்று முது மொழி கூறுகின்றது. ஸமீபகாலத்திலும் கிராமங்களில் பசுக்கள் நிறைந்திருந்தால் அவர்கள் செய்யும் வைதீக காரியங்களுக் குறிய பால் தயிர் நெய் சுலபமாய் கிடைக்கவும் அதனால் வைதிக கர்மாக்கள் செவ்வனே நடந்து இவ்வுலகத்திற்கும் அவ்வுலகத்திற்கும் கூட நன்மையை நவில்கின்றன வென்றால் இப் பசுவின் பெருமை அளவு கடந்த தென்றோ ஆகையால் தான் (கோப்ராமணேப்யச் சுபமஸ்து நித்யம்) பசுக்களுக்கும் பிராம்மணர்களுக்கும் என்றும் க்ஷேமம் உண்டாகவேண்டு மென்றும் அனுதினமும் அனுஸந்திக்கிறார்கள். பஞ்சகவ்ய மென்ற பசுவின் (பால், தயிர், நெய், நீர், சாணம்) பரமபாவனமான பதார்த்தங்களை மந்த்ரங்களால் கலந்து உட்கொள்பவருக்கு பல பாவங்கள் பறக்கின்றன என்று நம்பி இப்பொழுதும் சிலர் இதைச் செய்கிறார்கள். இப்பசுக்கள் ஈன்ற வலிமையுள்ள காளைக் கன்றுகள் "உழுதுண்டு வாழ்பவரே வாழ்பவர் மற்றவரைத் தொழுதுண்டு பின் செல்பவர்" என்றபடி உலகம் பிழைக்கும் படியான வ்யவசாயம் என்ற தொழிலுக்கு இன்றியமையாத கருவியாயிருக்கின்றன. இவைகள்



1584

டலகத்திற்கு உழுது உழைத்து உணவுகளை உத...வர்களுக்கு உதவுந் தட்டைகளை (வைக்கோலை)க் கொண்டு வயிறு நிர...க் ...ன்றன. மிக்க வேலைசெய்பவனை மாடாய் உழைக்கின்றானென்றும் சொல்வதுண்டு. ஸாதுவாயிருப்பவனை சாந்த குணமுள்ள பசுவாகவும் பணிப்பார்கள். இவைகளால் இவ்வாறு உலகத்திற்கு உபயோகமிருக்க இவைகளின் வம்சம் வளரவொட்டாமல் இவைகளைக் கொன்று தின்னும் ஜாதியினர் பிரதேசத்திலும் என்னம் தேசத்திலுமுள்ளனர். இப் பசு வதை கூடாதென்று வட இந்தியாவில் பிரமுகர்கள் பெரிதும் போராடுகின்றனர். சில தார்மிகர்கள் பல விடங்களில் கோஸம்ரக்ஷண ஸபைகளை ஸ்தாபித்து வயது சென்ற பசுக்கள் முதலிய மிருகங்களை பரிபாலிக்கின்றனர் நம் சென்னையில்கூட பெரம்பூரில் அவர்களால் கோஸம்ரக்ஷண சாலை யொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தென் இந்தியாவில் இப் பசுக்களைப் பற்றியவரை சிறிதும் கவனம் செலுத்தப்படவில்லை. இது மட்டிலுமல்ல. இந்துக்களென்று பெயர் வைத்துக் கொண்டு இவைகளை தீவாந்திரத்திற்கு அங்குள்ளவர்களின் உணவிற்காக கப்பலில் ஏற்றுகிறார்களாம். இச் சென்னையிலேயே பசுக்கள் காளைகள் ஆஹாரத்திற்காக ஸம்ஹாரம் செய்யப்படுவதாய் கேள்விப்படுகிறோம். இவை எல்லாம் ஒருபுற மிருக்க சென்னையில் பால்காரர்கள் என்று பெயருள்ள பல ஜாதியர் (பஞ்சமர் உள்பட) காலையும், மாலையிலும் பசுக்களை ஓட்டிக்கொண்டு பிரபுக்கள் வீடு சென்று அவர்களுக்கு வேண்டிய அளவு பால் கறந்து கொடுத்துப் பிழைக்கின்றனர். இதில் பசுக்களுக்கும் கன்றுகளுக்கும் பல தீங்குகளை இழைக்கின்றனர். இதில் நடக்கும் கொடுமையை நாவால் சொல்ல இயலாது. மலைபோல் இருக்கும் பசுக்களை பெரும் விலைக்கு வாங்கி அவைகளுக்குப் போதுமான தீனி வைக்க சிலவதிகமாவதாலும், பணத்திலுள்ள பேராசையாலும் கன்றுகளுக்கு அவைகளைப் பெற்ற தாய் பசுவின் பாலைச் சிறிதும் விட மனமில்லாமல் முழுவதும் கறந்து விடுகிறார்கள். இதனால் ஆனைபோலாகும் பசுக்கன்றுகள் பூனைபோலாகி தாயுடன் பின் செல்லவும் சக்தியற்றவைகளாகின்றன. ஆஸ்திக பாவனை பண்ணும் சிலர் நிர்பந்தத்திற்காக இக்கன்றுகளை கொண்டுபோக வேண்டியிருப்பதால் இவைகளை அடித்தோட்டியும், இழுத்தும், தூக்கியும் செல்கிறார்கள். ஆனால் பால் கறக்கு முன் இவைகளை ஊட்ட விடுவதில்லை, கறந்த பின் இவைகள் ஊட்டுவதில்லை பசுவின் முன் காலில் கட்டிவிட்டு கன்று ஊட்டுகிறதென்று தாய் நினைக்கும்படி ஒருவன் மறைத்துக் கொண்டு நிற்கவும், மற்றொருவன் சிறிது

[illegible] செய்து கன்றிற்குத் துளியும் சேவ்
ஸோம் மடியை உருவி [illegible]
[illegible]

[illegible] வீட்டுக்காரர்களுக்கு வேண்டியவரை [illegible] வேண்டு
யதாகையால் இப்படிச் செய்யவேண்டியதா யிருக்கிறது. சிறிது குறைந்த
விட்டால் அப்பசுவை கறப்பவர் கயிற்றினல் வயிற்றிலடிக்கிருர்கள்
அந்தோ! பாவம்!! அவைகள் என்ன செய்யும். அம்மா! அம்மா
என்று கதறுகின்றன. தாய் பசுக்கள் கறக்கும் போது கன்றுகள் பக்க
திலுள்ள எச்சில் தொட்டிகளில் பசிக் கொடுமையால் ஏதோ அகப்பட்ட
வைகளைத் தின்று ஜீவிக்கின்றன. ஊட்டுவதையே அறியாத இக்கன்றுகளே
பால் அதிகம் வேண்டும் போது பசுவின் மடியின் அருகில் இழுத்து வந்
நிறுத்தி ஊட்டும் பாவனையாக முகத்தை ஆட்டியும் முன்போல் உருவி
சுறந்த பாலைக் கறக்கிருர்கள். இவர்களின் சூதை அறியாத ஏழைப் பசு
களின் கன்றுகளிடமுள்ள அன்பன்ருே மறுபடியும் பாலாக பரிணமி
கின்றது. அநேகமாய் ஆகாரமில்லாமல் இக் கன்றுகள் இறந்துவிடவு
அதன் தோலில் வைக்கோலை அடைத்து அப் பசுக்களின் முன் போட்
விட்டு பால்கறக்கிருர்கள். தோல் கன்றுகளை நக்கிக்கொண்டே சுறக்கு
சுறபிகளைப் பார்த்தால் கன்றுகளிடம் அவைகளுக்குள்ள அன்பின் பெ
க்கை கண்கூடாகக் காணலாம்; இப்படி இருக்கும் அன்பைத்தான் இ
படியில் வாத்ஸல்ய மென்று சொல்வது வழக்கம். கடவுளுக்கு அடியா
களிடமிருக்கும் ஆதரத்திற்கு இதைத் தான் உதாஹரணம் காட்டு
ருர்கள். இத்தகைய பசுக்களையும் கன்றுகளையும் படாதன படுத்துவதை
கண்டுவைத்தும், சிறிதும் கவனியாது இருப்பது தார்மிகர் வாய்ந்த இந்
இந்து தேசத்திலிருப்பவர்களுக்கு இழிவன்ருே? தன் கன்றுகளுக்கு
சிறிய அளவும் சேராத அப் பசுவின் பாலைக் கொண்டே நாமும் நம்குழ
தைகளும் பிழைக்கிருேம். உலகிற்கு உழைக்கும் இப்பசுவின் கன்
களான காளைகள் நவதான்யங்களையும் நம் சரீரபுஷ்டிக்கு வேண்டிய அள
கொடுக்கச் செய்தேயும் நாம் இப்படி இரண்டு வேளையும் அவைகளி
தாய்ப் பாலை கொள்ளை கொண்டோமானல் இது தர்மமா?

முப்பது வருஷங்களுக்கு முன்வரை கிருமங்களில் பசுக்கள் பல வை
திருப்பவரும் தனிப்பாலும், காபியும், சாப்பிடுவதில்லை. குழந்தைகளுக்
தாய்மார்களிடம் வேண்டிய அளவு பால் இருந்தால் இது தேவையில்
இக்காலத்திலோ கன்றுகளுக்குத் துரோகம் செய்து பாலை அருந்துவதில
தாய்மார்களும் குழந்தைகளை போஷிக்க விரகற்றவர்களாய் பால் பு



சம்பாதிக்கிருர்கள்.
ாக் கொடுத்துக் குலைக்கட்டிகளை குழந்தைகளுக்கு
நஷர்களும் பெண்களும் பெரிதும் பாலைக் காபியில் கலந்து பருகுவதால்
ற்காலத்தில் ஓர் சுறுசுறுப்பை அடைந்தாலும் மற்ற ஆகாரங்களில் அரு
றுப்பு அடைவது ஸகஜமாகின்றது. இப்படி தம்மையும், பரம பாவன
ர்த்திகளான பசுக்களையும் கன்றுகளையும் கெடுத்துக் கொள்வதிலும்
ரிய சிறுத்தனம் வேறுண்டோ? வேண்டுமானல் இரவில் மட்டிலும்
ஹாரத்திற்கு பின்பு சிறிது பாலை உண்டுபடுத்துக் கொள்ளட்டும். அதி
ாலையில் ஆவின்பாலை உண்டு ஆகாரத்தில் அபேக்ஷையின்றி 10 மணிக்குள்
பாஜனம் செய்தோமென்று பெயர் பெறுவதில் என்ன லாபம்? ஆகை
ால் காலையில் பாலை கன்றுகளுக்கு விட்டு மாலைப் பாலை மட்டிலும் உப
யாகித்தால் ஒருவாறு இக் கஷ்டங்கள் குறையும். அல்லது பசுக்களை வீட்டி
லேயே வளர்த்து கன்றுகளுக்கு பாதியும் உங்களுக்குப் பாதியுமாக உபயோ
த்தால் ஓர் உபாதியுமில்லை. கன்றுகள் வாய் வைக்காது கறந்த பாலை
அருந்துவது பெரும் பாவமாக பழய நூல்கள் பணிக்கின்றன. எரு
மைத் தயிரை நிறுத்தி பசுவின் பாலை தோய்த்து, மோர் செய்து, அருந்து
வது ஆரோக்கிய மென்று மேனுட்டு வைத்தியரும் சொல்லுகிருர்களாமே.
நம் ராஜப்ரதிநிதி இப் பசுக்களைப்பற்றி, கவனிக்கிருர் என்பதைக் கேட்க
மிக்க சந்தோஷிக்கிருேம். தர்ம விருத்தமான பல சட்டங்களைத் தடுத்து
இதைப் பற்றிய சட்டதிட்டத்தை ஷை ராஜப்ரதி நிதியும் மற்ற தார்மிகர்
களும் ஏற்படுத்தினல் நம் நாடு செழிக்கும் கடவுளே கோபாலனக வந்து
கானகமெல்லாம் திரிந்து கரிய திருமேனி வாடஆநிரை மேய்த்தானென்ருல்
இதன் பெருமையைப் பேச யாராலாகும்?

# 24 குருக்கள்.

(முன்தொடர்ச்சி)

4. அடியில்கண்ட குணங்களை ஜலத்திலிருந்து கற்றுக்கொள்ளவேண்டும். இயற்கையில் அழுக்கற்று இருத்தல்—ஸர்வப்ராணிகளிடத்தும் ஸ்னேஹம். அனைவருக்கும் இன்பம் தருதல். தன்னை ஸேவிப்பவருக்கு சுத்தியைத் தருதல்.

**5வது ஆசார்யன் அக்னி:—**

விசேஷமான ஞானத்தால் தேஜஸ்வியாகப்ரகாசித்தல். தவம் செய்வதில் பிறரால் கலக்கமுடியாத தீவ்ரமான ஊக்கம். தனது வயிற்றையே பாத்திரமாக வைத்துக்கொள்ளுதல் அதாவது, தன்னுடைய உபயோகத்திற்கு வேண்டிய அளவுபோக ஏராளமான திரவ்யங்களை சம்பாதிக்காமல் கிடைத்ததில் திருப்தி பெருதல். தனக்கு கிடைத்த ஆஹாரத்தை உயர்வு தாழ்வு பாராமல் சாப்பிடல். எல்லாவற்றையும் சாப்பிட்டாலும் மனதில் களங்க மற்றிருக்கை. தன்னுடைய மகிமை சில ஸமயத்தில் மறைந்தும், சில ஸமயத்தில் வெளியிட்டும், நன்மையை விரும்புமவரால் உபாஸிக்கப்படுகையும்; தன்னை ஸேவிப்பவரின் பாவங்களை போக்குகை.

**6-வது ஆசார்யன் சந்திரன் :—**

சந்திரனுடைய கலைகள் ஏறியும் இரங்கியும் காணப்படுவதுபோல் பிறப்பு இறப்பு முதலிய விகாரங்கள் சரீரத்திற்கு ஸ்வபாவ சித்தமானவை. ஆனால் இவ்விகாரங்கள் ஆத்மாவை பற்றியவை அல்ல. இந்த பொருள் ஜலத்திலும் அக்னியிலும் உண்டு. ஜலப்ரவாஹம் காலத்தைப்பற்றியது. அக்னியின் ஜ்வாலையும் அக்னிக்கு இருப்பிடமான விறகு கட்டையின் ஸ்வரூபத்தைப் பற்றியது. அக்னி எங்கும் எப்பொழுதும் ஏகரூபம். அப்படியே ஆத்மாவும்.

**7-வது ஆசார்யன் சூர்யன் :—**

சூர்யன் தன் கிரணங்களால் ஜலத்தை எடுத்து மறுபடியும் அபேக்ஷிப்பவர்களுக்கு கொடுக்கிறான். அப்படியே மனிதர்களும் யோக்கியமான வஸ்துக்களை ஸம்பாதித்து பிறர்க்கு உபயோகப்படுத்த வேண்டும். அவ்வஸ்துக்களில் நசை அற்று இருக்கவேண்டும். மேலும் சூர்யன் கண்ணாடியிலும் ஜலம் முதலியவற்றிலும் ப்ரதிபிம்பமாகத் தோன்றும்போது அவ்வோ வஸ்துக்களின் ஸ்வபாவம் தன்னிடம் தட்டாமல் நிற்பதுபோல் நாமும் ப்ரகிருதியின் குணங்கள் நம்மிடத்தில் தட்டாமல் சுத்தமாக பாவிக்க வேண்டும்.



**8-வது ஆசார்யன் கபோதம் (புறா) :—**

குடும்ப வாழ்கையில் புத்திரமித்திரகளத்ராதிகளிலும் க்ருஹ க்ஷேத்திர ஆராமாதிகளிலும் அதிக பற்றுவைக்காமல் இருக்கவேண்டும். இல்லையேல் குடும்பத்தில் அதிக ஆசை கொண்ட ஒரு புறாவைப்போல் கஷ்டத்திற்குள்ளாவோம். ஒரு கூட்டில் ஒரு புறா ஒரு மரத்தில் கூடு கட்டி பெண் புறாவுடன் அனேகவருடங்கள் இன்பமுற வாழ்ந்து வந்தது. ஆண் பெண் இவ்விரண்டிற்கும் காலக்ரமத்தில் அதிக நட்பு உண்டாயிற்று. சிலகாலம் கழிய பெண்புறா அனேக குஞ்சுகளை பெற்றது. இப்படி அனேக காலம் வாழ்ந்தபின் ஒருநாள் ஒரு வேடனின் வலையில் சிக்கிக்கொண்ட தனது மனைவி, குஞ்சுகள், எல்லாவற்றையும் பார்த்து ஆண்புறா துக்கம் தாங்கமுடியாமல் தானும் வலையில் விழுந்து ஸகுடும்பமாக அவ்வேடனுக்கு இரையாயிற்று. அப்படி குடும்பத்தில் அதிக பற்று உள்ளவன் கதியும் இதுவே.

**9-வது ஆசார்யன் அஜகரம் (மலைப்பாம்பு) :—**

மலைப்பாம்பு ஒருவித ப்ரயத்னமின்றி தெய்வச்செயலால் கிடைத்த ஆஹாரத்தால் ஜீவிக்கிறது. மனிதனுக்கு துக்கம் விரும்பாமலே வருகிறது போல் சுகமும் வரும். துக்கத்தை விரும்பாமல் இருப்பதுபோல் ஸுகத்தையும் விரும்பவேண்டியதில்லை. தானாகவே கிடைத்த ஆஹாரம் கொஞ்சமானாலும் பூர்ணமானாலும் அதில் திருப்தி கொள்ளவேண்டும்.

**10வ-து ஆசார்யன் ஸமுத்திரம் :—**

மனதில் தெளிவும் இதரர்களால் அளவிடமுடியாத ஆழமும் குறைவிலும் நிறைவிலும் விசாரமின்றி இருப்பதை ஸமுத்திரத்திலிருந்து கற்றுக் கொள்ளவேண்டும்.

**11-வது ஆசார்யன் விளக்கு வெட்டுக்கிளி :—**

ஈச்வரசிருஷ்டியில் நம்முடைய மனதைக் கலக்குவதற்காக ஏற்பட்ட பெண்கள் தனம், வஸ்திரம், ஆபரணம் முதலிய பொருட்களில், ஆசை

கொண்டால் விளக்கின் ஒளியைக் கண்டு அதில் விழுந்து மாண்டுபோகும் ஒருவித பூச்சியைப்போல் நம்முடைய கதியும் ஆகும்.

**13-வது ஆசார்யன் மதுகரம் (வண்டு) :—**

ஒவ்வொருமனிதனும் நமது தேஹத்தை உயிரோடு இருக்கச் செய்வதற்கு எது இன்றிஅமையாததோ அவ்வளவு மட்டில் தன்னுடைய ப்ரயத்நத்தைக்காட்டி மிகுதியில் ப்ரயத்னமின்றி ஓய்ந்து விடவேண்டும். ஒரு வண்டு தன்னுடைய பசிதீரும் வரை ஆஹாரத்தை உட்கொண்டு பசி தீர்ந்தவுடன் விசாரமற்று திரிவதை காண்கிறோம். ஆஹாரத்தைத் தேடுவதிலும் ஓர் இடத்திலேயே மேன்மேலும் ஸம்பாதிக்காமல் ஒவ்வொரு இடத்திலேயே மேன்மேலும் ஸம்பாதிக்காமல் ஒவ்வொருவிடத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக ஸம்பாதிக்க வேண்டும். அப்படியே சிறிதாயினும் பெரிதாயினும் சாஸ்திரங்களைப் படித்து அதிலுள்ள ஸாராம்சங்களை மாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**13-வது ஆசார்யன் தேனீ :—**

தேனீக்கள் அனேக விடங்களிலிருந்து தேனைக்கொண்டு அடைகட்டுகின்றன. ஆனால் அத்தேனை தாங்கள் சாப்பிட மனம் வராமல் மேன்மேலும் தேனைக்கொண்டு தேன் அடையை பருக்கச்செய்கின்றன. முடிவில் தேன் அடைக்காரன் அந்த ஈக்களைக் கொன்றுவிட்டு தேனை கை பற்றுகிறான். அதுபோல் நாமும் அதிகமாக தனம் முதலிய வற்றை சேர்த்துவைத்தால் அபாயகரமாகும்.

---



# கடிதங்கள்.

வடுவூர் தெற்குத் தெருவில் எழுந்தருளி இருக்கும் R. ராஜகோபால ஐய்யங்கார் ஸ்வாமி அடியில் கண்ட ஸம்சயங்களை அனுப்பி, அவைகளுக்கு தீபிகை மூலமாக ஸமாதானம் எழுதும்படி வேண்டுகிறார்.

(1) க்ஷத்ரபந்து என்பவன் யார்? எந்த தேசத்து ராஜா? எவ்விதமான பாபத்தைச் செய்தான்? அவன் பெயர் என்ன? ராஜாவாக இருந்தும் மஹா பாபத்தைச் செய்ய என்ன காரணம் நேர்ந்தது.

(2) சக்கரம் அறுக்கிறது. கபாலம் ஏந்துகிறது என்கிற பழமொழி ப்ரஸித்தம். இதன் தாத்பர்யம் என்ன?

(3) அகல்யா திரௌபதி ஸீதா தாரா மண்டோதரீ, ததா । பஞ்ச கன்யா ஸ்மரேந்நித்யம் மஹாபாதக நாசனம் ॥ என்று சொல்லி இருக்கிறது. இதில் ஐந்தில் இரண்டு பழுதில்லை என்னும், மற்ற மூவருக்கு தோஷம் என்றும் சொல்லுவதுண்டு. அப்படி. தோஷமுள்ளவர்களையும் சேர்த்து ஸ்மரிக்க என்ன நியாயம். அவர்களுக்கு எப்படி சுத்தம் ஏற்பட்டது?

(4) மகாபாரத பர்வம் 18. யுத்தம் 18 நாள் கீதை 18 அத்யாயம் இப்படிக்கு எல்லாம் 18 ஆக இருக்க காரணமென்ன. இதில் ஏதோ விசேஷம் இருக்கவேணுமென்பது அடியேனுடைய கருத்து.

(5) ஸுக்ரீவ மகாராஜா வானர ஸைன்னியங்களை ஸீதை இருப்பிடம் தேடிவரும்படி அனுப்பியதில் ஒரு மாதம் தவணை கொடுத்து அதற்குள் வந்து சேரவேணு மென்றும் தவறினால் தங்களை சிரச்சேதம் செய்யப்படும் என்றும் ஆக்ஞாபித்திருந்தார்.

அந்தப்படி கிழக்கு மேற்கு வடதிக்குகளுக்கு சென்றவர்கள் தவணைக்குள் வந்து ஸீதையை காணவில்லை யென்று தெரியப்படுத்தி விட்டார்கள். தெற்கு திக்கில் போன அங்கத பிரமுகாள் மட்டிலும் காலாதிதமாக வந்தார்களே. அது ராஜா ஆக்ஞைக்கு விரோதமல்லவா! ராணுவ சட்டப்படி அவர்கள் தண்டனைக் குள்ளாக வேண்டியவர்கள் தானே. காரியஸாதகம் பண்ணிவந்தாலும் விசாரணைசெய்து குற்றம் சாட்டி அப்பால் மன்னிக்கா

லாமே யொழிய விசாரணை இல்லாமலும் குற்றம் சாட்டி மறுபடி மன்னித்து விடலாமா ? மதுவனத்தை அழித்ததற்கு தான் மன்னிப்பு செய்தாரே ஒழிய காலாதிதமாக வந்ததற்கு யாதொரு சமாதானமும் தெரியவில்லை. இது விஷயமும் பெரியோர்கள் மூலம் பரிசீலனை செய்து பத்திரிகை மூலம் அறிவித்தால் ரொம்ப நன்றியுள்ளவனாக இருப்பேன்.

இதுபோல் இன்னமும் அநேகம் சந்தேகங்களை அடியேனுக்கு உண்டு. அவைகள் எல்லாவற்றையும் ஒரே மூச்சில் எழுத பாகவதருடைய சாபத்திற்கு ஆளாகாமல் இருக்கவேணு மென்கிற உத்தேசத்தால் அவைகளை பின்னாடி இன்னொரு சமயம் தெரிவித்துக் கொள்ளலா மென்கிற உத்தேசம்.

## ஓர் ஸந்தேஹம்

(ஸ்ரீகாஞ்சீ ஸ்ரீ. அண்ணங்கராசாரியார்)

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் அருளிச் செய்த தமிழ்ப் பிரபந்தங்களுள் அம்ருதாஸ்வாதினியில் முப்பத்து மூன்றாவது பாசுரம் "அலர்ந்தவம் புயத்து" என்பது. இதுவொரு கம்பீரமான பாசுரம். விரோதபரிஹாரம் என்னும் ரஹஸ்யத்தின் முடிவில் அருளிச் செய்யப்பட்ட பாசுரம் இது. இதை அச்சிட்டிருப்பவர்களும் ஓதுகின்றவர்களும் பல பல பாடபேதங்களைப் புகுத்தியிருக்கின்றார்கள். வியாக்கியானம் பண்ணியிருப்பவர்களும் ஏதோ காடு பாய்ந்து போயிருக்கிறார்களே யல்லது இன்னது பொருளென்று கண்டறிந்தார்களாகத் தெரியவில்லை. மூன்றாவது அடியில் "உரைத்த வேதிராசர்தம்" என்கிற பாடந்தான் தமிழர்கள் இசையக் கூடியது. வேதிராஜர் என்பது திருவாழி யாழ்வானுடைய திருநாமம். "உரைத்த வேதிராசர்தம்" என்று குறிலாகப் பாடங்கொண்டு எதிராசரான எம்பெருமானாரைச் சொல்லுகிறதாகப் பலர் கூறுகின்றார்கள். "வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல், விரித்தல் தொகுத்தல் வருஞ் செய்யுள் வேண்டுழி" என்கிற நன்னூற் சூத்திரத்தின்படி எதிராசரை ஏதிராசரென்றும் செய்யுளிற் கூறலாமாதலால் எம்பெருமானார் அர்த்தமானாலும் திருவாழி யாழ்வான் அர்த்தமானாலும் "ஏதிராசர்" என்பதுதான் மூலம் என்பதில் தமிழறிஞர்கள் விவாதம் கொள்ளார்கள். இது எப்படியானாலும், இப் பாசுரத்தில் கூறப்படுகிற விஷயம் அடியேனுடைய சிற்றறிவுக்குச் சிறிதும் புலப்படாதிருக்கின்றது. பல பெரியார்களை அடிபணிந்து கேட்டும் தெரியா தென்றே கூறக்கேட்டேன். மூலத்தை உள்ளபடி யெழுதி அதற்



குப் பதவுரையையும் எழுதி, ஐந்தாறு வரியில் தாத்பரியத்தையும் தெளிவாக வுரைத்து உபசரிக்கவல்ல மஹாநுபாவர் உளரேல் பரமகிருபையுடன் முன் வந்து இவ்வரிய பெரிய உதவியைச் செய்து போருக.

---

## புஸ்தகவிமர்சம்.

### அழகர் மாலை.

எல்லா திவ்யதேச எம்பெருமான்களுக்கும் பரஸ்பர விலக்ஷணமான அழகு இருந்தும் திருமாலிருஞ் சோலையில் திருக்கோயில் கொண்டிருப் பவனையே அழகர் என்று அழைப்பதற்கு காரணம் நேரில் அவ்வெம்பெருமான் வடிவழகை அநுபவித்தவருக்கே புலப்படக் கூடியதாகும். இந்த எம்பெரும்பானைப் பற்றி பக்தர் பலர் பற்பல விடங்களில் வாசிப்பவர்களின் மனமுருகும்படி பக்தி ரஸம் ததும்பும்படி பாடி இருக்கின்றனர். அப்படிப் பட்ட பாடல்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்தும் இன்னும் பல வித்வான்களுடைய வாங்மயமான அநுபவங்களையும் ஒன்றாகத் திரட்டி நமது நண்பர் வித்வான் ஆர். திருமலை அய்யங்கார் அச்சிட்டு ஓர் புத்தகரூபமாய் வெளியிட்டிருக்கிறார். இப்புத்தகம் பகவத் பக்தியில் ஆழ்ந்தவர்கள் மாத்திரமே அல்லாமல் தமிழ் பாஷையில் சிறந்த இலக்கியங்களை படித்து ரஸானுபவம் பெறவேணும் என்று விருப்பமுள்ளவராலும் ஆதரிக்கத்தக்கது.

இப்புத்தகம் கிடைக்குமிடம் :—

**ஆர். திருமலை அய்யங்கார்.**

42. A. வெங்கட்டரங்கம் பிள்ளை தெரு.

திருவல்லிக்கேணி, சென்னை.

### புஸ்தக வரவு.

ஸ்ரீமான் ஒய். சுப்ரமண்ய சர்மா அவர்களால் பதிப்பிக்கப்பட்டு ஒய். நரஸப்பா அவர்களால் வெளிப் படுத்தப்பட்ட "Narada's Aphorisms on Bhakthi" என்ற புத்தகம் வரப்பெற்றோம். இதைப்பற்றி விமர்சம் பின்னே வரும்.

## விருத்தாந்தங்கள்

ஸ்ரீநிகமாந்த மகாதேசிகனுக்கு அஸாதாரண ஸ்தலம் என்று சிறப் புற்று விளங்கும் திருவஹீந்திரபுரத்தில் ஸமஸ்த ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஸபை ஒன்று 19-5-'39, வெள்ளிக் கிழமை மாலை 5-மணிக்கு கூடியது. மஞ்ச குப்பம், திருப்பாபுலியூர், முதலான விடங்களில் வசிக்கும் தேசிக பக்தரனை வரும் வெகு குதூஹலத்துடன் வந்து இச்சபையில் கூடினர். சென்னை ஸ்ரீமான் தேசிகதர்சனரத்ன தீபம் வி. வி. ஸ்ரீநிவாஸ ஐய்யங்கார் அத்யக்ஷ ராக இருக்க திருப்பாபுலியூர் அட்வகேட் தி. ஈ. சடகோபாசாரியர் திருவ ஹீந்திரபுரம் ஹிதைஷி ஸபா என்றதொரு ஸபை ஆரம்பிக்க வேணும் என்றும் அதனுடைய ஆவச்யகத்தை இன்னதென்றும் விவரித்துக் கூறினார். அதாவது நமது இந்தியாவில் நாநுபாகங்களில் வசிக்கும் தேசிக பக்தர்க ளனைவரும் இச்சபையில் மெம்பர்களாகச் சேர்ந்து ஸ்ரீநிகமாந்த மஹாதேசிக ஞல் ப்ரவர்த்தனம் செய்யப்பட்ட வேதாந்த குடும்பத்தில் ஸஹோதரர் களாக ஸர்வ விதத்திலும் பரஸ்பர ஹிதைஷிகளாக பழக்கிக் கொள்ள வேணும் என்பதே. மேற்படி ஸ்ரீ வி. வி. ஸ்ரீநிவாஸ ஐய்யங்காரையே இதற்கு அத்யக்ஷராக இருக்கும்படி வேண்டிக்கொண்டு கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது, இதன் மற்ற விவரங்கள் பின்னே வரும்.

---



சௌரே:—பகவானுடைய

அபரம் அவதாரம் இவ:—மற்றோரவதாரம்போல.

अनुज्झित क्षमायोगमपुण्यजन बाधकं ।
अस्पृष्टमदरागं तं रामं तुर्य मुपास्महे ॥ ७ ॥

அநுஜ்ஜிதக்ஷமாயோகம் அபுண்யஜநபாதகம் ।
அஸ்ப்ருஷ்டமதராகம் தம் ராமம் துர்யமுபாஸ்மஹே ॥

அநுஜ்ஜிதக்ஷமாயோகம் - (1) பொறுமையை ஒருகாலும் விடாதவரும் (2) பூமியுடன் ஸம்பந்தத்தை விடாதவரும்

அபுண்யஜநபாதகம் - (1) புண்ய புருஷரை ஹிம்ஸியாதவரும் (2) ராக்ஷஸரை ஹிம்ஸியாதவரும்

அஸ்ப்ருஷ்டமதராகம் - (1) மத்யத்தில் ஆசையால் தொடப்படாதவரும் (2) மத்யபானத்தால் சிவப்பு வர்ணத்தை யடையாதவரும்,

தம் - அந்த

துர்யம் - நான்காவது

ராமம் - ராமனை

உபாஸ்மஹே - பஜிப்போம்.

(தா-ம்) மூன்று ராமருண்டு. முதல்வர் பரசுராமர். அவர் தாம் ஜயித்த பூமியை காச்யபருக்குக் கொடுத்துவிட்டு அதன் ஸம்பந்தமே கூடா தென்று ஸமுத்ரத்தில் பாணம் போட்டு கேரள தேச மேற்படுத்தி அதி லிருந்தார். 'க்ஷமா' என்று பூமிக்குப் பெயர். 'யோகம்' என்பது ஸம்பந் தம். அவரைக் காட்டிலும் இவ்வாசிரியர் வேறென்று சொல்லுகையில் இவர் க்ஷமா யோகத்தை விட்டவரல்ல வென்கிறார். இது ச்லேஷை. க்ஷமா (பொறுமை) குணத்தின் ஸம்பந்தத்தை இவர் ஒருபொழுதும் விட் டவரல்லர். பரசுராமர் விஷயத்தில் பொறுமையை விட்டவர் என்பதும் உண்மை.

'புண்யஜனர்' என்பது ராக்ஷஸரை. அவர்களை நிரஸித்தவர் இரண்டா வது ராமர். இவ்வாசிரியர் புண்ய ஜநபாதகரல்லர்; அதாவது புண்ய புரு ஷரை இவர் பீடிப்பதில்லை. மூன்றாவது ராமர், பலராமர். இவருக்கு மத் யத்தில் நீங்காத ஆசை. இவ்வாசிரியரிடம் மதம், ராகம், இத் தோஷங் கள் அணுகா.

இந்த ராமார்யரும் க்ரந்த கரணத்தால் ரக்ஷித்தவரல்ல. ஆனால் தத்வ டீகையில் இவர் ரக்ஷித்தபடியைப் பேசுகையில்,

"रक्षितत्वं तु रामार्यैः त्रय्यन्तार्थैर्हि सूचितं ।
आत्मसिद्ध्यादिभिःप्रोक्तं यामुनार्यनिबन्धनैः ॥"

ரக்ஷிதத்வம் து ராமார்யை: த்ரய்யந்தார்த்தைஹி ஸூசிதம் |
ஆத்மஸித்யாதி பி: ப்ரோக்தம் யாமுனார்ய நிபந்தனை: ||

(ராமார்யர் வேதாந்த தர்சனத்தை ரக்ஷித்தார் என்பது வேதாந்த தாத்பர்யங்கள் இவ்வாசிரியரால் சுருக்கமாக ஸூசிக்கப்பட்டவை, யாமுனார்யருடைய ஆத்மஸித்யாதிக்ரந்தங்களால் விஸ்தரிக்கப்பட்டன என்பது தான்) என்று ஸாதிக்கப்பட்டது.

புண்டரீகாக்ஷரை நாம ஸாதர்ச்யத்தால் கண்ணனுக்கு ச்லேஷத்தால் ஒப்பிட்டார். இவர் திருநாமமுடைய மற்ற மூவரைக்காட்டிலும் இவர் ஓர் விலக்ஷணமான நான்காவது ராமர் என்கிறார். பகவானால் ஆவேசிக்கப்பட்டவர் முதல்வர். ஆகிலும் க்ஷமையற்றவர், அஸஹனமுனி. அம்சியான ராமரையே சீறினவர் க்ஷமாநிதியான இவரை அஸஹனமுனிக் கொப்பிடக்கூடாது. 'क्षमन्या पृथिवीसमः' (க்ஷமய்யாப்ருதிவீஸம:) என்றபடி ராமன் க்ஷமாநிதியே. ஆயினும் "यज्ञविघ्नकरं हन्यां" (யஜ்ஞவிக்நகரம் ஹந்யாம்) என்று அவருக்கு ஒருகால் கோபம் வரும். யஜ்ஞவிக்நம் செய்யும் புண்ய ஜனரை ஹிம்ஸிப்பவர். இவ்வாசிரியர் ஆஸுரப்ரக்ருதிகளை நிரஸித்து க்ரந்தம் எழுதியவரல்ல. ஜாபாலியின் ஆஸுரவாதத்தை ராமன் நிரஸனம் செய்தார்.

மூன்றாவது ராமர் மதராகத்தையே (மத்யத்தால் சிவப்பு நிறத்தையே) பூண்டவர். இவர் மதராகங்களை (கொழுப்பு, ஆசை) விட்டவர். 'தம்'—'गुरुमेवाभिगच्छेत्' (குருமேவாபிகச்சேத்) ஆசார்யனை ஆச்ரயிக்கவே வேணும்) என்று நியமவிதி. குருவை சிஷ்யர் தேடிப்போகவேணும், இவர் சிஷ்யருக்கு ப்ரியமான தூதுவளையை ப்ரதிதினமும் உபஹாரமாக இட்டு அவர் மனைக்குப் போனார்.

"शिष्याय प्रियं धन माहृत्य" (சிஷ்யாய ப்ரியம் தன மாஹ்ருத்ய) என்றபடி சன்னமாக சிஷ்ய க்ரஹணம் பண்ணினான். "पितामहं नाथमुनिंविलोक्य" இப்படிச்செய்தார். சிஷ்யர் வ்ருத்தத்தை சிந்திக்காமல் (अचिन्तयित्वा) செய்தார். இந்த ராமார்யர் செய்ததை பெருமாளுக்கும் ஸூசித்து "எம்மாசிரியர் செய்தபடி தேவரீரும் அனுக்ரஹிக்கவேணும்" என்று



ஸ்தோத்ர ரத்னத்தில் ப்ரார்த்தித்தது "ஆசார்யனைப்போல் தேவனும் இருப்பதல்லோ அழகு" என்று சாடு. 'ராமம்' அந்த ராமனை 'राममुपास्महे' (ராமம் உபாஸ்மஹே) என்றால் சக்ரவர்த்தித் திருமகனைப்பிடிக்கும். இவர் ஆசார்யாவதாரமல்ல. ஆகையால் அவரிலும் வேற்றுமையைக்காட்ட வ்யதிரேக ப்ரதர்சனம்.

முன் ச்லோகத்தில் கண்ணனாக (ச்லேஷத்தால்) நிரூபித்தார். அதற்கடி அவர் கீதாசார்யனாயிருந்தது. அவர் பக்தி யோகத்தை அவதரிப்பித்த ஆசார்யர். ப்ரபத்தியோகத்தையும் சரமச்லோகத்தால் வெளியிட்டருளினார் அவர்.

'துர்யம்'—நான்காவது ராமரை.

'உபாஸ்மஹே'—சிஷ்யரை அவர் உபாஸித்தார்; நாம் அவரை உபாஸிப்போம், நாம் நாதமுனி வம்ச்யரல்ல!

विगाहे यामुनं तीर्थं साधुवृन्दावनेस्थितं ।
निरस्तजिह्मगस्पर्शे यत्रकृष्णः कृतादरः ॥ ८ ॥

விகாஹே யாமுனம் தீர்த்தம் ஸாதுப்ருந்தாவனேஸ்திதம் |
நிரஸ்தஜிஹ்மகஸ்பர்சே யத்ரகிருஷ்ண: க்ருதாதர: || 8

நிரஸ்தஜிஹ்மகஸ்பர்சே - (1) காளியனென்னும் விஷ ஸர்ப்பத்தின் விஷஸம்பந்தத்தை நிரஸித்த. (2) நிந்தா விஷத்தைக்கக்கும் தூஷக ஸம்பந்தமற்ற.

யத்ர - (1) எந்த யமுனாதீர்த்தத்தில் (2) யாமுனார்யமதமான ஸ்ரீபாஞ்சராத்ராகம ப்ராமாண்யத்தில்.

க்ருஷ்ண: - (1) கண்ணன் (2) க்ருஷ்ணரென்னும் ப்ரஹ்ம ஸூத்ர கர்த்தாவான வ்யாஸர்

க்ருதாதர: - ஆதாரம் உள்ளவரோ

ஸாதுப்ருந்தாவனேஸ்திதம் - (1) அழகாக ஸ்ரீப்ருந்தாவனத்தில் ஓடும் (2) ஸாதுக்களின் கூட்டமான ஸாத்வதர்களை (பிறர் தூஷணங்களிலிருந்து) ரக்ஷிப்பதில் நின்ற

யாமுனம் - (1) யமுனா தீர்த்தத்தை

தீர்த்தம் - (2) யாமுனார்யரெனும் தீர்த்தகரரான ஆசிரியரை; அவர் சாஸ்த்ரமான ஆகம ப்ராமாண்யத்தை

விகாஹே - (1) ஆச்ரயித்து ஸ்நாநம் செய்கிறேன் (2) பூர்ணமாக மனதால் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

**"नाथोपज्ञं प्रवृत्तं बहुभिरुपचितं यामुनेय प्रबन्धैः"** (நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் பஹுபி ருபசிதம் யாமுனேய ப்ரபந்தை:) என்றபடி நாதமுநி ந்யாய தத்வம் ஸாதித்தும் திவ்யப்ரபந்தங்களை ஸாக்ஷாத்கரித்து வெளிப்படுத்தியும் ப்ரசாரம் செய்தும் யாமுனார்யரால் அனேக ப்ரபந்தங்களால் வ்ர்த்தியாக்கப்பட்டதுமான நம் தர்சனம்' என்று தத்வ முக்தாகலாபத்தின் முடிவில் சாதிக்கப்பட்டது. ஸ்ரீமந்நாதமுனிகள், யாமுனார்யர், எம்பெருமானார் இம்மூவரும் க்ரந்தங்கள் செய்தருளிய ஆசார்யர்கள். யாமுனார்யர் எட்டு ப்ரபந்தங்களை செய்தருளினார். மூன்று ஸித்திகள், ஆகமப்ராமாண்யம், புருஷ நிர்ணயம், ஸ்தோத்ர ரத்னம் ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம், சதுச் ச்லோகி.

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு பாஞ்சராத்ராகமங்கள் அஸாதாரணமானவை. வைஷ்ணவமதமான ஸ்ரீமத்வ மதமும் இவைகளைக் கைப்பற்றியது. 'தீர்த்த' சப்தத்திற்கு ஆகமம் புண்ய தீர்த்தம் குரு என்ற பொருள்களுண்டு "**निपानागमयोस्तीर्थं ऋषि जुष्टे जलेगुरौ**" என்று நிகண்டு. ஸ்ரீபாஞ்சராத்ராகமத்தை செய்தருளிய ஆதிகுருவை ஆதிச்லோகத்தால் ஸ்மரித்தார். பிராட்டியும் ஸ்ரீஸேனை முதலியாரும் லக்ஷ்மீதந்த்ரம் விஷவக்ஸேன ஸம்ஹிதை இவைகளை முறையே செய்தவர்கள். ஆழ்வார் தமிழ் மறையெனும் சாஸ்த்ரமருளியவர். அதில் ஸ்ரீபாஞ்சராத்ர ப்ரதிஷ்டாபிதமான அம்சம் வைபவம் பரக்கப்பேசப்பட்டது. ஸ்ரீமன் நாதமுனிகள் ந்யாய தத்வமெனும் சாஸ்த்ரத்தை (தீர்த்தத்தை) செய்தவர்.

இந்த குரு பரம்பரையில் ஆளவந்தாரிடம் வருகையில் யாமுன தீர்த்தத்தில் நீராடுகிறேனென்று குளிர்ச்சியை அனுபவித்த ஹர்ஷத்தை பேசுகிறார். பகவானுடைய முகத்திலிருந்து ப்ரவஹித்த ஆகமதீர்த்தத்தை சில தூஷகர்கள் ஸர்ப்பங்கள் விஷத்தைக் கக்குவதுபோல் தூஷித்தனர். பரம சாதுக்களும் ஸாத்விகருமான ஸாத்வதப்ருந்தங்களை சாகாரண்டர்களென்றும், திருவிலச்சினைகளைச் சூடிடுதலென்றும் ஏசினர். ஸ்ரீக்ருஷ்ணன் துஷ்டகாளியனை நிரஸித்து யமுனையை சுத்தமாக்கி பயமின்றி நீராட யோக்யமாகச் செய்ததுபோல் ஸ்ரீ ஆளவந்தாரும் ஆகம ப்ராமாண்யத்தைச் செய்தருளி தூஷண விஷங்களைப் போக்கி பாஞ்சராத்ர தீர்த்தத்தை சுத்தமாக்கி நிச்சங்மாக எல்லாரும் ஆச்ரயிக்க யோக்யமாம்படி பண்ணியருளினார். இம்மஹோபகாரத்தை நினைத்து ஸாத்வதாம்பதியான கண்ணனோடு ஸாம்யத்தை உபபாதிக்கிறார். க்ருஷ்ணத்வைபாயநரெனும்



வ்யாஸருடைய ப்ரஹ்மஸூத்ரம் ஸ்ரீபாஞ்சராத்ரத்தின் ப்ராமாண்யத்தை ரக்ஷித்து வேதாந்தத்தோடு அவிரோதத்தைக் காட்டி அதற்கு அப்ரதிஷேதமே (அநிராகரணமே) என்று ஸித்தாந்தித்தது. இந்த க்ருஷ்ணரெனும் வ்யாஸர் ஸ்ரீபாஞ்சராத்ராகமத்தை தூஷித்ததாகத் தப்புப் பொருள் பிறராலுரைக்கப்பட்டது. அவர்கள் தங்கள் விஷங்களை ஸூத்ரகார் நாக்கிலிருந்து வந்ததாகப் பொய்பேசி வ்யாஸரெனும் க்ருஷ்ணரை க்ருஷ்ண ஸர்ப்பமாக்கப் பார்த்தார்கள். ஆனால் ஸூத்ரகாரரே **"इदं महोपनिषद्"** (இதம் மஹோபநிஷதம்) என்று உயர்ந்த உபநிஷத்தாக இதைக் கொண்டாடி, க்ருஷ்ணவேதமான பாரதத்தில் 15 அத்யாயங்களிலும் தம்பரமாதரத்தை வெளியிட்டருளினார்.

ஆகமப்ராமாண்ய க்ரந்தத்தில் ஸ்ரீபாஞ்சராத்ர ப்ரவர்த்தகரான க்ருஷ்ணனுக்கும் அதைத்திருடமாக ப்ரதிஷ்டிப்பித்த வ்யாஸ க்ருஷ்ணர்க்கும் மிக்க மகிழ்ச்சியுண்டு, இருவரும் அதில் க்ருதார்கள்.

காளியன் கதையைச் சொல்லுகையில் மூன்று க்ருஷ்ணர் சேருவதை ஸ்ரீசுகர் ரஸமாகக் காட்டினார். கோபால க்ருஷ்ணன், காளிய க்ருஷ்ணன் (க்ருஷ்ண சர்ப்பம்) க்ருஷ்ண நதியான யமுனை, இங்கும் கருஷ்ண த்ரயம்.

'விகாஹே'—குளிர நீராடி சுத்தமாகி மகிழ்வேன். ஆகமப்ராமாண்ய (க்ரந்த) தீர்த்தத்தில் நீராடி ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷை செய்தோம் !

'யாமுனம் தீர்த்தம்'—(1) யமுனை நீரில் தூயபெருநீர் யமுனைத் துறையில் (2) யாமுனார்யரென்றும் குருவை, (3) யாமுனார்யர் செய்தருளிய சாஸ்த்ரத்தில்—

'ஸாது ப்ருந்தாவனேஸ்திதம்'—(1) ப்ருந்தாவனத்தில் ஸாதுவாக (அழகாக) இருப்பது யமுனை. (2) ஸாதுப்ருந்தங்களை ஸ்ரீபாஞ்சராத்ர நிஷ்டரான ஸாத்வதர் குழாங்களை) ரக்ஷிப்பதிலேயே ஊற்ற முள்ளவரை (3) ..........ஊற்றமுள்ளதை

**"गोवर्धनो गिरिवरो यमुनानदी सा वृन्दावनं च मधुरा च पुरीपुराणी"**
(கோவர்த்தனோ கிரிவரோ யமுனாநதீஸா ப்ருந்தாவனம்ச மதுராசபுரீபுராணீ)

'க்ரஸ்த ஜிஹ்மகஸ்பர்சே யத்ர'—ஜிஹ்மக' என்பது வக்ரமாய் ஸஞ்சரிக்கும் பாம்பைச் சொல்லும். வக்ரயுக்திகளையும் சொல்லும். (1) காளி

யனின் ஸம்பந்தமேயில்லாமற் செய்யப்பட்ட எந்த யமுனை தீர்த்தத்தில் (2) வக்ரர்களான தூஷகர்கள் தங்கள் விஷ நாக்கினால் கக்கும் தூஷணங்கள் அனுகாதபடி செய்த எந்த ஆளவந்தாரெனும் குருவிடம் (தீர்த்தத்தினிடம்) (3) ஆளவந்தார் சாஸ்த்ரமான எந்த ஆகமப்ராமாண்யத்தில். 'க்ருஷ்ண:---' (1) கண்ணன் (2) ப்ரஹ்மஸூத்ரகாரரான வ்யாஸ க்ருஷ்ணர்.

'க்ருதாதர:' (1) ஆதரமுடையவரோ 'தரம்' என்று பயத்திற்கு பேர் ஸர்ப்பப்பயமில்லாமல் செய்தாரோ. யமுனையில் ஆதரம் உடையவர். யமுனையை பாணிக்ரஹணம் செய்து கொண்டவர். (2) எதனிடம் வ்யாஸ க்ருஷ்ணர் கடாக்ஷம் குளிர விழுந்ததோ; வ்யாஸ க்ருஷ்ணர் திருவுள்ள முகந்ததோ.

ஸ்ரீபாஞ்சராத்ராதிகரணத்தின் நேரான பொருள் ஆகம ப்ராமாண்யத்தில் உரைக்கப்பட்டது. தம் திருவுள்ளப்படி பொருளுரைத்த ஆகம ப்ராமாண்யத்தில் ஸூத்ர கர்த்தாவுக்கு மிக்க பஹுமானம். விபரீத வ்யாக்யானங்களால் வ்யாஸ க்ருஷ்ணர் முன்பு மிக்க பயமடைந்தவர். ஆகம ப்ராமாண்ய மேற்பட்டதும் பயம் நீங்க (அதரர்)ப் பெற்றார். ஸ்ரீபாஞ்சராத்ரத்தின் ப்ராமாண்யத்தை ஸமர்த்திப்பதில் தான் ஸூத்ரகாரர்க்குத் திருவுள்ளமென்று அத்வைத வ்யாக்யானமான கல்பதருவும் மதுஸூதன ஸரஸ்வதி செய்த அத்வைத ஸித்தியும் நிரூபித்துள்ளன. (8)

दयानिघ्नं यतीन्द्रस्य देशिकं पूर्णमाश्रये ।
येन विश्वसृजो विष्णो रपूर्यतमनोरथः ॥ ९ ॥

தயாநிக்னம் யதீந்த்ரஸ்ய தேசிகம் பூர்ணமாச்ரயே ।
யேன விஸ்வஸ்ருஜோவிஷ்ணோரபூர்யதமனோரத: ॥ ௯ ॥

தயாநிக்னம்- தயைக்குப்பரவசராயும்
யதீந்த்ரஸ்யதேசிகம் - யதிராஜன் ஆசிரியராயும்
பூர்ணம் - ஸ்ரீகோஷ்டீ பூர்ணரை (பெரிய நம்பியை)
ஆச்ரயே - ஆச்ரயிக்கிறேன்
யேன - எவராலே
விச்வஸ்ருஜ: - ஸர்வ ஜகத்தையும் ஸ்ருஷ்டித்த
விஷ்ணோ: - விஷ்ணுவினுடைய
மனோரத: - திருவுள்ளம் (ஆசை)
அபூர்யத - பூர்ணம் செய்யப்பட்டதோ

(தா-ம்) வைஷ்ணவாகம சாஸ்த்ரத்தின் ஸம்பந்தமாகவே முதல் குரு முதல் செய்யப்பட்ட உபகாரங்களைப் பேசிவந்தார். ஸ்ரீபாஞ்சராத்ர



சாஸ்த்ரமும் வேதமும் ஒரே கருத்துடையதே. விரோதமென்பதேயில்லை யென்றும் கூறப்பட்டது.

न बाधः प्रतिरोधो वा वेदसात्त्वतयोर्मिथः ।
कुदृशां तद्भ्रमोवार्यः श्रुत्योरिवपरीक्षकैः ॥

ந பாத: ப்ரதிரோதோவா வேத ஸாத்வதயோர்மித: ।
குத்ர்சாம் தத்ப்ரமோவார்ய: ச்ருத்யோரிவ பரீக்ஷகை: ॥

'வேதத்திற்கும், ஸாத்வதமென்னும் ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரத்திற்கும் பரஸ்பரம் விரோதமில்லை. ஒன்றையொன்று தாக்குவதுமில்லை. அவைவற்று விரோதமுண்டு; ஒன்றையொன்று பாதிக்கும்' என்று விபரீதக்ராஹிகளுடைய ப்ரமத்தை பரீக்ஷகரான சோதகர் நிரஸிக்கவேணும் 'எப்படி ச்ருதிகளில் பரஸ்பரம் விரோதம்போல் இருந்தால் கௌணம், முக்யம், வைபவவாதம் முதலிய ப்ரகாரங்களால் பொருள் கூறி விரோதத்தை பரிஹரித்து ஏக கண்டமாக்குவரோ அப்படியே வேதம் ஸ்ரீபாஞ்சராத்ரம், இவைகளுக்கும் விரோதமின்மையைக் காட்டவேண்டும்!

'ஜீவன் உத்பன்னன் ஆகிறான்' என்று ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் பேச்சிருந்தால் அந்த உத்பத்தி என்பது கௌணம்; ஓர் ரூபாந்தரத்தோடு ஆவிர்ப்பாவமே (தோன்றுதலே) உத்பத்தியென உபசரிக்கப்படுகிறது என்று பொருளுரைத்து ஆத்மா நித்யன் என்ற ச்ருதியுடன் விரோதமில்லை யென்னவேணும். 'ஸங்கர்ஷணர் என்னும் ஜீவர் பிறக்கிறார் என்ற பேச்சில் பிறப்பு என்பது ரூபாந்தரத்தோடு வ்யூஹமாய்தோன்றுவதே. "गौणी तत्रि यस्यते" (கௌணீ தன் நியம்யதே) என்ற கல்பதரு ச்லோகம் உத்பத்தி கௌணம்' என்பதையே தீர்மானித்தது. இதுவே ஸ்ரீபாஞ்சராத்ராதிகரணத்தில் வியதிகரணத்தில் காணஸித்தாந்தம். இதை அவலம்பித்து அடுத்த பூர்வபக்ஷம் "गौण्य ஆகாசத்தின் உத்பத்தியும் கௌணம் தான் என்று संभवात्" (கௌண்ய ஸம்பவாத்) என்ற ஸூத்ரத்தினால் செய்யப்படுகிற தீர்மானிறும் ஸ்ரீபாஞ்சராத்ராதிகரணத்தில் உத்பத்தி கௌணம் என்று தீர்மானிக்கப்பட்டதாக ஏற்படுகிறது. 'உத்பத்ய ஸம்பவம்' என்றே இவ்வதிகரணத்தின் பெயர். அதைக்கொண்டே அடுத்த அதிகரணத்தில் பூர்வபக்ஷம். ஆகமப்ராமாண்யத்தில் இந்த அதிகரண ஸூத்ரங்களுக்கு வ்யாக்யானம் செய்யப்பட்டது. ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு அத்வைதாதி மதாநுஸாரமாய் பாஷ்யங்களேற்பட்டாலும் நம் தர்சனத்திற்கு போதயன வ்ருத்தியை அநு

ஸரித்து ஆனால் அதைப்போல் மிக்க விஸ்தாரமாயும் தாவகமுமாயில்லாமலும் த்ரமிடபாஷ்யத்தைப் போல் மிக்க சுருக்கமாயுமில்லாமலும் ஓர் பாஷ்யம் ஏற்படவேண்டும். இதற்கென்றே ஆதிசேஷரே ஸ்ரீபாஷ்யகாரராய் அவதரிக்கப்போவது சிரகாலமாய் தெரிந்திருந்தது. ஆளவந்தாரெழுந்தருளியிருக்கையிலேயே எம்பெருமானாரவதரித்தாயிருந்தும் நேரில் ஸமாகமம் நேரவில்லை. ஆளவந்தார் ஒரு பாஷ்யம் செய்து ஸூத்ரார்த்தங்களையும் ஸம்ப்ரதாயார்த்தங்களையு முபதேசிக்காமல் குறையோடே திருநாடலங்கரித்தார். அந்தக்குறையை ஸ்ரீபூர்ணர் பூர்த்தி செய்தார். பெரிய பெருமாளே எம்பெருமானாரைக் கடாக்ஷித்து உபதேசிக்க பெரிய நம்பிகளை பெரிய பெருமாள் கோவிலுக்கனுப்பினர். ஆசிரியரான ஸ்ரீபூர்ணரும் மதுராந்தகத்திலே தேவப்பெருமாள் நியமனத்தால் அங்கு எழுந்தருளிய லக்ஷ்மணருக்கு ராமர் முன்பு உபதேசித்தருளினர். பெரிய நம்பி என்றிவ்வாசிரியர் திருநாமம் பூர்ணம் என்று ப்ரஹ்மத்தைச் சொல்லும் இவர் பூர்ணரான பெருமானையும் மனோரத பூர்த்தியால் பூர்ணராக்கினதால் பெரிய பூர்ணர்; பூர்ணரிலும் பெரிய பூர்ணர். முன்பொருகால் 'த்ரிவேதி' வேதம் தப்புப்பொருளுரைத்தும் வேத நிந்தையாலும் வ்யாகுலமாக்கப்பட்டபோது "**त्रिदण्ड धारिणापूर्वं विष्णुना रक्षितात्रयी**" (த்ரிதண்டதாரிணா பூர்வம் விஷ்ணுனா ரக்ஷிதாத்ரயீ) என்றபடி விஷ்ணு த்ரிதண்டியாகவவதரித்து வேதரக்ஷை செய்தார். வேதத்தைக் காப்பாற்றுவது விஷ்ணுவின்பரம். அவர் தாம் நேரில் அவதரித்தோ, '**अनुप्रविश्य कुरुते यत्समीहित मच्युतः**' (அனுப்ரவிச்யகுருதேயத் ஸமீஹித மச்யுத:) என்றபடி அநுப்ரவேசித்தே த்ரிவேதிரக்ஷையைச் செய்யவேணும். த்ரிதண்டதாரியான எம்பெருமானாரைக்கொண்டு **सर्वं समंजसं** (ஸர்வம் ஸமஞ்ஜஸம்) என்றபடி முழுவதும் ஸமஞ்ஜஸமாக ஒரு பாஷ்யத்தை ஏற்படுத்திவைக்க விஷ்ணுவின் மனோரதம்.

'தயாநிக்னம்' சிஷ்யரைத் தேடிக்கொண்டு கோவிலிலிருந்து வெகு தூரம் போவாரோ. மற்ற நம்பியைப்போல் தம்மிடம் பலகால் நடக்க வேண்டினரில்லை. **अनुक्रोशैकविजितैर्देशिकैः** (அனுக்ரோசைக விஜிதைர்தேசிகை:) என்பதை நினைக்கவேணும்.

'யதீந்த்ரஸ்ய தேசிகம்' இந்த்ரனுடைய குரு ப்ருஹஸ்பதி. அவர் பூர்ணரல்லர் ச்ரோத்ரியரான ப்ரஹ்ம நிஷ்டருமல்ல. சார்வாகமதத்தை ப்ரவர்த்தித்தவர் அவர்.



सू—असम्भवस्तु सतोनुपपत्तेः ॥ २-३-९ ॥

असम्भवस्तु परस्य ब्रह्मण एव । इतरस्य सदेव इत्यवधारणाद्यनुपपत्तेरुत्पत्तिरेव ॥

ஸத் என்று சொல்லப்படும் பொருளுக்கே உத்பத்தி கூடாது. ஸதேவ என்று சொல்லி இருப்பதால் மற்றவைகளுக்கு உத்பத்தியே உண்டு.

---

தேஜோதிகரணம்.

सू—तेजोतस्तथाह्याह ॥ २-३-१० ॥

तेजः वायोरेव उत्पद्यते । न साक्षात् ब्रह्मणः । वायोरग्नि याह ॥

தேஜஸ் நேரே ப்ரஹ்மத்திலிருந்து உண்டாவதில்லை. வாயு ருந்தே உண்டாகிறது. அப்படியே ச்ருதியும் சொல்லுகிறது.

सू—अपः ॥ २-३-११ ॥

अग्नेरापः इतिश्रुतेः अपः अग्नेः ॥

அக்னியிலிருந்து ஜலம் உண்டாகிறது என்று ச்ருதி கூறுகிறது.

सू—पृथिवी ॥ २-३-१२ ॥

पृथिवी अद्भ्यः । अद्भ्यः पृथिवी इति श्रुतेः ॥

ஜலத்திலிருந்து ப்ருதிவீ உண்டாகிறது.

सू—अधिकाररूपशब्दान्तरेभ्यः ॥ २-३-१३ ॥

ता अन्नमसृजन्त इत्यन्नशब्देन पृथिव्येवाभिधीयते ।

महाभूतसृष्ट्यधिकारात् । यत्कृष्णं तदन्नस्य इति पृथिवीरूपविधानात् । अद्भ्यः पृथिवी इति शब्दाभिधानाच्च ॥

இந்த ச்ருதியில் அன்னம் என்ற சொல்லுக்கு ப்ருதிவியே பொருளாகும். மஹாபூதங்களின் ஸ்ருஷ்டியைக் கூறும் ஸந்தர்பமாதலால். ப்ருதிவியின் ரூபத்தையே அன்னத்திற்குச் சொல்லி இருப்பதால். ஜலத்திலிருந்து ப்ருதிவி உண்டானது என்றும் சொல்லி இருப்பதால்.

## सू—तदभिध्यानादेव तु तल्लिङ्गात्सः ॥ २-३-१४ ॥

तत्तेज ऐक्षत, ता आप ऐक्षन्त, इति तदभिध्यानरूपात् तदैक्षत बहु स्याम् इत्येतत् स्वरूपात् परमात्मकारणत्वलिंगात् स एव परमात्मा, तेजःप्रभृति शरीरकः तत्तच्छब्दैः साक्षात्कारणत्वेनाभिधीयते ॥

ஸித்தாந்தத்தை கூறுகிறார். அந்த தேஜஸ் ஸங்கல்பித்தது. அந்த ஜலம் ஸங்கல்பித்தது. இது முதலிய, பரமாத்மாவிற்கே காரணத்வத்தைச் சொல்லக் கூடிய அடையாளங்களைக் கொண்டு அந்த பரமாத்மாவே தேஜஸ் முதலியவற்றை சரீரமாகப் பெற்றவனாய் அந்தந்த சொற்களைக் கொண்டு ஜகத் காரணமாக கூறப்படுகிறான்.

## स—विपर्ययेण तु क्रमोत उपपद्यते च ॥ २-३-१५ ॥

पारम्पर्यक्रमात् विपर्ययेण "एतस्माज्जायते प्राणः, खं वायुर्ज्योतिरापः", इत्यादि वाक्यात् यत्साक्षात् ब्रह्मणः सृष्टेरुपक्रमः सोऽपि अतः तेजः प्रभृति शरीरक ब्रह्मण एव सृष्टेः उपपद्यते ॥

ஸ்ருஷ்டி க்ரமத்தில் ஒன்றுக்குப் பின் ஒன்றாக ஓர் இடத்தில் சொல்லி மற்றொரு இடத்தில் அந்த க்ரமத்தை மாற்றிச் சொல்லி இருப்பதும், தேஜஸ் முதலியவற்றை சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மமே ஜகத் காரணம் என்ற கொள்கைக்கு அனுகூலமானதே.



## सू—अन्तराविज्ञानमनसी क्रमेण तल्लिंगादितिचेन्नाविशेषात् ॥ २-३-१६ ॥

भूतप्राणयोः अन्तराले इन्द्रियग्राममनसी क्रमेण उत्पद्येते इत्येतत्परमिदं वाक्यम् । खं वायुर्ज्योतिरापः इत्यादि श्रुतिप्रत्यभिज्ञानरूपात् लिंगात् अत इदमपि पारम्पर्यक्रमपरमिति चेन्न ; एतस्माज्जायते इत्यस्य प्राणादि पृथिव्यन्तेषु सर्वेषु प्रत्येकमन्वयाविशेषात् । अतः तेजः प्रभृतीनामपि साक्षात्परमात्मैव कारणम् ॥

ஆகாசம் வாயு அக்னி ஜலம் இப்படி க்ரமம் சொல்லி இருப்பதால் பூதப்ராணங்களின் இடையில் இந்திரியம் மனது இவை க்ரமமாக உண்டாகின்றன என்ற பொருளைக் கொண்டு பாரம்பர்யக்ரமம் கருதப்படுகிறது என்று சொல்லுவது சரியல்ல. ப்ராணன் முதலான ப்ருதிவீ வரையில் உள்ள பொருட்கள் எல்லாவற்றிலும் ஏதஸ்மாத்—இந்த பரமாத்மாவினிடமிருந்து என்ற சொல் சேருமாகையால் அந்த தேஜஸ் முதலிய வஸ்துக்களுக்கும் பரமாத்மாவே காரணம்.

तत्तेज ऐक्षत इति तेजः प्रभृति शब्दाः लोके तत्तद्वस्तुवाचिनः ब्रह्मणि भाक्ता इत्यत्राह

## सू—चराचरव्यपाश्रयस्तुस्यात् तव्द्यपदेशोभाक्तः तद्भावभावित्वात् ॥ २-३-१७ ॥

चराचरवस्तुसंबन्धि तत्तद्वाचकशब्दः ब्रह्मणि अभाक्तः—मुख्य एव । "अनेन जीवेनात्मनानु प्रविश्य नामरूपे व्याकरवाणि" इति तु सर्वस्य वस्तुनो नामरूपभाक्त्वस्य आत्मतया ब्रह्मानुप्रवेशभावभावित्वात् । लौकिकास्तु एवमजानन्तः वाच्यैकदेशे प्रयुञ्जते ॥

சராசரங்களடங்கிய பொருட்களைச் சொல்லும் சப்தம் ப்ருஹ்மத்தையே முக்யமாகக் கூறும். ப்ரஹ்மமே எல்லா பொருள்களிலும் புகுந்து

நாம ரூபங்களை புலப்படச்செய்கிறது. என்ற ச்ருதியால் ப்ரஹ்மமே உலகத்தில் காணப்படும் வஸ்துக்களாகத் தோன்றியதால். லௌகிகர்கள் இவ்வுண்மையை அறியாது சொற்களை முழுப் பொருள் இல்லாமல் குறை பொருளில் உபயோகிக்கிறார்கள்.

---

ஆத்மாதிகரணம்

## सू—नात्मा श्रुतेर्नित्यत्वाच्च ताभ्यः ॥ २-३-१८ ॥

नात्मा उत्पद्यते "न जायते म्रियते" इति श्रुतेः। "नित्यो-नित्यानाम्" इत्यादि श्रुतिभ्यो नित्यत्वावगतेश्च ॥

ஆத்மாவுக்குப் பிறப்பில்லை. பிறக்காதவன், இறக்காதவன் என்று ச்ருதி கூறுகிறபடியால். மற்றொரு ச்ருதியிலிருந்தும் ஆத்மாவும், பரமாத்மாவும் அழிவில்லாதவர் என்று தெரிகிறது.

---

ஜ்ஞாதிகரணம்.

## सू—ज्ञोत एव ॥ २-३-१९ ॥

"अथ यो वेदेदं जिघ्राणीति स आत्मा, मनसैतान् कामान पश्यन् रमते, यएते ब्रह्मलोक" इत्यादि श्रुतेः, बद्धो मुक्तश्चात्मा ज्ञातैव "मनोस्य दिव्यं चक्षुः" इति श्रुतेः स्वधर्मभूतं ज्ञानं मनः।

சரீரம், இந்திரியம் இவற்றிற்காட்டிலும் வேறு பொருளான இந்த ஆத்மா தஹராகாசம் என்னும் ப்ரஹ்மலோகத்தில் தோன்றும் காமங்களனைத்தையும் அநுபவித்துக் கொண்டு களிக்கிறான் என்று உபநிஷத்தில் கூறியிருப்பதால், பத்தனாகவும் முக்தனாகவும் இருக்கிற இவ்வாத்மா ஞானத்துக்கு ஆச்ரய பூதன். மனது என்பது அவனது ஸ்வதர்மமான அ[illegible]வாகும்.

## सू—उत्क्रान्तिगत्यागतीनाम् ॥ २-३-२० ॥

उत्क्रान्तिगत्यागतीनां श्रुतेरणुर्जीवः ॥



சரீரத்திலிருந்து வெளியில் புறப்படுவதும் இந்த லோகத்திலிருந்து [illegible]ரலோகத்துக்குச் செல்வதும், பின்னேயும் இந்த லோகத்துக்குத் திரும்பி[illegible]ருவதும் ச்ருதிகளில் சொல்லப்பட்டிருப்பதால் ஜீவன் விபுவல்ல. அணு.

## सू—स्वात्मना चोत्तरयोः ॥ २-३-२१ ॥

गत्यागत्योः स्वात्मनैव संपाद्यत्वा दप्यणुत्वं निश्चितम।

ஜீவனை விபு என்று ஒப்புக்கொண்டு, உத்க்ராந்தியை ஸாதிக்க முடிந்தாலும், செல்லுதல், வருதல் இவை அணுவாக விருந்தாலொழிய கூடாதவை.

## सू—नाणुरतच्छ्रुतेरितिचेन्नेतराधिकारात् ॥ २-३-२२ ॥

"स वा एष महानज आत्मा" इति श्रुतेः नाणुः इति चेत् न। "यस्यानुवित्तः प्रतिबुद्ध आत्मा" इति परमात्माधिकारात् ॥

ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் ஜீவன் மஹான் என்று சொல்லியிருக்கிறது. ஆதலால் ஜீவன் அணுவல்லன் என்றால், அங்கே பரமாத்மாவையே மஹான் என்று சொல்லியிருக்கிறதே தவிர ஜீவனைச் சொல்லவில்லை.

## सू—स्वशब्दोन्मानाभ्याञ्च ॥ २-३-२३ ॥

"एषोऽणुरात्मा" इत्यणुशब्दात् "आराग्रमात्रोह्यवरः" इत्युद्धृत्य उन्मानशब्दाच्चाणुः ॥

ஆத்மாவைப் பற்றிச் சொல்லுமிடத்தில் அணு என்னும் சொல் காணப்படுவதாலும் அவனளவுக்கு உவமை காட்டியிருப்பதாலும் ஜீவன் அணுவென்பது நிச்சயம்.

अणोरपि सकलदेहव्यापि वेदनानुभवे अन्यमतेन हेतु-माह —

## सू—अविरोधश्चन्दनवत् ॥ २-३-२४ ॥

यथा चन्दनबिन्दुरेकदेशस्थोपि सकलदेहव्यापि सुखं जन-यति, तद्वदविरोधः।

அணுவானாலும் உடல் முழுவதிலும் பரவி ஸுகதுக்கானுபவத்தை உண்டாக்குவதில் வேறு மதத்தைக் கொண்டு காரணம் சொல்லுகிறார். சரீரத்தின் ஒரு பாகத்தில் இருந்தாலும் சந்தன விந்து தேஹம் முழுவதிலும் பரவின சுகத்தை உண்டாக்குகிறது. அதுபோல் விரோதமில்லை.

सू—अवस्थितिवैशेष्यादितिचेन्नाभ्युपगमाद्धृदि हि ॥ २-३-२५ ॥

देहविशेषस्थितेश्चन्दनस्येति चेत् न, आत्मनोपि तदभ्युपगमात् । हृदि ह्ययमात्मा । "योयं विज्ञानमयः प्राणेषु हृद्यन्तर्ज्योतिः" इति श्रुतेः ।

சந்தனம் சரீரத்தின் ஏக தேசத்தில் இருப்பதால் முன் சொன்னது கூடும். ஆத்மா அப்படியில்லை என்றால்—ஆத்மாவும் அப்படியே, ஹ்ருதயத்திலல்லவோ ஆத்மா இருப்பதாக ச்ருதி கூறுகிறது.

सू—गुणाद्वा लोकवत् ॥ २-३-२६ ॥

स्वमतेनाह—आत्मा स्वगुणेन ज्ञानेन सकलदेहं व्याप्यानुभवति । यथा मणिप्रभृतयः स्वकीयेनालोकेन सकलदेशं व्याप्य प्रकाशयति "प्रज्ञामात्रास्वर्पिताः" इति श्रुतेः ॥

தனது கொள்கைப்படிக்கு ஸமாதானம் கூறுகிறார். ஜீவன் தனது குணமாகிய ஞானத்தைக் கொண்டு முழு தேஹத்திலும் பரவி ஸுகதுக்கங்களை அனுபவிக்கிறான். எப்படி யென்றால் ரத்னம் முதலிய பொருட்கள் தங்களது ஒளியைக் கொண்டு இடமெங்கும் பரவி ப்ரகாசப் படுத்துவது போல். அப்படியே ச்ருதியும் சொல்கிறது.

सू—व्यतिरेको गन्धवत्तथाच दर्शयति ॥ २-३-२७ ॥

न ज्ञानात्मनोः व्यतिरेकः इत्यत्राह—गन्धवती पृथिवीतिवत् अहं जानामीति गुणवत्वेनोपलब्धेः व्यतिरेकोऽस्ति । दर्शयति च श्रुतिः व्यतिरेकम् । "जानात्येवायं पुरुषः" इति ॥



ஞானம் வேறு ஆத்மா வேறு என்பதில்லை. ஞானமே ஆத்மா என்"பூமி வாஸனை கொண்டது என்றதைப் போல் நான் அறிகிறேன். அறிவாளனாயிருக்கிறேன் என்று ஞானம் ஆத்மாவுக்கு உரியதொரு பொருளாக தோன்றுகிறபடியால் இரண்டும் வெவ்வேறு. ச்ருதியும் அப்படியே கூறுகிறது.

सू—पृथगुपदेशात् ॥ २-३-२८ ॥

आत्मनः पृथक्त्वेनचोपदिश्यते "नहि विज्ञातुर्विज्ञातेर्विपरिलोपो विद्यते" इति ।

அறிவு ஜீவனைக் காட்டிலும் தனிப் பொருளாகவே உபதேசிக்கப் படுகிறது. "நஹிவிஜ்ஞாது:" என்ற ச்ருதியில்.

सू—तद्गुणसारत्वात्तु तद्व्यपदेशः प्राज्ञवत् ॥ २-३-२९ ॥

"योयं विज्ञानमयः" इति ज्ञानमात्रव्यपदेशः कथमित्यत्राह—ज्ञानगुणसारत्वादात्मनः ज्ञानमिति व्यपदेशः यथा प्राज्ञस्य विपश्चितोपि 'सत्यं ज्ञानम्" इति ॥

சில விடங்களில் ஆத்மா ஞானமயன் அதாவது ஞானமே என்று சொல்லியிருப்பது எப்படி கூடுமென்றால்—ஆத்மாவில் உள்ள குணங்களுக்குள் ஞானமானது ஸாரம். ஆகையால் ஜீவனை ஞான ரூபியாகச் சொன்னது. பரமாத்மாவையும் ஞான ரூபியாகச் சில விடங்களில் கூறினது போல்.

सू—यावदात्मभावित्वाच्च न दोषस्तद्दर्शनात् ॥ २-३-३० ॥

आत्मस्वरूपानुबन्धित्वात् ज्ञानस्य तेन व्यपदेशो न दोषः स्वरूपानुबन्धि धर्मत्वेन गोत्वादीनां खण्डादेः गौरित्यादिव्यपदेशोहि दृश्यते ।

ஞானம் ஆத்மாவின் ஸ்வரூபத்தைச் சேர்ந்த குணம். பசுவினிடத்தில் கோத்வம் என்பது ஸ்வரூபத்தைச் சேர்ந்தது. ஆகலால் கோவின் கண்டத்தை கோ என்று சொல்லுவது. அதுபோல் இங்கும் கண்டு கொள்க.

सुषुप्त्यादिष्वसतो ज्ञानस्य यावदात्मभावित्वं कथमित्यत्राह—

सू—पुंस्त्वादिवत्त्वस्य सतोभिव्यक्तियोगात्

॥ २-३-३१ ॥

सुषुप्त्यादिषु सतो ज्ञानस्य अनभिव्यक्तस्यापि जागरादौ अभिव्यक्तिसंभवात् स्वरूपानुबन्ध्येव ज्ञानम् । यथा—पुंस्त्वासाधारणसप्तमधातोः बाल्येऽपि सतः युवत्वे अभिव्यक्तिः । जीवात्मनो ज्ञातृत्वम् । अणुत्वं चोक्तम् ॥

நித்திரையில் அறிவு இல்லை. ஆதலால் ஆத்மாவிற்கு அறிவு ஸ்வரூபத்தைச் சேர்ந்தது என்று எப்படிச் சொல்ல முடியும் என்றால்—நித்திரையிலும் அறிவு இல்லாமல் போவதில்லை. மறைந்து நிற்கும். விழிப்பில் வெளியாகும். எப்படி என்றால் புருஷனுக்கு வீர்யம் ஸ்வபாவ ஸித்தம். ஆனாலும் இளம் பருவத்தில் அது தென்படாமல் மறைந்திருந்து யௌவநதசையில் வெளிப்படுகிறது. அதுபோல் ஞானமும் நித்திரா காலத்தில் தென்படாமல் விழிப்பில் ப்ரகாசிக்கும். இதனால் ஜீவனுக்கு அறிவும், அணுத்வமும் ஒப்புக்கொண்டதாகிறது.

सू—नित्योपलब्ध्यनुपलब्धिप्रसङ्गोन्यतरनियमोवान्यथ

॥ २-३-३२ ॥

अन्यथा ज्ञप्तिमात्रसर्वगतात्मवादे तावन्नित्यत्ववत् सर्वदोपलब्धि स्यात् संकोचकाभावात् विद्यमानाया अनुपलब्धेरपि सैव हेतुरिति सापि नित्यवत्स्यात् । ज्ञाने विद्यमानेऽपि हेत्वन्तरेण निवारणासंभवात्

'ஆத்மா எங்கும் நிறைந்துளன், ஆத்மாவென்பது ஞானமே. என்ற இரண்டுவித கொள்கைகளிலும், உணர்ச்சி, உணர்ச்சியின்மை, அல்லது இரண்டும், எப்போதும் தோன்ற வேண்டியதாகும்.

आगन्तुकज्ञानसर्वगतात्मवादेऽपि स एव दोषः । सर्वात्मन सर्वगतत्वेन ज्ञानहेतूनां मनस्संयोगादीनां सर्वसाधारणत्वात् अदृष्टहेत


# अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।"
"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।"




தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு முதலான சகல நோய்களையும் தீர்க்கவல்ல ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

Registered No. M. 3778.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனுயிருப்பது
வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசநங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர் கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப்பிரசஸ்தமானது. அவ்வாறு உயர் குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களே அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.



SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.



Printed by M. Satyanarayana, at the Hindi Prachar Press, T. Nagar, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.


# SRI VEDANTA DIPIKA


VOL. 28] JUNE 1939 [PART 6

ANNUAL SUBSCRIPTION Rs. 2—0—0



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JUL 1939
MADRAS


# ஸ்ரீ வேதாந்த தீபிகை


வருஷ சந்தா ரூ. 2—0—0

பிரதி இங்கிலீஷ் மீ 25உ வெளிவரும்

விளம்பரக் கட்டணைகள் :
மானேஜிங் எடிடருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

பிரமாதி ஹு :: ஆனி மீ



பத்ராதிபர்கள் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்
வி. அனந்தாசாரியர் (*Managing Editor*)
கிருஷ்ணபுரம், கோடம்பாக்கம் Post, Madras

உப-பத்ராதிபர்கள் :

வேதாந்த சிரோமணி T. வேணுகோபாலாசாரியர்
எ. ஸ்ரீநிவாஸராகவன், M.A., [மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.]



CONDUCTED BY
SRI VAISHNAVA SIDDHANTA PRACHARA SABHA, Ltd.,
Vani Vilas 4—5, Badriah Garden St., Park Town, Madras.

## L. G. பெருங்காயம்

ஹிங்கு அல்லது பெருங்காயம், உணவு பொருள்களுக்கு ருசியைத் தருவது மாத்திரம் அல்ல, பிரதிதினம் சாப்பிடக்கூடியதான ஔஷதமாயும் கருதப்படுகிறது. அடியில் கூறப்படும் குணங்கள் இதன் ஔஷதத் தன்மையை நன்கு விளக்கும். ராஜ நிகண்டு என்னும் ப்ராசீன வைத்திய சாஸ்திரத்தில் அடியில் கண்டபடி பெருங்காயத்தின் குணங்கள் வர்ணிக்கப்படுகின்றன. ஹ்ருதயத்திற்கு பலத்தைத் தரும். காரமாய் இருப்பதால் உஷ்ண வீர்யமுள்ளது, வயிற்றில் உண்டாகும் கிருமிகளை போக்கும். வாயுவை கண்டிக்கும், கபத்தை தொலைக்கும், மலச்சிக்கலை நீக்கும், வயிற்று பொருமலை அகற்றும், சூலவியாதியை கொல்லும், நேத்திர ரோகத்தையும் போக்கும், குல்மம் என்னும் வியாதியை வேரோடு அறுக்கும்.

हृद्यं हिंगु कटूष्णं च कृमिवातकफापहम् ।
निबन्धाध्मानशूलघ्नं चक्षुष्यं गुल्मनाशनम् ॥

இக்குணங்களையெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறு எதுவுமன்று. இதை கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

### லால்ஜி கோது & கம்பெனி

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்

**அபலா கல்பம்**

மாதவிடாய்க் காலத்தில் ஸ்திரீகளுக்குண்டாகும் "ப்ரதரம்" அல்லது "பெரும்பாடு" என்கிற ரத்தப்பெருக்கு, வெட்டைச் சூட்டினால் மர்ம ஸ்தானத்திலிருந்து வெண்மையான திரவப் பொருள் சிறுகச் சிறுக வெளிப்படுதல், கர்ப்பம் அடிக்கடி சிதறுண்டுபோதல் முதலிய கர்ப்பாசய சம்பந்தமான வியாதிகளை அறவே யொழிப்பதில் ஒப்புயர்வற்ற சக்தி வாய்ந்தது. 1 பாட்டில் விலை ரு. 2 8 0

**ஸித்த கல்ப மகரத்வஜா**

நரம்புத்தளர்ச்சி, இளமைப்பருவத்திலுண்டான துர்பழக்கங்களினலேற்படும் அநேக விதமான வியாதிகள், வீர்யக் குறைவு, ஹிருதயத் துடிப்பு, இரத்தக் குறைவு, இரத்த அசுத்தம் முதலானவைகளுக்கு "அபாரசக்தி வாய்ந்த டானிக்" "ஸர்வரோக நிவாரிணி" என்று ஆயிரக்கணக்கான வைத்திய நிபுணர்களால் சென்ற 25 வருடங்களாகப் போற்றப்படுகிறது.

60 மாத்திரை ரு. 10 30 மாத்திரை ரு. 5

தபால் பெட்டி 151 | மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி, லிமிடெட் | மதராஸ்


14 JUL 1959 MADRAS

## விஷயங்கள்.

பக்கம்.


1. புள்ளூருங்கள்வன் — தி. ராமஸ்வாமி அய்யங்கார் .... 131
2. பிராம்மண்யமும், ஸ்ரீவைஷ்ணவமும் — தி. ஈ. வீரராகவாசாரியர் .... 135
3. பாநீய குணங்கள் — வி. அநந்தாசாரியர் .... 137
4. திருப்பதி வித்யாசாலா — ஓர் ஹிதைஷி .... 138
5. மலமாஸ நிர்ணயம் — ஓர் சாஸ்திரீ .... 139
6. ஸந்தேஹ பரிஹாரம் — வே. ஸ்ரீநிவாஸாசாரியார் .... 139
7. பஞ்ச கன்னிகைகள் — டி. ஸ்ரீநிவாஸராகவாசாரியார் .... 142
8. வேதாந்த தேசிகருசல் விளக்கம் .... 145
9. புஸ்தக விமர்சம் .... 149
10. சர்க்கரையின் உத்பத்தி ... 150



பண்டிட் நோரி ராமசாஸ்த்ரிகளின்

## க்ஷீரவர்த்தினி (ரெஜிஸ்டர்டு)

(தாய்ப்பாலை வ்ருத்தி செய்யும்)

தாய்களுக்கு ஓர் அருமையான டானிக். குழந்தைகளை ஈரல், குலைக்கட்டிகளினின்றும் காப்பாற்ற அவைகளைத் தாய்ப்பாலால் போஷிப்பது நல்லது.

புட்டி 1க்கு ரூ. 2-0-0

ஆயுர்வேத பூஷண பண்டிட் நோரி ராமசாஸ்த்ரி A.K.A.C.

"ஆயுர்வேத நிலயம்"

பெஜவாடா. M.S.M.Ry.

| | | |
|---|---|---|
| ந்யாய ஸித்தாஞ்ஜனம் வ்யாக்யானத்துடன் | ரூ. | 5 0 0 |
| தத்வடீகை | ரூ. | 5 0 0 |
| வேதார்த்த ஸங்க்ரஹம் தமிழ் உரையுடன் | ரூ. | 3 0 0 |
| ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம், ஸ்ரீ ஸ்தவம் தமிழ் உரையுடன் | ரூ. | 1 0 0 |
| ஸம்ப்ரதாய பரிசுத்தி வ்யாக்யானத்துடன் | ரூ. | 1 0 0 |
| அபீதிஸ்தவம் தமிழ் உரையுடன் | ரூ. | 0 8 0 |
| ஸ்ரீபாஷ்யம்—பத்து வியாக்கியானங்களுடன் முதல் வால்யூம் பைண்டு செய்தது | ரூ. | 6 12 0 |
| ஷை 2வது வால்யூம் ” | ரூ. | 6 12 0 |
| ஸ்ரீ தேசிகன் ஸ்தோத்திரங்கள் தேவநாகரத்தில் அச்சிட்டது | ரூ. | 1 0 0 |

இன்னும் பல ஸம்ப்ரதாய புஸ்தகங்களும் ஸம்ஸ்கிருத புஸ்தகங்களும் வேதாந்த தீபிகை பழய ஸம்புடங்களும் கிடைக்கும்.

Vedanta Dipika office

KRISHNAPURAM, KODAMBAKKAM POST, MADRAS.


ஸ்ரீ:

श्रियै नमः

त्रिभुवनकमनं तमालवर्णं रविकरगौरवरांबरं दधाने ।
वपुरलककुलावृताननाब्जे विजयसखे रतिरस्तु मेऽनवद्या ॥

# ஸ்ரீ வேதாந்த தீபிகை


ஸம். 28. | பிரமாதி ஞு ஆனி மீ 12உ 25-ஜுன் 1939 | ஸஞ். 6


## புள்ளூருங்கள்வன்.


[ மைலாப்பூர் தி. ராமஸ்வாமி அய்யங்கார். ]


கரிகிரிக்காவலன் வைசாக உத்ஸவத்தின் மூன்றாம் திருநாளில் கருடன்மீது ஆரோஹணித்துத் தமது சம்பூர்ண சோபையைக் காட்டியருளும் போது அவ்வைபவத்தில் ஈடுபட்டு அதில் முக்கியமாய்த் தோன்றும் பரத்வத்தில் திகைத்துப் போகுமவர்கள் அனந்தம். அவ்வூரிலவதரித்த பொய்கையாழ்வாரோ அதே வேளையில் அவ்வெம்பெருமானுடைய ஸௌலப்யத்தை எண்ணிப் பாசுரமிட்டிருப்பது விசித்திரமாக யிருக்கிறது. அப்பாசுரத்தில் சொற்கள் அமைந்திருக்கும் அழகை நோக்கின் அப்பொழுது பெருமாளுக்கும் ஆழ்வாருக்கும் பின் வருவாறு ஒரு சம்பாஷணை நிகழ்ந்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

“விண்ணோர் தொழக்கடவும் தழல்போல் சினத்த அப்புள்” என்றும் “காய்சினப் பறவை” யென்றும் “மண்கொண்ட வாமனன் ஏற மகிழ்ந்து செல்வண் கொண்ட புள்” என்றும் பலபடியாய்ப் பெரியோர் பாசுரமிட்டபடியே ஸேவை ஸாதிக்கும் ஒரு பெரிய திருவடி வாஹனத்தின் மீது “பொன்மலையின் மீமிசைக் கார்முகில்” லென்றும் “மஞ்சுயர் பொன் மேலெழுந்த மாமுகில்” என்றும் அடியாரைப் பிச்சேற்றும் வண்ணம் நம் அத்திகிரி அருள்முகில் ஆரோஹணித்து முத்தி மழை பொழியா நின்று கொண்டு உதய வேளையில் சிரமேல் கைகுவித்து நிற்கும் ஒரு கோடி அடியாருக்கு அபிமுகமாய் திருக்கோபுர வாயிலில் ஸேவை ஸாதித்தருளுகிறார். அழகு கண்டு அயர்ப்போரும், மேன்மைக்கு மனம் தோற்போரும், பெருமைக்குப் பல்லாண்டு பாடுவோருமாக விருக்கும் பெருந்திரளில் பொய்கை

யாழ்வார் பெருமாளை ஸேவித்துப் புன்னகை பூத்து "ஸ்வாமி! அடியேனுக்குத் தெரியும்" என்றார்.

பெருமாள்:—ஆழ்வீரே! என்ன தெரியும் உமக்கு?

ஆழ்வார்:—அடியேனுக்குத் தெரியும். அவ்வளவுதானே.

பெரு:—என்ன அப்படி நீர் தெரிந்துகொண்டது! உம்—சரி—இப்பெருங் கூட்டத்தில் வெளியிடவேண்டாம். ஏகாந்தத்தில் பார்த்துக்கொள்வோம்.

ஆழ்:—ஸ்வாமீ! "அறியும் உலகெல்லாம்" இது ரஹஸ்யமொன்றுமல்லவே. இங்கே குழுமியிருக்கும் அனைத்துலகு மறியும்.

பெரு:—நீர் அறிவீரென்றீர். இப்பொழுது உலகமறியுமென்கிறீர். என்ன சேதி!

ஆழ்:—"அறியு முலகெல்லாம், யானேயு மல்லேன்" உலகும் அறியும், யானும் அறிவன்.

பெரு:—அப்படி நீரும் உலகமும் அறிந்ததுதான் என்ன? எமது பரத்வத்தை இப்போது இக்கருட ஸேவையில் கண்ட பிறகு என்னை யார் என்ன சொல்லக்கூடும்?

ஆழ்:—ஆம். "பொறிகொள் சிறை உவண மூர்த்தாயை" அழகிய புள்ளிகளோடு ப்ரகாசிக்கும் அஞ்சிறைப்புள் தனிப்பாகனாய் பரத்வம் தோன்ற விளங்கும் தேவரீர் விஷயமான உண்மையைத்தான் அடியோங்கள் அறிந்திருப்பது. இந்த விசேஷ ஸேவையிலும்,—ஆம், அடியோங்களை "அவனைவிடத்தான் யானார்" என்று அகலச்செய்யும் பரத்வம் முன் நிற்கும் இத்தருணத்திலும்;—நாங்கள் மறக்கவொண்ணாத உமது ஆச்ரிதபாரதந்த்ரியமும், ஸௌலப்ய ஸௌசீல்யங்களும் தேவரீரிடத்து விளங்குகின்றனவே! அவற்றை அறிந்த அடியோமைப் பரத்வத்தைக் காட்டி மிரட்டவொண்ணுமோ?

பெரு:—எதைக்கொண்டு இப்பொழுது எனது ஸௌசீல்யாதி குணங்கள் தோற்றுகின்றன வென்றீர்?

ஆழ்:—ஸ்வாமீ! தேவரீர் திருமேனியை நன்றாகக் கடாக்ஷித்துக் கொள்ளவேண்டும். தேவரீர் தாமோதரனன்றோ?

பெரு:—ஆம். எனது த்வாதச நாமங்களுள் சிகரமாய் விளங்குவது தாமோதர நாமந்தான்.

ஆழ்:—முன் க்ருஷ்ணவதாரத்தில் தானே அப்பெயர் வார்த்தமானி



பெரு:—என்னமோ ஒளிமறைவாகப் பேசுகிறீரே! இன்னும் விளங்கச் சொல்லும்.

ஆழ்:—தேவரீருடைய தாயாகிய யசோதை (வெறி கமழும் காம்பேய மென்தோளி) வாசம் வீசும் கருங்குழலசைய மூங்கிலைப் பழிக்கு மெல்லிய (ம்ருதுவான) தோள்கள் சோர (கடை வெண்ணெய்) வெண்ணெய் கடைந்தாளல்லவா?

பெரு:—நானே ஒளிந்திருந்து பார்த்ததை நீர் எப்படி கண்டு இவ்வளவு அழகாய் வர்ணிக்க வல்லவரானீர்! உம். அப்புறம்.

ஆழ்:—அவள் அவ்வண்ணம் கடைந்து நாராகுறியேற்றி நன்கமைய வைத்ததை அவள் சென்ற பிறகு தேவரீர் களவாடி உண்டதுண்டன்றோ?

பெரு:—என் களவை இப்படி வெளிப்படுத்தலாமா, என்னிடத்தில் ஆர்வமுடைய நீரே இப்படிச் செய்தால்—

ஆழ்:—களவோடு நின்றதா தேவரீரது கீர்த்தி! அக்களவுக்காகக் கட்டுண்டு நின்றது திருவுள்ளத்தில் நினைவில்லையா?

பெரு:—ஏதேது! எனக்கு எதற்காகக் கட்டேற்பட்டது?

ஆழ்:—அறியீரா! எங்கள் கட்டுக்களெல்லாம் நழுவுவதற்காகத்தான்.

பெரு:—நான் கட்டுண்டால் உங்கள் கட்டு எப்படித் தளரும்?

ஆழ்:—தேவரீர் உரலோடு கட்டுண்ட பெற்றிமையைப் பாடுமடியோமுடைய (ஸம்ஸாரக்) கட்டுக்களெல்லாம் தளர்ந்து விடுகின்றன.

பெரு:—இது வென்ன! தர்க்க ந்யாயத்திற்கு விரோதமாகப் பேசுகிறீரே! கட்டின நிலையை தியானம் செய்தால் கட்டின நிலையன்றோ ஏற்பட வேண்டும்.

ஆழ்:—தேவரீர் க்ருஷ்ணவதாரம் எடுத்து எத்தனையோ விலக குலிங்கனைபோல் தர்க்க ந்யாயமும் கடமாடிப்போய் அரண்யகத்தில் (உநிஷத்தில்) புகுந்துகொண்டது.

பெரு:—நிரம்ப கவிசாதுர்யம் கொண்ட சொல்லாயிருக்கிறதே!

ஆழ்:—இது என்பேச்சல்ல, இப்படியே ஒரு கவி ஸிம்ஹம் தோன் பேசப் போகிறது.

பெரு:—அப்படியா! கதையைவிட்டு எங்கேயோ போய்க் கவிபா கொண்டிருக்கிறீரே! ஏதோ கட்டு என்று சொன்னீரே! எப்படி என அது ஏற்பட்டது என்று சொல்லும்.

ஆழ்:—(கடை வெண்ணெயுண்டாயை) யசோதை வைத்த வெண்ணெயைக் களவாடி உண்ட பிறகு அவள் வந்துபார்த்து நீராமிது செய்தீரெ உம்மைக் கோல்கொண்டு மிரட்டவில்லையா?

பெரு:—நான்தான் சாப்பிட்டேனென்று அவள் எப்படி அறிந்தா(ள்)

ஆழ்:—முழுதும் வெண்ணெயளைந்து தொட்டுண்ணும் முகிழிள சிறு தாமரைக்கையும், வெண்ணெய் தோய்ந்த செவ்வாயும் உம்மைக் காட்டி கொடுத்து விட்டன.

பெரு:—அடாடா! கண்டு என்ன செய்தாள்?

ஆழ்:—என்ன செய்தாளா? அப்பொழுது நீர் பட்டபாட்டை இ(னி) வரும் கவிஸிம்ஹமல்லவா சரியானபடி இப்படி வர்ணிக்கப்போகிற(து) "ஹார்த்தும் கும்பே—".

பெரு:—ஆழ்வாரே! அதை அவர் வாயால் கேட்டு நான் பி(ன்) ரஸிக்கிறேன். மேலே பெரிய மஹோத்ஸவம் இருப்பதால அவகாசமில்லை நடந்ததை நீரே சொல்லும்.

ஆழ்:—தேவரீர் அப்பொழுது தாமரைக் கண்கள் நீர்மல்க மையமே நின்ற நிலை வந்து என் நெஞ்சையுருக்கியபடியால் பேச ஆரம்பித்தேன் க்ஷமிக்கவேண்டும்.

பெரு:—நான் நின்ற நிலை கிடக்கட்டும். தாயாகிய யசோதை என்ன செய்தாள்?

ஆழ்:—(தாம்பே கொண்டார்த்த) கண்ணிக் குறுங்கயிற்றால் மீத ரைக் கட்டினாள்! ஐயோ!

பெரு:—கயிற்றாலேயா?

ஆழ்:—ஆம். பிறர் வேண்டாமென்று தூர எறிந்த கண்ணிநுண் சிறுத்தாம்பினால்.

பெரு:—அதிலொன்று மதிசயமில்லை. பிறர் வேண்டாம் என்று உத றிக் கைவிட்ட பிறகே எனக்கு வஸ்துக்கள் பிடிக்கும். உமக்குத் தெரியு மன்றோ இந்த ரஹஸ்யம்.

ஆழ்:—அப்படி உமக்கு இன்பமான கயிற்றால்தான் கட்டினாள்.

பெரு:—எப்பொழுதோ நடந்ததை இப்போது எப்படி ஞாபகம் வைத்துக்கொண்டு எனக்கும் நினைப்பூட்டுகிறீர்?

ஆழ்:—(தழும்பு) கட்டின கட்டில் அன்றேற்ற தழும்பு இன்றுகூட உம் திருமேனியில் ப்ரகாசிக்கிறதன்றோ. அந்த தழும்பைத்தான் யாது மறிவன். உலகமுமறியுமென்று அடியேன் சொன்னது. தேவரீர் இப்பொழுது பரத்வத்தைக் காட்டி எம்மை வசியப்படுத்த முயலும்போது உமது ஸௌசீல்யம் எங்களையெல்லாம் முன்னமே ஆட்கொண்டுவிட்டதென்பதை விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுகிறேன். இதோ பரத்வம்,—வேதங்



களுக்கெல்லாம் மேல் சாற்றுப் ஸர்வாத்மாக்களுக்கும் ஸாமான்ய தைவதங்களான பொதுநின்ற பொன்னங்கள் இதோ,—என்று வேதாத்மாவாகிய விஹகேச்வரன் உமது திருவடிகளைக்கையிலேந்தி காட்டி நின்றபோதும் அன்று ஆய்ச்சி உரலோடார்த்த தழும்பே அடியோங்கள் உள்ளத்தைப் பிச்சேற்றுவது. அதை மீறியன்றோ இனி தேவரீருடைய பரத்வத்தில் ஈடுபடவேண்டும்படியாவது!

"அறியுமுலகெல்லாம், யானேயுமல்லேன்
பொறிகொள்சிறை உவணமூர்ந்தாயை—வெறிகமழும்
காம்பேயமென்தோளி கடைவெண்ணெயுண்டாயை
தாம்பே கொண்டார்த்த தழும்பு"
(முதல் திருவந்தாதி.)

[நாடக நடையில் கலம் மிகுந்த நம் முக்கிய பத்திராதிபர் ஸ்வாமி இதைப் பொறுத்தருள்வாராக. தி. ரா.]

---

# பிராம்மண்யமும், ஸ்ரீவைஷ்ணவமும்.

[தி. ஈ. வீரராகவாசாரியர் திருவாதி]

"**वेदानां किञ्चिदधीत्य ब्राह्मणः**" (வேதங்களின் சிறிது பாகத்தை அத்யயனம் செய்த பிறகு ப்ராம்மணனாகிறான்) என்று போதாயனரால் சொல்லப்பட்டது. இங்கு சொல்லிய ப்ராம்மண்யமானது ஜாதிரூபமன்று, குண நிபந்தனமானது. இதை குலம் என்பார்கள். குலம் பேதிக்கும். ஜாதி பேதியாது. "குலம் தரும்" "பண்டைக் குலத்தைத் தவிர்த்து" என்றிவ்வாறாக குலம் உண்டாகவும் அழியவும் கூடும் என்பதை ஆழ்வார்கள் வெளியிட்டார்கள். "வேதங்களை ஓதாமல் மற்றதில் ச்ரமப்படுமவன் ஜீவ தசையிலேயே சூத்ரனாகிறான் என்றார் மனுவும். பகவத் பக்தியுள்ளவர்களை ப்ராம்மணர்கள் என்றும் அது இல்லாதவர்களை சூத்ரர் என்றும் ப்ரமாணங்கள் சொல்லா நின்றன, இங்கு குலத்தினால் உயர்வு தாழ்வு உண்டாகின்றது என்றே பெரிய ரஹஸ்யத்திலே ஆசாரியன் நிர்வாஹம் செய்துள்ளார்.

"**परीक्ष्य लोकान् कर्मचितान् ब्राह्मणो निर्वेदमायात्**" என்கிற முண்டகோபநிஷத்திலுள்ள ப்ராம்மண சப்தமானது ஜாதியைச் சொல்லுவதானால் க்ஷத்ரியர் முதலியவர்களுக்குப் ப்ரம்ம விசாரம் கூடாதொழியும். ஆகவே ஸாங்கமாக எல்லா வேதங்களையும் ஓதியவன் என்பதாக ஆசார்யர்கள் வ்யாக்யானம் செய்தார்கள். இப்படியே "**तस्मात् ब्राह्मणः पाण्डित्यं निर्विद्य**"

என்கிற ச்ருதியிலுள்ள ப்ராம்மண சப்தங்கள் ஜாதியைச் சொல்ல ஜாதி ப்ராம்மண்யமன்றிக்கே குணக்ருதமான ப்ராம்மண்யமும் உண்டாகையாலேயே ப்ராம்மணனை பத்துவிதமாக குணம் முதலியவற்றை யிட்டு ஸ்ம்ருதிகளில் விபாகம் செய்துயிருக்கிறது.

இப்படிக்கு அத்யயனத்தினால் ப்ராம்மணன் ஆகிறான் என்றது போல் "அறியக்கற்றுவல்லார் வைட்டணவர்" இத்யாதிகளாலே திவ்ய ப்ரபந்தத்தைக் கற்பதால் ஸ்ரீ வைஷ்ணவனாகிறான் என்று சொல்லப்பட்டது. இவ்வாறாக உள்ள ப்ரமாண ஸம்ப்ரதாய வசனங்களைக்கொண்டே வேதாத்யயனத்தால் ப்ராம்மண்யம் ஸித்திப்பதுபோல் திவ்ய ப்ரபந்தத்தை ஓதுவதாலேயே ஸ்ரீ வைஷ்ணவத்வம் ஸித்திக்கிறது என்றார்கள் பூர்வாசாரியர்களும்.

(1) ஆகவே இங்கு சொல்லிய ப்ராம்மண்யம் ஜாதி ரூபம் என்று எண்ணி மேலே காட்டிய ப்ரமாண ஸம்ப்ரதாய வசனங்களை வ்ருதாவாக தூஷித்து ஸ்ரீ வைஷ்ணவதாஸர் ஒருவர் சென்ற மாஸ தீபிகையில் எழுதியுள்ள ஆக்ஷேபங்கள் நிரவலம்பனங்களே

பஞ்சஸம்ஸ்காராதிகள் உள்ளவர்கள் திவ்ய ப்ரபந்த படனம் இல்லாதிருந்தால் ஸ்ரீ வைஷ்ணவர்களாகமாட்டார்களே என்கிற ஆக்ஷேபமும் ஸரியன்று. மத்வ வைஷ்ணவர்கள் என்றும், ஸ்ரீ வைஷ்ணவர்கள் என்றும் உலகத்தில் வ்யவஹாரம் இருப்பதை ஒருவரும் ஆக்ஷேபிக்க முடியாது. மத்வமதஸ்தர் உள்பட அருளிச் செயலை அதிகரிக்கும் குலத்தாரையே ஸ்ரீ வைஷ்ணவர்கள் என்பதாகச் சொல்லுகிறார்கள். பஞ்ச ஸம்ஸ்காரம், ஆஜ்ஞானுஜ்ஞாகர்மாக்களை அனுஷ்டானம் செய்வது, இவை மத்வ வைஷ்ணவருக்கும் உண்டு. ஸ்ரீ வைஷ்ணவர்கள் என்பவர் அறியக் கற்றுவல்லாரான வைட்டணவரே.

"साहि श्रीरमृता सतां" என்கிறபடியே வேதங்கள் ஸ்ரீயாக ஆகிறாப்போலே அருளிச் செயல்கள் வைஷ்ணவ ஸ்ரீயாக ஆடுகின்றன. இப்படிக்கு மேலே காட்டியுள்ள ஸம்ப்ரதாய வசனங்களின் கருத்து.

மேலும், திவ்யப்ரபந்தத்தை அர்த்தத்துடனேயே அதிகரிக்க வேண்டும் என்பதாக இவர் தைமாஸ தீபிகையில் ப்ரசுரம் செய்திருக்கிறார். அர்த்தஜ்ஞானம் அவச்யமன்று என்பதற்காகவே திவ்யப்ரபந்தத்தை ஓதுவதாலேயே ஸ்ரீ வைஷ்ணவத்வம் ஸித்திக்கிறது என்று எழுதப்பட்டிருக்கிறது. இங்கு ஓதுவதாலேயே என்கிற அவதாரணமானது அர்த்தஜ்ஞானத்தையே விலக்குமே அன்றி பஞ்ச ஸம்ஸ்காரம் முதலியவற்றை விலக்கமாட்டா என்பதை தடஸ்தர் அறிவார்கள்.



(2) திவ்ய ப்ரபந்தத்தை முன்னடி பின்னடியாக இரு கலையாரும் ஸேவித்து வருவது ஸம்ப்ரஸித்தம். இது விருத்தம் என்பதாக இவர் எழுதுகிறார். ஆறாயிரப்படி என்றும் குருபரம்பரா க்ரந்தத்தை இவர் கேட்டிருந்தால் இப்படி எழுதத் துணியார். எம்பெருமானார் திருநாட்டுக்கு எழுந்தருளிய காலத்திலே அக்காலத்தில் உள்ள ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரளாகச் சேர்ந்து முன்னடி பின்னடியாக திவ்யப்ரபந்தம் நாலாயிரத்தையும் ஸேவித்ததாக ஸம்ப்ரதாயமானது அந்தக்ரந்தத்திலே ஸ்பஷ்டம். பிள்ளான், பட்டர் முதலியோர் அப்படி நடத்திப் போந்தவர்கள். இந்த குரு பரம்பரையை எழுதியவர் நம்பிள்ளை சிஷ்யராகிய "பின்பழகிய பெருமாள்" என்பார். யாதொரு ப்ரமாண விரோதமும் அன்றிக்கே அன்று முதல் இன்றுறுதியாக உள்ள இந்த ஸேவாக்ரமத்தை நம்போன்றவர்கள் விருத்தம் என்பது அதிஸாஹஸமாகும். நிரூபணம் இல்லாத சிலரை மயங்கச் செய்து இக்காலத்து ஸேவாக்ரமத்தில் அவிச்வாஸத்தை உண்டுபண்ணுவதாகவும் ஆகிறது. ஆகவே, "திவ்யப்ரபந்த வேதபாராயணம்" என்கிற வ்யாஸத்தில் அடியேன் எழுதியிருப்பது உசிதமே.

---

## பாநீய குணங்கள்.

[V. அநந்தாசார்யன்]

நவீந நாகரீகம் தலைதூக்கி நர்த்தனமாடிக்கொண்டிருக்கும் இந்த காலத்தில் குழாய் ஜலத்தைக்கொண்டாடுவதும், கிணற்று ஜலத்தை நிந்திப்பதும் ஸர்வ ஸாதாரணம். புதியபுதிய கொடுமைவாய்ந்த வியாதிகள் தோன்றி வைத்திய சாஸ்திர விதிகளுக்கு உட்படாமல் தொந்தரவு கொடுக்கும்போது அவற்றிற்கு மூலகாரணம் யாது என்று கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்ய வேண்டியதும் அவச்யமே. கிராமங்களில் உண்டாகும் வியாதிகளுக்கும் நகரங்களில் தோன்றும் வியாதிகளுக்கும் வித்தியாசம் காணப்படுகின்றன. அதற்கு காரணம் ஆஹார விஹாரங்களின் வைஷம்யமே என்பதில் ஸந்தேஹமில்லை. ஆஹாரத்தின் குறைகுணங்களை கண்டுபிடிக்க முக்கிய ஸாதநம் குடிநீர். தர்ம சாஸ்திரங்களிலும் வைத்திய சாஸ்திரங்களிலும் ஜலத்தைப்பற்றி விரிவான விமர்சங்கள் உண்டு. ஆனால் ஸ்நாநத்துக்குரிய ஜலத்தைப்பற்றி மாத்திரம் அதிக விசாரங்கள் காணப்படுகின்றனவேயொழிய பானீயத்தைப்பற்றி நீண்ட விசாரங்கள் தென்படவில்லை. முன்னோர் விசாரம் செய்யாதவிடத்தில் நாம் அநுபவத்தையும் யுக்தியையும் ஆதாரமாகக் கொண்டு விசாரித்து நிர்ணயம் செய்யவேண்டியது அவச்யந்தானே. சில

கிராமங்களில் குளிப்பதற்காக உபயோகிக்கப்படும் குளங்களின் நீரைக்குடிப்பதற்காகவும் உபயோகிக்கிறார்கள். அது தவறு. குளிநீர் குடிநீர் ஆகாது. குழாய் வழியில் வரும் ஜலத்தைக் குடிப்பதும் உசிதமல்ல. ஆபஸ்தம்பர் "भूमिगतास्वप्स्वाचम्य प्रयतो भवति" பூமியில் தங்கியிருக்கும் ஜலத்தை ஆசமநம் செய்து பரிசுத்தனாகிறான் என்று விதித்திருக்கிறார். இந்த விதி ஆசமநத்தை மாத்திரம் பற்றியதல்ல. உட்கொள்ளுவதற்கு ஏற்ற ஜலம் இதுவே என்று பொருளாகும். குழாய் ஜலம் உத்பத்தி ஸ்தாநத்தில் மிகச் சுத்தமானது என்பதில் ஸம்சயலேசமுமில்லை. அடிக்கடி சுத்தம் செய்யமுடியாத உட்புறத்தில் கலும்பு, துரும்பு, பாசி முதலானவற்றின் ஸம்பந்தத்தால் ஜலத்தின் குணம் மாறும் என்பதில் ஸந்தேஹத்திற்கு இடமுண்டா? இப்படிப்பட்ட குழாய் ஜலத்தை வைத்துக்கொண்டு பழைய கிணறுகளை மூடியும் புதிதாய் கிணறு தோண்டுவதைத் தடுத்தும் இது முதலான புதிய ஏற்பாடுகளை சில முனிசிபாலிடிகள் செய்துவருகின்றன. கிணறுகளைச் சுத்தமான நிலையில் வைத்துக்கொள்ள ஜனங்களுக்கு உதவிபுரியவேணுமேயல்லாமல் கிணறுகளையே லோபிக்கச் செய்வது தகாத கார்யம். முனிசிபல் அதிகாரிகள் இதை உணருவார்கள் என்று நம்புகிறோம்.

---

## திருப்பதி வித்யாசாலா

(ஓர் ஹிதைஷீ)

திருப்பதி திருவேங்கடமுடையான் பக்தர்கள் ஸமர்ப்பிக்கும் திர
யத்தின் மிகுதி பாகத்தை வித்யாபிவ்ருத்திக்காக விநியோகப்படுத்தத் நி
வுள்ளம்பற்றியிருக்கிறார் என்ற செய்தி கேட்டு மிகவும் ஸந்தோஷிக்கிறோ
வடமொழியில் எண்ணிறந்த சாஸ்திரங்களும் தமிழ் முதலான தேச பாஷை
களில் அநேக நூற்களும் ஆராய்ச்சி செய்யவேண்டிய நிலையில் இருக்கி
யன. மேற்படி வித்யாலயாதிகாரிகள் இதில் முக்கியமான சில அம்சங்க
கவனிப்பாராக. சாஸ்திரங்களின் ஆராய்ச்சியைக்கொண்டு ஜநங்கள், வி
ஷித்து கொடையாளிகளான வகுப்பினர் உலக நடவடிக்கையில் மேன்மே
லும் முன்னேற்றமடையும்படி செய்யவேண்டியது முக்கியமான கார்ய
18 வித்யா ஸ்தாநங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எல்லா வித்யா ஸ்தாநங்க
யும் ஒரே இடத்தில் ஒரே ஸமயத்தில் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்வ
அஸாத்யமான கார்யம். மேற்சொன்ன கொள்கையை மேற்கொண்டு வே
செய்ய இறங்கவேண்டுமானல், ஆயுர்வேதம், ஜ்யோதிஷம், தர்ம சாஸ்திர



ஆகமம், புராணம் இவைகளிலேயே முக்யமாய் இறங்கவேணும். தர்க்க
மீமாம்ஸாதிகளில் அதிநுட்பமான விஷயங்களில் ஆராய்ச்சி செய்வதனால்
புத்தி விருத்தியாகுமேயல்லாமல் உலக நடவடிக்கைக்குப் பயன் ஏற்படாது.
ஆனால் நமது புத்தியை சாஸ்திரவிமர்சத்துக்கு உபயோகப்படுமாறு செய்து
கொள்ள தர்க்க வ்யாகரண மீமாம்ஸைகளில் சிறிதளவு பரிசயம் அவச்யமே,
அவ்வளவோடு அதை நிறுத்திக்கொண்டு புராணாகமாதிகளை ஆராய்ச்சி செய்
வித்து அவற்றிலுள்ள அரிய பெரிய விஷயங்களை வெளிப்படுத்தி உலக நட
வடிக்கையில் பழைய சாஸ்திரங்கள் இன்றியமையாதவை என்றதை அறி
வித்து உலகம் நன்மைபெற பாடுபடவேணும் என்று.

---

## மலமாஸ நிர்ணயம்

(ஓர் சாஸ்திரீ)

வருகிற ஆனி மாஸத்தை மலமாஸம் என்று பல பஞ்சாங்கங்கள்
கூறுகின்றன. தர்ம சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்க்குமளவில் மலமாஸமா
கக்கொள்ள இடமில்லை. ஒரு ஸௌரமாஸ மாஸத்தில் இரண்டு தர்சங்கள்
அடங்கி வந்தால் மலமாஸமாகும் என்று சில வசநங்கள், ஒரு சாந்திர
ய..ஸத்தில் இரண்டு ஸங்க்ரமணங்கள் வந்தால் மலமாஸமென்று சில வசநங்
கள். இவ்விதமான பல வசநங்களுக்கு ஐககண்ட்யம் செய்து பொருள்கூற
வேண்டியது அவச்யம். இவ்விடத்தில் வைதிக ஸார்வபௌமர் தெளிவாய்
உரை எழுதியிருக்கிறார் தர்சம் என்னும் பதத்துக்கு தர்சாந்தம் என்று
அர்த்தம். இந்த ஆனிமீ 32உ அமா 53-2, அன்றைய தினமே கடக ரவி,
32, 31. தர்சாந்தத்தினுள் இரண்டு ஸங்க்ரமணம் இல்லையாதலால் ஆனிமீ
மலமாஸம் இல்லை. ஆடிமீ மே மலமாஸமாகும் என்று நிர்ணயிக்கவேண்டி
யிருக்கிறது.

---

## ஸந்தேஹ பரிஹாரம்.

(கண்டப்பாளையம் வித்வான் வே. ஸ்ரீநிவாஸாசாரியார்.)

1939ஹு மேமீ 25ந்தேதியில் வெளிவந்த வேதாந்த தீபிகையில்
ஸ்ரீ உபய காஞ்சிபுரம் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ அம்ருதாஸ்வாதிநியில் 33-வது பாசுரத்தில் ஸரியான அர்த்தம் விளங்க
வில்லை யென்று யெழுதியிருந்ததை அடியேன் பார்த்தேன். அதற்கு ஆசாரி

யாள் ஸன்னிதியில் அடியேன் தெரிந்துகொண்ட பாடத்தையும் அதை யநு
ஸரித்த பதவுரையையும் தாத்பர்யார்த்தத்தையும் விஞாபநம் பண்ணிக்
கொள்ளுகிறேன்.

அலர்ந்தவம்புயத்திருந்து தேனருந்தி யின்னகல்
அல்குலார் அசைந்தடைந்த நடைகொளாதது அனமெனோ?
நலம் தவிர்ந்ததால் அதென்கொல்? நாவின்வீறு யிழந்ததால்
நாவணங்கு நாதன் தந்த நாவின்வீறு யிழந்ததென்?
சலம் தவிர்ந்து வாதுசெய்து சாடிமூண்ட மு(மி)ண்டரை
செருவில் ஆர் எனக்கனைத்து உரைத்த எதிராசர்தம்
வலம் தருங்கை நாயனார் வளைக்கு யிசைந்த கீர்த்தியால்
வாரிபாலது ஆம்அது என்றும் மாசில்வாழி வாழியே.

பதவுரை:—அனம்-ஹம்ஸ பட்சியானது, அலர்ந்த-மலர்ந்த, அம்புய
திருந்து-தாமரைப் பூவிலிருந்து, தேன்-தேனை, அருந்தி-குடித்து, இன்-அ
காயும், அகல்-விசாலமுமான, அல்குலார்-ஜகநங்களையுடைய ஸ்த்ரீகளால்
அசைந்து அடைந்த-ஒய்யாரமாகவும் மந்தமாகவும் அடையப்பட்ட, நடை
நடையை; கொளாதது-கொள்ளாமலிருப்பது, அனம் எனோ-என்ன காரண
மோ? நலம்-ஸந்தோஷம், தவிர்ந்ததால்-தவறிப்போனபடியால், அது-அந்
ஸந்தோஷம் தவிர்ந்தது, என்கொல்-என்ன காரணத்தினாலோ? நாவின்-நா
கினுடைய, வீறு-(நீருடன் கலந்த பாலைப் பிரித்தெடுக்கும்) ஸாமர்த்யத்தை
இழந்ததால்-இழந்தபடியால், நாவணங்கு நாதன் தந்த-வாக்தேவி வல்ல
பனை ப்ரம்ஹாவால் கொடுக்கப்பட்ட, நாவின்-நாக்கினுடைய, வீறு-ஸாமர்
யத்தை இழந்தது, என்-இழந்த காரணம் என்ன? மூண்ட-(வாதப்போர்
முயற்சிகொண்ட), முண்டரை-(ஜைனர்முதல் அத்வைதிகள் வரையிலுள்ள
முண்டித சிரஸ்கர்களை, அல்லது மிண்டரை-கர்வக வீரர்களை, சலம்-அடு
மை, தவிர்ந்து-விட்டு, வாது செய்து-வாதப்போர் புரிந்து, சாடி-நிரஸித்
செருவில்-வாதப்போரில், ஆர்-(இன்னும் வாதத்திற்கு வரக்கூடியவர்க
யார்? என-என்று, கனைத்து உரைத்த-கர்ஜித்து உத்கோஷித்த, எதி
சர்தம்-ஸ்ரீபாஷ்யகாரருடைய, வலம் தருங்கை-(ஆச்ரிதர்களுக்கு) பலத்தை
கொடுக்கும் திருக்கைகளையுடைய; நாயனார்-ஸர்வோபகாரகனான ஸ்ரீய: பதி
னுடைய, வளைக்கு இசைந்த-ஸ்ரீபாஞ்சஜந்யத்திற்கு ஒப்பான, கீர்த்தியா
(உலகம் நிறைந்த) புகழினால், வாரி-ஜலதத்துவம் (முழுவதும்), பாலது
ஆம்-பாலாகி விட்டது, அது-அந்தப் புகழானது, என்றும்-எக்காலத்திலும்,
மாசில்-குற்றமற்று, வாழி வாழியே-வாழ்ந்திடுக வாழ்ந்திடுகவே.



திரண்ட பொருள்

முன்னொரு நாள் நம்மிராமாநுச முனிவர் அத்வைதிகள் முதலிய வேத விருத்த ஸித்தாந்திகளை வாதத்தில் வென்று ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஸ்தாபித்து, ஆராத அருளமுதம் பொதிந்த கோவிலான ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீபாஷ்யப்ரவசனம் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கும்போது அம்மஹானை ஸேவிக்க ஸ்ரீகாஞ்சியிலிருந்து கேசவாசார்யரென்றும் கோபாலாசாரியரென்றும் திருநாமமுடைய இரண்டு ஸ்வாமிகள் அவ்விடம் எழுந்தருளி ப்ரபாத காலத்தில் ஸ்ரீசந்த்ரபுஷ்கரிணியில் நீராட்டம் கண்டருளி ப்ராதக்கால அநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு புஷ்கரிணியின் அழகையும், அதில் தாமரை முதலான புஷ்பங்கள் அலர்ந்து மதுபரிதங்களாய் இருப்பதையும், ஸாரஸம்; சக்ரவாகம் முதலான பட்சிகள் தங்கள் தங்கள் பேடைகளோடு கூடி ஸந்தோஷத்துடன் செவிக்கினிதாகக் கூவிக்கொண்டு ஸஞ்சரிப்பதையும் பார்த்துக்கொண்டே புஷ்கரிணியை ப்ரதக்ஷிணம் செய்து வருகையில் அங்கு ஓர் ஹம்ஸ பட்சியானது மனக்களிப்பிழந்து தலைகுனிந்து மௌனமாக யிருப்பதைப் பார்த்து அந்த கேசவாசார்யரென்பவர் கோபாலாசார்யரை நோக்கி வினவ அவர் பதிலளிக்கப் பின்வருமாறு ஸம்பாஷணை நடந்தது:—

கே. ஸ்வாமின்! இவ்வன்னமானது மலர்ந்த தாமரை மலரிலிருந்து தேனைப்பருகி, இனியது மகன்றதுமான ஜகநங்களையுடைய ஸ்த்ரீகளின் அசைந்தசைந்து ஒய்யாரமாக நடக்கும் நடையைக் கொள்ளாமல் ஒரு மூலையில் தனியாக முகவாட்டத்துடனிருக்கிறதே! அது ஏன்?

கோ. அதற்கு ஸந்தோஷம் தவறிவிட்டபடியால்.

கே. ஸந்தோஷம் தவறினமைக்குக் காரணமென்?

கோ. நீரிற்கலந்த பாலைப் பிரித்தெடுக்கும் ஸாமர்த்யம் அன்னப் பறவைகளின் நாவுக்குண்டு, அந்த பெருமையை இப்போது அது இழந்தமையால்.

கே. ஸரஸ்வதீ வல்லபன் கொடுத்த அந்நாவின் பெருமையை அது இழந்த காரணமென்?

கோ. வாதப்போருக்கு மகா ஸம்ரம்பத்துடன் வந்த மொட்டைத் தலையர்களான ஜைனர்கள் முதலிய வேத விருத்த ஸித்தாந்திகளை அலுவில்லாமல் வாதத்தில் வென்று, இன்னமும் யார் வாதப் போருக்கு வருகிறவர்களென்று கர்ஜித்துக்கொண்டு உத்கோஷிக்கின்ற நம் யதிராஜருடைய, ஆச்ரிதர்களுக்கு அபயப்ரதானம் பண்ணும் திருக்கையையுடைய ஸ்ரிய:பதியின் ஸ்ரீபாஞ்சஜந்யம்போல் வெளுத்த கீர்த்தியினால் உலகிலுள்ள

ஜலதத்வம் முழுவதும் [illegible]. ஆகலால் நீரின் உலகில்லாமல் போய்[illegible] பாலொடு கலக்க நீரில்லாமை[illegible] க்ஷீரவிஸாரம் செய்யும் ஸாமர்த்யத்தைக் காட்டக்கூடிய இடமில்லா[illegible] மனக்களிப்பின்றி அது இருக்கிறதென்று பதிலளித்தார். நீரெ[illegible] [illegible] கா வர்யா ?

---

# பஞ்ச கன்னிகைகள்.

T. ஸ்ரீநிவாஸராகவாசார்யர்

अहल्या द्रौपदी तारा सीता मन्दोदरी तथा ।
पंचकन्याः स्मरेन्नित्यं महापातकनाशनम् ॥

இந்த பஞ்சகன்னிகைகள் ஸீதா மந்தோதரி இவர்கள் இருவர் மா திரம் ஸர்வசுத்தைகள் என்றும், மற்ற மூவர்கள் ஏக பர்த்ரு விரதத் அனுஷ்டிக்காவிட்டாலும் அவர்களும் உத்தம பதிவிரதா ரத்னங்கள் என் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால்—

சரண்யனுடைய விபவாவதாரத்தின் புண்யதீர்த்தத்தில் एकैकम प्रोक्तं महापातकनाशनं என்றும் यस्य स्मरणमात्रेण जन्मसंसारबंधनात् .... विमुच्यते என்றும் சொல்லப்பட்ட ஸ்ரீமகாவிஷ்ணுவின் ஸாக்ஷாத் அவதா மான ஸ்ரீராமசந்த்ர திவ்ய சரணாரவிந்த ஸ்பர்ச பாக்யம் அஹல்ய தேவிக்கு ஏற்பட்டபடியால் அவள் உத்தம பதவியை அடைந்துவிட்டா என்பது ஸ்பஷ்டம். அந்த பாக்யத்தை அவள் அடைவதற்குக் காரண யாதெனில் ப்ராரப்த கர்ம சேஷத்தினால் मतिं चकार दुर्मेधाः देवराजकुतूहला என்று புத்தி பூர்வமாய் கற்பை இழந்து அந்த பயத்தினால் உண்டா சாபத்தின் விமோசனகாலத்தை நிரீக்ஷித்துக்கொண்டு ஸ்ரீராகவனுடை வரவை எதிர்பார்த்து அனேக வர்ஷங்கள் ஸ்ரீராமநாமத் யாகம் செய்தப யால் திருமகளுரின் திவ்ய திருவடிப்ராப்தி அவளுக்குக் கிடைத்தது.

இது விஷயம் 1938 ஜூலை தீபிகையில் அடியேனுடைய ராமாயண சாராவளியில் விமர்சை செய்திருக்கிறேன்.

## த்ரௌபதி.

பஞ்சபர்த்தாக்களை அனுபவித்த இந்த புண்யவதியின் சரித்திரத்தில் ஒரு அன்யாத்ர்சமான விசேஷம் உண்டு. ஒவ்வொரு வருஷாரம்பத்திலும் ஆனுபூர்வ்யமாய் பாண்டவர்களில் ஒருவரை பர்த்தாவாக வரித்து மற்ற நால்வர்களையும் பர்த்தாவின் ப்ராத்ரு கோஷ்டியில் சேர்த்து அனந்யபரையாய் ஏகபத்னிவிரதம் கொண்டு அந்த வர்ஷாவஸானத்தில் தன் திருமேனியை அக்னி



யில் ஆகுதி பண்ணி புநச்சுத்தியாய் வேறு சரீரத்துடன் அக்னியிலிருந்து கிளம்பி மற்றொருவரை யதாபூர்வம் பர்த்தாவாக வரித்தாள். இதற்கு பாதிவ்ரத்ய பங்கம் என்கிற தோஷம் வாராதென்று ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த கீழ்ச்சொல்லிய திவ்ய ஸூக்தியால் தெரிந்து கொள்ளலாம் அதாவது.

अतिप्रसंगादवधीरयन्त्या प्राचीनया संयमितो नियत्या ।
पांचालकन्यामिव पंचमुक्तां धर्मस्सतीरादतता दशीस्ताः ॥ (यादवाभ्युदयम्)

இந்த ஐதிஹ்யத்தைக் கொண்டே நாளயவரையில் பல விடங்களில் த்ரௌபதியம்மன் கோவில் திருவிழாக்காலங்களில் வருஷத்திற்கு ஒரு நாள் பக்த கோடிகள் ஸம்ஸார ஸமேதர்களாய் துர்நிரீக்ஷமாயும் அகாதமாயுமுள்ள தீயில் குதித்து ஒரு விதமான வைகல்யத்தையும் அடையாமல் அத்தீயிலிருந்து வெளியேறுவதை அநேகர் பார்த்திருக்கிறோம்.

## தாரை.

வாலி சுக்ரீவர்களை மாறி மாறி பர்த்தாவாக வரித்த தாரா தேவியையும் உத்தம பதிவிரதா கோஷ்டியில் சேர்ப்பது உண்டு. பாதிவ்ரத்யபங்கத்திற்கு கேவலம் சரீர ஸ்பர்சதோஷமே காரணமன்று मनो हि हेतुस्सर्वेषां इन्द्रियाणां प्रवर्तने । शुभाऽशुभास्ववस्थासु तच्च मे सुव्यवस्थितम् என்று உரைத்த சிறிய திருவடிகளின் ஸ்ரீஸூக்தியே இதற்கு ப்ரமாணமாகும். வாலியை பர்த்தாவாக வரித்த பின் சுக்ரீவனை கேவலம் ப்ராத்ரு கோஷ்டியில் சேர்த்துதான் அன்பு காட்டியதும், பிறகு துந்துபிவாலி யுத்தத்தில் வாலி போய்விட்டதாக எண்ணின சுக்ரீவனை விதவா விவாக க்ரமப்படி சாஸ்த்ர பூர்வமாக மணந்ததும் மறுபடி வாலி திரும்பிவந்ததும் தான் செய்த அஜ்ஞாந க்ருத தோஷத்திற்கு ப்ராயச்சித்தம் செய்துகொண்டு வாலியை மறுபடியும் ஸ்வீகரித்ததும் புநச்ச வாலிஸம்ஹாராநந்தரம் சுக்ரீவனை யதாக்ரமம் மணந்து அனுபவித்த காலத்திலும் தன்னுடைய பர்த்தாவிடத்தில் அனந்ய பக்தி செய்தபடியால் இவளுக்கு பாதிவ்ரத்ய தோஷம் வாராதென்று சாஸ்திரமறிந்த பெரியோர் சொல்லுவதுண்டு. புருஷோத்தமனை நேருக்கு நேராகத் தாம் சேவித்து निवासवृक्षस्साधूनां என்னும் त्वमप्रमेयश्च दुरासदश्च என்னும் வாக்யங்களால் பரிபூர்ணமாய் குணானுபவம் செய்தபடியால் दोषो यद्यपि तस्य स्यात् அவளுக்கு பாபசங்கை ஒருவேளை இருந்தபோதிலும் அகல்யா தேவியைப்போல் அவளுக்கும் ஸ்ரீராமகடாக்ஷவீக்ஷணம் வந்தபடியால் இவளையும் பதிவ்ரதா சிரோமணி என்று சொல்லுமது சாஸ்த்ர ஸம்மதமே ஆகும்.

### சுக்ரீவாக்ஞை.

**ऊर्ध्वं मासान्न वस्तव्यं वसन् वध्यो भवेन्मम** என்று ஆக்ஞை இட்ட சுக்ரீவன் ஹனுமத் ப்ரமுகாதிகள் வ்யக்தமாய் ஆக்ஞோல்லங்கனம் செய்தும் சுக்ரீவன் ஏன் அவர்களுக்கு தண்டனை விதிக்கவில்லை, அது விஷயம் சர்ச்சைகூட ஏன் செய்யவில்லை என்று ப்ரச்னிப்பது யுக்தமே. ஆனால் நடந்த விஷயங்களை ஆமூலாக்ரம் விமர்சிப்போமாகில் இவ்வித சந்தேகத்திற்கு ஆஸ்பதமே இல்லை. ஸ்ரீ ஸீதாகதாச்ரவணாந்தரம் ஸ்ரீ ராமபிரான் ஹனுமானை காடாலிங்கனம் செய்துகொண்டு **एष सर्वस्व भूतो मे परिष्वंगो हनूमतः** என்று பெரிய பிராட்டியார்க்கும் ஸநகாதி பிரும்மரிஷிகளுக்கும் துர்லபமான காடாலிங்கநத்தை பகவத் ஸாகித்ய பதவியைக் கொடுத்துவிட்டபடியால் கீழ் கடையில் நடந்த சிறிய குற்றங்களெல்லாம் சதேபஞ்சாசந்யாயம்போலே அதில் அடங்கிவிட்டது. லௌகிக த்ருஷ்டாந்தத்தில் ஒரு மாஜிஸ்ட்ரேட் கோர்டில் ஒருவன்மேல் ஒரு சிறிய குற்றம் சாட்டப்பட்டு இருந்தபோது அவனுக்கு ராஜாங்கத்தில் அனேகவிதமான காரணங்களைக் கொண்டு ராஜ்யபாரமே வகிக்கும்படியான ஒரு பதவி ஏற்பட்டால் தன் கடையில் எப்படி கீழ்க்கோர்ட்டில் சாட்டப்பட்ட கேஸை வாபீஸ் வாங்கிக்கொள்வார்களோ அப்படியே சர்வேச்வரனுடைய ஸாஹித்ய பதவி கிடைத்த ஹனுமானை சிக்ஷிக்க வல்லவர் யார்? ஆகையால் அவரை அதீதமான குற்ற விஷயமாக விசாரணை செய்வதே அயுக்தம், கைமுதிக ந்யாயத்தால் தண்டனைக்கு ப்ரஸக்தி இல்லை.

---

### அறிக்கை.

சில காலமாக வேதாந்த தீபிகை ஆபீசில் பில் கலெக்டராக இருந்து வந்த எம். எஸ். ஸ்ரீநிவாஸன் ஆபீஸிலிருந்து நீக்கப்பட்டபடியால் சந்தாதாரர் அனைவரும் இச்செய்தியை அறிந்து சந்தாத் தொகையை நேரிலேயே நமது ஆபீசுக்கு அனுப்பவேணுமாய் வேண்டுகிறோம்.

V. ANANTACHARYA,
Managing Editor.

### விஜ்ஞாபநம்.

1938ளு வரை சந்தா பாக்கியை சந்தாதாரர்கள் கொடுக்காமல் வைத்துக்கொண்டிருந்தால் தீபிகா கார்யம் நடைபெற ச்ரமமுண்டாகும். ஆகையால் 1939ளு ஜூன்மீ 30உக்குள் பழைய பாக்கியை செலுத்தி விட வேணுமாய் அறிவிக்கப்படுகிறது.

Managing Editor,
VEDANTADEEPIKA.
11—6—1939.



# பெருமாள்கோயிலில் தேசிகதர்சந ப்ரசாரம்.

## வேதாந்த தேசிகரூசல் விளக்கம்.

சென்ற பிரமாதிவருஷம் வைகாசித்திருவிழாவில் கருடஸேவையன்று (1—6—1939) "வகுளமாலை" ப்பத்திராசிரியர் ஸ்ரீ ஆர். கேசவய்யங்கார் அட்வொகேட், சென்னை, பாடிய "வேதாந்ததேசிகரூசல்" பதிப்பாசிரியரான திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கக் காரியதரிசி ஸ்ரீ. பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார் வரைந்துள்ள முகவுரை, நூலாசிரியரது ஒரு சில விசேடக் குறிப்புரைகளுடன் ஆறாவது சங்க வெளியீடாக முத்திரு நகரேழில் முக்கியமாங் கச்சிக்குத் திலதமாய் விளங்கும் அம்பூந் தேனிளஞ்சோலை (திருத்தண்கா) யிலமர்ந்துள்ள தூப்புல் வள்ளலார் திருவடிவாரத்தில் காணிக்கையாக மேற்கண்ட சுபதினத்தில் தூப்புற்கோமானுக்கு பேரருளாளப் பெருமான் அளித்த மரியாதைகளுடன் வீற்றிருந்த போழ்து இடப்பெற்றது. பின்னர் அன்று மாலை 4 மணிக்கு சின்னகாஞ்சீபுரம் ஸ்ரீரங்கராஜ வீதியில் அமைக்கப்பெற்ற "ஸ்ரீதேசிகதர்சனாச்ரமத்தில்" ஒரு பேரவைசேர, சங்கக் காரியதரிசி கடவுள் வாழ்த்தாக "இன்பத்தி னிறைஞ்சுதலில்"; "மண்டலம் நிறைந்த திங்கள்"; "கருமுகிற்றாமரைக் [illegible] பூத்து" என்ற பாடல்களைப் பாடி, ஸ்ரீவேதாந்த தேசிகரூசல் முகவுரையை வாசித்தும், அந்நூற் பாக்களிற் பலவற்றைப்பாடிக் காட்டியதோடு நூல் நுட்பங்களை நூலாசிரியர் விளக்குவார் என்றும் கூறினர்.

ஸ்ரீ உ. வே. தேசிக தர்சன துரந்தர ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி அன்றும், 3, 4உ களிலும் அதிகர்பீரமாக கேட்பவர் மனமுருகிக் களிக்குமாறு உபந்யாசங்கள் நடத்தினர். அவற்றின் சாராம்சம் பின்வருமாறு :—

வேதாந்த தேசிகரூசல் விஷயத்தைப்பற்றி அடியேன் கூறவேண்டுமென்று இந்த ஸ்வாமி சொன்னார். அவர் என்னை அங்ஙனம் காட்டலாம். யான் பிறரைக் காட்ட முடியாது. மஹநீயர்கள் சேர்ந்துள்ள இந்த ஸதஸ்ஸில் ஏதோ சில விஷயங்கள் விஞ்ஞாபனம் செய்துகொள்கிறேன். வேதாந்த தேசிகரூசல் என்றது ஆறும் வேற்றுமை உருபு தொக்குநின்ற ஓர் தொடர் மொழி. இதனை விரித்தால் வேதாந்த தேசிகரது ஊசல் என்றாகும். வேதாந்த தேசிகர் விஷயமாகப் பாடிய ஊசல் என்பது இதன் பொருள். உபயவேதாந்தத்துக்கும் தலைமை கொள்ளும் ஒரு தனிப்பேராசிரியராக விளங்கிய இவருக்கு "வேதாந்ததேசிகர்" என்பது திருநாமம். இதனை முதற்கண் நன்கு தெளிய வேண்டும். "வேதாந்தாசார்யஸம்ஞாம்"

"வேதாந்ததேசிகபதே"; என்று வடமொழியிலும், "வேதாந்த வாரிட னென்றியம்ப நின்றோம்"; "சந்தமிகு தமிழ் மறையோன் [illegible] றும் வேதாந்தகுரு" என்று தென்மொழியிலுமுள்ள இவ்வாசிரியரின் வாக்குகள் காண்க. இவையன்றித் தமிழறிஞர் இவற்றைக் கொண்டாடிய முறையும் கவனிக்கவேண்டும். இப் பேராசிரியரையே "பேசுபப வேதாந்த தேசிகன்" என்பர் அழகர் பிள்ளைத்தமிழ் நூலார். இவர் கூறுவதாவது 'இக் காசினிப் பணையுயிர்க் கூழ்வளர அயன்மதக் காராக்கள் மேய்ந்திடாது பெருமாற்கு வினையுள் வீடடையப்புறந்தரும் பெருவேலியா மெம்பிரான் பேசுபப வேதாந்த தேசிகன்'. இவர் நாள்தொழுது ஏற்றுகின்ற பேரழகன் நூல் தழைத்தற்கா. ஊசல் என்பதை 'ஊஞ்சல்' என்று உலகம் வழங்கிவரும். ஊசனூல் தொண்ணூற்றாறுவகைத் தமிழ்நூல்களுள், ஆசிரிய விருத்தம் கலித்தாழிசை ஒன்றால் யாக்கப்பெற்று 'ஆடிரூசல்'; 'ஆடாமோவூசல்'; 'ஆடுகவூசல்' என்பனவற்றிலொன்றான் முடிவுறப்பாடுதலாகும் ஒருவகை நூல். நூலிலக்கணமும் வேதாந்த வாசிரியர் தகைமையும் இயைபுறப் பாடப்பெற்றது இந்நூல். வேதாந்தவாசிரியர்க்கும் வேதாந்தப் பொருளுக்கும் உற்றவோர் மெய்யத்துவிதநுட்பத்தை உணர்த்துதல் இதன் நோக்கு. திருவயிந்தைநகர் செல்வத் தெய்வநாயகன் விஷயமாக, இவ்விருந்தமிழ்நூற் புலவர், ஊசலும், பிறவும், பாடியுள்ளது "பந்து கழலம்மானையூசலேசல்" என்ற இவரது வாக்குத் தெரிவிக்கும். பந்து, கழல், அம்மானை ஊசல், ஏசல் என்ற இவற்றின் இலக்கணங்களை நாம் நன்கு அறியவேண்டும். அவனுக்குரிய பந்துபாட நம் பந்தம்போம். அவன் கழலை ஏற்ற அவனது திண்கழல் சேரலாம். ஆழிப்பிரானே அம்மான் அஃது பாட மானமிகும். அம்மானை பாடுதல் மிகக் கடினம் என்பர். அம்மானையில் அய்யங்கார் அடிசருக்கினர் என்பர். அவனது ஊசற்பாட மாறிமாறித் தொடர்ந்துவரும் பிறப்பறும். "ஏசியேயாயினும்" என்றபடி அவனை ஏச நமது அல்வழி போம். இவரது தமிழ்க்கவி வல்லமையை அவ்வரும்பாக்கள் நன்குணர்த்தும். இவை முற்காலத்துத் தமிழ் நல்லுலகம் நன்கறிந்திருந்தும், பிற்காலத்து மறைந்திருந்தற்கு, நூல் பேணுமையும், தமிழ்ப்பேணுமையுமே, முக்கிய காரணமாகும். அவை லுப்தம் என்று கூறுவது நமது துரதிருஷ்டமே. அவற்றையும் கண்டுணர்த்தும் வல்லபன் நமது தர்சனத்தில் வருவான் என்பது எனது உறுதி. தமிழைப் புறக்கணிக்க நமது சம்பிரதாயத்தையே புறக்கணித்ததாக ஆகும். நம் பேராசிரியர் இருகலையிலும் ஒப்பற்றவராய்த் திகழ்ந்தது உலகு அறிந்த விஷயம். இவ்வாசிரியர் பணித்துள்ள பல்வேறு நன்னூற்பொருளின் இரதமுண்டு சமைக்கப்பெற்றதே இவ்வூசனூல். அதன் குறிப்பைச் சிறிது



இங்கு விளக்குகின்றேன். 'விண்ணாகி இறையாகி' என்பது காப்புச் செய்யுள். தமிழர் நான்முகத்தில் காப்பில்லாது தொடங்கார்கள். மாறனைத் திருவாய் மொழித்தேவர் எனக் கொண்டாடுவர். ஆழ்வாருக்குப் பிற்பட்ட ஆசிரியர்களனைவரும் சடகோபனுக்குக் காப்புக் கூறியே தங்கள் நூல்களைத் தொடங்குவர். இக்காப்புச் செய்யுள் 'புருடன் மணிவரமாக'; 'அஹமஸ்ம்ய பராத சக்ரவர்த்தீ' என்ற தேசிகமாலை, தயாசதகம், இவற்றின் பொருளை உட்கொண்டுள்ளது. மான் என்பது 'மஹத்' என்னும் தத்துவம். 'மஹத்' என்னும் வடமொழி, ஆண்பால் எழுவாயொருமையில், 'மஹாந்' என நின்று தமிழின் 'மான்' எனத் தற்பவமாயிற்று. 'மான் றண்டாக' என்ற தேசிகமாலையில் இப்பிரயோகம் காண்க. தேசிகப் பிரபந்தமே தேசிகமாலை. பழைய இலக்கணநூற்களில் தேசிகமாலையிற் கண்டுகொள்க எனக் குறிக்கப்பட்டிருத்தலால் இதன் அருமை விளங்கும். இவற்றிற்குரிய பயிற்சி குன்ற அவற்றின் ஆழ்பொருட்களை அறிய இயலாது போயிற்று. ஆண்டு 'மறு' என்றது ஸ்ரீவத்ஸத்தை. இதனை 'மரு' என அச்சிட்டிருப்பதை என்னென்றுரைப்பது? 'மந்யே மாதா ஜட இவ ஸூதே வத்ஸலா மாத்ருசே த்வம்'; 'ஸமஸ்தஜநநீம் வந்தே சைதந்யஸ்தந்யதாயிநீம்' என்ற 'தயாசதகத்தை' அடிபொற்றி எழுந்தது 'என்கண் கண்ணேக்கக் கடவதிருக்கடவுளாயே' என்பது. 'வேரியங்கமலை நோக்கும்' என்பதில் உள்ள 'நோக்கு' நன்கு அறியப்படவேண்டும். முதற்பாட்டு, 'திருவாழ'. ஈண்டுத் திரு என்பதற்கு பெரியபிராட்டியார், மறை என ஈரர்த்தம் கொள்க. 'ஸா ஹி ஸ்ரீரம்ருதா ஸதாம்'. மறைப்பொருள் வாழ்ச்சிக்கு மறையே காரணம். மறைப்பொருளை திவ்யதம்பதிகள். திவ்ய என்பது செந்தமிழில் திப்பிய என வரும். அது கண்டு மிரளவேண்டாம். திருவுக்கும், திருமார்பர்க்கும் ஒக்கவே வாழ்த்தாகும். வருணநெறி என்பது வர்ணதர்மம், பிறப்பொழுக்கம். இது ஆச்சிரம நெறிக்குமாம், ஈதே அறனும். இதனைப் பண்டைத் தமிழர் நன்கு அறிவர். "மறப்பினும் ஒத்துக்கொளலாகும் பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்" என்பது பொய்யாமொழி. கடத்தற் பொருவாறு நால்வகை நிறனும் நிலையானும் வரையறுத்து வகுத்துள்ளமை யான் இஃது அறன் என்றும் தர்மம் என்றும் பெயர்பெறும். 'அறஞ்செய விரும்பு'; 'அறனை மறவேல்' என்பன தமிழ் மூதாட்டியின் மொழிகள், நிறனும் நிலையும் தருமம். நிறன் வருணம், நிலை ஆச்சிரமம். குறளுக்குரிய பரிமேலழகியார் உரையில் இதனைக் காணலாம். அப்பரிமேலழகியார் பரமவைணவர். இந்நகர் உலகளந்த பெருமாள் அருச்சகர். 'யானைபரிதேரின் மேலழகர் வந்தார்' என்பதில் தொனியர்த்தமாக இவ்வழகியாரைக் கொண்

டாடியிருத்தல் காண்க. இந்நிறனும் நிலையும் பொருந்தாமை அதர்மம் என்பது பெரும்பூதூர் வள்ளலாரின் ஸ்ரீகீதாபாஷ்யத் துணிபு. பாஷ்யம் என்பது பாடியம் எனத் தமிழில் வரும். 'மஹாபாஷ்யத்தை' 'மாபாடியம்' என விவகரிப்பர் தமிழர். இங்குள்ள பிரயோகங்கள் தமிழ் வழக்கில் அநேகம் உள்ளன. இத்தருமம் உற்றொழுகும் நல்லார்களே வைணவப்பெரியார்கள். அவர்களைக் காத்தற்பொருட்டே பரன் அவதரிக்கிறான் என்றது உடையவர் சித்தாந்தம். அங்குள்ள 'ஸாது' சப்தம் 'வைஷ்ணவ அக்ரேசரர்' எனப் பொருள்படும் எனக் கூறியுள்ளார். இந்நிறநெறிக்கண்ணே, ஸர்வசரீரியாகிய பரன், தனதேயாம் சரீரமாகிய யாவையுமே வகுத்துள்ளானாதலின் இது வகுத்தான் வகுத்த நெறியாயிற்று. அந்நெறி வகுத்தான் 'சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்' என்ற ஸர்வசரீரியாகிய கண்ணன். ஆதலின் இது வைணவர்கட்கு வகுத்ததோர் நெறியாயும், வைணவத்துக்கு உற்றதோர் இலக்கணமாயும் நின்றது. இதன் பரப்பை விஷ்ணுபுராணத்தில் காண்க. பாராசரமுனிவர் பணிப்பே உடையவர் கீதைப்பாடியமாய் நின்றது தெளிக. "நெறிமுறை நால்வகை வருணமுமாயினை" என்றது வையமெலாம் மறை விளங்க வாள்வேலேந்தும் மங்கையர்கோன் திருவெழுகூற்றிருக்கை. வருணநெறி பிறழாது பரனுக்குப் பணிசெய்து வாழும் அடியார்களே வைணவர்கள். அத்தகைப்பணியே அடிமை. அஃதையே "வழுவிலா அடிமை" என்பர் சடகோபர், "குறிப்பில்கொண்டு நெறிப்பட உலகம் மூன்றுடன் வணங்குதோன்று புகழ் ஆணை" என்று 'பூர்புவஸ்வஸ்தரு' வாயே தமக்கு மதிநலமருளிய காரணப்பொருளை நம்மாழ்வாரும்; "நால் நிறத்த வேதநாவர்" என்று வேதமாகிய வாசகப் பிரமத்தை பரம்பொருள் திருவருளாலே நால்வகைவருணத்ததாயே ஸாக்ஷாத்கரித்த திருமழிசைப்பிரானும் அம்மெய்ம்மையை விளக்கியருளினார்கள். வாச்சிய வாசகங்கள் செறிந்த இப்பிரபஞ்சம் நால்வகை வருணமாயே விளங்குகின்றது என்றதற்கு ஆழ்வார்கள் அருளிச்செயல்களே தக்க சான்று பகர்வனவாம். இத்திற வருணப் பாகுபாட்டின் கண்ணே விளங்கும் ப்ரபஞ்சமனைத்துக்கும் நாமரூபவ்யாகரணமே அடி என்றதே உபநிடதர் மரபு. ஈதே பரன் உலகு என்னும் தனது யந்திரத்தை ஆக்கி ஆட்டுவிக்கும் ஆறு. இவ்வாறே அவனது மாயை என்னப்படும். "யந்த்ராரூடாநி மாயயா; ப்ராமயந் ஸர்வபூதாநி" என்று கருப்பொருளாகிய கண்ணன்தானே படைப்பு என்னும் தனது தரும யந்திரத்தின் பான்மையைப் போரவிளக்கி யருளினான். தன் கருத்தாகிய மறையொன்றாலேயே உணரப்பட வேண்டியிருத்தலான அதையே யந்திரம் என்று உணர்த்தினான். அம்மாயையாமற மொன்றாலேயே படைப்பு



முற்றவுமே யாக்கப்பட்டிருத்தலால் அதையே யந்திரம் என்றும் உணர்த்தினான். அத்திற அறப்பொருளை அறிஞர் நன்கு ஒருமாறு வேதம் தமிழ் செய்த மாறனார்தாமே

"அமைவுடை அறநெறி முழுவதும் உயர்வற உயர்ந்து,
அமைவுடை முதல்கெடல் ஒடிவிடையற நிலமதுவாம்,
அமைவுடையமரரும் யாவையும் யாவரும் தானும்,
அமைவுடை நாரணன் மாயையை அறிபவர் யாரே?"

என்று தெளிவித்தருளினர். இப்பெற்றித்தாய படைப்புக்குப் பேருருவிலக்கணமே (நாமரூபவ்யாகரணமே) அடியென்றும், அவ்வியாகரணம் வகுத்தே உலகுய்யுமாறு அருமறை விரித்த அப்பரனே' ஆதியம்பகவன் என்றும், தனிமுதற்குருவென்றும், தேசிரியனென்றும் சடகோபர் பரக்க நிரூபித்துள்ளார். (தொடரும்)

---

# புஸ்தகவிமர்சம்

## நாரதபக்தி சூத்திரம்

இப்பெயர்கொண்ட சிறியதொரு புத்தகம் வரப்பெற்றோம்.

இதைப் பதிப்பித்தவர், Y. ஸுப்ரம்மண்யசர்மா. பதிப்பித்த இடம் மைசூர் ஸம்ஸ்தானத்தில் ஹோளேநரஸப்பூரில் அத்யாத்மப்ரகாச கார்யாலயம். இதன் விலை அணா 4.

இப்புத்தகத்தில் கூறப்பட்ட விஷயங்கள் மிகவும் சுருக்கமாயும் ஸகல ஜனங்களுடைய மனதைக் கவரக்கூடியதாயுமிருக்கின்றன. பக்தியின் ஸ்வரூபமும் பக்தியால் உண்டாகும் நன்மையும் அது மோக்ஷமார்க்கத்தைக் காட்டும் வழியும் பக்திமான்களுடைய சேர்க்கையின் ஆவச்யகதையும், மாயையைத் தாண்டுவதற்கு வழியும் பக்தர்களாக ஆகவேணும் என்று விருப்பமுள்ளவர்களுக்கு தக்க உபதேசங்களும் சுருக்கமாயும் ரஸமாயும் கூறப்பட்டிருக்கின்றன. ரிஷிகளுடைய கவனசைலியில் 84 சூத்திரங்கள் ஸம்ஸ்கிருதபாஷையில் அதற்கு ஆங்கிலபாஷையில் மொழிபெயர்ப்பும் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஆங்கிலத்தில் ஒரு டிப்பணியும் அடங்கிய இப் புத்தகம் இல்லறவாழ்க்கையில் பற்றுதல் மிஞ்சி துன்பமுற்றிருக்கும் அனைவரும் இதை கொண்டாடுவர் என்பதில் ஸந்தேகமில்லை. இச்சிறிய நூலை ஒருமுறை வாசித்தால் மனது தெளிந்து அதனால் இன்பம் பெறலாம்.

---

# சர்க்கரையின் உத்பத்தி

[ பத்திராதிபர் ]

அநேக நியமங்கள் அடங்கிய ஸ்ரீவைஷ்ணவ தர்மத்தை அநுஷ்டிப்பவருக்கு சாப்பிடுவதற்குரிய பொருட்களைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டியது அவச்யமாகும். ஒவ்வொரு வஸ்துவும் எப்படி உத்பத்தியாகிறது என்று விசாரணை செய்யாமல் கடைகளில் கிடைக்கும் பொருட்களை யெல்லாம் வாங்கி உபயோகித்தால் வர்ணாச்ரமாசாரங்களுக்கு விருத்தமான பதார்த்தங்கள் கலந்து அதனால் நியமம் கெடும் என்பதில் ஸம்சயமில்லை. பேரணம்பட்டு சர்க்கரையைத் தவிர்த்து மற்ற எல்லா சர்க்கரைகளுடைய உத்பத்தியில் ஒரு அபவாதம் உண்டு. அதாவது சர்க்கரையில் வெளுப்பு வர்ணத்தை உண்டாக்கவேண்டி மாடுகளின் எலும்பு உபயோகப்படுத்தப்படுகிறது என்று. இந்த வழக்கம் க்ரமேண குறைந்து வருகிறது. மைசூரில் மண்டயா என்ற ஊரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கரும்புஆலை Sugar factory இல் மாடு எலும்புக்கு பதிலாக கந்தகப்புகை உபயோகப்படுத்தப்படுகிறது. இதை நாம் இரண்டுவருஷத்துக்கு முன் ஷை சாலையில் சென்று நேரில் பார்வையிட்டோம். இப்போது போன மேமீ ஒடுவில் நெலலிக்குப்பம் Sugar factory இல் போய் இவ்விஷயத்தை விசாரித்தபோது அவாள் இது வரைமாட்டெலும்புகளை உபயோகித்து வந்ததாயும் இரண்டுமீ காலமாய் அதாவது 1939 எப்ரல் மீ முதல் அதைவிட்டு கந்தகப்புகையையே உபயோகிப்பதாகவும் இதுவே சுளுவாயும் சிலவு குறைவாயும் இருக்கிறதென்றும் சொல்லக் கேட்டோம்.

ஆகையால் இனி ஆசாரநிஷ்டர்களான வைதிகர்களும் அஸ்கா சர்க்கரையை உபயோகிக்க ஆக்ஷேபமில்லை எனத்தெரிய வருகிறது.

---

## கடிதங்கள்

### ஸ்ரீதேசிகப் பிரபந்தம் புதிய பதிப்பு.

எம்பெருமானுடைய சிறந்த மெய்யடியார்களின் பொன்னடிப்போதுகளில் அடியேன் ஒப்பிலியப்பன் ஸந்நிதி வங்கீபுரம். நவநீதம். ஸ்ரீராமதேசிகதாஸன் தாளுந் தடக்கையுங் கூப்பிப் பணிந்து செய்யும் விண்ணப்பம்.

நம் தேசிகன் உலகையுய்விக்கக் கருதிக் கடலினும் மிகப்பெரிய கருணையுடன் அருளிச்செய்த "ஸ்ரீதேசிகப்பிரபந்தம்" முன் பெரியோர்கள் கற்ற



[illegible]

றயில் சிறப்புற்றோங்கி வந்ததென்னுமஃது [illegible] வருமறிந்ததாம். [illegible] ப்ரதாயத்துள்ள பெரியோர் அருளிச்செயல்க[illegible] தேசிகப் ந்தத்தையும் கசடறக் கற்றாலன்றி அத்தியயனம் [illegible]யதாகக் ள்வதில்லை.

இங்ஙனே பெருமை பெற்றுப் பொலிந்த "ஸ்ரீதேசிகப் பிரபந்தம்" காலம் அத்தியயன பரம்பரையில் உரிய இடம் பெற்று நிற்கவில்லை ன்பதைக் காண்கிறோம். பலர் பெரும்பாலும் அடைக்கலப்பத்து பிரபந்த ம் முதலிய சிற்சில பிரபந்தங்களை மாத்திரம் முக்கியமாகக்கொண்டு பயின்று இயல் கோஷ்டியில் அநுஸந்தித்து வருகின்றனர். அரிய சில பெரியோர்கள் மாத்திரம் தமது இளமையிற்கற்ற இப்பிரபந்தம் முழுதையும் ஓரோர் காலத்தில் ஆவலுடன் கோஷ்டிகளில் ஸேவித்து வருகின்றனர்.

அநுஸந்தான முறையிலும் அச்சுப்பதிப்புக்களிலும் பாடப்பிறழ்வு, எழுத்துப்பிழை, தளைவழு, சீர்சிதைவு முதலிய குற்றங்கள் மலிந்து காணப்படுகின்றன. இவ்விஷயங்களைப்பற்றி அடியேன் அறியப் பேரவாக்கொண்டு அத்தியாபகர் பலரிடம் பணிந்து கேட்க, "ஸ்ரீ தேசிகன் ஸூக்தியில் இந்த விசாரம் கூடுமோ?" "இலக்கியத்தைத் தான் இலக்கணம் தழுவலாகாதோ?" "ஆர்ஷப் பிரயோகத்தில் குற்றமேது?" என்பவை போன்ற விடைகள் தான் கிடைத்தனவாதலின் அடியேனது தினவடங்கவில்லை. இனையளவும் தமிழிலக்கணத்தோடு முரண்பாடின்றி முழுவதும் தழுவியே அமைந்த இந்த ஸ்ரீஸூக்தியில் "ஆர்ஷம்," "பிராசீனப் பிரயோகம்" என்றெல்லாம் நிர்வஹிக்கவேண்டிய அவசியமில்லையென்னுமஃது அநுபவிப்போர்குப் புலனும். அன்றி, இப்பிரபந்தத்தில் மோனை, எதுகை, தொடை, தளை, சீர் முதலியவை அமைந்திருக்குமழகைக் கூர்ந்து நோக்கின், தமிழிலக்கணவறிவை உலகிலுள்ளோர்க்கு ஊட்டவே இப்பிரபந்தம் திருவவதரித்திருக்கக் கூடுமோவென்று கூடக் கூறத்தகும்.

புல்லறிவினனாகிய அடியேன் ஆசிரியனருளை அருந்துணையாக் கொண்டு ஆய்ந்துவருங்காலை, இப்பிரபந்தத்தில் இலக்கண விஷயமாகவும் பொருள் பற்றியும் பற்பல ஐயப்பாடுகள் தோன்றப்பெற்றேன். தென்மொழி - வடமொழி வல்லுநரான பெரியோர்களின் உதவியைப்பெற்று, எட்டுப் புத்தகத்தின் உதவியையும் நாடவே, பல இடங்களில் அழகிய நல்ல பாடங்கள் தன்னுருக்கெடுத்து வேற்றுருக்கொள்ளப்பெற்று நின்றனவென்று காண முடிந்தது.

யத்தில் குருபரம்பரையில் வந்த பூர்ணரைக் கொண்டு ப்ரவர்த்திப்பிக்க மனோரதம் சேஷிக்கு ஸர்வ கைங்கர்யங்களையும் புரிந்து அவைகளால் சேஷிக்கு ஏற்படும் ஸுகத்தைப் போலவே தாமும் ஸுகித்திருப்பது சேஷனின் ஸ்வரூபம். 'शरीरभेदैस्तव शेषतां गतैर्यथोचितं शेष इतीरिते जनैः' (சரீரபேதைஸ்தவ சேஷதாம் கதைர்யதோசிதம் சேஷ இதீரிதே ஜநை:). இந்த சேஷ ஸித்தாந்தத்தை பரப்ப மனோரதம். நம் தர்சனமே சேஷ ஸித்தாந்தம். 'சேஷ ஸித்தாந்த ஸித்தம்' என்று ஸ்ரீபாதுகா ஸஹஸ்ரத்தில் இத் திருநாமம் கூறப்பட்டது. லக்ஷ்மண மதம் என்றும் பெயர். இத் திருநாமத்தை அடுத்த ச்லோகத்தில் காட்டுகிறார். சேஷன் ராமாநுஜனாக அவதரிக்கிறார்.

செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயிலில் தாம் அவதரித்தும் தம்முடைய சேஷித்வத்தை ஸ்புடமாக ரக்ஷணம் செய்தல்லவோ ஜனங்கள் உஜ்ஜீவிக்க வேணும். இந்த ரங்கத்தோடு பாஷ்யரங்கமும் சேர்ந்தல்லவோ, ஜனங்கள் பரப்ரஹ்மம் சேஷி; 'சேஷோஸ்மி பரமாத்மன:' என்று தாத்விகமான ஸம்பந்தத்தை யறிந்து அதில் நிலைநின்று பரகதியை அடையலாம். சேஷியின் விக்ரஹம் (ரூபம்) காணப்பெறுவது மட்டும் போதாது; சேஷியின் ரூபமான சேஷித்வமும் ஸ்புடமாகக் காணப்படவேணும். அப்பொழுதுதான் சேஷியின் மனோரதம் பூர்ணமாகும். இரண்டு ப்ரஹ்மங்களுண்டு. பரப்ரஹ்மமென்றும் சப்தப்ரஹ்மமென்றும். 'சப்தப்ரஹ்மத்தில் நிஷ்ணாதரானவர் பரப்ரஹ்மத்தை ஸாக்ஷாத்கரிப்பர்' என்றார் சுகர். சப்த பிரஹ்மம் முழுவதும் ப்ரணவத்துக்குள் அடங்கியது. அதின் பொருள் ப்ரஹ்மத்தின் சேஷித்வம். சப்தப்ரஹ்மத்தின் உட்பொருளான சேஷித்வத்தை 'अधिकं तु' (அதிகம் து) 'पत्यादिशब्देभ्यः' (பத்யாதிசப்தேப்ய:) 'प्रशासनात्' (ப்ரசாஸநாத்) 'तद्धेतुव्यपदेशाच्च' (தத்தேதுவ்யபதேசாச்ச) 'तन्निष्ठस्य मोक्षोपदेशात्' (தன்னிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்) 'अस्मिन्नस्य च तद्योगं शास्ति' (அஸ்மின் அஸ்யச தத்யோகம் சாஸ்தி) 'हार्दानुगृहीतः शताधिकया' (ஹார்தாநுக்ருஹீத: சதாதிகயா) 'संपद्याविर्भावः' (ஸம்பத்ய ஆவிர்பாவ:) என்று பல ஸூத்ரங்களால் 'ப்ரஹ்மஸூத்ரங்கள்' காட்டுகின்றன. சப்தப்ரஹ்மத்தின் உண்மையை விளக்கி ஸ்ரீபாஷ்யமென்னும் சப்தப்ரஹ்மதாத்பர்ய விவரணம் வேண்டும்.

प्रणामं लक्ष्मणमुनिः प्रतिगृह्णातु मामकम् ।
प्रसाधयति यत्सूक्तिः स्वाधीनपतिकां श्रुतिम् ॥ १० ॥



ப்ரணாமம் லக்ஷ்மணமுநி: ப்ரதிக்ருஹ்ணாது மாமகம் ।
ப்ரஸாதயதி யத்ஸூக்தி: ஸ்வாதீநபதிகாம் ச்ருதிம் ॥ १० ॥

யத்ஸூக்தி:-எவருடைய ஸ்ரீஸூக்தி
ச்ருதிம்-ச்ருதி தேவியை
ஸ்வாதீநபதிகாம்-நாயகனைத் தனக்கு ஸ்வாதீனமாகத் தன்னைப் பிரியாமலிருந்துகொண்டு பரஸ்பரம் ரமிக்கும் பாக்யமுடையவளாக
ப்ரஸாதயதி - ஸாதித்து வைத்து, (உபாஸநா தைவங்கள் முதலியதால் பரிஷ்கரித்து அலங்கரித்ததோ)
லக்ஷ்மணமுநி:-(அந்த) லக்ஷ்மணமுநி
மாமகம்-என்னுடைய
ப்ரணாமம்-கரணத்ரயங்களாலும் ப்ரணாமத்தை
ப்ரதிக்ருஹ்ணாது - அங்கீகரித்தருள வேணும்.

(தா-ம்.) கமலையோடு கூடிய க்ருஹமேதிதான் ஆதி குரு. ஆதி காரணப்பொருளென்று முதல் ச்லோகத்தில் கூறினார். ஆதிகாரணப் பொருள் சாஸ்த்ரமொன்றால் மட்டுமறியப்படக்கூடியது. அது 'சாஸ்த்ரைக வேத்யம்'. மற்ற அநுமானம், ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களாலறியக் கூடாதது. சாஸ்த்ரம் என்பது வேதமெனும் அக்ஷரராசி. ச்ருதிதேவியின் திருவாக்கு. வேதத்தை ச்ருதிதேவி யென்பர். சரீரமில்லாவிடினும், அஹந்தையுள்ள வ்யக்தியில்லாவிடினும், காரணப்பொருளிடம் தாத்பர்யமுடையவள், ஆசைப்பட்டுத்தழுவுமவள். ஆசையோடு, தன் நாயகன் ஸ்வரூபத்தை நம் காதில் ஓதி நாம் அவரை ஆசிரியர் மூலமாக ப்ரணாமம் செய்து ஆச்ரயித்துப் பிழைக்கும்படி செய்பவள். பரதத்வமாகிய தன் நாயகன் ஸ்வரூபத்தை அறிவிப்பதே அவள் ஆசை. "வாக்" என்பது அதன் பொருளைத் தழுவிக் களித்து நம் காதுக்கும் மனதுக்கும் ஜில்லென்று குளிர்ச்சியாயிருக்கும். சப்தம் தனக்கு உண்மையான பொருளை ஆசையோடு தழுவியே நிற்கும். தன் ஆசைப்பொருளை நமக்கு அறிவிப்பதைத் தவிர அதற்கு வேறு காரியமில்லை. சப்தம் ஆசையுடன் தழுவிய பொருள் உள்ளபடி நம் புத்திக்கு வரவேணும். நம் புத்திக்கு வந்தால்தான் அது பொருளோடு சேர்ந்திருப்பதாகும். நம் புத்திக்கு வராவிட்டால் அது தன் ஆசைப்பொருளை விட்டுப் பிரிந்ததுபோலவேயாகும். நம் புத்திக்கு வருவது அதற்குப் பொருளோடு ஸம்ச்லேஷம்; வராமலிருப்பது விச்லேஷம். ஆசைப்பட்ட உண்மைப் பொருளைத் தழுவி அதை நமக்கு அறிவித்தாலல்லது ச்ருதிதேவிக்கு (சப்தத்திற்கு) சோபையேயில்லை. அவள் பிரிய நாயகனை விட்டு ஹடாத்காரமாயிழுத்து வேறொரு வஸ்துவோடு நாம் சேர்க்கப் பார்த்தால், அசோகவனத்தில் ஸீதையுட்ட

பாடெல்லாம் படும். 'வைதவ்ய வேஷம்போன்ற துக்கம்', என்றார் ஸ்வாமி ஸங்கல்ப ஸூர்யோதயத்தில். ஈச்வரியைத் தழுவி அவளிடமே இச்சை கொண்டிருக்கும் ச்ருதி தேவியை வேறு பதிகளிடம் ஆசையுள்ளவள்போலக் கூறுவதைக் கேட்டு அவள் நடுங்குவள். அரைப்படிப்புக்காரரான அல்ப ச்ருதர் 'ப்ரபாதே கதலீ யதா' என்பதுபோல் நடுக்கம். தனக்கு ஆசையான பொருளைவிட்டுப் பிரிந்த துக்கத்தால் கேசங்களை வாராமல் சடை போட்டுச் சிடுக்காகவே யிருக்கும். ஸ்ரீ பூமி மணாளன்தான் புருஷஸூக்த ப்ரதிபாத்யமான காரணப்பொருளென்று ச்ருதிதேவி மிகுந்த ஆசையோடு காரணத்தை, 'ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ' என்று நேரில் அழைத்துப் பேசிற்று. அதற்கு முன் விஸ்தாரமாக ஆயிரந்தலைகளுடைய புருஷனை, ஆயிரக்கண்ணனை அவன் என்று பரோக்ஷமாகப் பேசிற்று. 'திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன்,' என்றதுபோல் திருவைக்கண்டதும் 'வாரீர் மண்மகள் மணாளா, மலர்மகள் மணாளா?' என்று நெருங்கி நேரிலழைத்துப் பேசிற்று. இவ்விரண்டு தேவியாரும் உம்மோடு உலகத்தை ரக்ஷிக்கக் கங்கண தீக்ஷைகொண்ட பத்நிகள். இல்லாளையிட்டு காரணமான ஜகத்பதியை அடையாளம் காட்டிக் குறிப்பிட்டது. 'நாரீணாம் உத்தமா வதூ:' என்றபடி பெண்ணரசி ஆசைப்பட்டு 'அகலகில்லேன்' என்று நொடிப்பொழுதும் பிரியாத நாயகனையல்லவோ, பெண்ணென வழங்கும் ச்ருதிதேவியாகிய நானும் ஆசைப்படுவேன். ஜகத்தெனும் பூதேவியே (விச்வம்) 'அகாமயத மேதிநீ' என்று ஆசைப்படும் மணாளனையல்லவோ நானாசைப்படுவேன் என்று ஸ்ரீ பூமி காந்தனை உண்மைப் பரம்பொருளாக நிரூபிப்பதிலேயே அவளுக்கு இச்சை, தத்பரத்வம். ச்ரிய:பதிதான் காரண புருஷனென்று ஆசையுடன் கூப்பிட்டுக் கூறியது. 'ஸ்ரீமதி ப்ரஹ்ம தோக்தே:' ச்ருதியாசைப்பட்டு இவர்தான் ஜகத்பதி யென்று தழுவிக் காட்டினால்தான் ச்ரியப்பதிக்கு ஜகத்பதித்வம் நிலைக்கும். ச்ரியப்பதியாகித்தான் ஜகத்பதியாக வேணும். எவர் ஸ்ரீ பூமிபதியோ அவர்தான் விச்வபதி யென்று ச்ருதி தன்னிச்சையைக் காட்டினாள். விச்வத்திற்கும் பதியான பொருள் எனக்கும் பதிதானே யென்று காட்டினாள். ச்ருதியாசைப்பட்டுத் தழுவி நிற்கும் பதியைவிட்டுப் பிரிக்காமல், அகற்றாமல், பிரியாச் சேர்த்தியாகக் கூட்டிவைக்கவேணும். 'த்வாம் ஸர்வகாரணம் உசந்தி அநபாய வாசு:' தன்னாயகனை விட்டு வேறு பதிகளை அவள் தழுவியிருப்பதாக ஜகத்தில் வெளியில் பேச்சுக் கிளம்பிவிட்டால், ஓர் பதிவ்ரதைக்கு அதினிலும் கொடுந்துயருமுண்டோ? தன் பதியல்லாத வேறு புருஷனை அவள் தழுவினாளென்பதே யொருக்காலுமில்லை தான். அவள் வேறு புருஷனிடம் கருத்து வைத்திருக்கிறாளென்று பண்டி



தர் முதலியவர் பஹிரங்கமாய்ப் பேசத்தொடங்கினால் அது மித்யாபவாதமாயினும், அதனிலும் அவளுக்கு அவமானமுண்டோ? "உண்மையான ஸ்வந்த பதியிடம் அவளுக்குக் கருத்தில்லை, மற்றொருவரிடம் கருத்து" என்று பிறர் சொல்லைக் கேட்பதே அவளை நடுங்கச் செய்யும். பிறரால் ஏற்பட்ட இந்த அபவாதத்தை நீக்கி, இவள் கருத்து உண்மையான பதியிடம் தானென்று உலகத்தார்க்கு ப்ராசீனந்யாய மார்க்கத்தால் நிரூபித்து இவளை ரக்ஷித்தவர் எம்பெருமானார்.

" नाथाश्लेषसनातनश्रुतिवधूवैधव्यखेदच्छिदं
प्राचीनां नयपद्धतिं यतिपतिः प्राचीकशत्"

(நாதாச்லேஷ ஸநாதன ச்ருதிவதூ வைதவ்யகேதச் சிதம்
ப்ராசீநாம் நயபத்ததிம் யதிபதி: ப்ராசீகசத்)

உலகத்திற்குப் பதியேயில்லை யென்பர் சிலர். பதி யென்பதே யில்லை யென்று ச்ருதியே சொல்லுகிறதென்று அவள் ஸாக்ஷ்யத்தை ஆச்ரயிப்பர் சிலர். ச்ருதி யென்னும் நாயகியின் அளகபாரங்களை சுகந்த தைலங்கள் சேர்த்து சிடுக்கெடுத்து வாரி பரிமளிக்கச்செய்து இவளை ஸர்வகந்தனெனும் தத்வத்தை யணைய யோக்யமாகச் செய்தது லக்ஷ்மண முனியின் ஸூக்தி யென்ற சேடி, ஸகீ. பெருமாளுக்கு இவ்வூழியம் செய்யும் தாஸர் லக்ஷ்மணர். பெருமாள் தேவியாராகிய ச்ருதி நாயிகைக்கு இவ்வூழியம் செய்வது இவர் புத்தி பெற்றெடுத்த ஸூக்தி யென்னும் பெண்; பரிஷ்கார கார்யம் செய்யும் ஸைரந்த்ரிகை உடம்பில்லாதவளானாலும் பெண்ணென வழங்கப்பட்ட ச்ருதிக்குத் தாம் நேரில் கைங்கர்யம் செய்வது உசிதமல்ல என்று பார்த்து கார்த்தயுக தர்மத்தை உபதேசத்தாலும் ஸ்வானுஷ்டானத்தாலும் ஸ்தாபிக்க அவதரித்த இவர் மனதால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஸூக்திகளெனும் பெண்களைக்கொண்டு இவ்வூழியங்களைச் செய்து தன்யராகிறார்.

நாயிகைகளில் 384 உட்பிரிவுகள் உண்டென்று வகுத்திருக்கிறார்கள். அவஸ்தைகளைப் பொறுத்து எட்டுப் பிரிவுகள்—ஸ்வாதீனபதிகை, வாஸகஸஜ்ஜிகை, விரஹோத்கண்டிதை, கண்டிதை, கலஹாந்தரிதை, விப்ரலப்தை, ப்ரோஷித பர்த்ருகை, அபிஸாரிகை என்று. இங்கு நாயகனுடைய அப்ரீதியே ஒருகாலுமில்லாததால் 3, 4, 5, 6, 7 விதங்களில் இந்த ச்ருதி தேவியைச் சேர்க்க விரகில்லை. அபிஸாரிகை யென்பது ஏகாந்த ஸ்தலம் தேடிச் செல்லுபவளைச் சொல்லும், அதுவும் இவளுக்கு ஒவ்வாது. ச்ருதிதேவி, நாயகனைவிட்டு உள்ளபடி பிரியாவிடினும் அல்பச்ருதர்களிட மகப்பட்டுக்

கொண்டு அவசமாய் நிற்கிறாள். அல்ப ச்ருதர்கள் இவளைப் ப்ரோஷித பர்த்ருகை யெனும் விரஹிணியாக்கப் பார்க்கிறார்கள்; வேறொருவனிடம் இவளுக்குக் கருத்துண்டென்று பழிபோடவும் பார்க்கிறார்கள். தங்கள் துருக்திகளால் ச்ருதிதேவியின் முடிகளில் சிடுக்கு உண்டாக்குகிறார்கள். கேசங்களையற்றவளாகவும் செய்யப் பார்க்கிறார்கள். இவ்வபவாதத்துக் கிடமில்லாமல் 'ஸ்ரீய: பதியிடம்தானிவளுக்கு உட்கருத்து, ச்ருதிபதியவரே' என்று உலகபுத்தியாலும் கூட்டிவைத்து இவளை ப்ரியபதிகையாக்கினவரிவர். உலக புத்தியால் பிரிந்திருந்தவளை கூட்டி வைத்தது ஓர் உபகாரம். அதிலும் ஸ்வாதீனபதிகையாக்கியது மற்றுமோர் உபகாரம். பதி தன்னைவிட்டகலாமல் ஸ்வாதீனமாயிருப்பதை உலகத்தார் க்ரஹிக்கும் பாக்யத்தை ச்ருதிதேவிக்கு அளித்தார்! 'ஸ்வாதீனபதிகை' யென்னும் ச்ருதியை (ஜனவாதத்தை ஸ்தாபித்தார் என்னவுமாம். ஜனங்கள் காதில் இவள் பாதிவ்ரத்யம் விழுந்து பரவுவதும் அதற்கு விரோதமான அபவாதம் நீங்குவதும் ப்ரயோஜனம். 'வாஸக ஸஜ்ஜிகை' யென்பவள் தோழிமார்களைக்கொண்டு தலைவாரி வாஸனாத்ரவ்யங்கள், அகில் முதலியவையால் தன்னை பரிஷ்கரித்துக்கொள்வாள். நீடித்த காலமாக உலக புத்தியால் பிரிக்கப்பட்டவளை கணவனிடம் கூடும் தருணத்தில் இப்படி பரிஷ்கரித்தது லக்ஷ்மணார்யர் ஸூக்தி. ச்ருதியென்பது வேதவாக்கு. ஸூக்தியும் வாக்கு; வேதவித்வைதிக வாக்கு, த்ரிவித்ய சிகாமணியின் வாக்கு, இரண்டும் வாக்காயுள்ளபடியால் தோழியராயிருப்பது ரஸம். "दास्यमुपागतः" (தாஸ்ய முபாகத:) என்றார் லக்ஷ்மணர். இவர் ஸூக்தி பெருமாளுடைய ச்ருதிதேவிக்கு தாஸியாயிற்றென்றும் ரஸம். விபீஷணர் பெண் த்ரிஜடைபோலே.

'ப்ரணமம்'—லக்ஷ்மணர் காட்டிய ஸித்தாந்தமே ப்ரஹ்ம ஸித்தாந்தம். 'சுடரடி தொழுதெழென் மனனே' என்று மானஸப்ரணம ஸித்தாந்தம். ப்ரபத்தியும் ஓர்வித ப்ரணமமே.

ஸித்தாந்தத்தின் அஸாதாரணாம்சத்தைக் காட்டிய பிறகு திருநாமத்தைக் கூறுகிறார். "प्रणिपातप्रसन्ना हि मैथिली जनकात्मजा" (ப்ரணிபாதப்ரஸந்நா ஹி மைதிலீ ஜனகாத்மஜா).

'லக்ஷ்மணமுனி:'—'लक्ष्मणो लक्ष्मिसंपन्नः' (லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பன்ன:) ராம கைங்கர்யமே தனக்கு லக்ஷ்மி யென்று உறுதியாகப் பிறந்தது முதலனுஷ்டித்தவர். மஹர்ஷியாலும் ஸ்ரீமானாகிய பெருமாள் தன்னாலும் லக்ஷ்மீவான் இவனே யென்று கொண்டாடப்பட்டவர். தார்க்கிக ஸிம்ஹமான ஸ்வாமி சத்ருக்னர் நிஷ்டைக் காசைப்படுவது உசிதமே. க்ஷத்திரியரான இளைய பெருமாள் ஸன்யாஸியல்ல. இவர் ஸந்யாஸியான லக்ஷ்மணர்; லக்ஷ்மணமுனி.



'ராமானுஜன்' என்ற திருநாமம் சேஷியான க்ருஷ்ணனையும் சொல்லும். இது சேஷ ஸித்தாந்தமென்பதை லக்ஷ்மண பதம் ஸந்தேஹமறக் காட்டும்.

'ப்ரதிக்ருஹ்ணாது'—ஸந்யாஸி பிக்ஷுகர். நம்மாத்மாக்கள் நம்மால் பிக்ஷையாக ஸமர்ப்பிக்கப்பெற்று அதை பகவானுக்கு நிவேதனம் பண்ணி நம்மை ரக்ஷிக்க அவதரித்தவர். நம்மாத்மாவை பிக்ஷையாக ஸமர்ப்பிப்போம். திருவுள்ளம் பற்றவேணும்.

'மாமகம்'—எனதென்பதே யில்லாதவன்.

"नास्ति पित्रार्जितं किंचिन्न मया किंचिदार्जितम्।"

(நாஸ்தி பித்ரார்ஜிதம் கிஞ்சித் ந மயா கிஞ்சிதார்ஜிதம்)

என்று ஒன்றுமில்லாதவர்.

"अपश्यन्ती ब्राह्मणाय प्रियमन्यन्ननाम सा।"

(அபச்யந்தீ ப்ராஹ்மணாய ப்ரியமன்யம் நநாம ஸா.)

தான் கண்ணனைப் பதியாகப்பெறக் கடவனசெய்த ப்ராஹ்மணர்க்குக்கொடுக்கத்தக்கப் பெரியதொரு வஸ்துவையும் காணாத லக்ஷ்மீதேவியே அவர் திருவடிகளில் விழுந்து ப்ரணாமம் பண்ணினாள். மற்றொன்றிலும் மதீயத்வ புத்தியில்லையாகிலும் யதிராஜனுக்குச்செய்யும் ப்ரணாமங்களில் எனக்கு என்ற புத்தி பண்ணுகிறார், அதிலுள்ள போக்யதையாலே.

'ப்ரஸாதயதி'—(1) ப்ரமாணங்களில் த்ருடமாக ஸாதித்துக்கொடுக்கிறது. (2) பரிஷ்கரித்து அலங்கரிக்கிறது. பதியை ஸ்வாதீனனாக ஸாதித்துத் தந்து சிடுக்கெடுத்து வாரி பதி ஸம்ச்லேஷ யோக்யமாக பரிமளாலங்காராதிகளைச் செய்கிறது. "चिरन्तन सरस्वती चिकुरबन्ध सैरन्ध्रिका:" (சிரந்தன ஸரஸ்வதீ சிகுரபந்த ஸைரந்த்ரிகா:) என்று மேல் ஸாதிக்கப்போவதை ஸூசிக்கிறார். ச்ருதியின் பரிமளம் 'நித்யாபூர்வமாயும், வேலாதீதமாயு' மிருந்தாலும் கந்தம் கமழும் குழல் சிக்குப்பெற்றதுபோலிருந்தது. அதைப் பரிஷ்கரிக்கிறது.

'யத்ஸூக்தி:'—அர்ஜுனன் விராட ராஜனுடைய அந்தப்புரத்தில ஸைரந்த்ரிகையாகவிருந்து ராஜ ஸ்த்ரீகளுக்குத் தலைவாரிவிடுவது முதலிய தாஸீ வ்யாபாரங்களைச் செய்தான். ஒரு வருஷம் நபும்ஸகனாகும்படி ஊர்

வசி கொடுத்த சாபம் அவனுக்கு அச்சமயம் உதவிற்று. அவனை ஜிதேந்த்ரியன் என்று நைஷ்டிக ப்ரஹ்மசாரியான லோகதேசிகன் புகழ்ந்தார். ஸந்யாஸிகளின் தலைவரான இவர், சிரந்தன (கிழவிகளாயினும்) ஸ்த்ரீகளாயினும் ச்ருதி தேவிகளின் கூந்தல்களைத் தாமே வாரிவிட மாட்டார்.

"नैव स्याद्वेदकिङ्करः' (நைவ ஸ்யாத் வேதகிங்கர:) என்று பிறர் உக்தி வேதத்திற்கு ஊழியம் செய்வதைத் தடுக்கிறது. இவர் ஸூக்தி அதற்கு தாஸ்யத்தையே பரிவுடன் செய்கிறது.

'ஸ்வாதீநபதிகாம்'—முன்பே இந்த நாயகியின் லக்ஷணங்களை விவரித்தோம். 'राधा स्वाधीनभर्तृका' (ராதா ஸ்வாதீனபர்த்ருகா) என்றார் ஸ்ரீ ஜயதேவர். 'कान्तो न जहाति यदन्तिकम्' (காந்தோ ந ஜஹாதி யதந்திகம்) என்று கணவன் நாயிகையை விட்டுப் பிரியாமலிருக்கவேணும். ப்ரஹ்மத்தைத் தழுவி இவர்தான் விச்வபதி யென்று பேசி சப்தத்தால் காட்டும் ச்ருதி தேவிக்கு உபநிஷத் என்று திருநாமம்.

'तद्दूरे' (தத்தூரே) என்று புத்திக்கு மிக்க தூரத்திலுள்ள ஆனந்தக் கடலும் கருணைக் கடலுமான பொருளைத்தான் தழுவி நின்று நம் புத்தியும் தழுவும்படி கிட்டக்கொண்டு வருவது உபநிஷத் என்பதின் பொருள். அவளையே பதியினிடமிருந்தகற்றிவிட்டால் நாம் அவள் பதியை அணுக இடமேது?

'ஸ்வாதீனபதிகை' யென்பதற்கு ரூடிப்பொருளான நாயகி விசேஷத்தின் லக்ஷணத்தைக்கொண்டு ரஸங்களைக் காட்டினோம். அவயவப் பொருளைக்கொண்டும் ரஸங்களுண்டு. ஸபதிகையாக அவளை ஸாதிப்பது ஒரு உபகாரம். ஸ்வாதீனம் என்பதற்கு அனன்யாதீனம் என்றும் தனக்கு அதீனம் என்றும் பொருள், ச்ருதியின் வாயிலாகத்தான் பகவானை அறிய முடியும். அவளுக்கும் சொல்ல முடியாமல் அவளுக்கு அதீனமில்லை யென்றால் பரம்பொருளை யறிவதெப்படி? ப்ரத்யக்ஷம் ஸந்மாத்ரமான ப்ரஹ்மத்தைக் குறிக்குமென்பர்; அப்படியாகில் ச்ருதிக்கு மாத்ரம் அதீனமாய் அவளாலேயே அறியப்படுமது என்பது கூடாது, இவையெல்லாம் ஸ்ரீ பாஷ்யத்தில் ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் பரக்க ஸாதிக்கப்பட்டது. 'யத்ஸூக்தி' யென்று முக்யமாக ஜிஜ்ஞாஸாதிகரணத்தை நினைக்கிறார். இதை யவலம்பித்தே சததூஷணீவாதங்களேற்பட்டன. ச்ருதி தேவி தன் பதியை நமக்கும் ஸ்வாதீனமாகும்படி செய்கிறாள். ச்ருதியின் சிக்கல்களை யெடுத்து பரிஷ்கரிப்பது கண்ணன் கீதை. அங்கும் பல சிக்கல்கள் செய்யப்பட்டுக் கிடக்கின்றன. "परफणितिपरिष्कारयुक्तं वचोभिः" (பரபணிதி பரிஷ்கார யுக்தம்



नामपि सर्वसाधारणत्वात् । तेनापि न नियमः । अथोपलब्ध्यनुपलब्ध्योः विरोधानुपलब्धेर्वा एते हेतवः स्युः अनुपलब्धेर्वा । तथा सति अन्यतरनियमः स्यात् ।

ஆத்மா எங்கும் பரவி நிற்கிறது, மனதோடு சேருங்காலத்தில் உணர்ச்சி உண்டாகும். சேராதபோது உணர்ச்சி இல்லை என்ற பக்ஷத்திலும் மேற்சொன்ன தோஷமுண்டு அறிவுக்குக் காரணமான மநஸ்ஸம்யோகம். உணர்ச்சிக்கோ, உணர்ச்சியின்மைக்கோ, இரண்டுக்குமோ பொதுவான காரணமாதலால் ஏதாவது ஒன்று எப்போதும் நிலைத்து நிற்கவேண்டிவரும்.

---

### கர்த்ரதிகரணம்.

## सू—कर्ता शास्त्रार्थवत्त्वात् ॥ २-३-३३ ॥

ज्ञाता सन् अयमात्मा कर्मसु कर्ता च । आत्मनः अकर्तृत्वे कुर्यात् न कुर्यात् इति शास्त्रानर्थक्यं स्यात् ॥

அறிவுக்கு இருப்பிடமான ஜீவன் கர்த்தாவாகவும். அதாவது செய்பவனுமாகிறான். ஆத்மா கர்த்தாவல்லன் என்றால் செய் செய்யாதே என்ற சாஸ்திரவிதி பயனற்றதாகும்.

## सू—उपादानाद्विहारोपदेशाच्च ॥ २-३-३४ ॥

"प्राणान् गृहीत्वा स्वे शरीरे यथाकामं परिवर्तते ।" इत्युपादानविहारोपदेशाच्च कर्ता ॥

ப்ராணனைப் பிடித்துக்கொண்டு தனது சரீரத்தில் இஷ்டப்படி ஸஞ்சரிக்கின்றான் என்று ப்ராணனைப் பிடித்துக் கொள்வதிலும் ஸஞ்சரிப்பதிலும் கர்த்தாவாகக் கூறியிருப்பதால் ஆத்மா கர்த்தாவாகக்கூடும்.

## सू—व्यपदेशाच्च क्रियायां नचेन्निर्देशविपर्ययः ॥ २-३-३५ ॥

"विज्ञानं यज्ञं तनुते" इत्यादिना यज्ञादौ कर्तृत्व व्यपदेशाच्च

कर्ता । विज्ञान शब्दो बुद्धेः नात्मनः इतिचेत्—न, तदा विज्ञानेनेति निर्देशविपर्ययः स्यात्; बुद्धेः करणत्वात् ॥

ச்ருதியில் விஜ்ஞாநம் யஜ்ஞத்தைச் செய்கிறது என்று யாகத்தில் கர்த்தாவாகக் கூறியிருப்பதால் ஜீவன் கர்த்தாவாகலாம். விஜ்ஞாநம் என்னும் சொல் புத்தியைச் சொல்லுமேயல்லது ஆத்மாவைச் சொல்லவில்லை என்றால் அப்போது விஜ்ஞாநேந என்று மூன்றாம் வேற்றுமை இருக்கவேண்டும். புத்தி, செய்கையில் கரணம் அதாவது முக்கிய கருவியாதலால்.

सू—उपलब्धिवदनियमः ॥ २–३–३६ ॥

प्रकृतेरेव कर्तृत्वे तस्याः सर्वसाधारणत्वेन पूर्वोपलब्ध्यनियमवत् फलानियमः स्यात् ॥

ப்ரக்ருதியே கர்த்தா என்று ஒப்புக்கொண்டால் இந்த ப்ரக்ருதி ஸர்வாத்மாக்களுக்கும் பொதுவானதால் ஒவ்வொரு செய்கையின் பயனும் ஆத்மாக்கள் அனைவர்க்கும் உண்டாக வேண்டிவரும்.

सू—शक्तिविपर्ययात् ॥ २–३–३७ ॥

प्रकृतेरेव कर्तृत्वे कर्तुरेव भोक्तृत्वमिति सैव भोक्त्री स्यात् ॥

ப்ரக்ருதியே கர்த்தாவென்றால் கர்த்தாவே செய்கைப்பயனைப் பெற வேண்டியவனாகையால் ப்ரக்ருதியே அனுபவிக்க வேண்டும்.

सू—समाध्यभावाच्च ॥ २–३–३८ ॥

प्रकृतेरेव कर्तृत्वे प्रकृतेरन्योऽस्मि इति समाध्यभावप्रसङ्गाच्च ॥

ப்ரக்ருதியே கர்த்தா என்றால் மோக்ஷஸாதநமான ஸமாதியில் ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறு நான் என்று தோற்றமில்லாமல் போகவேண்டி வரும்.

सू—यथा च तक्षोभयथा ॥ २–३–३९ ॥

आत्मनः कर्तृत्वे इच्छायां करोति अन्यथा न करोति इति



व्यवस्था च सिध्यति । यथा तक्षा स्वकार्येषु । बुद्धेरिच्छाभावात् न व्यवस्था । चेतनधर्मत्वादिच्छायाः ॥

ஆத்மாவைக் கர்த்தாவாக ஒப்புக்கொண்டால் வேண்டும்போது செய்கிறான், வேண்டாதபோது செய்கிறதில்லை என்ற ஏற்பாடு நிலைக்கும். ஒரு தச்சன் வாசி முதலான கருவிகள் அருகிலிருந்தாலும் செயல் செயலின்மை இவ்விரண்டையும் தன் இஷ்டப்படி நடத்துகிறானல்லவா? புத்திக்கு இச்சை இல்லை. சேதனனுக்கே இச்சையுண்டு.

---

பராயத்தாதிகரணம்.

सू—परात्तु तच्छ्रुतेः ॥ २–३–४० ॥

"य आत्मानमन्तरो यमयति" इत्यादि श्रुतेरात्मनः कर्तृत्वं परायत्तम् । सर्वस्य चाहं हृदि संनिविष्टो मत्तः स्मृतिर्ज्ञानमपोहनञ्च इत्यादिस्मृतेश्च ॥

ஜீவனுக்கு கர்த்ருத்வம் பரமாத்மாவினால் ஏற்பட்டது. அப்படியே ஸ்ம்ருதியும் கூறுகிறது.

सू—कृतप्रयत्नापेक्षस्तु विहितप्रतिषिद्धावैयर्थ्यादिभ्यः ॥ २–३–४१ ॥

जीवः स्वेच्छया प्रवृत्तिनिवृत्तिहेतुभूतं प्रयत्नं करोति । जीवेन तु कृतं प्रयत्नं प्रथमप्रवृत्तिहेतुमपेक्ष्य तदनुमतिदानेन परः प्रवर्तयति ; इति तद्विधिनिषेधावैयर्थ्यनिग्रहानुग्रहेभ्योवगम्यते । यथा गुरुतरदार्वादिभरणमबलः प्रबलसहकृतः कुर्वन्नपि स्वीयप्रयत्नेन विधिनिषेधयोग्यो भवति । एवमेव जीवः परमपुरुषानुमतिसहकृतः प्रवर्तमानोपि विधिनिषेधयोग्य इति न कश्चिद्विरोधः ॥

ஜீவன் தன்னிச்சையைக் கொண்டு செய்யவோ செய்யாமலிருக்கவோ ப்ரயத்நம் செய்கிறான். இவனது ஆரம்ப முயற்சியை அநுஸரித்து

ச்வரன் அநுமதி கொடுத்து மேன்மேலும் நடத்துகிறான். மிகப்பெரிய பாரம் முதலான வஸ்துக்களை, சுமக்கத் திறமையில்லாத ஒருவன் பலருடைய ஸஹாயத்தைக் கொண்டு சுமந்தாலும், தன்னுடைய ப்ரயத்நம் இருப்பதைக்கொண்டு விதி நிஷேதங்களுக்கு ஆளாகிறான். அப்படியே ஜீவன் பரமாத்மாவின் அநுமதியின் பேரில் செய்தாலும், செய், செய்யாதே என்ற கட்டளைக்கு உள்ளாகிறான். என்று விரோதம் ஒன்றுமில்லை.

---

அம்சாதிகரணம்.

## सू—अंशो नानाव्यपदेशादन्यथाचापि दाशकितवादित्व-मधीयत एके ॥ २-३-४२ ॥

जीवात्मा परमपुरुषांशः "पृथगात्मानं प्रेरितारञ्च मत्वा" 'स कारणं करणाधिपाधिपः" इत्यादि नानाव्यपदेशात्। अन्यथा 'तत्त्वमसि," "अयमात्मा ब्रह्म" इत्यैक्योपदेशाच्च। "ब्रह्म-दाशाः" इत्यादि सर्वजीवव्याप्त्यैक्यमधीयत एके। अंशत्वाभ्यु-पगमेहि उभयं मुख्यं भवति ॥

ஜீவன் பரமாத்மாவினுடைய அம்சமாகிறான். ச்ருதி சில இடங்களில் பரமாத்மாவைக் காட்டிலும் வேறாகவும், மற்றும் சிலவிடங்களிலும் பரவி நிற்பது கொண்டு ஐக்யமும் சொல்லுகிறது. அம்சமாக ஒப்புக்கொண்டால் இவ்விரண்டும் ஒக்கும்.

## सू—मन्त्रवर्णात् ॥ २-३-४३ ॥

"पादोस्य विश्वाभूतानि" इति मन्त्रवर्णाच्च ॥

இவ்வுலக மனைத்தும் பகவானுடைய பாதம் அதாவது அம்சம் என்று வேதம் கூறுகிறபடியாலும் ஜீவன் அம்சமே.

## सू—अपि स्मर्यते ॥ ४-३-४४ ॥

"ममैवांशो जीवलोके जीवभूतस्सनातनः" इत्यादिना ॥

பகவத்கீதையிலும் ஜீவன் பரமாத்மாவின் அம்சமாகக் கூறப்பட்டிருக்கிறது.



## सू—प्रकाशादिवत्तु नैवं परः ॥ २-३-४५ ॥

ब्रह्मांशत्वेपि जीवस्य जीवो यत्स्वरूपो यत्स्वभावश्च नैवं परः निरवद्यः, सर्वज्ञः सत्यसंकल्प एव सर्वदा, कथम्? प्रकाशादि-वत्। प्रकाशविशिष्टानां मणिप्रभृतीनां प्रकाशः विशिष्टैकदेशत्वेन यथांशः आदिशब्दात् विशेषणतैकस्वभावजातिगुणशरीराणि गृह्यन्ते। विशेषणानां विशिष्टैकदेशतया तदंशत्वेपि विशेषण विशेष्ययोः स्वरूप-स्वभावभेदो न विरुद्धः। "य आत्मनि तिष्ठन् यस्यात्मा शरीरम्' इति हि श्रुतिः ॥

ப்ரஹ்மத்துக்கு ஜீவன் அம்சமானாலும் ஜீவனுடைய ஸ்வரூபஸ்வபாவங்கள் ப்ரஹ்மத்துக்கு இல்லை. அவன் எப்போதும் தோஷமற்றவன். ஸர்வஜ்ஞன். ஸத்யஸங்கல்பன். எப்படி என்றால்—ஒளியுள்ள ரத்நாதிகளுக்கு ப்ரகாசம்போல். ப்ரகாசம் ரத்நத்தினுடைய அம்சமாயிருந்து கொண்டு வேறு பொருளாகும். ஆதி என்பதால் ஜாதி, குணம், சரீரம் இவை குறிக்கப்படுகின்றன. விசேஷண மெல்லாம் விசேஷ்யத்துக்கு அம்சமானாலும் அவைதம்மில் ஸ்வரூப ஸ்வபாவங்கள் வெவ்வேறாக யிருப்பது விருத்தமன்று, ய ஆத்மநி முதலான ச்ருதியும் அப்படியே சொல்லுகிறது.

## सू—स्मरन्ति च ॥ २-३-४६ ॥

चिदचिदात्मकजगतो ब्रह्मांशत्वं प्रकाशादिवदिति पराशरादयः स्मरन्ति। "एकदेशस्थितस्याग्नेः ज्योत्स्ना विस्तारिणी यथा। परस्य ब्रह्मणश्शक्तिः तथेदमखिलं जगत्।" "तत्सर्वं वै हरेस्तनुः," "तानि सर्वाणि तद्वपुः" इत्यादिषु ॥

இரத்நத்துக்கு ஒளிபோலே சேதநாசேதநரூபமான இந்த உலகம் ப்ரஹ்மத்துக்கு அம்சமாகும் என்பதை பராசராதிகள் ஸ்மரிக்கிறார். அக்நி ஓரிடத்தில் இருக்க ஒளி அதிக தூரம் பரவுவதுபோல் இவ்வுலகமெல்லாம் பரமாத்மாவின் சக்தியே என்றும். இவ்வுலகம் பரமாத்மாவுக்கு சரீரம் என்றும்.

सू—अनुज्ञापरिहारौ देहसंबन्धात् ज्योतिरादिवत्

॥ २-३-४७ ॥

ब्रह्मांशत्त्वेपि सर्वजीवानां कस्यचित् वेदाध्ययनादौ अनुज्ञा । कस्यचित् परिहारः इत्येतौ ब्राह्मणादि देहविशेषसंबन्धादुपपद्येते । यथा अग्न्यादेः श्रोत्रियागारश्मशानादिसंबन्धात् ॥

ப்ரஹ்மத்துக்கு அம்சம் என்பது ஸர்வஜீவன்களுக்கும் பொதுவானாலும் வேதாத்யயநாதிகளில் ஒருவனுக்கு அநுமதியும் மற்றவனுக்குத் தடையும் சரீர ஸம்பந்தம் காரணமாக, கூடும். ச்ரோத்ரியன் வீட்டைச் சேர்ந்த அக்நிக்கும் ச்மசாநாக்நிக்கும் வித்யாஸமிருப்பது போல்.

सू—असन्ततेश्चाव्यतिकरः ॥ २-३-४८ ॥

प्रतिदेहं भिन्नत्वात् अणुत्वेन तत्तत्र परिच्छिन्नत्वाच्च ज्ञान-सुखाद्यव्यतिकरः; अज्ञानोपाधिभ्यां ब्रह्मैव संबध्यते; इति पक्षद्वयेऽपि न तत्तद्व्यवस्था ॥

ஒவ்வொரு தேஹத்துக்கு ஒவ்வொரு ஆத்மா. ஆத்மா அணுவானது. ஓரிடத்தில் அடங்கியிருக்கிறது. ஆகையால் ஞாநஸுகாதிகள் தனித் தனியே உண்டாயிருப்பது பொருந்தும். ப்ரஹ்மத்துக்கு அஜ்ஞானம் என்னும், உபாதி உண்டென்னும் பக்ஷங்கள் இரண்டிலும் இந்த வ்யவஸ்தை குலையும்.

सू—आभासा एवच ॥ २-३-४९ ॥

पक्षद्वयेपि हेतवश्च आभासाः ॥

இரண்டு பக்ஷங்களிலும் எதிரிகள் சொல்லும் ஹேதுக்கள் எல்லாம் ஆபாஸங்களே.

सू—अदृष्टानियमात् ॥ २-३-५० ॥

सत्यमिथ्योपाधिकृतत्वेपि आत्मनां ब्रह्मणएवाज्ञानमुपाधिश्च इति तत्तत्कृतेनादृष्टादिनापि न नियमः ॥



ப்ரஹ்மத்துக்கு ஸத்யமாகவோ அஸத்யமாகவோ ஒரு உபாதி உண்டு. உபாதியோடு கூடின ப்ரஹ்மமே ஆத்மா வெனப்படும் என்ற பக்ஷத்திலும் ப்ரஹ்மத்துக்கே உபாதி ஒப்புக்கொள்ளப் படுகிறபடியால் அந்தந்த ஜீவன் செய்த அதிருஷ்டாதிகளால் சுகதுக்கவைஷம்யம் சொல்லவொண்ணாது.

सू—अभिसन्ध्यादिष्वपिचैवम् ॥ २-३-५१ ॥

अदृष्टहेतुभूताभिसन्ध्यादिष्वपिचैवमेव ॥

அத்ருஷ்டத்துக்குக் காரணமாக ஸங்கல்பம் ஒப்புக்கொண்டாலும் மேற்சொன்ன தோஷம் போகாது.

सू—प्रदेशभेदादिति चेन्नान्तर्भावात् ॥ २-३-५२ ॥

उपाधिसंबन्धिब्रह्मप्रदेशभेदात् व्यवस्था इतिचेत्—उपाधिषु गच्छत्सु सर्वप्रदेशानां तदन्तर्भावात् ॥

ப்ரஹ்மம் உபாதியோடிருக்கும் இடம் வேறு. ஆகையால் போக வ்யவஸ்தை சொல்லுகிறோம் என்றால் இந்த உபாதி ஒரே இடத்தில் நிலைத் திருப்பதில்லை. பற்பலவிடங்களில் செல்லும். உபாதியில்லாதவிடமெல் லாம் ப்ரஹ்மமேயாகும். அப்போது போகவ்யவஸ்தை சொல்லுவது அஸாத்யம்.

இரண்டாவது அத்யாயம் மூன்றாவது பாதம் முடிந்தது.

இரண்டாவது அத்யாயம் நான்காம் பாதம்.

ப்ராணோத்பத்யதிகரணம்.

सू—तथा प्राणाः ॥ २-४-१ ॥

यथा जीवोत्पत्तिः नित्यत्वश्रुतेः नोपपद्यते, तथा इन्द्रियाण्यपि । "असद्वा इदमग्र आसीत्,—ऋषयो वाव तेऽग्रे सदासीत्,—प्राणावाऋषयः इति प्रळयकाले प्राणानां स्थित्युपदेशात् ॥

ச்ருதியை ப்ரமாணமாகக்கொண்டு ஜீவன் நித்யன் என்று ஸாதித்தது போல் இந்திரியங்களும் நித்யங்கள் என்று சொல்லலாம் என்று ஆக்ஷேபம்.

அதாவது ப்ராணன் என்று இந்திரியங்களைச் சொல்லி, அவை ஸ்ருஷ்டி காலத்துக்கு முன்னமே இருந்ததாகச் சொல்லுகிறபடியால் அவை அநாதி யில்லாதவை என்று.

सू—गौण्यसंभवात् तत्प्राक्छ्रुतेश्च ॥ २-४-२ ॥

नैवम्—तस्य परमात्मन एव सृष्टेः प्रागवस्थानश्रुतेः। ऋषिशब्दः प्राणशब्दश्च परमात्मन्येव । बहुत्वासंभवात् बहुवचन-श्रुतिर्गौणी ॥

முன் ஸூத்திரத்தில் சொன்ன ஆக்ஷேபம் நிலை நிற்காது. ஸ்ருஷ்டி காலத்துக்கு முன்னும் அந்த பரமாத்மாவே இருந்ததாக ச்ருதி கூறுகிற படியால். ரிஷி, ப்ராணன் இவ்விரண்டு சொற்களும் பரமாத்மாவை சொல் லும். பன்மையை கௌணமாகக் கொள்ளவேணும்.

सू—तत्पूर्वकत्वाद्वाचः ॥ २-४-३ ॥

परमात्मनः सृष्टिपूर्वकत्वात् इतरेषां नामयोगस्य तदानीं प्राणशब्दो नेन्द्रियविषयः ॥

பரமாத்மாவினுடைய ஸ்ருஷ்டி காரணமாகவே இதரவஸ்துக்களுக்கு பெயர் உண்டாவது. ஆகையால் ப்ராணசப்தம் இந்திரியங்களைச் சொல்லாது.

---

ஸப்தகத்யதிகரணம்.

सू—सप्तगतेर्विशेषितत्वाच्च ॥ २-४-४ ॥

सप्तैवेन्द्रियाणि । सप्त प्राणाः । "यदा पञ्चावतिष्ठन्ते ज्ञानानि मनसा सह । बुद्धिश्च" इति सप्तानामेव सहगतेः तेषामेव योगे विशेषितत्वाच्च ॥

இந்திரியங்கள் ஏழுதானா? அல்லது பதினொன்று உண்டா? என்ற ஸம்சயத்தில் ஏழுதான் என்பது பூர்வபக்ஷம்—ஐந்து ஞானேந்திரியங்கள், மனது, புத்தி, இவற்றோடு ஏழாகி ஆத்மாவோடே கூட ஸஞ்சரிக்கின்றன வென்று கடச்ருதியில் கூறியிருக்கிறது. என்று.

---

அமிர்தாஞ்சனம்

அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

"अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम्।"
"अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः।"




தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு முதலான சகல நோய்களையும் தீர்க்கவல்ல ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

Registered No. M. 3778.


## சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம். ஆபரணங்களுக்கெல்லாம் அரசனாயிருப்பது

# வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசனங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्त्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥



"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர் கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடு கூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் மிகுதப்பிரசஸ்தமானது. அவ்வாறு உயர் குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களை அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆராய்ந்து யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் தயாரிக்கச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூரஜ்மல் கம்பெனியாரே.

SURAJMAL'S

The Jewellers

313 ESPLANADE, MADRAS.


Printed by M. Satyanarayana, at the Hindi Prachar Press, T. Nagar, and Published by V. Ananthachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.